உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ. பண்டிதராசரருளிச்செய்த

# ஸ்ரீதக்ஷிணகைலாசபுராணம்.

கவிராஜரியற்றிய

## கோணேசர்கல்வெட்டு.

இவை

யாழ்ப்பாணம்புலோலிகிழக்குப்பூர்வீகராய்

தற்காலம் மட்டக்களப்புக்காரேறுதீவில்வசிக்கும்

**பு. பொ. வைத்தியலிங்கதேசிகரால்**

பலஏட்டுப்பிரதிகள்கொண்டுபரிசோதித்து

திருத்தியும் விளக்கியும் புதுக்கி,

**அரும்பதப்பொருட்குறிப்புடன்**

சுத்தப்பிரதியாக

பருத்தித்துறை தும்பைநகர்

**கலாநிதியந்திரசாலையிற்**

பதிப்பிக்கப்பெற்றன.

(Copyright Registered)

1916.

இதன்விலைரூபா—கவ.



ரந்திகழுமலைவாசர்மட்டக்களப்பரிளூர்புந்தியினவாவினிலமேற்
புலவதருகென்னக்கலாநிதியிந்திரம்பொலியப்பதித்தனனரோ.

---

பருத்தித்துறைசார்ந்த புலோலி
ஆரிய திராவிட ஆங்கில வித்துவாம்சர்
## ஸ்ரீமத். வ. குமாரசுவாமிப்புலவரியற்றிய
பிரசுரபாயிரம்.

சித்திரநன்மேருகிரிச்சிகரத்துளொன்றானதென்னிலங்கை
யுத்தரபூருவதிசையிலோங்குதிரிகோணமலையுயர்வுகூறும்
அத்தகையதெக்கணகைலாயபுராணத்தினையாரியத்திற்றேர்ந்து
பத்தசித்தபூசுரனும்பண்டிதராசன்றமிழிற்பாடிவைக்க.

வேறு.

தான்பிறந்தபுலோலியினிற்றந்தைபொன்னையப்பெயரோன்
வேன்மயில்வாகனப்புலவரிடம்விடுப்பக்கற்பதற்குப்
பான்மதியமெனக்கலைகள்பலதெரிந்துபல்லோரு
மேன்மையினுலனுசரிக்கமிகவொழுக்கஞ்சிறந்துடையோன்.

தெங்குகன்னன்மாவருக்கைசெந்நெல்சொன்னலாதிவளந்
தங்குமட்டக்களப்பினிலேர்தருகாரைதீவிருக்குந்
துங்கவிநாயகர்கோயிற்பூசனையுந்துய்யதமிழ்
பங்கமுறாதுவந்தவர்க்குப்படிப்பிக்குந்தொழிலுமுளோன்.

தானேசர்தொழுதுய்யத்தமதருளால்வீற்றிருக்குங்
கோணேசர்கல்வெட்டுங்கூடவணைத்துலகர்பெறப்
பூணேயுமிவ்விரண்டும்புலோலிநகர்வயித்யலிங்க
மாணேயதேசிகனச்சிடுவித்தான்மனமுவந்தே.

---

மட்டக்களப்பு, காரேறுமூதூர்
ஆங்கில திராவிடப பிரதமாசிரியர்
## ஸ்ரீமான். சாமிதாச மயில்வாகனனுர் சொல்லிய
பிரதீகபஞ்சகம்.

ஆடகமிலங்கசலகூடமெனலாலும்
ஆடகமிலங்கையெனுநாமமுறலாலும்
நாடகநயந்தகிரிநாதருறைவாலும்
நாடகநயந்துபிறர்நாடுவதனாலும்.

வேறு.

பொன்னாடும்பொருனைநதிபொலிவுறலால்வளமிகுத்த
நன்னாடுங்காவிரிப்பேர்நதிபாயுஞ்சோணாடுஞ்
சொனனாடும்புலவர்தருந்துதிநாடும்பாண்டியர்வாழ்
தென்னாடுமெந்நாடும்புகழீழத்திருநாட்டில்.

வேறு.

தக்கிணகைலையெனப்பெயர்பெற்றதலத்தினலத்தையெலா
மெக்கலையுந்தருழுத்தரபாடையிலித்திறமென்றறையு
மக்கதைதென்மொழியுற்றிடநற்கவியாய்ந்துபுனைந்தனனால்
மிக்குயர்பண்டிதராசனெனும்பெயர்மேவுகவிக்கிறைவன். (ரு)

வேறு.

அங்கவனுரைத்தகாதையாவலோடெவருங்கற்றுச்
சங்கரனருளையெய்தத்தாலபுத்தகங்களாய்ந்து
பொங்கியவழுக்கடம்மைப்போக்கியச்சுருவமாக்கி
யெங்குமெப்போதுமன்னுமிசையினைத்தாங்கின்றான். (சு)

வேறு.

யாரெனிலிலங்காதீபவுத்தரத்தின்யாழொலிபரப்புநன்னாட்டிற்
பூருவபுலவகானமாநகரோன்வேன்மயில்வாகனப்புலவன்
சீரியசீடன்வைத்தியலிங்கதேசிகனெனும்பெயர்சிறந்த
வாரியன்புதியவமுதெனச்சுவைக்குமருந்தமிழ்நாற்கவிக்கரசே. (எ)

---

வயாவிளான், சுதேசநாட்டிய மானேசர்

## ஸ்ரீமான், க. வேற்பிள்ளை அவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

பண்டிதராசனெனும்விப்பிரன்முன்பணித்ததமிழ்த்
தண்டருமின்றக்ஷிணகயிலாசபுராணமதை
நன்றுவிளக்குமரும்பதகுசியுநாடுதொன்மை
கொண்டகோணேசர்கல்வெட்டுமிக்கோர்பலன்கொள்ளுதற்கே.

நாவலர்போற்றத்திருத்திப்பிரகடனம்புரிவித்
தோவினனவேன்மயில்வாகனின்மாணவனெண்பொனைய
காவலன்சேய்வைத்தியலிங்கதேசிகன்கன்னன்மினு
மாவளமட்டக்களப்பூர்நிவாசகன்மாணிக்கமே.

---

உ

சி[illegible]ம்.

# சாற்றுகவிகள்.

யாழ்ப்பாணம் புலோலியம்பதி
ஆரிய திராவிட மஹா வித்துவாம்சர்
பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்
இயற்றியவிருத்தம்.

திவவிய தக்ஷிணகயிலைமேன்மையாவுஞ்செப்புபுராணப்பிரதிபலநன்றாய்ந்
து, கைவருமூதறிஞர்பலர்வேண்டவச்சிற்கருத்தினொடும்பதிப்பித்தான்புலோ
லிமேனற், சைவமரபினிலுதித்தானுயர்பொன்னையாதனயன்மட்டக்களப்பூர்த்தா
னில்வாழ்வான, எவ்வமில்சீர்வயித்யலிங்கதேசிகப்பேரியம்புகவிவாணனை
நங்கலைவலோனே.

---

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தும்பைநகர்,
பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணியசாஸ்திரிகள்சொல்லிய
சிறப்புக்கவி.

சீரேறுகோணமலைப்பெயர்வாய்ந்த தென்கயிலைத்திருப்புராண
மேரேறுசரித்திரமாயியைந்தசிலாசாதனமாமிவைகளாய்ந்து
நேரேறுபிரதிபலதெரிந்துவரும்பேதமுடனிகழ்வித்தச்சிற்
பேரேறநிலவுவித்தானருசைவன்வைத்யலிங்கன்பேணுவீரே.

---

புன்னாலைக்கட்டுவன்
பிரமஸ்ரீ. சி. கணேசையரவர்கள் இயற்றிய
கட்டளைக்கலித்துறை.

ஒண்டமிழ்ப்பாவினுயர்தென்கயிலையினோங்குகதை
பண்டிதராசப்பெயர்மறையோன்முன்பகர்ந்தளித்தா
னுண்டிடுமொரமுதாமாறருஞ்சொற்குறும்பொருள்கள்
கண்டுபின்சேர்த்துநற்கோணேசர்கோயிலிற்கல்வெட்டுமே.

ஈகைசெய்தானதையிப்புவியோர்க்கச்சினோர்பெறச்செய்
தோகைதருங்கவிவேன்மயில்வாகனவுத்தமன்பா
லாகமுடன்கலைகற்றோன்புலோலியுதித்தவன்சொல்
வாகன்வயித்யலிங்கோத்தமதேசிகமாமணியே.

யாழ்·தும்பைநகர்நிவாச, சைவசித்தாந்தப் பிரசாரணர்

## ஸ்ரீமத். மு. தம்பையாக்குருக்கள் சொல்லிய

### வித்தியாபிப்பிராயவிருத்தம்.

சீர்திசைபரந்தபண்டிதராசகவிவலோன்செகமெலாமகிழமுன்னாள்
செய்யவாரியநின்றுசெந்தமிழ்ப்பாடையிற்றேனிரசவின்பமொழுகச்
செப்புதக்ஷிணகைலமெய்ப்புராணக்கவிகள்சிறுவர்களுமெளிதினுணரட

பேர்திசைபரந்தமட்டக்களப்பறிவாளர்பெருமைதருகோணைவாசர்
பெட்புடன்காலிகிதவழுவகற்றிப்பழையபெருமைதிகழ்சொல்விளக்கிப்
பிழைபடாக்கோணேசர்கல்வெட்டுமிலகுறப்பின்னரனுபந்தமாக்கிய

பார்திசைவிளங்குறத்தருகவெனவேண்டிடப்பண்ணவர்களுலகீதெனப்
பாவல்ல்புலவர்வாழும்புலோலிப்பூர்வபானுபொன்னையகவிஞன்
பதியொடுசெய்தவப்புத்திரன்வித்துவான்பரவுமுரைசெய்தேசிகன்

ஓர்திசையுமொழியாதுசெல்புகழ்ப்பிரசங்கியுயர்தர்க்கநூலுணர்ந்தோன்
ஒல்லார்கள்வாய்மடியவல்லவாபத்திரத்துத்தரம்வரையுநிபுணன்
ஒப்பொருவரில்லாவைத்யலிங்கக்குரிசிலுதவிஞனச்சினலமே.

கட்டளைக்கலித்துறை.

பழுத்தகனிரசப்பண்டிதராசன்பனுவல்புவி
யெழுத்தொடுசொல்லிழுக்கெய்தாதவண்ணமிலங்கியுற
விழுத்தகவாய்ந்தநுசைவகுலோத்துங்கவிற்பனவே
ளழுத்துவித்தானச்சில்வைத்தியலிங்கவறிஞன்கே.

---

புலோலி மந்திகையம்மன்கோயிலர்ச்சகர்

## ஸ்ரீமத். வை. சபாபதிக்குருக்களவர்கள் சொல்லிய

### விருத்தம்.

நலந்திகழ்புலோலியனுசைவகுலவுத்துங்கநாயகன்பொன்னையவே
ணயம்பெறப்புரிதவக்குமாரனரியமோடுநற்றிராவிடமுணர்ந்தோன்
பலந்திகழ்ப்பிரசங்கவிஷயசாமர்த்தியன்பரவுபுகழுரைவித்தகன்
பண்பார்வயித்யலிங்கப்பெயர்கொடேசிகன்பாடல்பெறுலங்கைபூர்வஞ்
சலந்திகழ்ஸ்ரீதக்ஷிணகைலாசமேன்மைச்சரித்திரபுராணமதனைத்
தகவுற்ககரலிகிதவழுநீக்கியரியசொற்சாரந்துலங்கவமையாப்

மேன்மை தங்கிய

# வயாவிளான் சுதேசநாட்டிய அச்சியந்திரசாலையார்

## இயற்றியஆசிரியவிருத்தம்.

திருமருவுநாமாதுநடமிடுங்கலைவலோர்சிரமணியெனப்புகழ்ந்து
சிந்தைமகிழ்கொண்டாடிவந்தனைசெயுங்குணச்சீர்பலநிறைந்தமகிபன்
செந்தமிழ்க்கலைஞானமேருபண்டிதராசசெல்வவிப்பிரனுலகினிற்

கருமருவுமானிடர்கணன்கறிதரச்செய்தகயிலைப்புராணமாகுங்
காவியமதற்கரும்பதகுறிப்புரையன்புகவினச்செய்பவனாரெனிற்
கந்தமலர்வீசுகாவுந்துமண்டூர்கதிரைகந்தன்பதம்பணிபவன்

தருமருவுநற்புலோலிப்பதியுதித்துளான்சற்சங்கமேவுபுகழான்
தற்காலமட்டக்களப்புநகர்தனைவாசதலமெனக்கொண்டமர்ந்தோன்
தக்ககலைகற்றவேன்மயில்வாகனாசிரியன்தற்குமாணவகநிலையன்

அருண்மருவுபொன்னையதவவயித்தியலிங்கவாசிரியனானமதிய
னகிலமிசைசேர்ணேசர்கல்வெட்டுமித்தோடணைத்தரங்கேற்றவெண்ணி
யழகுறத்தும்பைநகரமர்கலாநிதியந்த்ரவச்சிறப்பதித்தானரோ.

# சூசிபத்திரம்.


| சருக்கங்கள். | பக்கம் | பாடற்றொகை. |
|---|---|---|
| நூற்சிறப்புப்பாயிரம்...... .................... | எ | |
| பாயிரம்..................................... | க | கரு |
| க—வது இலங்கைமண்டலச்சருக்கம் ...... | ச | ஙகூ |
| உ—வது திருமலைச்சருக்கம்......... ....... | கூ | கூச |
| ங—வது புவனேற்பத்திச்சருக்கம் ......... | உக | ஙகூ |
| ச—வது அர்ச்சனைவிதிச்சருக்கம்............ | உசா | அசா |
| ரு—வது மச்சாவதாரச்சருக்கம்... .......... | ஙசா | சஅ |
| சா—வது தெரிசனமுத்திச்சருக்கம் ......... | சஉ | ககூரு |
| எ—வது திருநகரச்சருக்கம்............ ... | சாச | கககூ |
| | | ஆக சாஙரு |


## விளம்பரம்.

இந்தப்புத்தகம் விலைக்குவாங்கவிரும்புவோர்
யாழ்ப்பாணம்: கொக்குவில் சோதிடப்பிரகாசயந்திரசாலையிலும்,
வயாவிளான்: சுதேசநாட்டியஅச்சியந்திரசாலையிலும்,
தும்பளை: ஸ்ரீமத். வை. முருகையாவிடத்திலும்,
கொழும்பு: கூரு-ம் நம்பர்வீடுசாமிதாசமயில்வாகனனிடத்திலும்,
மட்டக்களப்பு: புளியந்தீவு வைத்தியசாலை ஸ்ரீமான். க. பெ. செல்லையாபிள்ளையிடத்திலும்,
மட்டக்களப்பு: காரைதீவு என்னிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

☞ இப்புத்தகத்தை யாராவது இதேமாதிரியிலச்சிட்டுவெளிப்படுத்தக்கூடாதென்பதை அறிந்துகொள்ளவேண்டியது.

இங்ஙனம்.
பு. பொ. வை. தே.

ஸ்ரீ

மேன்மைதங்கிய

## வயாவிளான் சுதேசநாட்டிய அச்சியந்திரசாலையார்

### இயற்றிய ஆசிரியவிருத்தம்.

திருமருவுநாமாதுநடமிடுங்கலைவலோர்சிரமணியெனப்புகழ்ந்து
சிந்தைமகிழ்கொண்டாடிவந்தனைசெயுங்குணச்சீர்பலநிறைந்தமகிபன்
செந்தமிழ்க்கலைஞானமேருபண்டிதராசசெல்வவிப்பிரனுலகினிற்

கருமருவுமானிடர்கணன்கறிதரச்செய்தகயிலைப்புராணமாகுங்
காவியமதற்கரும்பதகுறிப்புரையன்புகவினச்செய்பவனொளிற்
கந்தமலர்வீசுகாவுந்துமண்டூர்கதிரைகந்தன்பதம்பணிபவன்

தருமருவுநற்புலோலிப்பதியுதித்துளான்சற்சங்கமேவுபுகழான்
தற்காலமட்டக்களப்புநகர்தனைவாசதலமெனக்கொண்டமர்ந்தோன்
தக்ககலைகற்றவேன்மயில்வாகனுசிரியன்தற்குமாணவகனிலையன்

அருண்மருவுபொன்னையதவவயித்தியலிங்கவாசிரியனைமதிய
னகிலமிசைகோணேசர்கல்வெட்டுமித்தோடணைத்தரங்கேற்றவெண்ணி
யழகுறத்தும்பைநகரமர்கலாநிதியந்த்ரவச்சிறப்பதித்தானரோ.

சிவமயம்.

## திருக்கோணமாமலை

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# தேவாரம்.

பண்—புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடைய[ர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (க)

கடிதெனவந்தகரிதனையுரித்து வவ்வுரிமேனிமேற்போர்ப்பர், பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனாய்க் கொடிதெனக்கதறுங்குரைகடல்சூழ்ந்து* கொள்ளமுனித்திலஞ்சுமந்து, குடிதனைநெருக்கிப்பெருக்கமாய்த்தோன்றுங் கோணமாமலையமர்ந்தாரே. (உ)

பணித்திளந்திங்கள்பைந்தலைநாகம் படர்சடைமுடியிடைவைத்தார், கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன் கலந்தவர்மதின்மேற், றனித்தபேருருவவிழித்தழனாகந்தாங்கியமேருவெஞ்சிலையாக், குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (ங)

பழித்திலங்கங்கைசடைமுடிவைத்துப் பாங்குடைமதனைப்பொடியா, விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார் கமலமார்பாதர், தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளஞ் செம்பொனுமிப்பியுஞ்சுமந்து, கொழித்துவன்றிரைகள் கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே. (ச)

தாயினுநல்லதலைவரென்றடியார் தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினுமனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந்தொழிலர்பானீக்கிநுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே (ரு)

---

*கொள்ளம்—சேறு.

பரிந்துநன்மனத்தால்வழிபடுமாணிதன் னுயிர்மேல்வருங்கூற் றைத், திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார் நம்மை யாளுடையார், விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னை வேங்கைவண்செ ருந்திசண்பகத்தின், குருந்தொடு முல்லைகொடிவிடும்பொழில்சூழ் கோணமாமலையமர்ந்தாரே. (௬) *(௭)

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பே று, தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணை தன்னருட்பெருமையும்வா ழ்வுங், கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந் தாரே. (௮)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக் க,பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர் பெயர்ந்தநன்மாற் குங், குருவராய்நின்றார்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தா ரே. (௯)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேரு நெறியலாதனபுறங்கூற, வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித், துன்றுமொண்பௌவமௌவலுஞ்சூழ்ந்து தாழ்ந்துறுதிரைபலமோ தித், குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தா ரே. (௧0)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்
[தே.

## சுவாமிபெயர்—கோணேசர்

## தேவிபெயர்—மாதுமையம்மை

இத்தலத்தில்எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான் திருநா மமும் தேவிதிருநாமமுங் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியாரரு ளிச்செய்த சிவநாமக்கலிவெண்பாவிற்கண்டன. அதுவருமாறு:—

> "மன்னுதிருக்கோணமாமலையின்மாதுமைசேர்
> பொன்னேகோணேசப்புராதனா—நன்னயஞ்சேர்"

என்பதாம.

---

* ஏழாவதுபாட்டு மறைந்துவிட்டது.

உ

குகமயம்.

திருக்கோணமலை

# அருணகிரிநாதர் திருப்புகழ்

விலைகருமேனியிலணிக்கோவைமேகலை தரித்தவாடையுமணிப்பூணுமாகவெ
மினுக்குமாதர்களிடைக்காமமூழ்கியெ—மயலூறி [குல
மிகுத்தகாமியனெனப்பாருளோரெதிர் நகைக்கவேயுடலெடுத்தேவியா
வெறுப்பதாகியெயுழைத்தேவிடாய்படு—கொடியேனை
கலகமாகவெமலக்கூண்டிலேமிகு பிணிக்குளாகியெதவிக்காமலேயுனைக்
கவிக்குளாய்சொலிகடைத்தேறவேசெயு— மொருவாழ்வே
கதிக்குநாதநீயுனைத்தேடியேபுக ழுரைக்குநாயெனையருட்பாலையாகவெ
கழற்குளாகவெசிறப்பானதாயரு—டரவேணும்
மலைக்குநாயகசிவக்காமிநாயகர் திருக்குமாரனெமுகத்தாறுதேசிக
வடிப்பமாதொருகுறப்பாவையாண்மகிழ்—தருவேளே
வசிட்டர்காசிபர்மகத்தானயோகிய ரகத்யமாமுனியிடைக்காடர்கீரனும்
வருத்தபாவினிற்பொருட்கோலமாய்வரு—முருகோனே
நிலைகுநான்மறைதவத்தானபூசுரர் திருக்கொணாமலைதலத்தாருகோபுர
நிலைக்துள்வாயினில்கிளிப்பாடுபூதியில்—வருவோனே
நிகழ்த்துமேழ்பவகடற்சூறையாகவெயெடுத்தவேல்கொடுபொடித்தூளதா
வெறி—நினைத்தகாரியமனுகூலமேபுரிபெருமாளே. (௧)

வேறு.

தொடுத்தவாளெனவிழித்துமார்முலை யசைத்துமேகலைமறைத்துமூடிக
டுடித்துநேர்கலைநெகிழ்த்துமாவியல்—கொளுமாதர்
சுகித்தஹோவெனநகைத்துமேல்விழ முடித்தவாகுழல்விரித்துமேவிதழ்
துவர்த்தவாய்சுருளடக்கிமால்கொடு—வழியேபோய்ப்
படுத்தபாயலிலணைத்துமாமுலை பிடித்துமார்பொடுமழுத்திவாயிதழ்
கடித்துநாணமதழித்தபாவிகள்—வலையாலே
பலித்துநோய்பிணிகிடத்துபாய்மிசை வெளுத்துவாய்களுமலத்தினுமெயன
பசித்துதாகமுமெடுத்திடாவுபி—ருழல்வேனே
வெடித்ததாடகைசினத்தையோர்கணை விடுத்துயாகமுநடத்தியேயொரு
மிகுத்தவார்சிலைமுறித்தமாயவன்—மருகோனே
விதித்துஞாலமதளித்தவேதனை யதிர்த்துஓர்முடிகரத்துலாயனல்
விழித்துகாமனையெரித்ததாதையர்—குருநாதா
அடுத்தவாயிரவிடப்பணாமுடி நடுக்கமாமலைபிளக்கவேகவ
டரக்கர்மாமுடிபதைக்கவேபொரு—மயில்வீரா
அறத்தில்வாழுமைசிறக்கவேயறு முகத்தினோடணிகுறத்தியானைகொ
டிருக்கொணாமலைதருக்குலாவியபெருமாளே. (௨)

வேலும்மயிலுந்துணை.

சிவமயம்.

# உபோற்காதம்.

## ஆசிரியவணக்கம்.

நான்மறையின்றொகைவகையினாற்பலவுநன்கெருட்டியுள்ளநாடிப்பன்னாள், மேன்முறையின்வைக்கவெண்ணியுலகநடையிற்றியன்புமேன்மேலோங்கத், தான்றெளிந்துநுண்ணுணர்வாற்கண்டனவுமவின்றெனுளந்தன்னின்மேவும், வேன்மயில்வாகனப்புலவனடியிணைகள்சிரத்திருத்திவிளம்புவேனே.

## விஷயம்.

"வாயுசேஷவிவாதேநதோஷாத்வேஷாபவத்புரா।
சகஸ்ரபணிநாசேஷேமேரோராச்சாத்யசத்வர: ॥௧॥
தத்ரவாயு:பலேநைவதாடயித்வாதவேகிந:।
மேரோ:சகஸ்ரசிகரே திரயமாதாயகச்சதி ॥௨॥
தஸ்யாப்யேகம்த்ரிகூடாத்ரிசிநதுமத்யேசசிங்களே।
ஸம்ஸ்தாப்யபலவான்வாயு:லோகாட்சார்த்தமேவச ॥௩॥
ஏதஸ்மரணமாத்ரேணசர்வபாபைப்ரமுச்யதே।

எனக் காந்தபுராணத்துத் தக்ஷிணகைலாசமகாத்மியங்கூறுதலால் மேருமலையின் திரிகூடசிகரமேஇலங்கையென்பது வெளிப்படை. "லக" என்னும் (தாது) வினையடியாற்பிறந்த "லங்கா" என்னுமபதம், இனிமையுடையது-அடைந்ததுஎன்னும் பொருளுடைத்தாய் தமிழிலக்கணநயம்பற்றி இகரவுயிரைமுதலிற்கொண்டு இறுதியாகாரமைகாரமாய் இலங்கையென்றாயிற்று. ஆகவே சிருட்டிகாலத்தின்றிப் புதிதாகஉண்டாக்கபபட்டதென்க.' "சிவகோடியடையமுனஞ் செம்மறசக்கிரீவனு—லவகோடியகற்றியியற்றறுகோடியாலயமுந்—,தவகோடிவிடணனூற்றருமுக்கோடியுமாக— நவகோடிசிவாலயங்கணணியதிலங்காநகரம்" என்றசெய்யுளின்படி சிவசாந்நித்தியச்சிறப்புவாய்ந்த ஈழமண்டலத்தின் வடகோடியிலேயுள்ளது தக்ஷிணகைலாசம். கைலாசமென்பது — கிலாசமுனிவர் சிவபெருமானைநோக்கித் தவங்கிடந்து அவரைத்தாங்குமாற்றலுற்று மலை

வடிவானமையின் இப்பெயர்த்தாயது. இது உலகிலுள்ள ௧00அ. சிவக்ஷேத்திரங்களிலொன்று. இது இமாசலகைலாசம் மேருகைலாசம் மந்தரகைலாசம் தக்ஷிணகைலாசம் முதலாகப்பலவுள. வெள்ளிமலையாகிய இமாசலகைலாசமே சிறப்பாக நூல்களிற்கூறப்பட்டது. அதனையே இராவணனெடுத்துத் துன்புற்றனன். சிவபிரானங்கேநவரத்தினகசிதமான பெரியகோபுராலயத்தில் நந்தி பிருங்கி மகாகாளர்முதலிய பிரமதகணங்களும் தேவ கந்தர்வ யக்ஷ கின்னராதி பிறகணங்களும்பணிய முனிவர்முதலியோருக்கு அனுக்கிரகிப்பர். அது ஊழிதோறூழ்ங்குமோங்கலென்ப. பிரகிருதி தத்துவத்தின்மேலே அப்பிராகிருதகைலாசமுள்ளது; இது சிறந்ததீக்ஷாவான்களாலடையத்தக்கது; இதுவே சிவலோகம் இதுவுமிதன்மேலுள்ள சிவலோகங்களுஞ் சிவபிரானுக்கு வாசஸ்தானங்கள். இங்குற்றோர் நித்தியராகவாழ்வார்.

இங்கேதக்ஷிணகைலாசமென்றது தேவாரந்திருப்புகழ்பெற்ற திருக்கோணமலையை. இது உத்தரகைலாசத்தில் வாயுவாற்பிடுங்கிய சிகரமூன்றனுளொன்று, அதனை:— "முன்னர்வீழ்ந்திடுசிகரி காளத்தியாய்மொழிவர்—பின்னர்வீழ்ந்தது திரிசிராமலையெனும்பிறங்கல—அன்னதற்பின்னர்வீழ்ந்ததுகோணமாவசல— மின்னமூன்றையுந்தக்ஷணகைலையென்றிசைப்பார்" என்னுஞ் செவ்வந்திப்புராணச் செய்யுளானுமறிக. திரிகூடம், மச்சேசுரம் என்னும்பெயர்களுமிதற்குண்டு; சத்தி போதாயனர், முதலியரிஷிகளுந் தேவாசுரர்களும் பூசித்ததலமுமிஃதே. மகாசுனையென்னுந்தீர்த்தமுமிங்கேயுள்ளது. தற்காலத்திலே இதனைத்திரிகோணமலையெனப்பெயரிட்டு வழங்குகின்றனர்கள். இந்தமகாக்ஷேத்திரத்தின் அதியற்புதங்களைத்தமிழிலெடுத்துக்கூறுவது ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம். இதனை; சிங்கைச்செகராஜசேகரனென்னுமப்படி சைவராசபண்டிதர்கட்டளையிட பிரமஸ்ரீ. பண்டிதராசரருளிச்செய்தனர். வடமொழிமச்சேந்தியபுராணத்தின் நேர்மொழிபெயர்ப்பாகியவிது ஏழுசருக்கங்களையுடையதாய் விருத்தப்பாவாலந்தாதித்தொடையாயியற்றப்பட்டது.

மச்சேந்தியபுராணத்திலே கூறப்படாது பிற்காலத்துநடந்தசரிதங்களை ஆசிரியர் தாமேசேர்த்ததென்றமையின் திருநகரச்சருக்கத்துப் பதினேழாஞ்செய்யுளுக்குமேற்பட்டவை தவறின்றி விருத்தத்தொகைச்செய்யுள்களுக் கிழுக்கின்மையாதலுமுய்த்துணரற்பாற்று.

## குறிப்பு.

இப்பு[illegible] பல[illegible]க்குமுபயோகமாம்பொருட்டு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு வாசிகள் கேட்டுக்கொண்டபடி, பலஏட்டுப்பிரதிகள் ஆராயுங்காலத்து, யாழ்ப்பாணம் தும்பைநகர் பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்களும், திரிகோணமலை வில்லூன்றி பிரமஸ்ரீ. வை. இராமலிங்கக்குருக்களவர்களும் ஷெடியூர் ஸ்ரீ சி. வேலுப்பிள்ளையுபாத்தியாயரும் மட்டக்களப்பு ஸ்ரீகாரை சாமிதாச மயில்வாகனனாரும், ஷெடியூர் கோட்டைமுனை ஸ்ரீ. சி. குமாரசுவாமி அவர்களும், இன்னுஞ்சிலருந்தத்தஞ் சிரமநோக்காது பரோபகார சிந்தையராய் எமக்குச்செய்த இன்றியமையாக்கல்வியுதவிகளொன்றும் வியக்கத்தக்கதேயாம்.

அம்புவிமாந்தர்க்கெல்லாமாயுளோசிறிததற்குள்
வெம்பிணியிளமைமூப்புவிழிதுயில்சோம்புகாதற்
கம்பலையிவற்றைநீக்கிக்கற்பதெங்ஙனங்கற்றாலுந
தம்புலஞ்சிறிதுஞானசாகரம்பெரிதேயன்றோ.

யாழ்ப்பாணம்
நளவருஷம்
சித்திரைமாதம்

இங்ஙனம்.

பு. பொ. வை. தே.

*சிவமயம்.

# நூற்சிறப்புப்பாயிரம்.

—oo:o:oo—

## கவிவீரராகவரியற்றியது.

நிலைமண்டலவாசிரியப்பா.

மணிநிறக்கண்டன்வடபெருங்கயிலையின்
அணிநிறக்கொடுமுடி யாயிரத்தொருமுடி
படவராவொதுக்கப்பறித்தினி திலங்கை
வடகடனடுவண்மாருதம்பதிப்ப
வருமுக்கோணமலைத்தென்கயிலைப்
பரமர்க்*குருத்திரர்பதினொருபேரும்
○ஒருபதுமுகுந்தரு§மொன்பதுவிரிஞ்சரும
வருகடற்கமடம்வழங்கியமீனமும்
திருமலைதழுவியதெசமுகநிருதனும்
பொருமலைமதகரிப்புரவலர்பலரும்
பூசையொடிறைஞ்சியபுராணநூற்கதையைத்
தேசிகன்சொற்படிதென்கலைப்படுத்தி
யந்தாதித்தொடையடைவொடுதொடுத்து
நந்தாவிருத்தநவையறக்கூறினன்
அந்நாட்டரசன்ஆரியர்கோமான்
பொன்னாட்டைந்தருபொருவருகரதலன்
மறுநிலநிருபரைவானிலத்திருத்தி
யுறுநிலமுழுவதுமொருதனிபுரப்போன்
றென்னிலங்காபுரித்திசைதொறுமருவும்
மின்னிலங்கியவேல்மேவலர்புயத்துப்
படவராமுடித்தலைப்பார்முழுதாண்ட
இடபவான்கொடியெழுதியபெருமான்
‡சிங்கையாதிபன்சேதுகாவலன்
கங்கைநாயகன்கருங்கடற்சேர்ப்பன்
பௌவமேற்றுயில்பராபரன்சூட்டிய
தெய்வமாமுடிச்செகராசசேகரன்
அவனதுகாலத்தத்திரிகோணைச்

---

* ஏகாதசருத்திரர்களாவார்: சங்கரர் சம்பு கிரீசர் சமாட்டகர் சுகலாதரர் விரூபர் பகவான் சூலி வாமேசர் தீப்தமூர்த்தி கங்காதரர் என்பவர்களாம்.

○ தசவிஷ்ணுக்களாவார். விஷ்ணு அச்சுதன் சரோருகாக்ஷன் பதமநாபன் கேசவன் நாராயணன் சக்கிரபாணி வாசுதேவன் தாமோதரன் கிருட்டிணன் என்பவர்களாம்.

§நவபிரமாக்களாவார் வேதா விரிஞ்சி சிருட்டா பத்மபூ பிதாமகன் கமலவாசி சுயம்பு சதுர்முகன் விசுவசிருட்டா என்பவர்கள்.

‡ சிங்கையாதிபன்; விஜயகூழங்கைச்சக்கிரவர்த்தி.

சிவன்றுகோயிற்சிவமறைமுதலோன்
அருமறையுபநிடமாகமஞ்சோதிடம்
விரிதமிழ்வரையறவிளங்கியபுராவோன்
சேயினுந்திறலான்சிவநெறிதவறான்
தாயினுநல்லான்றயாநிதியனையான்
முப்புரிநூற்புயன்மூளரியந்தாமன்
செப்பரும்பண்டிதராசசிகாமணி
என்னுநாமத்தெங்குருபெருமான்
மன்னுநாற்கவியும்வல்லநாவலனே.

நேரிசைவெண்பா.

காஞ்சித் தலத்துக் கவிவீர ராகவனூல்
ஆஞ்சித் தனையென் றளவிட்டோன்*—வாஞ்சித்துச்
சேயுயர் முக்கோணச் சிவகதைசெய் தான்விளங்கப்
பாயிரமிங் கோதினனிப் பால்.

நூலாக்கியோனுக்குவயம்.

திருக்கிளருமச்சகேச்சுரபுராணஞ்செந்தமிழாலெல்லோருந்தெளியத்தானே,பெருக்கமுடன்கைலாசபுராணமென்னப்பேருமிட்டுச*சீருமிட்டபெருமைதன்றாற், சருக்கமெழுவகையாக்கிவிருத்தப்பாக்கள்தானுமறுநூற்றுமுப்பத்தைந்தாச்செய்தா, னிருக்குமொழிச்சைவசிகாமணியேயென்னவெண்டிசையெண்பண்டிதவிராசன்றானே.


† கவிராஜர்சொன்னகவி.

நடிக்கும்பரதமியலிசைநாடகநாற்கவி*தை
நொடிக்குமுன்பாடப்பரபந்தங்கணிதநன்னூல்சிவநூல்
படிக்கநிகழ்த்தப்புராணகமஞ்சொல்பரம்பரையாய்
வடிக்குந்தமிழ்வல்லபண்டிதராசன்வரவித்தையே.

---

* சீர் ஒலி—நாதமாத்திரைகாரணமான இந்நூற்பெயர் ஏழெழுத்தாகலின் சருக்கமுமேழென்க.

† கோணேசர்கல்வெட்டாக்கியோன்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம்.

## காப்பு.

### கலிவிருத்தம்.

உதய மால்வரை யொண்கதி ரென்னவென்
னிதய வம்புயத் தென்றும்வி ளங்குவ
மதக டாமழை வாரண மாமுக
முதல்வ னைங்கர மூர்த்திப தாம்புயம்.

## பாயிரம்.

### கடவுள்வாழ்த்து,

#### கோணேசர்துதி, அறுசீராசிரியவிருத்தம்.

சீர்கொண்டகருமுகிலுஞ்சதுர்வேதச்செம்முகிலுஞ்சிறந்துபேண
நீர்கொண்டசெஞ்சடையில்நிமிரரவுங்கூனிலவுநிரந்துசூழத்
தார்கொண்டதிருமார்பில்வெண்ணூலும்பசுந்தொடையுந்தயங்கத்தோற்று
மேர்கொண்டகயிலைமலையொருமுதல்வனிருசரணமிறைஞ்சிவாழ்வாம். (க

இதுவுமது.

வாய்ந்தநிலைமலரடியும்மலரடிமேலேறிட்டுவைத்ததாளுங்
காந்துமணிச்சிலம்பொலியுமொருபாகம்புகவிடுத்தகையுமார்பும்
பாந்தளெலாம்விரித்தாடவிரித்தசடைப்பரப்புமொருபாகமாது
மேந்தியொருகயிலைமலைநிற்குமிறைதன்னைமனத்திருத்தல்செய்வாம். (உ)

இதுவுமது.

?செய்யமலர்த்தாளழகுந்தாள்மீதிற்சிலம்பழகுஞ்சிறுமானேந்துங்
கையழகுமழுவழகுந்திருமார்பினூலழகுங்கருணைப்பார்வைத்
துய்யமுகமலரழகும்புன்முறுவனகையழகுந்துலங்கித்தோன்று
மையனுயர்கைலைமலைமுதல்வனையெம்மிதயமலரழுத்துகிற்பாம. (ங)

**மாதுமையம்மை துதி.**

பார்புரந்ததிருவடியுமடியவர்களீடேறும்படியேபைம்பொற்
றார்புரந்தவடிவழகுமழகெழுமங்கலநாணுந்தயங்குசோதிக்
கார்புரந்தகருங்குழலும்வெண்ணகையுஞ்செவவிதழுங்கருணைக்கண்ணுஞ்
சீர்புரந்தபிடியன்னமென்னடையம்பிகைபாதஞ்சிந்தைசெய்வாம். (ச)

**வீரகத்திவிநாயகர் துதி.**

செம்முளரியுங்கதையும்வெண்கோடுஞ்சக்கரமுஞ்!சிலையும்○பாம்பும்
விம்முமணிப்பொற்குடமுங்கமுநீருஞ்§நென்முடியும்விளங்குஞ்†செங்நெற்
றம்முகமு‡மாதுளமுந்தரித்தொருபால்வல்லபையுந்தரித்தசோதிக்
கைமுகனைமறவாதென்னிதயமுமென்பூந்தியுமென்கருத்துந்தானே. (ரு)

**சுப்பிரமணியர் துதி.**

தானவர்களுரங்கெடுத்துவானவர்கள்புரங்கொடுத்ததலைவன்வேத
ஞானவரம்பெதுகொலெனவரன்கேட்பவுரைத்தபரஞானபோதன்
கானவர்தம்புனத்திலொருகுறமகள்பின்னுறநடந்தகமலபாதன்
றேனமருந்தொடைமுருகனொருவேலனிருதாளென்சிந்தைசேர்ப்பாம். (சு)

**சிவனடியார்கள் துதி.**

சிந்தனையுமருச்சனையுந்தமிழ்ப்பாடலாமெனமுன்செய்தநால்வர்
அந்தண்மலர்க்கழல்போற்றிசண்டீசரடிபோற்றியமலன்கோயில்
நிந்தனையற்றிடவணங்குமடியவர்சேவடிபோற்றிநிமலன்பொற்றாள்
வந்தனைசெய்*பவரெவரோவவர்சரணஞ்சிரத்தினுமென்மனத்துமுய்ப்பாம். ()

**தளக்கோடன் றுதி.**

பார்தாங்குகோயிலும்பொன்மண்டபமுங்கோபுரமும்பரற்குநாட்டி
யோர்தாங்குமாயனுக்குமலங்காரவாலயமொன்றியற்றிமுற்றுங்

---

? செய்யமணி என்பதூஉம்பாடம்.

! சிலை-கருப்புவில்லு. ○ வாமமென்பதூஉம்பாடம். § முத்தலையுமென்பதூஉம்பாடம், † செங்நியென்பதூஉம்பாடம். ‡ மாதுளம் பழமும்வீரகததிவிநாயகர்கையிலுள்ளது.

* வாரெவரங்கவர், என்பதூஉம்பாடம்.

கார்தாங்குதிருக்குளமும்பாவநாசனச்சுனையுங்கண்டகண்டன்
சீர்தாங்குருளக்கோடனெனுஞ்சோழகங்கனைநஞ்சிந்தைவைப்பாம். (௮)

## ஆக்குவித்தவர்பெயரும் நூல்செய்தகாரணமும்.

வைப்பானவடகயிலைதென்கயிலையென்றிரண்டுவரைக்குமீசன்
செப்பாதிவடமொழியின்புராணநடைதென்மொழியாற்செப்புகென்றான்
இப்பாரிலயனான்குமுகமுமொருமுகமாகியிசைந்ததன்ன
மெய்ப்பானகுருச்சைவராசபண்டிதனெனுநால்வேதநூலோன். (௯)

வேதமுதலுபநிடமுஞ்சிவாகமமும்புராணமுதல்விரிநூல்யாவுஞ்
சோதிடமுமந்திரமுமுணர்ந்துணராதவர்தெளியச்சொல்லவல்லோ
னாதலினாலக்குருவின்மொழிகேட்கவேண்டுமெனுமன்பினாலே
யோதினனிவ்வடமொழியின்புராணகதைதென்மொழியாலுலகமீதே. (௧௦)

## இந்நூற்பெயரும், முந்நூற்பெயரும்.

மீதுயர்நதவுருத்திரரும்விரிபதுமப்பெருமலரின்விரிஞ்சர்தாமும்
போதுதிருமாதவருமாதவர்க்குளொருபெரியபுனிதமீனு
மாதரவினிறைஞ்சுகதைகைலாசபுராணமெனவறையலுற்றேன்
மாதுரியமச்சேந்தியவடபுராணத்தியல்புமருவத்தானே. (௧௧)

## அவையடக்கம்.

அத்திறத்திற்கைலாசபுராணமெனத்தமியேனோர்ந்தறைந்தநூலி
னெத்திறத்துவழுவேனுமீரைந்துகுற்றமும்வந்தியன்றதேனும்
முத்தமிழ்வல்லார்சிறிதுமிகழ்வரோசிறியோர்தமுழந்தாளூன்றித்
திததியெனநடித்தாலும்வெறுப்பரோநாடகியார்தீதீதென்ன. (௧௨)

என்னவடியென்னதொடையென்னகவியென்னபொருளிதுகொலென்றார்க்
கன்னபுராணத்தினுண்மையாராய்வினாற்பெரிதுமறியலாமா
லுன்னருமக்கதைப்பொருட்டென்புன்கவியும்பெரியோருட்கொள்வதல்லாற்
கன்னலையச்சுவைக்கலதுகோதிற்கோவாய்சிவப்பக்கறித்துண்பாரே. (௧௩)

## புராணத்தளவு.

பாரிலங்குகயிலாசபுராணத்திற்கேழ்சருக்கம்பயில்விததோங்கு
மாரமுதவிருத்தகவியறுநூற்று*முப்பானைந்தளவேயாகச்
சீரெழுத்துச்சொற்பொருள்யாப்பலங்காரமுதலிய நூனெறிக்கவல்ல
பேரிகழாவகைபகர்ந்தேன்றென்கயிலைமலைநிலைமைபெரிதுந்தோன்ற (௧௪)

தோன்றுமுயிரனைத்துமாய்த்தோன்றரியமெய்ஞ்ஞானச்சுடருமாகிக்
கான்றகதிர்நிலவொழுகுமதியரவுந்திருமுடிமேற்காட்டிநிற்கு
மூன்றுலகுக்கப்பாலாமுதல்வனிதுநமக்கிடமாமுறைமைத்தென்ன
வேன்றமலைக்கொழுந்துவளரிலங்கைவளமதுசிறிதிங்கியம்புகிற்பாம் (௧௫)

பாயிரம்முற்றிற்று.

---

* முப்பத்தொன்றளவெனச்சிலபிரதியிற்கண்டாம்.

## முதலாவது

# இலங்கைமண்டலச்சருக்கம்.

கலிவிருத்தம்.

பாருநாகமும்பைங்கிரியுந்திரை, நீருநேர்புடைசூழநிமிர்ந்தெழு
மேருமீதில்விளங்கியசென்னியோன், றூரமாருதங்கொண்டிங்கமைத்ததே.()

அமைத்தபொன்மலையாதலினப்பெயர், சமைத்தவீழமிதெனவாகழீஇயதா
லிமைத்தமாமணியெங்குமிலங்கலா,*லுமைத்தநீர்வயலூருமிலங்கையே. (௨)

இலங்குமாமணியெய்தலினலலார், துலங்குமாதவர்சூழவருதலாற் [லுமே.
பலன்கொடாவரமெங்கும்பரத்தலாற், பொலங்கொளீழமும்பொன்மலைபோ

மேருவுந்தென்னிலங்கையும்வேறலென், றூருஞ்சொல்வரதற்குமிதற்குள
சீரு[o]முத்தமிழ்ச்செல்வமுமெம்பிரா, னூருநனகயிலாயமுமுள்ளதே. (௪)

உள்ளமும்புறமும்முயிர்க்கொள்கையின், வெள்ளமும்புனல்வெள்ளமுமிக்கெ
ழீஇ, யள்ளல்வாரியடங்கலுமுண்டுகார், துள்ளுதாரைபணித்தல்சொரிந்ததே.

தேனிரைத்துயரம்[?]பலர்ச்செங்கதிர், வானிரைத்துவருவதுபோலநன்
கானிரைத்துநிவந்தெழுகன்[†]மலை, மேனிரைத்துவிளைந்ததுநீத்தமே. (௫)

மேவுகாரகிலும்விரைச்சாந்தமும், பூவுநாவியும்பொன்னுந்தரளமும்
நீவிநன்கடைதோறுநிரைத்தலா, லோவிலாப்புனல்வாணிகரொக்குமால். (௭)

மால்வரைக்களிறுந்திரைவாசியும், மேல்வளைத்தநுரைக்குடைவீக்கமுஞ்
சேலினத்திரள்வாளுஞ்சிறத்தலா, லேலுமப்புனல்மன்னவரென்னலாம். (௮)

ஆங்கரும்புமலருங்கதலியும், மாங்கனிக்குலமுஞ்செவவருக்கையுந்
தேங்குதேனுந்திரைத்தபுனல்சிவ, னோங்குபூசனைக்குய்ப்பவரொக்குமால். ()

ஒக்கவெங்குமுலாயபெரும்புனல், புக்குநானிலமும்புடைத்தார்த்தெழீஇ
மிக்கசெய்தொறுந்தேங்கிவிரைந்துபோய்த், தக்கவாழிதழீஇயப்பரந்ததே. ()

---

* உமைத்த—அமைதியான=பிரகாசமுள்ள.
o முத்தமிழ்—இயல், இசை, நாடகம்.
? அம்பரை, வம்பரை என்றும்பாடம்
† மழையென்பதூஉம்பாடம்.

பரந்தவாய்க்கிணைதண்ணுமைபற்பல, நிரந்தமள்ளர்நெருங்கமுழக்கலா
லரந்தைபோயதின்றுமெனவார்த்தவர்,புரந்தமங்கையரங்கெதிர்போயினார். கக

போயபின்னர்ப்புனல்மறித்தாங்கவ, ராயசெய்வரம்பெங்குமமைத்துநின்
றேயமேதியினங்கொடுழுந்தொறுஞ்,சேயசங்கமுழுந்திகழ்செய்யெலாம்.(கஉ)

செய்யமாமணியைத்திகழ்பச்சையுந், துய்யநீலமுஞ்சூழ்ந்தொளிர்கின்றது
வெய்யவன்பரிவேடமுடன்பெரு, வையமீதுவயங்குதல்போலுமே. (கங)

மேனிலாவெறிசங்கும்வெண்முத்தமும், வானிலாவொடுதாரகைமானலா
லானவாவியுமம்புயராசியும், பானுவின்கதிர்பாய்கடலொத்ததே. (கச)

தேடரும்மணிசெங்கனியென்னவந், தாடிவானரமங்கையெடுத்தய
லோடிநோக்கிநெருப்பிதென்றஞ்சியுள்,வாடிநொந்துமணிக்கைதுடைக்குமால்.

துடைத்துமுன்றிலைத்தூர்த்தெறிகுப்பையைக்,குடைத்தலைச்சுடர்க்கோழி
களசீப்பமண்,அடைத்தமாமணிகால்பட்டலங்கலா, லுடைத்தபேழையுட்பெய்
மணியொக்குமே. (கசு)

கும்பமால்கரிக்கோடுபெயர்க்குமண்,விம்பமாமணிவிட்டுவிளங்கலாற்
பம்புகாரிடையம்புலிப்பாதியி, னும்பரிற்குசனொப்பாவிற்றலாம். (கஎ)

*விற்றமாமணிக்கென்கொல்விலையெனச், சொற்றவர்க்கொர்விலையெதிர்
சொல்கிலா,ருற்றசெஞ்சுடர்நாடொறுமோங்கலா,லற்றைக்கற்றையதிகமுரை
ப்பரால். (கஅ)

பரவுபேட்டொடுபோர்ப்புடையூர்க்குரீஇ, யிரவுகூட்டிடைத்தீபமிடும்படி, விரவு
மின்மினியென்று°மின்கர்ன்மணி,வரவுகொண்டுதன்வாய்கொடெடுக்குமால்

?எடுத்தநீளவரம்பேத்துசெய்யெங்கணு,மடுத்தநென்முளையாமெனவன்னமும்
விடுத்தவால்வளைவெண்டரளங்களை, மடுத்துவாயுறக்கவவுமருதமே. (உ0)

மேகநீரருவி§ப்பணைவிம்முற, நாகமாமணிநல்விளக்கேற்றவந்
தோகையாடச்சுரும்பிசைபாடவெ, ‡தாகவோங்கலலங்குங்குறிஞ்சியே. (உக)

குறித்தவேய்ங்குழலோதையுங்கோற்கொடு, மறித்தகாலிமணிக்குரற்சும்மையு
ம், வெறித்தவேற்றுவியன்பறைக்கௌவையு, முறித்தயிர்க்கடையோதையு
முல்லையே. (உஉ)

---

* விற்குமென்பதூஉம்பாடம். ° மென்கால் பாடபேதம்.
? எடுத்துஎன்பதூஉம் §புனலென்பதூஉம்,
‡ஏகவோங்கலிலங்குமென்பதூஉம் பாடபேதங்கள்.

ஏறுசங்கமொலிப்பவிலைத்தலை, சோறுதாழைசொரிதரப்புன்னைகள், மாறி
ல்காவணஞ்செய்யமணஞ்செய்வார், வீறுகொண்டதுவெண்டிரைநெய்தலே.

நெய்தலீறுகுறிஞ்சிநிலந்தலை, செய்தநானிலமுந்திசைநான்கினு
மெய்தியிந்தவிலங்கையிலங்கலா, லுய்யுமெவவளமும்பிறந்துள்ளதே. (உ௪)

அறுசீராசிரியவிருத்தம்.

பிறப்பெலாமணியினீட்டம்பெருக்கெலாமணியினீட்ட
மிறப்பெலா*நடையின்பேரேயிலையெனிலடையின்பேரே
சிறப்பெலாமுழுமெய்ச்சங்கந்தெருவெலாமுழுமெய்ச்சங்கம்
வறப்பெலாம்வரைவிலாரம்வரையெலாம்வரைவிலாரம். (உ௫)

ㅇஆரணமுழக்கமெங்குமலைகடன்முழக்கமெங்கும்
வாரணஞ்சொரியுந்தானமறையவர்க்களிப்பர்தானம்
பூரணமாகுஞானம்பொருந்திடாததுவஞ்ஞானம்
நாரணனனையபூவைநந்தனமெங்கும்பூவை. (உ௬)

ㅇபூவெலாந்துய்யவாசம்புனமெலாமுனிவர்வாச
மாவெலாங்குயிலிஞைசைமலையெலாங்குயிலிஞைசை
காவெலாமுயர்ந்ததாழைகரையெலாங்கமழுந்தாழை
பாவெலாமரஞர்தஞ்சீர்பகர்வரிதன்னோர்தஞ்சீர். (உ௭)

ㅇஅன்னைபோலளிப்பாருண்டியனைவருஞ்சுத்தவுண்டி
பின்னையென்ஞர்களையம்பெண்கடம்மிடையே?யைய
மென்னையாளரன்விழாவேயெங்கணும்பெருவிழாவே
தன்னைநேருழவர்பண்ணைதண்கலையுணர்வோர்பண்ணை. (உ௮)

ㅇபண்ணுவர்மறையோர்யாகம்பாடுநர்க்களிப்பர்தியாகங்
†கண்ணுளர்புரிவராடல்காவலர்புரிவராடல்
மண்ணுளர்புகழலுண்டுவருவிருந்தோம்பலுண்டு
எண்ணுனர்வரைவில்லாரையேத்துனாவரைவில்லாரை. (உ௯)

வரையெலாமாரமாரம்வனமெலாநன்கார்நன்கார்
நிரையெலாஞ்சாலிசாலிநிரையெலாங்கன்னல்கன்னல்
தரையெலாநீலநீலந்தடமெலாநாறுநாறுங்
கரையெலாமன்னமன்னங்கடலெலாமீழமீழம். (௩௦)

(இ—ள்:) ஈழவரையெலாமாரம்— இலங்கையிலுள்ள மூங்கிலிலே
முத்துகளுண்டாகும், ஆரவனமெலாம்நன்கார்—சந்தனமரம்பொருந்திய ஊ
ர்சூழ்சோலையெங்கும் நல்லகார்ப்பருவநிகழும், நன்கு ஆர் நிரை எலாம் சாலி-

* நடை—செலவு.
? ஐயம்—சந்தேகம்.
ㅇ இந்தச்செய்யுள்நாலும் பலஏட்டுப்பிரதிகளிற்காணப்படவில்லை.
† கண்ணுளர்—நாடகர்.

கண்மைபொருந்திய ஒழுங்குகளெல்லாம் அருந்ததிக்கற்பின் மகளிராலாகும், சாலிநிரையெலாங்கன்னல்— நெற்பயிர்வரிசைகள் கரும்பைப்போலவளர்வன, கன்னல்தரையெலாநீலம்— (இடை)நாடிக்குநேரான தரைப்பாகமெட்டும் நீலரத்தினம்விளையும், நீலத்தடமெலாம்நாறு—கருங்குவளைகளலருந்தடாகங்ளிலே முளைப்பயிருண்டாகும், நாறுங்கரையெலாமன்னமன்ன— சேறறுமணமுள்ள(வாவி)க்கரையெவ்விடத்தும் அன்னப்பட்சிகள்பொருந்த, கடலெலாமீழம்—சமுத்திரமெங்கும் பொன்னமைந்துள்ளன எ—று.

அன்னக்கடலெலாமீழம்—தானியப்பெருக்காற் பொன்னீட்டுவாரெனக் கொண்டுகூட்டியுரைப்பினுமிழுக்காது.

வேறுமொருபொருள்: வரை= மலைகளிலே, ஆரம்= முத்துக்களிருக்கும், (வரை)வரைவின்மையோர், ஆரம்=பூஷணங்கொடுப்பவர், வனம்= காடுகளிலே, கார்= கார்நெல்லுள்ளன, (வனம்) ஊர்சூழ்சோலையில், கார= மேகங்கள்படியும், நிரை=பசுவுக்குவாயுறை, சாலி= நெற்பயிராகும், (நிரை) படைமுன்னணியில், சாலி=வீரருள்ளார், நிரை=வரிசையாக, கன்னல்=கரும்புவளரும், (நிரை)விளையாட்டு, கன்னல்=நரம்பமைந்தயாழிசையாகும்,தரை= பூமியில், நீலம்=மரகதமுண்டு, (தரை) மூலைகளால், நீலம்=காற்றுவீசும், தடம்=மலையிலே, நாறும்=நெல்முளைத்துவளரும், (தடம்) வரம்புகள், நாறும்= மணம்வீசும், கரை=பக்கங்களிலே, அன்னம்=கவரிமான்களுள்ளன, (கரை) இரங்குதல், அன்னம்=அன்னமூட்ட ஆளினறியோயாம், கடல்=எண்ணுக்கடங்காதன, ஈழம்=பொற்குவியலாகும், (இந்தப்படி) (கடல்) சமுத்திரத்திலே ஈழம்=இலங்கையிருக்கும். எ—ம் ஆரவனம் எ—ம், நீலத்தடமெனவும், அன்னக்கடல் எ—ம் பாடபேதங்களுண்டு.

ஈழமும்பளிங்குநீருமெறிநவமணியுமெல்லாந்
தாழமண்மடந்தைநல்குந்தாளமுஞ்சங்குந்துப்பு
மாழியென்றொருநீர்த்தெய்வமளித்திடுவரைமீதுள்ள
வேழமென்றனேக*மேகம்°விளங்குமுத்துகுக்குமம்மா. (௩௧)

அம்பொன்†மேவிலங்கைநீளத்தளவுநானூற்றின்காதம்
பம்புநாட்டகலமத்திற்பாதியினுற்பதேற
வும்பராலயங்கள்கோடியொன்பதுண்டீசுரர்க்குள்ள
செம்பொனாலயங்கள்மூன்றுகோடியிற்றிகழுமாங்கே. (௩௨)

திகழ்ந்தமுத்திலகநிற்குஞ்செவ்விமாக்கோட்டினுனு
நிகழ்ந்தமாமேருக்குன்றநிகரெனநெடிதுதோற்று
மகிழ்ந்திடுமரகதத்தைமாணிக்கக்குவையினசோதி
யுகழ்ந்ததனூலுமீசனுமைதனைமணத்தலொக்கும். (௩௩

---

* வேழம் ° வெளிறுமுத்தென்பன பாடபேதங்கள்.
† ஒய்யிலங்கையென்பதூஉம்பாடம்.

ஒக்கவானுயர்ந்தும்பனுறத்துதாணிறத்துங்குன்றந்
தொக்கவெள்ளருவிநான்குசூழ்திசைதோறும்வீழ்தல்
அக்கருவரையிற்பாதத்தமரர்பூசித்ததீர்த்தம்
புக்கதீவினைபோமாறுபொழிவதாம்புடையுளோர்க்கே. (௫௪)

புடைத்துமால்கரிக்கைவீசும்*பூழ்திசைச்சிகரமுற்றுந்
துடைத்திடுதுகிலேபோலவெண்முகில்சூழ்ந்துலாவு
மடுத்தபொற்குவட்டிற்செல்காலடிக்கடியருக்கன்○தேரில்
படைத்திடுபரிதங்காலிற்படுமெனமறுகாற்பாயும். (௫௫)

†மறுகெலாமரம்பைவெள்ளை!வாரணம்புலவர்மல்கப்
பெறுதலாற்கற்பகத்திற்பிறங்கலாணிறங்கொளீழ
முறுதலால்வாசவன்§மேலுலவலாலமுதின்சாலை
துறுதலாலிலங்கைநாடுசுரேந்திரனாடொக்கும். (௫௬)

நாடருஞ்சிகரத்தும்பர்நவமணிப்புதியசோதிப்
பாடலம்விண்ணுமண்ணும்படர்ந்துகீழ்ப்பளிங்குமுன்றி
லூடெழுநிழல்போயப்பாலுரகர்மாமணியும்வெள்க
நீடரும்பாதலத்தினெறியுறப்புகுதல்போலும். (௫௭)

புகுந்தசீரிலங்கைநாடும்புலவர்பொன்னாடுந்தூக்கிப்
பகுந்தபோதந்நாட்டின்படியணுக்குறைந்துபின்னு
மிகுந்தமாமணியாற்பொன்னால்மேன்மையான்மருந்தாலொத்த
திகந்தவானாடெனாலுமிலங்கைக்குத்தோற்றதம்மா. (௫௮)

தோற்றுமிவ்விலங்கைநாட்டின்றொல்வளஞ்சிறிதிங்கேனுஞ்
சாற்றினனிசைக்குமிந்தத்தலத்திலுத்தரபாலாக
²வேற்றினனிருக்கும்வண்ணமொருவரைபெய்தல்செய்த
வாற்றமுற்புராணஞ்சொற்றவுரைதெரிந்துரைப்பனிப்பால். (௫௯)

இலங்கைமண்டலச்சருக்கம்முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் ௬௪.

---

* பூழ்—குழைசேறு. ○ தேர்க்கால்என்றும்பாடம்.

† இது சிலேஷார்த்தக்கவி. ! வாரணம், இங்கேசங்கு. § மேருலவலாலமுதின்மூரல் என்பதூஉம்பாடம்.

² ஆற்றணிவேணியண்ணலருளுடனமருகின்ற—, ஆற்றமில்கைலே தோற்றமொருசிறிதுரைக்கலுற்றாம்' என்பதூஉம்பாடம்.

# இரண்டாவது

# திருமவலச்சருக்கம்.

(அறுசீராசிரியவிருத்தம்.)

உரைத்தநால்வேதத்துச்சியொருதனித்தலைவனாகி
யரைத்தலைப்பாம்புசூழ்வானணையாலயன்மாலும்பர்
நிரைத்தபேரண்டகோடிநெடுமுகடனைத்துஞ்சாயக்
கரைத்தலைதெரியாவூழிக்கடல்புடைபெயர்ந்ததன்னாள். (க)

நாளொடுநாளுஞ்செல்லுநவப்பெருங்கோள்களும்புத்
தேளிருநகருமோதித்திசைமுகன்பதியுங்கோத்துக்
காளமாமுகிலின்மேனிக்கடவுடன்பதமுங்கொண்டு
தாளறுத்தெவையுஞ்*சாயத்தழீஇயதவ்வாழியெங்கும். (உ)

எங்கணும்பரந்தநீத்தமெறியலையலைப்பச்சிந்தித்
தங்குபேருலகமேழ்கச்சராசரமனைத்துமாய்த்[illegible]த்
துங்கவெள்விடையான்மேனிச்சுடரிடையுயிர்கள்யாவும்
பொங்குபொன்னுருகித்தம்மிற்புகுவபோற்புகுந்துநின்ற. (௩)

நின்றபேராழியூழிநிமலனிவ்வுலகையெல்லாங்
கொன்றிடவிடுத்தசேனைக்குழாமெனமுழங்குகாலை
°யன்றதனாப்பணீங்காவரும்பரைகுமிழியாகிப்
பொன்றலில்சோதிதானாய்ப்புகவிளையாடிற்றங்கே. (௪)

ஆங்கெறிபரவைவெள்ளமடங்கலுங்கார்மீதேறி
யீங்குயருலகத்தூடேயிழிந்துநின்றுலாவிமீண்டுந்
தேங்குநீர்க்கடல்போமாப்போற்சிவனளித்தகிலத்துற்ற
தாங்கருஞ்சுடர்கள்யாவுந்தனிச்சுடரடைந்தவன்றே. (௫)

அடைந்தவச்சோதிநாதமதண்மொக்குள்விந்துவாகப்
படர்ந்ததோரநேககோடிபரிதியிற்படலைகான்று
கடந்தபேரூழியாழிக்கடலலைத்தாலுஞ்சாலத்
திடந்துளங்காதுமேன்மேற்றிகழ்ந்துமீண்டெழுந்ததம்மா. (௬)

எழுந்திடுகுமிழியாயவெம்பிரானனந்தகாலங்
கொழுந்திரைக்கடலினின்றுபின்னொருகருணைகூரப்
பொழிந்ததுபடலைச்செந்தீபுணர்ந்ததுபுணரிமேலோர்
செழுந்தலைவெற்புமாலைசிறுபொடிபொடித்தசுற்றும். (௭)

சுற்றெலாம்பொடித்ததூளிசுதைமதிலாகமுந்நீர்
வற்றினும்வற்றாமொக்குண்மதிற்கொருசிகரமாக

---

* சாய்த்து—பாடபேதம். ° அன்றவனார்வநீங்கா—பாடபேதம்

வுற்றதோரிலக்கங்கோடியோசனையுயர்ந்திரண்டு
பெற்றபங்ககலமாகிப்பெயர்விலாக்கயிலையான (௮)

ஆணவக்*கயிலைக்கங்கமரும்பரையாகத்தொல்லை
யீனமில்சோதியோராயிரம்பெருஞ்சிகரமாக
மானநாற்றிசையும்வாயில்மற்றைநாற்சத்தியாகத்
தானமாயதற்குநாப்பட்டங்குமெங்கடவுட்டோற்றம் (௯)

தோற்றியதானும்பாகத்தோகையுமிருந்தவெல்லை
சாற்றியதோகைசெங்கைத்தாமரைபிறந்தவிந்து
மாற்றருஞ்சோதியானமுன்வருவித்தவூழித்தீயை
யூற்றமோடுண்டுவெம்மையொருகணத்தமைத்ததாங்கே. (௧0)

அமையுமக்காலத்தந்தவரும்பெருங்கயிலைக்குன்றத்
துமையுமெம்பிரானுமொன்றாயுறைந்துழியூழிமேனா
ளிமையவர்முனிவரண்டரிந்திரனயன்மால்வேதஞ்
சமையமுந்துடைத்தாய்மீளச்சமைக்குதிதலைவவென்றாள். (௧௧)

என்றலுமிதயத்துன்னியிலங்குதன்வடிவத்தூடே
யன்றுருத்திரன்மால்வேதனண்டமண்டத்துளோரைத
துன்றுவித்தவர்க்குத்தத்தந்?தொழில்குணம்பயிற்றிமுன்னர்ப்
பொன்றுபல்லுயிருமீளப்படைத்தனன்பொருவிலாதான். (௧௨)

படைத்தமுத்தலைவரீசனபணித்தவப்படியேகீழ்பாற்
கடைத்தலைக்கமடமாதிககனமூதண்டமீறா
யிடைத்தலைப்படுவயாவுமெவ்வுயிர்தொகையுஞ்செய்து
சடைத்தலைபிறைவற்காணச்சயிலவெண்கயிலைபுக்கார். (௧௩)

புக்கவரிறைஞ்சிநின்றபொழுதுபூங்கமலத்தோனை
முக்கணனோக்கிவெள்ளிமுதுகுன்றமிதற்குநாப்பண்
டொக்கபேரவைக்குட்பீடந்தொகுத்துநீசமைத்தியென்ன
வக்கணமிருகைகூப்பியயனினிதமைக்கலுற்றான். (௧௪)

அமைவுறுகிரணநீலத்தடுக்கிமுத்தருகுபோக்கித்
தமனியநிலத்திற்சேர்த்திச்சலாகையிற்கால்களூட்டி
யிமைதருமரிமானேந்தவியற்றியபீடந்தன்னை
யுமையொருபாகன்முன்னருய்த்தனனுலகமுய்த்தான். (௧௫)

உய்த்தவப்பீடந்தன்னையுருத்திரகணங்கணோக்கி
யத்தனுக்கொருதேராழியாகியவருக்கரெல்லா
மித்தலை†யின்றுபீடத்திருந்திடுந்தலைமையென்னச்
சத்தியுஞ்சிவனுமந்தத்தமனியப்பீடஞ்சார்ந்தார். (௧௬)

---

* இதுஉத்தரகைலாசம். ? தொழிற்குளஎன்றும்பாடம்.
† ஒன்றும் பாடபேதம்.

தாரணிசடிலத்தெம்மான்சத்தியோடுறைந்தவெல்லை
யாரணன்முதல்மூவோருமரகரவெனக்கேட்டும்பர்
சீரணிமுனிவர்நாகர்சித்தரோடியக்கர்மிக்கோர்
வாரணிமுலைத்தம்மாதருடனவர்வந்துபுக்கார். (கஎ)

புக்கவர்°பழமரத்திற்புட்குலம்புகுவபோல
நக்கன்மாக்குன்றஞ்சூழ்வார்நவிலுமக்குன்றிற்சால
மிக்கவெங்களிற்றினீட்டம்பிடியொடும்விரவியேறத்
தொக்கதோருவமையல்லாற்சொல்லவேறுவமையுண்டோ. (கஅ)

உண்டிலையென்னநின்றமருங்கொடுமொருங்குகூடி
வண்டமர்குழலார்வெள்ளிமலையிடைதொடருந்தோற்ற
மண்டமுமகண்டம்யாவுந்தழுவியவசலஞ்சூழத்
தண்டலில்பசும்பொற்சோதித்தளிர்க்கொடிபடர்வபோலும் (கக)

படரொளிச்சிலம்புபம்பும்பாவையர்பதச்செம்பஞ்சு
சுடரடிச்சுவடுபற்றித்துலங்கியகயிலைத்தோற்றங்
கடவுள்வெண்பாலின்வேலையிடையிடைகமலம்பூத்த
வடைவினைநிகர்வதல்லா²லல்லதுசொல்லலாமோ (உ0)

ஆமிவர்சாயலாலுமருமடநடையினாலு
மேமுறுமினமென்றெண்ணியிளமயில்பிடியொடன்னங்
தாமவார்குழலார்செல்லுந்தாளிணைப்பிறகேசெல்லக்
காமுறலனேகமென்றால்மகளிர்தங்கணக்கார்சொல்வார் (உக)

சொல்லருமரம்பைமாதர்சுரிகுழன்மலருந்தேவர்
மல்லலம்புயத்திற்றங்குமாலையுமியக்கர்மார்பி
னல்லளிகுழுறுந்தாருநாகர்தம்முடியிற்போது
மெல்லையிற்கோடிகாதம்பரிமளித்தெழுந்ததாங்கே. (உஉ)

கலிநிலைத்துறை.

ஆங்குவானவர்மவுலியிற்செம்மணியழகும்
பாங்கில்மாதர்தங்கருங்குழற்கருமையும்பலவா
யோங்கல்வெண்பளிங்குட்புறநிழல்விடவோடை
தாங்கு‴மாம்பலுஞ்சூழ்வருவண்டும்போற்றயங்கும (உ௩)

தயங்குகின்னரர்வீணையின்சுருதியுந்தகையோா
முயங்குமங்கையர்சிறுமொழிமழலையுமுயங்கும்
வயங்குபல்லியத்தமலையுமறையின்வாயொலியு
மியங்குமண்டவான்முகடளவதிர்படவிசைக்கும். (உ௪)

° புக்கரன்பழுமரம் என்றும்பாடம். ‴ ஆம்பல்—அல்லி.
² அல்லது—வேறொன்று.

இசைக்குநூலொடுமுப்புரிநூலினரிருகை
யசைத்தகுண்டிகைத்தண்டினர்மரவுரியரையர்
குசைப்பசும்புலர்விரிசடைமுடியினர்குழுமித்
திசைக்கடோறும்பல்லாயிரகோடியர்செறிந்தார். (உரு)

செறிந்தகாய்கனியுண்டியாற்றிருவுருப்புலர்ந்தோர்
நறுந்தளிர்த்தொகைமலர்கொய்துமுனிவர்க்குநயப்போர்
குறைந்தசிற்றிடை○வற்கலையுடுத்தகொம்பனையர்
ரறைந்தமாதவர்பன்னியர்துன்னினரநேகர். (உசு)

துன்னியிம்முறைமகளிருங்கடவுளர்தொகையுங்
கன்னிகாண்மலர்ப்பெருமழைசொரிதருகரத்தார்
நன்னராசிசொலுவினர்நடைநடைதோறுஞ்
சன்னிதித்திசைநோக்கியேவிழுந்தெழுந்தலையர் (உஎ)

தலையுருத்திரகண்ணத்தவரநேகர்செஞ்சடையர்
நிலவெறித்தவெண்ணீற்றொளிமேனியினிறத்தர்
கலைமதித்திருமுடியினன்கயிலைமேற்பாலி
னலைகடற்பரந்தடைவதுபோலவந்தடைந்தார். (உஅ)

அடைந்ததேவராய்ப்பிறந்தவரநேகர்க்குங்கைலை
யிடந்தனித்தனிவரவரப்பெருத்ததென்சொல்கேன்
கடந்தமூதண்டம்யாவையுங்காட்டியபரைதன்
படர்ந்தமேனியாம்பழமையும்பொய்மையோபகரில். (உகூ)

பகரில்வெள்ளியங்கிரிதனைப்பெரிதெனப்பகர்கோ
சிகரமால்வரைநீளமுள்ளளவெலாஞ்செறியு
நிகரில்வானவர்குழாந்தனைப்பெரிதெனநினைகோ
மகரநீர்மணலெண்ணிலுமெண்ணுணுமனத்தால். (கூ0)

ஆலமுண்டவர்கயிலையையிவ்வணமணுகி
மேலையிந்திரன்முதலினோர்விழிப்புனல்பொழிந்து
சாலநந்திகைப்பொற்பிரம்பேவலாற்றலைவன்
கோலவாயிலுங்கடந்துபொற்கோயிலுட்புகுந்தார். (கூக)

தாரகைக்குலந்தழுவமீதெழும்பிறைதன்னை
யாருஞ்செக்கரஞ்சடைமுடிமீதணிந்தவனை
யீரநாண்மலர்விரிஞ்சனன்றியற்றுபீடத்தின்
மேருமால்வரைபவளவெற்பெனவிருந்தவனை. (கூஉ)

---

○ வற்கலை—மரவுரி.

இருக்குமேனுலகேழினோடேழையுமேந்தும்
பெருக்கும்வாளரக்கங்கணம்பிறங்குகையவனை
யுருக்குந்தீயிடையரக்கெனவுமையுமுள்ளுருகத்
திருக்கடைக்கணுநோக்கிய திருமுகத்தவனை. (கூக)

முகமுகத்துடனெதிர்ப்படக்கண்கள்முகந்து
நெகநெகக்கனிந்தென்புறவுருகிநின்றிரங்கி
யகமலர்ந்துதம்மெய்முழுதந்நிலத்தழுந்தப்
புகவிழுந்தரகரவெனமுறைமுறைபுகழ்ந்தார். (கூச)

அறுசீராசிரியவிருத்தம்.

புகழ்ந்தனர்சிலர்தங்கண்ணீர்பொழிந்தனர்சிலருள்ளன்பு
நிகழ்ந்தனர்சிலர்பெம்மானை நினைக்கிலார்செனனந்தன்னை
யிகழ்ந்தனர்சிலர் தூரத்திலிறைஞ்சினர்சிலர்கைகூப்பிதி
திகழ்ந்தனர்சிலர்பொன்மாரிசிதறினர்சிலராய்நின்றார். (கூரு)

நின்றகலாதசோதிநிழலெனக்கோடிகோடி
துன்றுமெண்டிசைகடோறுஞ்சுராதிபரேந்துஞ்சோதி
யன்றொருருகுமிழியாய்நின்றருளுநாளமர்ந்தசோதி
யின்றுபற்பலவாய்த்தோன்றிற்றென்னலாங்கயிலையெங்கும். (கூசா)

எங்கணுமெழுந்ததூபத்திட்ட! சீதாரிக்கந்த
மங்குறநிறைந்துதிக்குமண்டமுநிரம்பித்தெய்வத்
திங்கள்சூடியவெம்பெம்மான்சிவலோகத்தெருக்கடோறும்
பொங்கியதென்றலந்தப்பெருமையார்புகறற்பாலார். (கூஎ)

பாலலைப்பள்ளியானும்பங்கயத்தயனுங்காணுக்
காலினையெவருங்காணக்காட்டியகடவுட்குன்றம்
மேலுறப்பொழிபூமாரிவேலைநீடுயிர்த்துமாறு
யேலநாண்மலரைமொண்டுண்டிறைப்பதுநிகர்க்குமம்மா. (கூஅ)

மாதவர்முனிவர்வானோர்வழுத்தியமுழக்கத்தோடே
மோதியதாள௬காள‖முழாவலம்புரிப்பேரோதை
சோதியைவணங்கப்போந்தார்சுரரெனத்தொடர்ந்துபின்வந்
தோதவேலைகளோரேழுந்திசெய்வதொக்குமன்றே. (கூகூ)

கலிவிருத்தம்.

மன்னியவின்னிலைவானநாடருந்
துன்னியமுனிவரும்பிறருஞ்சோதியைச்

---

! சீதாரி—சாம்பிராணி.

௬ காளம்-சிறுசின்னம்.

‖ முழா-மேளம்.

சன்னிதிவந்துகண்டிறைஞ்சித்தாண்மலர்
சென்னியிற்புனைந்துதந்துயரஞ்சிந்தினார். (௪௦)

சிந்தைநீசிந்தையிற்றெளியுஞ்சோதிநீ
யெந்தைநீயாயுநீயெங்கட்காவிநீ
விந்துநீநாதநீமேலுங்கீழுநீ
பந்தநீவீடுநீபகலுமல்லுநீ. (௪௧)

நீயலாற்பிறிதிலைநிலமுதற்பிறப்
பாயவைம்பூதங்களங்§கங்காயினை
யாயகநின்பதங்களினம்போற்றுதற்
கேயதுபெருந்தவமென்செய்தோமரோ. (௪௨)

அறுசீராசிரியவிருத்தம்.

செய்யுமெய்த்தவமேபோற்றி†சிவபரம்பரனேபோற்றி
வையகம்படைத்துங்காத்துமறித்துயிர்துடைப்பாய்போற்றி
யையனேபோற்றியெம்மையாண்டநாயகனேபோற்றி
தையலோர்பங்காபோற்றிசங்கராபோற்றிபோற்றி. (௪௩)

போற்றியேமறையுந்தேடும்பூங்கழற்புண்டரீகஞ்
சாற்றியவெமக்குத்தந்தாய்தண்ணளியெளிமையென்னே
யாறறலையொலிக்குஞ்சென்னியமலனேயின்றுநின்ற
தோற்றம்போலென்றும்யாங்கள்தொழற்குமுன்னிற்கவென்றார். ௪௪

என்றவர்மீண்டுமீண்டுமிணையடிபணியுந்தோறு
மன்றவர்மவுலிமாலையாதனச்சோதிக்கற்றை
குன்றமாகயிலையெல்லாங்கோடிபல்வெய்யோரீண்டி
வென்றிவெங்கிரணச்சூழல்விரித்தெனவிரிந்ததெங்கும். (௪௫)

விரிகதிர்த்தரளக்கொங்கைமெல்லியலரம்பைமாத
ரரிவையர்பிறரும்யாருமம்மைமுனனிறைஞ்சியெம்மைத்
திருவடிக்கடிமைகொண்டின்றிருவருள்சுரத்தியென்னப்
புரிவளைக்கரங்கள்கூப்பிப்புகழ்ந்தயனின்றாரன்றே. (௪௬)

அன்றந்தவமரர்வெள்ளமனைத்தையுநறைத்தண்டாமக்
கொன்றையஞ்சடிலக்கோமான்குளிர்மலர்க்கடைக்கணோக்கி
நின்றதோர்நந்திதன்னைநின்கையிற்பிரம்பானீக்கி
யின்றவையாகநிற்பித்திருபுறநிறுத்துகென்றான். (௪௭)

நிறுத்தினன்றியந்தநெடியமாலயனுந்தெய்வத்
திறத்தொருகோனும்வானோர்தொகுதியும்பிறருஞ்சேர

---

§ அங்கமாயினை பாடபேதம்.
† சேயொளி பாடபேதம்.

குறித்தவர்நிலையினின்றுகூப்பியகையராகி
மறைத்தபேருலகமீளவகுத்தவாறுணர்த்துகென்றார். (சஅ)

உணர்த்தருமுலகையெல்லாமுதிகொண்டலைந்தவெல்லை
குணிப்பருமனந்தகாலம்*பரையொருகுமிழியாகத்
தணிப்பிலாக்குமிழிக்கேயாமொளியெனத்தரித்துநின்று
பணித்தனமூழிச்செந்தீயதுகடல்பருகிறறன்றே. (சகூ)

பருகலுங்குமிழியிந்தப்பருப்பதமாயிற்றிங்ஙன்
மருவினந்துணைவியோடேமறிததுநம்வடிவத்தாடே
யருணெறிமூவரைத்தந்தவர்பொருட்டகிலமெல்லாம்
விரிதரச்செய்வித்தேந்தச்சேடனைவிடுத்தோமென்றான் (ருo)

என்றலு○மிரலையூர்தியிறைஞ்சிநின்றறைவானைய
வுனறிருவருளாலெந்தவுலகிற்குநிலைமையல்லா
லன்றியும்பிறிதொன்றில்லையாதலாலெமைச்சொலாது
வென்றியிற்சேடனேந்துமென்றதென்விமலவென்றான். (ருக)

கலிநிலைத்துறை.

ஆனகாலையங்கரவினுக்கரசனின்றழலா
வூனமொன்றிலார்பற்பலரிருப்பநீயொருவன்
மானவென்வலிசொல்லலுமனம்பதைத்தெழுந்தா
யீனநின்மதிகாண்மதியென்பதிங்கிதுவே. (ருஉ)

இதுமொழிந்தநின்னுண்மையெத்தனைக்குமீறாக
வதிருமாயிரம்வாயிலோர்வாய்க்கடையமையும்
விதுவுஞ்செங்கதிர்க்கடவுளும்விழுங்குதவனென்றால்
முதிருந்தேவர்முன்னீகொலோவிகழ்நதெனைமுனிவாய (ருந)

வாயினூற்சிலசொல்லலாம்வருவதொன்றுளதோ
நாயகன்றிருவருளினல்நாமிருபேருந்
தீயபூசலொன்றியற்றினுற்றெறியுமிங்கென்றான்
மேயவாயுவுநகைத்தெதிர்புகையெழவிழிததான். (ருச)

விழிகள்மூன்றுடையெம்பிரானேவலால்விதித்த
வழிவில்பேரண்டச்சராசரமனைத்திற்குநினக்கு
முழுதுமாவியுள்யானொருமுயககமாயியங்காப்
பொழுதுநிற்குநில்லாதெனவுணர்கிலைபுல்லோய். (ருரு)

ஓயவோய்ந்து§காணூழித்தபோதொழிந்ததிவவுலகிற்
காயமாதியவநாதியாய்வருவதுங்கருதாய்

* குலவியபரமயோகம்-பாடபேதம்.

○ இரலையூர்தி—வாயுதேவன்.

§ நானுழிதரவுழிந்ததிவ்வுலகர் என்பதூஉம்பாடம்

நீயிருக்கிலென்பொருகிலென்னீயுமோர்பொருளோ
மேயகோபுரந்தாங்கியென் றுரைப்பதும்விருதோ. (௫௬)

விருதுகூறியநின்வலியென்வலிவிரைவிற்
பொருதுகாண்குவமென் றலுமுரகனும்புகைந்து
வருதியென் றனனிருவருமிறைவனைவணங்கித
தருதிபோரெனப்போர்க்கிடங்கொடுத்தனன் றலைவன். (௫௭)

தலைவன்கூறியபணியினாற் றவளவான்கயிலை
நிலை"மாயிரஞ்சிகரமுந்திசைதிசைநெருங்கப்
பலபணாமுடிப்பரப்பினான்மறைப்பனீபறிப்பி
னுலகெலாமுனக்கொருதனித்தலைமையுண்டென்றான். (௫௮)

உண்டெனப்*பரிபவம்பெரிதுரைத்தவாயுடைத்து
மண்டு°சூடிகைப்பொறிப்படங்கிழிபடமலைந்து
சண்டவூழியினுலகெலாந்தவறினுந்தவறாக்
கொண்டல்மால்வரைச்சிகரமுங்கொள்வன்யானென்றான். (௫௯)

என்றவாயுவுஞ்சேடனுமெதிரெதிர்மலைந்து
நின்றபூசலைநோக்குவம்யாமெனநிமலன்
தன்றுணைப்பெருந்தேவியுந்தானும்வானவருஞ்
சென்றுமுன்றிலிற்போந்துபுன்முறுவலுஞ்செய்தான். (௬0)

செய்யசூடிகைப்பொறிப்படம்விரித்தவச்சேடன்
மொய்கொளாயிரங்குவடுமுட்புதைபடமூடி
ஐயன்வெண்ணிறக்கைலைக்குச்செந்நிறத்தநேகந்
தூயமாமணிக்†கோளகைவிரித்தெனச்சூழ்ந்தான். (௬௧)

சூழுமாருதக்கடவுளுஞ்சுழித்தெறிந்தார்த்தான்
பாழிமேருவேயாதியபருவரைக்குழாமு
மாழியம்பெருங்குன்றமுமடிபெயர்ந்தசைய
ஊழிகாலமோவிதுகொலென்றுலகுளோருலைந்தார். (௬௨)

உலைந்தவாயிரகோடிபேரண்ட²மோடுலக
மலைந்தபூசலுமலைப்பவன்பவனனுமாகக்
கலைந்தவெள்ளிவெற்பதிலொருபெண்ணெனக்கறங்கத்
தொலைந்துமண்ணொடுவிண்முதற்சுழல்படச்சுழன்றான். (௬௩)

சுழலுமேழ்கடற்பரப்பெலாஞ்சிறுகுறுந்துளிபட்
டழலுமெண்டிசைக்கிரிபொடிபறக்குமென்றுரைத்தாற்
றழலுநீத்தமும்விண்ணுமண்ணுந்தடுத்திடினு
மழலுமாருதத்தெறுசினமடங்குமோவடங்கா. (௬௪)

---

* பரிபவம்—இழிவு.
° சூடிகை—முடி.
† கோளகை—அண்டகோளவோடு.
² ஒருலகமென்பதூஉம்பாடம்.

அடங்குமப்பொழுதமரருமுனிவருமயனும்
படங்கொள்பாயலான்முதலியபலருமெம்பகவ
னிடங்கொள்சேவடியிறைஞ்சிநின்றினியொருகணத்தி
லொடுங்குமண்டமுஞ்சராசரக்குழாங்களுமுரவோய். (௬௫)

உரமிரண்டினுமொன்றொடொன்† றிழிபடாதொருவர்
விரவுமோர்தலைவிலக்கலேனன்றெனவிளம்ப
வரவையாயிரங்குவட்டிலோர்குவடுவிட்டகலச்
சுரரியம்புமினெனவியம்பினனுமைதுணைவன். (௬௬)

துணைக்கைகூப்பினரோடினர்சொல்லினர்சேடன்
அணைக்குமாயிரம்பணாமுடிக்கோர்முடியகற்றப்
பணைக்குமச்சிகரந்தனைக்கையுறப்பறித்துக்
கணைக்குநேர்கண்ணிபங்கன்முன்வைத்ததக்காலே. (௬௭)

காலமீதெனவிறந்திடாதுலகெலாங்காத்தாய்
*வாலராவொருவிரிபடஞ்சாய்த்தெனவறைந்தார்
மேலைவானவரனிலனைநோக்கியுன்வீரம்
போலவாருளர்வீரரென்றவனையும்புகழ்ந்தார். (௬௮)

புகழ்ந்தவாயுவைக்கயிலையின்றென்புறம்பொலிந்து
திகழ்ந்தவித்திரிகூடமாஞ்சிகரத்தையேந்தி
மகிழ்ந்தியாமிதில்வருகுவந்தென்கடன்மருங்கே
நிகழ்ந்தவீழத்தின்வடகரைநிறுத்துநீயென்றான். (௬௯)

எழுசீராசிரியவிருத்தம்.

என்றரன்றிரிகூடவெற்பிலெழுங்கொழுந்தறவேறினன்
றன்றுமாலயன்வாசவன்சுரநாடர்சூழவணங்கினோர்
நின்றவாயுவைநோக்கியிந்தநெடுங்குவட்டினையேந்தென
வன்றுகூறினனின்றநாகமதாடவம்புலிசூடினான். (௭௰)

அம்புராசிகொளூழிபோயபினுமுகம்பதினெட்டுளும்
நம்புசீரவியத்தமாதிநடக்குமிந்தவுகத்துளே
யிம்பர்வாழவிலங்கையிற்கடிதெய்துவந்திரிகூடமே
லும்பர்மாலயனீவிர்வம்மெனவோதினனுமையாதியான். (௭௧)

ஆதிகேசவனாதிவாசவனமரர்நன்பரிவாரமாய்ப்
போதவேதனியற்றியிட்டசடங்கினிற்கலைபுகலநீ
யோதவேலையிலங்கையுத்தரமுயரும்வெற்பினடிக்கொரு
தாது°பொற்கதவிட்டுமீதுதரித்தனன்னமருத்தனே. (௭௨)

---

† ஒளிபடர்ந்தென்பதூஉம்பாடம்.
* ஆலவாளராவெனபதூஉம்பாடம்.
° போற்கதவென்றும்பாடம்.

§அருத்திசித்திரையுத்தராயனமாதபத்தினமத்தநாள்
குருத்திகழ்ந்திடுமோரைபூரணைகூடுமானியம்வேனிலாம்
பருத்தமாமகரத்துமுன்னொருபங்குறத்திரிகூடமிங்
கிருத்துகாலமெனத்தெரிந்தயன்யாவருக்குமியம்பினன். (௭௩)

நானிலப்பெருமகளுடுத்தகடற்குள்யோசனைநண்ணிய
மேனிலத்தினையாறுதண்டுநிமிர்ந்தடிப்புடைவிரிவினால்
மானகாவதநான்குகொண்டுதன்வளர்கொழுந்திடமைந்துமூன்
றூனதண்டிடைபெற்றதக்குவடண்டகூடநிகர்த்ததால். (௭௪)

அண்டர்நாயகனக்குவட்டிடைகங்கைபொங்கவழைத்தனன்
றெண்டிரைக்குநடுப்படச்சிவலிங்கமேனிதிகழ்ந்துநீள்
விண்டதோர்கனகக்கபாடமொடுருவுபாதலமீதுவேர்
கொண்டுமேவின*மேலைநாகருச்சனைப்படிகொள்ளவே. (௭௫)

கொள்ளுமேனியடங்கலுங்குளிர்கங்கைகொண்டதுகோதைகண்
டுள்ளமர்ந்ததெனெம்பிரானுனதடிபணிந்துலகுய்யவே
வெள்ளநின்பதமீதுநின்றிடநீயதன்புறமேவுற
வள்ளலேவருகென்னவந்தனன்மாறிலாவிடையேறினன். (௭௬)

ஏறுமித்திரிகூடம்வந்ததிருந்ததிப்படியிதனிடை
வீறினுத்தரமொருபெருங்குகையதின்முனிக்கணமேவிடுங்
கூறுதென்குகைமணியுகும்புனல்முத்தமுங்குடகுகையுகும்
மாறிலானுறைகங்கையுட்புகவழிதருங்குகைபூருவம். (௭௭)

உவந்ததோர்நிருதித்திசைக்குகைவெள்ளியாலயமுள்ளுற
நிவந்தபூதமதொன்றுநின்றிடுநெடியவாயுதிசைக்குகை
சிவந்தநாகருலோகமேல்வழிசெல்வதீசர்திசைக்குகை
தவந்தரத்தருமுத்தியிவ்விதகுகைகளேழ்வகைசார்ந்ததே. (௭௮)

தேடும்வெற்பினிலுட்பெருஞ்சுனைசென்றுதுன்றியசேவடி
நீடுபாதலமப்புறந்தொழநின்றநாதனையிப்புற
நாடுமண்டலமண்புறந்தொழநண்ணினருயர்விண்ணுளோர்க்
கூடுபேரொளியாகநின்றருளுன்னினன்மறைமன்னினன். (௭௯)

கலிநிலைத்துறை.

மன்னினனரனித்திறமப்பெருவரைக்க
ணன்னமால்வரைப்பெருமையையாவரேயறைவார்
மின்னுவெள்ளியம்பேரொளிவெண்ணிலாவெறிப்பத்
துன்னுகார்க்கடல்பாற்கடலாயதத்தோற்றம். (௮௦)

§ தக்ஷிணகைலாசோற்பவகாலம்,— வசந்தருதுவும், சித்திரைமாதமும், பூருவபக்கமும், ஞாயிற்றுக்கிழமையும், அத்தநக்ஷத்திரமும், விருத்தியோகமும், தைதுலகரணமும், கூடியபௌர்ணிமைதிதியிலே, குருவோரையிலே, சனிமகரராசியிற்பிரவேசித்தகாலத்திலே, ரிஷபலக்கினசுபமுகூர்த்தமென்க.

*மேலநேகர் என்றும்பாடம்

தோற்றும்வெண்ணிலாமிளிர்கின்றசோதியங்கற்றை
வீற்றிருந்தவான்புடையுடுக்குலமிடைந்தென்னப்
போற்றரும்பெருங்கயிலையின்புறமெலாம்பணிலத்
தேற்றினங்கடற்றிரையொடுங்கரைதவழ்ந்தேறும். (அக)

ஏறும்வெண்கதிர்க்கற்றையேழ்குகைதொறுமெறித்து
வீறுபாதலத்*தத்திசையிருளறவிளக்கச்
சீறுநாகர்தம்பணாமுடிமாணிக்கச்சிவப்பு
மாறிலாதவெண்முத்தமாய்வெளுத்ததெம்மருங்கும். (அஉ)

மருங்கெறித்துமண்ணுலகெலாம்பரப்பிவானுலகின்
நெருங்கும்வெஞ்சுடர்க்கற்றையாணிறம்பிறிதாகிப்
பெருங்கதிர்ச்செழும்பரிதியுங்குசனுமப்பிறரு
மொருங்குவெண்மதிக்கடவுளாய்விளங்கினருடலம். (அங)

உடனெதிர்ந்துமுன்மாலயனுருத்தநாளுமைத
னிடமிருந்ததோரெம்பிரான்றழல்வடிவெடுத்துப்
படருமேனியினீற்றொளிபூத்தவப்படியே
கடவதன்றியும்வேறிணையில்லைத்தென்கயிலை. (அச)

கயிலையங்கிரிகுழுவொடுதழுவியகன்னி
மயிலியாவையுமன்னமதாக்கித்தன்வடிவாற்
சயிலமேனிகர்கருங்களிறனைத்தையுந்தாருப்
பயிலுநாட்டயிராவதநிறம்பெறப்பண்ணும். (அரு)

நிறத்தமால்வரைகருங்கடற்புடைதழீஇநிமிருந்
திறத்தையும்மதன்சுடர்வடிவனைத்தையுஞ்செப்பின்
புறத்துலாவருமாழியினூழியம்பொழுது
மறிததடங்கணுளெழுபெருங்குமிழியேமானும். (அசு)

மாநிலப்பெருந்தகழியின்மறிகடனெய்யி
லானவக்கிரிகிறுத்தியவிழைத்திரியதன்மேல்
ஞானநாயகனுலகுளோர்மனவிருணலிய
மேனிவருதுயர்விரிசுடர்விளக்கெனவிளங்கும். (அஎ)

விளங்குநாற்பெருந்திசைதொறுந்திசைதொறும்வீசிக
துளங்குசீகரத்திவலைவெண்முத்தொடுந்துளித்தல்
களங்கவல்வினைநீக்கினேம்யாமெனக்கடலுந்
தளங்கொள்பூமழைபொழிந்தடிதாழ்வதேநிகர்க்கும் (அஅ)

நிகரிலாச்சிவனெம்மையேதாங்கினனித்தம்
பகருமாங்கவன்றனையும்யாம்பரிப்பமென்றெண்ணிப்

* பாதலந்திசையென்பதூஉம்பாடம்.

புகரிலாக்கங்கை திரண்டுமுக்கோணமாய்ப்பொருந்தி
மகரவேலையினிற்பதேபுரையுமிவ்வரையும். (அக)

வரையுறப்பலதேவருமருங்குசூழ்ந்திறைஞ்சப்
புரமெரிக்குநாள்மாலொருவெள்விடைப்பொற்பாய்ப்
பரமனைப்பரித்ததுவெண்பகாலாம்பரவைத்
திரைநடுப்படவிம்மலைநிலைக்குமிச்செய்கை (௧0)

செய்தவத்துளோர்தேவருத்தரதிருக்கயிலைக்
கெய்துவார்களிக்கயிலையின்*வரவுமிக்கயிலைக்
குய்யமேவுவருத்தரகைலையுற்றிடவு
மையமாக்கியவதற்கிதுவடிவிறைலம்மா. (௧௧)

மாலையந்துளாய்மணமுமத்தாமரைமணமும்
மேலைநாட்டுயர்கற்பகவிரைமலர்மணமுங்
காலையந்தியுமுச்சியுங்கயிலையின்மணக்குஞ்
சாலவந்துவந்தமரர்மாலயணிவர்தாழ. (௧உ)

தாழுமால்கடல்வரங்கொலோவிலங்கையின்றவமோ
0சூழுநாவலோர்புண்ணியத்தொடர்பதோசுழித்த
வாழியுத்தரதிசையினுங்கொடுவந்துவைத்த
பாழிமாருதப்பயன்கொலோவென்பர்கள்பலரும். (௧௩)

கள்ளரும்புபூங்கொன்றையானுறைந்ததென்கயிலை
வெள்ளியங்கிரியிவ்வகைவிளங்கியதிப்பா
லள்ளல்வேலைநஞ்சுண்டவனருச்சனைக்கனேக
ருள்ளமன்பொடுதொடர்கதையாயதிங்குரைப்பாம். (௧௪)

திருமலைச்சருக்கம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௪அ.

---

* வாமமென்பதூஉம்பாடம்.
0 நாவலந்தீவுளோர்புண்ணியத்தொடர்போ என்பதூஉம்பாடம்.

## மூன்றாவது
# புவனோற்பத்திச்சருக்கம்.

எழுசீராசிரியவிருத்தம்.

ஆயகன்சிவலிங்கமெனனுமரூபமாகுமுரூஉவினை
நேயமுற்றவருச்சனைக்கிதுநிச்சயப்பொருளாமெனச்
சேயுருத்திரர்வேதன்மாலிஃர்செய்யுமர்ச்சனைகாணவே
தூயமெய்ப்புவனத்தின்மேலவருற்பவித்ததுசொல்லுவாம். (க)

சொல்லுறும்பதினெட்டெனப்புவிதன்னுகின்றவுகங்களின்
வில்லுலாமவ்வியத்தமாதிவியத்தம்விந்தமலங்குதம்
வல்லவாமநிலங்களானமகாவுகங்களொரைந்தினும்
நல்லதென்கயிலாயவாதியைநாடிவந்தனர்சங்கரர். (உ)

அறுசீராசிரியவிருத்தம்.

சங்கரன்கிரீசன்சம்பு*சமாரூடன்பகவன்சூலி
கங்கையன்விரூபன்○மூர்த்தி?கலாதரன்வாமனீச
னிங்குருத்திரர்கள்பன்னோரிறைவர்தென்கயிலைமீதி
லங்குளபரனையன்பாலருச்சனைசெய்யுங்காலம். (ங)

செய்திடும்பூசைநோக்கிச்சிறக்குமவ்வியத்தாலந்தத்
துய்யவாகாயந்தோற்றத்துலங்குதாரகைகடோற்ற
வையனுக்கபிடேகத்துக்காகவென்றுதகந்தோற்றப்
பொய்யிலாவிந்தகாலம்புவனிவித்தாகத்தோற்றும். (ச)

வித்தகன்கைலைவெற்பின்விளக்கெனக்கனலிதோற்ற
வத்தகையிறைவற்கானவலங்குதமென்னுங்கால
முத்தலத்திருள்கள்யாவுமுனிந்தொளிவிடுத்தான்வெய்யோ
னொத்தெழும்வெயிலையாற்றவுதித்தனன்குடபா†லாலோன். (ரு)

ஆலமுண்டவர்தென்கோணையமலனுக்கானகால
மேலுருத்திரர்களேந்திக்கொடுத்திடுமிலைபூவாதி
தூலநின்மாலியங்கடூர்த்தலகிடுவார்போல
ஞாலமேல்வாயுவென்பானலத்தினுதித்துவந்தான். (சு)

வந்தனைசெய்யவேண்டிமலர்க்கரங்குவித்தசென்னி
யிந்திரனங்கிகாலனெழில்பெறுநிருதிநீர்ம
னந்தரவாயுச்சோமனரியவீசானன்றோற்றச்
சுந்தரவசுக்களெண்மர்தோற்றினரேற்றமாக. (எ)

கன்னலுமமுதுந்தேனுங்கனிந்தெனமுனிந்திடாத
வின்னசொற்கமலைவாணி‡யெழுவகைமாதர்தோற்ற

---

* சமாரூடன்—சமாட்டகன்    ○ மூர்த்தி—தீப்தமூர்த்தி.

? கலாதரன்—சுகலாதரன்.    † ஆலோன்—சந்திரன்.

‡ எழுவகைமாதர்:—கௌரி, அபிராமி, மாயேஸ்வரி, நாராயணி, வரா
இந்திராணி, காளி என்பவர்கள்.

வ்ந்நிலையம்பத்தொன்றுமக்கரநிலைமைதோற்றப்
பொன்னொடுநிதியொன்பானும்புகுந்தொளிவிளங்குநின்ற. (அ)

விளங்கிடுதவமுமன்புமேன்மையுநெறியுஞ்செஞ்சொ
லிளங்கிடுநாவுமுள்ளவகத்தியன்முதலோர்தோற்ற
வளங்கிடுதிசைகளெட்டும்வரைகளோரெட்டுமெண்டோள்
களந்தமாநாகமெட்டுங்கடாசலமெட்டுந்தோற்ற. (௯)

தோற்றமுநெறியுமேநருந்துலங்கியவுலகீரேழு
மாற்றிடவெவர்க்குமாற்றுமகோததியேழுந்தோற்றத்
தேற்றியதீர்த்தமேழுந்தினங்கணூவேழுமற்றும்
போற்றுபொன்மேருவொன்றும்பொருந்தியங்கிருந்தகாலை. (௧௦)

காலையின்வருணனங்கிகலந்தவிஞ்ஞானம்வேத
மேலவாம்பதுமயோனியென்றுறுமுகங்களிந்திற்
கோலமெய்க்கமலமீதிற்குடிபுகும்பிரமரெண்மர்
பால்புரைநீறுபூத்தபரமர்தாள்விரவவந்தார். (௧௧)

விரவினாதிவேதன்விரிஞ்சன்மெய்க்கமலவாசி
தனைதொழுசயம்புமிக்கசதுர்முகன்பதுமபூதன்
வரபிதாமகன்பூசிட்டிவயங்கியவெண்மர்கோனைப்
பரமனைவழுத்துங்காலம்பயின்றுளசிறிதுசொல்வாம். (௧௨)

வாய்ந்திடும்வருணகாலம்வயங்கினவெழுமேகங்க
ளோய்ந்திடுமங்கிகாலமிசைந்தன*முத்தீயெங்கும்
போந்தவிஞ்ஞானகாலம்புகுந்தனவித்தையாவுந்
தோய்ந்தவேதத்தில்வேதந்துலங்கினதலங்களெல்லாம். (௧௩)

தலமிசைப்பதுமயோனிதனியுகம்புகுதுங்காலங்
குலவுமுப்பத்துமூன்றுகோடிநற்றேவர்தம்மோ
டலகிலாமுனிவர்தோற்றவவனிகண்முழுதுந்தாங்கி
நிலமிசைமுதன்மையாகநின்றதுமேருவந்நாள். (௧௪)

அந்தமாமேருவென்னுமசலமொன்றேழிரண்டு
தந்தபேரகிலம்யாவுந்தனித்தனிதோற்றத்தோன்றிச்
சுந்தரக்கனகச்சோதிதுலங்கிநின்றிலங்கிவெண்மை
சிந்துரம்பசுமைபொன்மைதிசைதிசைசிறந்துதோற்றம். (௧௫)

கலிவிருத்தம்.

திசையிற்றிசைகணகத்தொளிசென்றுற்றெழுமேரு
வசைவற்றிடவெழுபாதலமடையப்பதமுருவி
மிசையிற்°பகிரண்டப்பெருமுகடுச்சியின்விரவி
நசையுற்றுலகீரேழினுநடுவேநெடிதுயரும். (௧௬)

---

* முத்தீ:—ஆகவனீயம், தக்கணாக்கினியம், காருகபத்தியம்.
o பகிரண்டம்—வெளியண்டம்.

உயர்வுற்றிடுமேருத்திகளுயரத்திலிரட்டி
யயர்வற்றிடுமடியிற்புடையாகப்புவிசெல்லும்
பயமற்றுயர்சது*ரச்சிரபந்தத்தியல்வடிவா
யியலுற்றதனடுவேயொரிராசத்தருவுளதே. (௧எ)

தருவைத்தருமுடியிற்கொடுமுடியிற்றனிநீள
வுருவுற்றெழுமளவோசனையூவாயிரமுளதாம்
வருமப்படிமுடியாயிரம்வரைபெற்றுளதம்பொ
னுருவத்திடுமணிபோன்மணியொளியைச்சொலவெளிதோ. (௧அ)

தோல்பச்சிலைகனிநாண்மலர்சுடர்பொன்படர்நாவ
லேல்தெற்குளமேல்திக்கரசெழு∘லத்தியொர்கீழ்பா
லாலுத்தரம்ழகுற்றெழுமம்மால்வரையின்கீழ்
நால்திக்கினும்வழிபாதலநகரிற்செலவுளதே. (௧௯)

உளவெங்கணுநிறையும்புனலூறுஞ்சுனைமாரு
திளகுஞ்சிறையெகினங்கிளியேனம்பிணைகடமா
?களபம்பரிசிங்கம்புலி!கைபெற்றிடுமுகமா
வளவின்றியதினமாய்விளையாடும்புனலாடும். (உ०)

†ஆடொன்றியமுகமாவுடனன்பார்வனசரபங்
கோடொன்றியமதமாவொடுகூடன்புறுமரிமா
நீடும்பணிதன்னோடெதிர்நேராதனகலுழன்
நாடுந்திறமிவையேயெலவர்நண்ணார்புகழ்பண்ணார். (உ௧)

பண்ணாறியவளியின்றொகைபாடும்புதுமலரின்
கண்ணாறியதடமுங்குளிர்காறியகடமும்
விண்ணாறியமுடியுந்தருவிரைநாறியவடியுங்
கண்ணார்முனிகணமுஞ்சுரர்கணமும்பயிலிடமே. (உஉ)

இடமொன்றியவம்மேருவினிடையிற்புடைம்தியுங்
கடறுன்றியகதிருந்திசைகாணத்திரிதரலா
லடறுன்றியபகிரண்டமொடகிலாண்டமதெங்கும்
படிறின்றியவதனுக்கிணைபகரப்பொருளுளதோ. (உ௩)

* அச்சிரம்—கோணம். பந்தம்—கட்டுப்பாடு.

o கூர்மபுராணம், சம்புத்தீவின்சிறப்பு. எ ம் செய்யுள்:
"சூழும்வரையின்கீழ்பாலிற்றுகடீர்கடப்பமரநிற்கும்" எனவும். கந்தபுரா
ணத்திலுஞ் சிவதருமோத்தரத்திலுங்கடம்பேகீட்டிசையெனவுங் கூறப்படல்
காண்க.

? களபம்—யானை அல்லது கன்று.

! கைபெற்றிடுமுகமா—யானையாளி.

† ஆடொன்றியமுகமா—யாளி.

அறுசீராசிரியவிருத்தம்.

*தோமுறுமொருபாலார்க்குச்சுடரவன்குடபாற்சேர
வேமுறுமொருபாலார்க்குக்கீழ்பாலாயெழுதலென்றாற்
றேமுறுநான்குபாலிற்றீவுக்குமிந்தச்செம்பொன்
மாமலைவடபாலுள்ளமலையெனமதிக்கலாமால். (உசு)

மால்வரையதனைச்சூழ்ந்தவளைகின்றநான்குதீவிற்
கோலமாமோரோர்தீவுங்கோடியோசனையினாடே
யேலுமூன்றிலக்கம்பன்னீராயிரத்தைனூறேகச்
சாலும்யோசனையுட்கொண்டுதனித்தனிவிளங்குமாதோ. (உரு)

விளங்குமத்தீவுட்டென்பால்விரிதருசம்புத்தீவு
களங்கமிலதற்கிரட்டியுவர்க்கருங்கடலேசூழு
முளங்கொளுமதற்குமப்பாற்பிலக்கமென்றொருதீவந்த
வளங்கெழுதீவைப்பாலின்மறிகடல்சூழ்ந்துநிற்கும். (உசு)

நிற்குமங்கதற்குமப்பால்நெடுங்கிரவுஞ்சத்தீவு
சொற்குலவந்தத்தீவைத்தயிர்க்கடல்சூழ்ந்துதேங்கும்
முற்கிரியதற்குமப்பால்முதுக்குசைத்தீவாமந்த
நற்குசைத்தீவைநெய்யினறுங்கடல்வளைக்குமாங்கே. (உஎ)

ஆங்கதற்கப்பான்மேவும்புட்கரமாகுந்தீவு
தாங்கருமந்தத்தீவைமதுக்கடறமுவிவாழு
மீங்கதற்கப்பாலேசான்மலியெனவிசைக்குந்தீவா
மோங்குசீரந்தத்தீவையொலிபுனற்கடலேசூழும். (உஅ)

சூழுமங்கதற்கப்பாலேசாகமாந்தீவுதோன்றும்
வாழுமத்தீவைக்கன்னல்மறிதிரைப்பரவைகோலு
‡மேழ்பெருந்தீவுமிவ்வாறேழ்பெருங்கடலுமந்த
வாழியஞ்செம்பொற்குன்றம்புறங்கொளவகத்துளாமால். (உகூ)

மால்வரைச்சம்புவிற்கும்பிலக்கமற்றதற்கும்வண்மை
சால்கிரவுஞ்சமந்தத்தீவுக்குங்குசையத்தன்மை
யேல்வருபுட்கரத்தீவிதற்குஞ்சான்மலியதற்கு
மேல்வருஞ்சாகமொன்றொன்றிரட்டிவேலையுமிவ்வாறே. (கூ0)

---

* குறித்த ஒருதீவின் சூரியாஸ்தமனதிசையையே (மேற்கை); அடுத்ததீவார் கீழ்த்திசையாக்கொள்ளலின், நாற்றிசைத்தீவார்க்கும் மேருமலை வடதிசைக்கண்வருமென்பது தத்துவசாஸ்திரக்கொள்கை. இந்நூலாசிரியர் பூமியைத் தட்டையாக்கொண்டார்போலும்.

‡ சிவதருமோத்தரம், கூர்மபுராணம்முதலியவற்றில், தீவு, கடல், அளவு, விகற்பித்துக்கூறல்காண்க.

இவ்வகையோசனைப்பானூற்றிருபத்தைங்கோடி
செவ்வகையிதற்கிரட்டிகடலுமாய்த்திசைகடோறும்
மெய்வகைமேருவெற்பைச்சூழ்ந்துமண்விளங்குமெல்லை
யவ்வகையஞ்ஞூற்றுழியாயிரங்கோடியாமால். (௩௧)

ஆயவிவ்வுலகமெல்லாங்கவிப்பதோரண்டமந்தச்
சேயபொன்னண்டம்*வேதனண்டமாய்த்திருப்பேர்செப்புந்
தூயவங்கதற்குமாழிக்கிரிக்குமப்புறமாய்ச்சூழப்
பாயிருள்கடியுஞ்சோதிப்பகிரண்டம்பயிலுமன்றே. (௩௨)

கலிநிலைவிருத்தம்.

பயிலுமங்கதுபன்னவொண்ணாதது, வெயிலும்வெண்ணிலவும்மிளிராதது
செயலெலவர்க்குந்தெரிவரிதாயது, மயலிருட்பிணிமாசொன்றிலாதது (௩௩)

துன்னுமாருதமெங்குந்துவன்றது, மின்னுபேரொளிவெள்ளம்விழைந்தது
கன்னிமாலினும்வேதன்கரத்தினு, மன்னுமேனிவகுப்பரிதானது. (௩௪)

ஆனவப்பகிரண்டமடங்கலும், ஞானமாயொருசோதிநயந்தது
தானமற்றதுதன்னுடலற்றது, ०பானமற்றதுபாவனையற்றது. (௩௫)

§அற்றதன்பரமாணுவிலெட்டிலொன், றிற்றவண்ணமுமில்லையெனுஞ்சுடர்
பற்றிநின்றபராபரமாயது, நற்றுமங்கதிலுதமெழுந்தது. (௩௬)

எழுந்தநாதமதின்றதொர்விந்துவை, யழுந்துவிந்துவதனுட்சதாசிவங் கொழு
ந்துவிட்டதுபட்டொருகோயிலாய், விழைந்துநின்ற?வெழினியிருந்தது.¶ ()

---

* வேதனண்டம்—பிரமாண்டம். ० பானமற்றது—வியாபகமானது.

§ சுத்தசிவசோதி மத்தியசோதி நிஷ்களநிருத்தசிவத்தினின்றுமுகிழ்த்த அதிக்கிரூந்தவிந்துகபரமசிவத்தினின்று, அதிக்கிரூந்தவிந்துக பராசத்திதோற்றும்; இதில்நின்றும் அநதிக்கிரூந்தவிந்துகபரசிவந்தோன்றும்; இதில்நின்றும் அநதிக்கிரூந்தவிந்துக பராசத்திதோன்றும்; இதில்நின்றும் ஆதிசத்திதோன்றி, வியாபாரபேதத்தால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென்னும்மூன்றாகும். பராசத்திமுதற்பஞ்சசத்திகளினின்றும், முறையே சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்மசாதாக்கியம் என்னும் பஞ்சசாதாக்கியங்கள்தோன்றும்; கன்மசாதாக்கியமெனப்படும்சதாசிவத்தினின்று மனோன்மனியும், மனோன்மனியிலிருந்து மகேச்சுரனும், மகேச்சுரனிலிருந்துமகேசையும், மகேசையிலிருந்து ஸ்ரீகண்டருத்திரரும், இவரிலிருந்து உமையும், உமையினின்றுவிஷ்ணுவும், இவரில்நின்று இலக்குமியும், இலக்குமியிலிருந்துபிரமாவும், பிரமாவினின்று வாணியுந்தோன்றி உலகத்தைக்காரியப்படுத்துவர்.

? எழினி—திரோனதாசத்தி. ¶ வெளியினென்பதூஉம்பாடம்.

இருந்தகாலமகேசனுடைசன்மால், விரிஞ்சனாதியர்விண்ணவர்யாவரும்
பரிந்துவந்திருபாதங்களைக்கையாற், றெரிந்ததண்மலர்சிந்திவணங்கினர் (௩அ)

வணங்குமன்னொருவாலப்பிரமனை, யிணங்கும்விச்சுவகன்மனையேவியே
பணங்குபாகனழைத்தவனர்ச்சனைக், குணங்கொளுங்கதைகூறலுற்றாமரோ.

புவனோற்பத்திச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧அஎ.

---

## நான்காவது
# அர்ச்சனாவிதிச்சருக்கம்.

கலிவிருத்தம்.

அானருஞ்சுடராயபரம்பரன், பரவுமாறிருவுந்தியிற்பங்கயம்
விரவும்வேதன்வெளிப்படவிச்சுவ, கருமனைத்தனிகாட்டுவமென்றரோ. (௧)

ஓதவந்தங்குதித்தவற்கோதுவான், மாதவன்றிருப்பள்ளிவளர்ந்தது
மீதுதேவர்க்கமுதம்விளைந்தது, பாதகந்தெறவந்ததொர்பாற்கடல். (௨)

பாலடுத்தகடற்குளொர்பாந்தளாண், டாலடுத்தமலர்°க்கணுற்றான்றிரு
மாலடுத்தவயிற்றிலுண்டோர்மலர், மேலடுத்ததிலுண்டொருவேதியன். (௩)

அன்னதாமரைநீளமனேகமாய்த், துன்னுமுள்வயின்சொல்லரிதாதலாற்
பொன்னிதழ்ப்புடைமூடப்பொருட்டினு, ளுன்னிநம்பதயோகத்துறங்கினன்

உறங்கும்வேதனைநீசென்?றுணர்த்தியே, பிறங்குந்தென்கயிலாயப்பெரு
ங்கிரித், திறங்கொள்பூசனைசெய்வித்தவன்குலத், தறங்கொளெண்மரொடா
க்குதியென்றனன். (௫)

என்றுகூறவிறைஞ்சியப்பாற்கடல், சென்றுமாலையுஞ்செங்கைகுவித்தவன்
றுன்றுமுந்தியந்தாமரைத்தோடெலாம், வென்றிவிச்சுவகன்மன்விரித்தனன்.

விரித்துநான்முகவெள்ளைவிடைப்பிரா, னருச்சனைக்குனையாங்கழைத்தா
னென்ன,நிருத்தனென்னைநினைத்தனனோவெனப்,பெருத்தவோகைப்பெருங்க
டன்மூழ்கினன். (எ)

---

° மலர்களுண்டத்திருவெண்பதூஉம்பாடம்.
? உணர்த்தல்—யோகநித்திரையாலெழுப்பல்.

நான்முகன்றனயனமொரெட்டினு,மேன்முகந்தவிருப்பின்வரும்புனல்
டான்முகந்தபனிக்கடலெங்கணுஞ், சூன்முகந்தமழையிற்சொரிந்தவே. (அ)

வேதமும்பெருவிண்ணவருந்தவர், போதமுந்தனிதேரும்புராதனை
னேதமுஞ்சினமும்மிகழாதவென், மாதவங்கள்மதித்ததெவ்வாறரோ. (கூ)

மதித்தநான்மறையுச்சியில்வைத்ததாள், விதித்தவென்கையிற்பூசைவி
ரும்புமோ, வுதித்ததிங்கட்கொழுந்தொளிருஞ்சடை, பதித்தவெள்*ளெருக்
கும்பலசூடுமால். (க௦)

மாலிழைத்ததவங்கொலம்மாலுறை, பாலிழைத்தகடற்செய்பலன்கொல்யான்
மேலிழைத்தவறங்கொன்மிடற்றினு, லாலிழைத்தவரென்னையழைத்ததே. ()

அழைத்தசொற்கொடாரகரவென்றெழுந், திழைத்தயோகமொழிந்தெதி
ரன்பினுற், றழைத்தவிச்சுவகன்மனையுந்தழீஇப், பிழைத்தனனிப்பிறவித்
துயர்க்கென்றான். (கஉ)

பிறவிதீர்க்கும்பிரானெனதர்ச்சனைக், குறுவதெங்ஙனம்யானுய்வதெவ்விடம்
மறுவிலாத்தவசொல்கெனமற்றவ, னிறைவதென்கயிலாயத்திலென்றனன்.

என்றலுங்கமலத்திலிழிந்தயன், சென்றனன்பரன்றீயினடம்புரிந்
தொன்றுமூழியொழிந்தபின்போயுயல், நின்றதேசிகரல்லதுநேருமோ. (கச)

நேருந்தென்கயிலைத்திசைநீள்வழி, யூருமன்னத்துடனவனூர்ந்தனன்
சேருமந்தத்திருமலைகண்டுளங், கூருமன்பொடிழிந்துகைகூப்பினன். (கரு)

நானநாண்மலர்நான்முகன்றாழ்ந்தனு, மானவிச்சுவகன்மனும்வாழ்த்தியே
தானுமங்கைத்தலங்குவித்தேவிழி, யானபத்தினுநீத்தமரும்பினன். (கசு)

நீத்ததெங்கணெடுவினையென்றயன், கூத்தன்குன்றிற்০குளிர்சுனைமூழ்கியே
தீர்த்தமேந்தியதீர்த்தன்கயிலையை, யேத்தியாலயமுன்னின்றிறைஞ்சினன்.

முன்புநின்னைமுடிப்புறந்தேடியு, மன்பிலாமையஃதின்மைமாதவந்
தென்பிறந்ததிருவுருக்காணவின், றென்பிறந்ததுமாதவமென்றனன். (கஅ)

என்றரன்றிருமுன்ன†ரிசைத்துப்பின், றுன்றுமாசனந்தோன்றவிருந்தயன்
மின்றுலங்கியமேனிநிமிர்ந்துநீ, றொன்றுசாணுவினுட்பதம்வைத்தனன் (ககூ)

வைத்தகண்டுளைத்துண்டம்வயங்கிட, முத்தநன்னகைமெல்லிதழ்மூடிட
வத்தமத்திமவங்குலிநாசிமீ, துய்த்தருஞ்சிவமந்திரமுன்னினன். (உ௦)

*வெள்ளெருக்கென்பதூஉம்பாடம். ০ குளிர்சுனை—மகாசுனை.
† இசைத்துளம்என்பதூஉம்பாடம்.

### இது பிராணயாமம்.

உன்னுநன்மைபிராணனொடுட்புகப், 1பன்னுபாவம்பான்றனோடேகிட
வின்னநாசியயற்றிப்பொருமினன், கன்னமீதுமுக்காற்கரம்வைத்தரோ (உக)

கரத்துடன்கரந்தைவரக்காட்சியா, லுரைத்தவங்குலியொன்றுடனொன்றுறப்
பரத்துளீசர்பதினெருமந்திரம், நிரைத்தகையினியாசமுடித்தனன். (உஉ)

### இது தத்துவதரிசனம்.

முடியின்மிக்கமுகத்தினினெஞ்சினின், வடுவினுபியிற்சானுவின்மற்றுள
வடைவினங்கியாசமமைத்தபின், உடலினுட்படுமுண்மையுணர்ந்தனன். உங

தன்2னுரந்தருசானுவினுபியின், பின்னிலங்குமிடற்றினினெற்றியிற்
சென்னிமீதிற்செறிபடலந்தெறப், பன்னுபாசுபதத்தையுணர்த்தினன்.3(உச)

### இது தத்துவசுத்தி.

உணங்குமண்புனற்வளியொண்விசும், பிணங்குமேனியு4ளேகபுருஷனை, ய
ணங்கிலாவெளிக்5கப்புறத்தப்புற, மணங்கொள்6காலுடன்வாங்கியிருத்தினன்

### இதுபூதசுத்தி. யோ- யோ.

இருத்திநாபியின்கீணின்றிலங்கழல், திருத்துகாலுடன்சேரவெழுப்பியு
ஞருத்தபோதிலுடலமனற்படும், 7புரிக்குநேரெனப்போதனிருந்தனன் (உசு)

இருந்துவானத்8திலங்கிதழாயிரம், விரிந்தபங்கயமீதனல்வீசலுஞ்
சொரிந்துவீழமுதத்துளிதோய்தலாற், றெரிந்துமேனி9சிவதனுவாக்கினன்.

### இது நின்மலசுழத்தி.

ஆக்குபன்னிரண்டங்குலத்தப்புறம், போக்குவானிற்புறத்திடுமாவியை
நீக்கிமீண்டொருநெஞ்செனுமெட்டிதழ், வீக்குபங்கயமீதிலிருத்தினன்.10 ()

இரும்பினிட்டவிரசகுளிகையாற், றிரும்பவங்கதுசெம்பொனதாவபோ [ன்
11லரும்புசீவ12னறிவொடணைந்தபின், றரும்பிடாத13விளக்கிற்றுலங்கினெ

---

1 அன்னபாவமபானனொடு என்பதூஉம்பாடம். 2 உரந்தருசானு—தோள்
3 வாயுசங்கிதை ககூஎ ம்பக்கம் கூடும்செய்யுள். 4 ஏகபுருஷன்—சீவான்மா.
5 அப்புறத்தப்புறம்—பிரமரந்திரத்தின்மேற்றுவாதசாந்தம்.
6 கால்—பிராணவாயு
7 இச்செய்யுளின்முறையைத் தத்துவப்பிரகாசம், கிரியையிற்கிரியையில் கூக ம்செய்யுள்விரித்துக்கூறும் ஆண்டுணர்க.
8 இதழாயிரம்விரிந்தபங்கயம்—பராசத்திவீற்றிருக்குஞ்சகத்திரதளகமலம்.
9 சிவதனு—திவ்வியதேகம்.
10 இதன்விரிவை வாயுசங்கிதை ககூஎ ம் பக்கம் கூஅ ம் செய்யுளிலும் தத்துவப்பிரகாசத்திலும் பரக்கக்காண்க.
11 அரும்பல்—கலைவிரிதல்.
12 அறிவு—அநாகதமூர்த்தி. 13 விளக்கு—தூண்டாவிளக்கு.

1நாலுமாறுநயந்தருபத்துமே, லேலுமாறிரண்டெண்ணிரண்2டோரிரண்
டாலமுண்டவற்கன்புறமெல்லிதட், 3கோலமண்டபங்கண்டுகுலவினுன். ()

### இது அந்தர்யாகக்கிரியை.

குலாவுமைம்பதொடொன்றெனக்கூறிய,4நிலாவுமக்கரமேவுநியாசமுங்
5கலாநியாசமுஞ்செய்திடுங்காட்சியால், மலாதிதீபத்திருளின்மருண்டவே.ௗகூ

### இது கிரியையில்ஞானம்.

உண்டெனும்6பிரமங்களோரைந்திஞற், 7றெண்டபங்கியுஞ்செய்துவலக்கரத்
தண்டர்நாயகற்காசனமிட்டபின், மூண்டகத்தலைவாசலைமூடினுன். (கூஉ)

### இதுசிவநுபம்.

மூடினுனிருகண்ணைமுகிழ்த்துளே, நாடினுன்8சிவஞானவிழிச்சுடர்
வீடினுன்வினையாவும்விருப்புறக், கூடினுனரன்குஞ்சிதபாதமே. (கூகூ)

### இது சிவயோகம்.

பாதியாமதியார்தம்9பதியினிற், சோதியார்பசு11மேயத்தொடர்ந்தபின்
12வாதியாரிடு13பாதம்வருதலா, 14லாதியார்பசுவாகத்திகழுவான். (கூச)

---

1 நாலு—மூலாதாரம். ஆறு—சுவாதிட்டானம், பத்து—மணிபூரகம், பன்னிரண்டு—அநாகதம், பதினுறு—விசுத்தி, ஓரிரண்டு—ஆக்ஞை, இவை ஆதாரசந்நிதிமுறையாம்.

2 ஓரிரண்டு—உம்மைத்தொகை.

3 இதழ்—மேற்சுட்டியஎண்களமைந்த ஆதாரகமலங்களினிதழ்கள்.

4 அக்கரநியாசம்—மாதிருகாநியாசம் அது: அம்முதற்பஞ்சாக்கரஞ்சேர்த்து நியசித்தல்.

5 கலாநியாசம்:—கலைகள்முப்பத்தெட்டுக்கும் பஞ்சாக்கரஞ்சேர்த்துநியசித்தல்

6 பிரமங்களைந்து: பஞ்சப்பிரமமந்திரங்கள்.

7 தெண்டபங்கி: வித்தியாதேகம்வருவித்தல். என்னை? இலிங்கத்தின்மேல் அக்கினிஸ்தம்பமாகத்தியானித்து, ஓம் ஆம் வித்தியாதேகாயநமவென்று சாத்துதல். இஃதன்றி முண்டபங்கி வத்திரபங்கி கலாபங்கி என்பனவுமுண்டு.

8 சிவச்சுடர் ஞானவிழிநாடினுனெனவியைக்க.

9 பதி—தகராலயம் 10 சோதியார்பசு—அதனொளியமைந்தஆன்மா.

11 மேயத்தொடர்தல்—தகுதியாகஅறிவின்பின்ருெடர்ந்து லலாடத்தானதியானத்திருத்தல்.

12. வாதியாரிடும்—ஆணவமலநீக்கரசவாதியானபரசிவமமைத்த.

13 பாதம்வருதல் சத்திநிபாதம்வரல்.

14 ஆதியார்பசு—தனக்கெனவியஞ்சகமின்றி, அறிவிக்கஅறியும் ஆதிமுத்தன். மதியார்தம்பதி—சந்திரமண்டலமெனினுமிழுக்கின்ரும். பாசம்வழுவலென்பதூஉம்பாடம். சிவபுண்ணியத்தால் இருவினையொப்பும் மலபரிபாகத்தால் சத்திநிபாதமும் வருமென்கைசித்தாந்தம்.

## இது சிவபோகம்.

கழுவுநீரிற்கலந்திடுமுப்பென, வொழுகுபாலுடனெண்புனல்புக்கென
வெழுதுமோவியமென்ன1விருந்ததன், வழுவிலாவி2பரத்தில்வணங்கினன்

வணங்குவானும்வடிவுமில்லாதரு, விணங்குநுண்பரமாணுவிலெய்திய
வணங்கிலாவியைமீளவழைத்தன, னுணங்குநீண்மடையூர்புனலொப்பவே. ()

வேதியன்சிவன்மெல்லடிமேல்விடுஞ், 3சோதிமீளவிழித்துச்சுடர்முகப்
போதினோக்கிவினையிருள்போக்கியங், காதிசூரியவர்ச்சனைபண்ணினன் (௩௭)

நாலுமைந்துநயந்தபதத்தினுட், பாலுடன்றயிர்நெய்பசுநீர்4மய
மேலமாவொடுநெல்லி5யிரசனி, யாலமுண்டவற்காமெனவைத்தனன். (௩௮)

நன்பதத்திடுசொலிநவபதத், 6தொன்பதிற்றிகழ்சத்தியுடன்பர
னன்புறுத்தியகும்பமான்றிரு, முன்புவைத்தனன்முண்டகவாசனன். (௩௯)

வாசலிற்புறமன்னி7யவனிகை, யாசறக்குமகோரத்தடக்கிமேல்
வீசுபத்தி8விமலர்சுவாகுவை, நேசமுற்றுநிறுத்தியுள்ளாயினன். (௪௦)

9ஆயபாசுபதமெனுமத்திரம், தூயவாசற்றலங்கந்றுத்தியுட்
போயரன்புடைவாத்துபுருடனை, நேயமாகவெழுப்பிநிறுத்தினன். (௪௧)

10நாலுநான்முகனைம்முகநாதனை, யாலகாலமடக்கியகண்டனைக்
கோல11மாதொடுகூடியகண்டனைக், காலகாலனைக்கண்டுவணங்கினன். (௪௨)

---

1 இருத்தல்—சிவோகம்பாவனைசெய்திருத்தல்.
2 பரம்—ஆநந்தவடிவின்றிருவடி.
3 சோதி—ஒளிவடிவானசீவான்மா.
4 மயம்—முதற்குறை.
5 இரசனி—மஞ்சற்காப்பு
6 ஒன்பதுசத்தி:— அம்பிகை, கணம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியென்பவர்.
7 யவனிகை—திரைச்சீலை.
8 விமலர் சுபாகு, துவாரபாலகர்கள். இவரை ஆவாகிப்பது வாயிற்படியிலெனவுங் கபாடத்திலெனவுமாகமங்கள்பேதமாகக்கூறும். இதன்விரிவைப் பூர்வகாரணாகமத்திற் பரக்கக்காண்க.
9 பாசுபதாஸ்திரலட்க்ஷணம்: "மூன்றுசிரங்கரநாலுகொடுங்கனல்முதிர்விழியொன்பதுடன், றோன்றியடும்படைபூதபசாசுகள்சுற்றியுறக்கடுவே, கான்றகொழும்புகையோடனல்வீசியகாலுறவேயுலக, மீன்றவன்முன்னுலகெங்குநடுங்கவெழுந்ததுபாசுபதம்" என்பதனாற்பெறப்படும்.
10 நாலல்—தொங்கல்.
11 மாதொடுகூடியகண்டன்—ஸ்ரீகண்டபரமேசுரன்.

வணங்கிநாயகிமத்திமைகுண்டலி, யிணங்குமுச்சுடர்க்கோணமதேந்திய
வணங்குவிந்துவினாதமரும்பிமெய்க், குணங்கொள்மேனிக்கொழுந்தினைநோக்
கினான். (௯௩)

இ—ள்: நாயகி குண்டலி மத்திமை இணங்கும்—(பிரமத்திற்குநேரே பரிக்கிரக) சத்தியான குண்டலியின் மத்திமைத்தானசம்பந்தமுள்ள, முச்சுடர்க்கோணமதேந்தியவிந்து அணங்கில்—சோமசூரியாக்கினி மண்டலங்களேந்தும்விந்துசத்தியில், நாதமரும்பி—நாததத்துவமமைந்து விகசிதமாகி, மெய்க்குணங்கொள்மேனிக்கொழுந்தினை— சச்சிதானந்தமே திருமேனியாகக்கொண்டசிவக்கொழுந்தை, நோக்கி வணங்கினான்— (பிரமா தத்துவதோற்றக்கிரமமாராய்ந்து) தரிசித்துவணங்கினார் எ—று.

குண்டலியிணங்குமென்பதை: "பகர்செய்குண்டலினியாம்பழுதில்சத்திதான்—றுகளிலாறத்துவாவாகித்தோன்றுமால்" எனவாயுசங்கிதை கூறுமாற்றாலறிக. முச்சுடற்கோணமென்பதூஉம்பாடம்.

கொழுந்து—கன்மசாதாக்கியம். அதனை:—
"கன்மசாதாக்கியகாரணப்பெயர்
தொன்மைக்கிரியையிற்றோன்றுதலுடைத்தாய்
நாதமயமெனநவிலுமிலிங்கமும்
பேதமில்விந்துமயமாம்பீடமுஞ்
சோர்வறக்கூடித்தொழிற்பட்டிருக்கும்"
எனச்சதாசிவரூபங்கூறுதலாலறிக.
அது—பகுதிப்பொருள்விகுதி.

நாலுவேதநவின்று[1]மைஞ்சுத்தியு, ளோலுமந்திரசுத்திசெய்தீசன்முன்
கோலுமர்ச்சனைசெய்துமைகோன்முடி, வாலவேதன்புதுமலர்வைத்தனன். ()

வைத்தவாடைமலர்ப்பணிநீக்கிமெய்ச்,சுத்தமானசுகந்தநன்னீர்கர
முய்த்தகொள்கையதுட்புகவாங்கியெ, னத்தனுக்கபிடேகமயன்செய்தான்.

செய்யதாமரைச்செம்முக[2]மைந்துளா, னையனுக்கபிடேகமருச்சனை
துய்யபோசனநாடகந்தோத்திர, முய்ய[3]வாசனமுய்த்துமுன்னின்றனன். ()

நின்றபானுவுஞ்சோமனுநேர்செலா, தொன்று[4]காலமுணர்ந்துரவோனுளந்
துன்றுதெய்வச்சுடரையெழுப்பியாங், கன்[5]றிலிங்கத்தமாமலர்த்தினான். ()

1 ஐந்துசுத்தியாவன:— ஆன்மசுத்தி, ஸ்தானசுத்தி, மந்திரசுத்தி, திரவியசுத்தி, இலிங்கசுத்திஎன்பன.

2 பிரமனுக்கு ஐந்துமுகமென்பதை, வாயுசங்கிதை, ககூம் பக்கம் உச ம்-செய்யுளாலுணர்க. 3 வான்முறையென்பதூஉம் பாடம்.

4 காலம்—பிராணவாயு சுழுமுனைமார்க்கத்திற் சஞ்சரிக்குங்காலம்.

5 இலிங்கலட்சணம்: [illegible] என்பதனாலுமையும்.

மலர்ந்தபூவும்புனலும்மலர்க்கையா, லலர்ந்தபாதத்தருக்கியஞ்செய்துபி
னிலங்குதாபனகும்பமெடுத்தான், றுலங்குமாமுடிதோயவிடுத்தனன். (௪௮)

விடுத்தமென்குசைசென்னியின்பீதுவைத், தெடுத்துமஞ்சனமாட்டுத
லெம்பிரான், முடித்தவேணிமுடியவிழ்ந்தேநுனி, பொடித்தகங்கைபொழிபு
னல்போலுமால். (௪௯)

*மானுநன்பெருமானுமுடன்புனல், நானமாடுதல்கண்டுநெடுங்கயன்
றானுமங்கொருசத்தியுருக்கொடு, மோனவேதமுறைமுறையோதினன். ()

நானமஞ்சனமிவ்வகைநல்கினான், கானனன்சிவனூர்க்கினி○தம்பரங்
கானமென்களபங்கமழ்குங்குமந், தானணிந்துபைந்தாமமுஞ்சாத்தினன். ()

சாத்திரத்தின்றலைவரு†மந்திர, மூர்த்தியென்னுமுறைமைவழாமலே
யேத்தியேத்தியிறைஞ்சியிறைஞ்சியே, பாத்தியாசமனீயம்பயிற்றினன். (௫௨)

பயின்றபங்கொருபாதிபசுமையு, மியன்றபாதியிலங்கியசெம்மையும்
வியன்றருங்களமீதிற்கருமையு, முயன்றவர்க்கருள்கூருமுகங்களும். (௫௩)

முகத்தில்வெண்புன்முறுவலுமாதவர், மகத்தில்வேழமுரித்தமலர்க்கையு
மகத்தில்லாளுக்கருள்புரிநோக்கமுஞ், சகத்திலாருயிர்தாங்குஞ்சரணமும். ()

சரணமென்றவர்தங்கள்வினையனற், ‡திரணமாகத்தெறுந்திருநேயமும்
§புரணநீறும்புயங்கம்புயங்கமும், பிரணவத்திற்பிறங்குநிலைமையும். (௫௫)

பிறந்திறந்துழலாதபெருமையாற், சிறந்தமெய்சிவலிங்க?சிரோதய, நிறை
ந்துமேதான்றலுங்கண்டுநெடுந்தகை, யறைந்தபைந்தருவாணியினின்றனன். ()

நின்றுகண்ணிணைநீர்ததும்பப்புறஞ், சென்றரோமஞ்சிலிர்த்தவசந்தர
வொன்றுமெண்ணிலனுற்றிலனோதில, னன்றுவேதன்பரவசமாயினன். ()

ஆயகாலையிலங்குளவந்தணர், சேயவெண்மருமிங்கிவன்செய்கைகண்
டோய்விலாமறையோதுமுழக்கினற், போயதார்கலிப்பொங்கெழிலோதையே

ஓதுகின்றவுருத்திரர்பன்னொரு, பேதமானவர்பேணுங்கரங்களிற்
றீதிலாமழைபோலவர்சிந்திய, போதுவெற்பலர்பூத்ததெனத்தகும். (௫௯)

---

* மான்—சிவசத்தி. ○ அம்பரம்—முதற்குறை; பீதாம்பரம்.
† ஆசனம்,, மூர்த்தி. மூலமந்திரங்கள். ‡ திரணம்—துரும்பு.
§ புரணம்—குறுக்கல்விகாரம். புயங்கப்புயங்களும் என்பதூஉம்பாடம்.
புயங்-கம் எனப்பிரித்துப்பொருள்கொள்க.
? சிரம்—இங்கே நாதம்.

தகும்பராபரை தன்னுடனென்றியும், மிகுந்தகாரணமாய்வருமெய்யர்முன்
புகுந்தவானவர்போற்றுமுழக்கொலி, திகந்தரங்களடங்கலுஞ்சென்றன. (௬௦)

நத்திலங்குநறுங்குழைவார்சடை, முத்தர்முன்பணிமாறுமுழக்கினுற்
பைத்தலைப்பெருநாகர்பரப்பினு, மெத்தலத்துமிருந்தவரெய்தினர். (௬௧)

நாரதாதிபர்நல்குஞ்சுராதிபர், மாரதாதிபர்மன்னுந்தாராதிபர்
ஆரதாதிபரானகணாதிபர், சாரதாதிபர்சந்நிதிமேயினர். (௬௨)

மேயபங்கயமுத்தன்னவெண்ணகை, போயநுண்ணிடைப்பொங்கழ*காடவி
சேயவானனஞ்செங்கட்டுவரிதட், டேயரம்பையர்துன்னியிறைஞ்சினர் (௬௩)

இறைஞ்சியிவ்வகையாவருமேத்தலு, நிறஞ்செய்நான்முகனேகைநிறைந்
தெழீஇ, யறஞ்செயீசனணிந்தவையுண்டவை, மறஞ்செய்சண்டனுக்காக்கின
ன்வண்மையான். (௬௪)

ஆக்குநாழிகையேழரையாகநாட், போக்குசாமம்புகுந்திடுமெட்டினுங்
காக்குலாவுகயிலையிற்பூசனை, நீக்கிடாதுநிகழ்த்தினனங்கயன் (௬௫)

அங்கணன்முகனனைச்செவ்விதழ்த், துங்கவேதச்சுருதிமுழக்கலாற்
பங்கயத்துப்படியுஞ்சுரும்பினம், பொங்குகீதச்சுருதியைப்போலுமே. (௬௬)

மேனிலாவும்விரிகதிர்ப்பானுவு, ஞானநாதன்றிருமுகநண்ணலா
லானவேதற்கலர்ந்தலராமலர்க், கானமாயினகண்ணுங்கரங்களும். (௬௭)

கரங்களிற்செறிகண்களின்வாய்களி, லுரங்களிற்சரணங்களினுற்றறி;
சிரங்களிற்கடன்செய்வனசெய்தபின், புரங்களிற்பொருமீசனைப்போற்றினன்.

வேறு.

போற்றலும்விசுவகன்மன்புகுந்தரன்புண்டரீகக்
காற்றுணைவணங்கிக்கையாற்கமலனைத்தழுவிவாழ்த்தி
நீற்றனைவிடைகொண்டங்கணீங்கியுத்தரபாற்போந்தான்
வேற்றுளோர்விண்ணோர்யாருமகன்றுதம்வீடுகண்டார். (௬௯)

கண்டநஞ்சுடையகோவையருச்சித்தகமலனுந்திக்
†குண்டலிக்கனலைமூட்டிக்கொடும்பகைச்சமிதைகூட்டி
யண்டருஞானநெய்யாலாகுதிமகஞ்செய்தந்தத்
துண்டமாமாயைத்தெற்பைகூட்டவன்றிலதமிட்டான். (௭௦)

---

* ஆர்தருமென்பதூஉம்பாடம்.
நிலாவும்பானுவுங்கண்ணெனப்பொருள்கொண்டு பிரமாவின்கட்டாமரைம
லரக்கரசரோருகங்கூம்பினவென்றுமுடிக்க.

† குண்டலிக்கனல்—நாபியின்கீழ்மூலாக்கினி.

7

இடத்தினும்வலத்துமாகவியங்குவார்குவிந்துசூழ
மடைத்தலைவாசலிட்டமணிவிளக்கிருபாலோங்கக்
கடைத்தெருநடுவேயந்தக்கறைமிடற்றண்ணலார்பா
ணடத்தினன்விழர்வேகாண்பானன்முகனெந்நாளும். (௭௧)

எந்தையாற்கொருநாற்சென்னியிருநான்குசெங்கையெண்க
ணைந்தணன்காலையுச்சியந்தியோடத்தயாமஞ்
சந்திகண்முடித்துப்பூசைசமைக்குநாடன்னினோர்நாட்
புந்தியுளடங்காதோங்கிப்பொங்கியதுயரமானான்.  (௭௨)

ஆனவன்றுயரநோக்கியரனெழுந்தருளியுன்பால்
மானவெந்துயரம்யாதுசொல்லெனமறையோன்சொல்வான்
றேனிலாமலர்போற்பூவின்றிரளிலாப்புனல்போல்வையம்
மூனிலாதுயிர்களில்லாதிருப்பதென்னுடையாயென்றான். (௭௩)

வேறு.

என்றுதன்கரமெட்டுங்குவித்தெதிர், நின்றகாலைநிலாமுறுவற்செயா
நன்றுபல்லுயிர்யாவுநீநாட்டெனா, வன்றுகூறினனறணிவேணியான். (௭௪)

ஆறுபத்தினொடாறைந்துமாறுமாய்க், கூறுதத்துவமென்னுங்குறிப்பெலா
மேறுமேறுடையான்றனதேவலால், வீறுபோதவிதித்தனனம்புயன். (௭௫)

§அம்புவிக்கியலைம்பொறியின்குணை, நம்புநீர்க்கொருநாலுகனற்குமூன்
றிம்பர்காலுக்கிரண்டுவெளிக்கொரு, தம்பநன்பொறியாகத்தரித்தனன். (௭௬)

தரித்ததாளிணைசானுபுநாபியுந், திருத்துகண்டமுநெற்றியுஞ்சென்னியும்,வி
ரித்தமண்புனறீவளிவிண்ணெனப்,பொருத்துமேனிபொலியவமைத்தனன்.

*நன்னிலஞ்சதுரச்சிரநாடுநீர், ○கன்னல்வில்லுக்கனறிரியச்சிர
மின்னும்வாயுவிலங்கறுகோணம்வா, னன்னவட்டம்படைத்துடலாக்கினன்.

நன்சரிப்பினடப்பனபற்பல, பன்சரிப்பிற்பறப்பனபற்பல
வுன்சரிப்பினிலூர்வனபற்பல, வின்சரிப்பற்றிருப்பனபற்பல. (௭௯)

பலவுமிந்தப்படிபடியெங்கணுங், குலவுமாணிடமும்பலகூட்டமு
மிலகுவித்தங்கிரணியனுதியாஞ், சிலவராக்கதிரளுமுண்டாக்கினன். (௮௰)

---

§ இவையேபஞ்சபூதங்களுக்கு இயற்கை, செயற்கைக்குணங்கள்; இதன் விரிவு தத்துவப்பிரகாசம் ஞானத்தில்ஞானம், மூன்றாஞ்சூத்திரம் சித்தாந்தமுறைகூறும்பகுதியிற்கண்டுதெளிக.

* பஞ்சபூதவடிவங்களை; சிவஞானசித்தியார் உ-ம் சூத்திரம், ௬௭-ம் செய்யுளிற்காண்க.

○ கல்—ஒலிக்குறிப்புள்ள.

ஆக்கினேனிவ்வுலகிற்சராசரம், போக்கினேனென்பிறவிப்புலையெலாந், தே
க்கினேன்சிவஞானமெனச்சிவன், ஞக்குபாதந்தொழுதுமுன்சொல்லினன்.()

சொல்லிமீளத்தொழுதுவிழுந்தெழுந், தல்லிநாண்மலரோனினிதுதந்தக
நல்லபூசனைசெய்திருநால்வருட், புல்லியோகச்சமாதிபுகுந்தனன். (அஉ)

புகுதுமிவ்வகைபுண்டரிகத்தவர், தொகுதியொன்பதுபேருந்துதிசெய
வகமொரைந்துமொழிந்தபினீரைந்து, திகிரிமாதவர்செய்தனர்பூசையே(அங)

வேறு.

ஏதமிலாவாதியில்விட்டுணுத்தாமோதரன்கரமீதிலங்குசங்க
மூதியவாய்நாரணனுங்கேசவனுஞ்சரோருகக்கண்ணுடையகோவு
மாதவஞ்செயச்சுதனுஞ்சக்கிரபாணியும்லாசுதேவமாலும்
போதுபத்மநாபனுமக்கிருட்டிணனுமெனப்பதின்மர்பூசித்தாரே. (அச)

பூசனைசெய்தண்டசமாமுகத்திலரன்பணிவிடையாற்புவியுள்ளோர்க்குத்
தேசுநரைமூப்புமுதற்செனிப்பித்தார்நிமிடமாய்ச்செப்புங்காலம்
பேசுமலங்காரலம்பிறப்பித்தாரளவிந்தம்பிறக்குமீறு
கர்சினியில்விதித்தாரக்கிரவுகத்திற்பிரளயகீர்காட்டினரே. (அரு)

காட்டருஞ்சீர்க்கிரேதவுகந்தன்னில்முன்னாள் *விசுவசிட்டிகையாற்றந்த
வாட்டருவர்வலிக்காமலியந்திரஞ்செய்○கங்கணங்கள்வானோர்தோளிற்
பூட்டியதுமவுணரவைபறித்துததியெறிந்ததுவும்புலவோருய்யத்
தீட்டருமால்மீனுருவாய்ப்புகுந்தெடுத்துக்கொடுத்ததுவுந்தெரிந்துரைப்பாம்.

அர்ச்சனவிதிச்சருக்கம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் உஎரு.

---

* விசுவசிட்டி, இந்தச்சருக்கத்துப்பூசித்தபிரமாபெயர்.
○ யந்திரஞ்செய்கங்கணம்—அட்சர(க்கூடாகிய)ஐயக்குறி.

## ஐந்தாவது

## மச்சாவதாரச்சருக்கம்.

உரைசிறந்ததென்கயிலைப்பெருமானையுருத்திரர்பதினொருவர்வேதர்
நிரைசிறந்தவொன்பதின்மர்திருமாலோர்பதின்மரிவர்நீங்காராகி
வரைசிறந்ததிரிகோணத்தொவ்வொருகோணந்தமக்குவாழ்வாக்கொண்டு
விரைசிறந்தமலர்தூவியருச்சித்துச்சிவயோகம்விளங்குகாலம். (௧)

விளங்குமலர்விசுவசிட்டிபடைத்தவறுயத்துநாள்வெள்ளஞ்சேனை
துளங்கலிலாவவுணருக்குளிரணியனென்றொருதலைவன்சூழுமாழிக்
களங்கவிடமடக்குமவன்வடகயிலையடைந்துதவங்கடிதுசெய்தா
னுளங்குளிர்ந்துசிவனவனுக்களித்தவரமிவ்வளவென்றுரைக்கலாற்றா. (௨)

ஆற்றலினாற்பகைவர்தம்மாலடுபடையான்மறலிதன்னாலாவிபோகான்
போற்றுமகத்தும்புறத்துமிரவுபகலிரண்டினுமுயிர்போக்கிற்போகான்
கூற்றுமவன்பெயர்கேட்கிற்குலைகுலையுநடுக்கிலண்டகூடஞ்சாய
வூற்றமிகுமுகிலேழுங்கடலேழுங்குடங்கையிற்கொண்டொருக்காலுண்பான்.

பானுவுஞ்சந்திரபதமுஞ்சுரபதமுமவன்பதத்திற்பணியாதில்லை
வானவர்கோன்முதலுலகபாலரவன்வாயிலுட்போய்வணங்காரில்லை
நானிலத்துமிரணியனேநமோவென்றநாவில்லைநாரணன்பே
ரோநமசிவாயவெனச்சிவன்பெயருமவன்காலத்துரைப்பாரில்லை. (௪)

இல்லமுமில்வனிதையருஞ்செல்வமுந்தந்திருநாடுமிமையோர்க்கில்லை
வல்லமையாற்பேருலகமீரேழுமொருகுடைக்கீழ்வலிதினாண்டான்
றொல்லைமகாராட்டிரமாம்பதியிலரசிருந்துமுடிசூடிவாழ்ந்தான்
பல்லவுணவெள்ளமொராயிரகோடியவன்படையாய்பரவாநிற்கும் (௫)

நிற்பநிறுத்தியசமயமெத்தனையுந்தத்தமதுநியமநீத்துக்
கற்பனவுங்கேட்பனவுமிவனாமமென்னிலெவன்கழறுகிற்போம்
நற்புவனத்திப்படியாயிரகோடிவருடமுறநடத்தியாண்மைக்
கற்பமெனமுப்பத்துமுக்கோடிதேவருக்குமலக்கண்செய்தான். (௬)

செய்தவத்தைநலிக்கின்றவவுணருக்கென்செய்வதெனத்தெரிந்துவேத
மெய்துமொருமந்திரத்தைத்தகட்டெழுதிக்கங்கணமாமெழிற்பூணாக்கிக்
கைதரித்துவசிகரமீதெனநினைந்துவெருவாதுகளிப்பாராகி
யெய்தியிரணியனிடம்போந்திறைஞ்சாமற்புறஞ்சிலநாளிருந்தார்விண்ணோர்.

இருந்தபொழுதவருலகத்தேகியிவர்க்குமுன்னாளில்லாதிந்நாட்
பொருந்தியவீதேதென்றுதானவரும்வானவரைப்புகைந்துநோக்கித்

திருந்துகாம்பிடித்தமரர் தங்கரத்திற்கங்கணத்தைச்சினத்தால்வாங்கி
விரிந்தகடலிடைமேகம்பொன்மழைகால்விடுவதெனவிட்டார்மிக்கோர். (அ)

மிக்கவிருசுடரிழந்தவானமெனவேந்திழந்தவியனுடென்னத்
தொக்ககரமொன்றுமருப்பிரண்டுமதமூன்றிழந்ததும்பியென்னப்
புக்கதிருவிழந்தமடவாரென்னச்சிறகிழந்தபுள்ளேயென்னச்
செக்கர்விழிமுத்துதிரக்கங்கணங்களிழந்துள்ளந்திகைத்தார்விண்ணோர். (கூ)

விண்ணுடையவிமையவருமுனிவருமவுணருக்குவிறலையீந்தா
ரெண்ணுடையதுயரமக்காக்கினன்சிவனென்றுலெவரைநோவோங்
கண்ணுடையதிருமேனிக்கோமானேயெழுந்தேதென்கயிலைநாடிப்
பெண்ணுடையபாகனைப்போய்த்தொழவிசும்புவழித்தேவர்பெயர்வதானார். ()

ஆனதருநீழலினிதிருக்குமமரர்களுமமரர்கோவு
மேனுளில்விடங்கொதிப்பவடகயிலைதனிலடைந்துவெருவல்போலச்
சேனுதியதியவுணர்தமக்கொதுங்கித்தென்கயிலைச்சிகரத்தூடே
நானுடுஞ்சதுர்மறையின்றலைநின்றானிருந்ததிசைநோக்கிவந்தார். (கக)

நோக்கமொருமூன்றுடையதென்கயிலைப்பெருமானைநோக்கியோக
பாக்கியத்திலினிதிருப்பார்முக்கோணப்பேரவைக்குட்பணிந்துவானோர்
காக்குமுதலுருத்திரர்காள்விரிஞ்சர்காள்முகுந்தர்காள்கனகன்சேனை
யாக்குதுயராற்றாதுதவமிழந்தோந்திருவிழந்தோமந்தோவென்றார். (கஉ)

என்றமொழியினைவினவியீரைந்துமுகுந்தருக்குளிரக்கங்கூர்வான்
மன்றலந்தார்க்கேசவனும்வாசவனையமைத்தமலர்க்கரத்தணுகித்
துன்றியநுந்திருநாடுந்தருவுமயிராவதமுந்தோற்றவாறும் (ன்
வென்றியவுணருக்கிடைந்திவ்வெற்படைந்தவாறுமென்கொல்விளம்புகென்ற

விளம்புகெனப்புரந்தரனுந்திகந்தரங்கள்பொரிதளந்துவிரிந்தசெவ்வித்
தளம்பயிலுங்கமலமலர்ச்சரணமிசைவிழுந்திறைஞ்சித்தருணநீல
வளங்கவினுமுடன்முழுதுமுத்தரும்பிற்றென்னவிழிவழிநீர்மல்கத்
துளங்குமிமையவருளக்குந்துயர்சிறிதுகேசவன்முன்சொல்வதானான். (கச)

ஆனதபெருந்தருவுஞ்சுரபியுஞ்சிந்தாமணியுமரம்பைமாரும்
வானுடுமிரணியற்குவாழ்வாகமனத்துயரம்வானோர்க்காக
மேனுளில்விதித்தபடியித்தனைநாளநுபவித்தேதம்விடியுங்காலந்
தானுவதில்லையிதற்கென்செய்வோமெனப்பார்த்தோஞ்சதுர்வேதங்கள். (கரு)

வேதமது*சமராதிமந்திரமென்றோருதவிவிளம்பிற்றந்தப்
போதனையைவசிகரமாய்த்தகட்டெழுதிக்கங்கணமாய்ப்புயத்திற்பூண்டோந்
தீதவுணர்கண்டுடைக்குச்சிறுசிகையும்புரிநூலுமல்லாற்செங்கைக்
கீதணியும்வஞ்சனையேதெனப்பறித்துமறிகடற்குளெறிந்தாரென்றான். (கசு)

---

* சமர—யுத்தத்தை, அதி—கடப்பிப்பது.

என்றுதனைப்பனிமதியைக்கனலிதன்னையிபந்தன்னையிஞ்சிமூன்றைக் [ச்
குன்றுதனைமுயலகனைநெரித்துவளைத்தெரித்துரித்துக்குறைத்துத்தேய்த்து
தன்றிய*பல்லொடித்திகழ்ந்ததக்கனையுந்தலைதுணித்ததொல்லோன்பாத
மன்றியொருதுணையிலையென்றடைக்கலம்புக்கேம்வாழியாழித்தேவே. (கஎ)

தேவருலகிருந்தாலுமிறந்தாலுமிரணியனுந்தீயோன்சேனை
யேவுமுரணிருந்தாலுமிறந்தாலுஞ்சிவனருளொன்றிரங்கிமாயோன்
பூவடியில்விழுந்தெழுந்தவாசவனைக்கேசவனும்புல்லியுங்கள்
மேவுதுயர்தவிரும்வகையெம்பெருமாற்குரைப்பனெனவிரைந்துபோந்தான்.

போந்தரனைத்தொழுதிறைஞ்சியவுணரெலாம்புலவரைமுன்பொருதவாறுங்
காந்தசுரர்வலிக்கொதுங்கிச்சுரர்சுருதிக்கங்கணங்கைதரித்தவாறு
மேந்துமவர்கங்கணத்தைத்தானவர்போய்ப்பறித்துததியெறிந்தவாறு
மோய்ந்துதுயருழந்தமரரீங்குவந்தவாறும்விரித்துரைத்தான்மாயோன். (க௯)

மாயவனைநோக்கிப்புன்முறுவலொடுந்தென்கயிலைமலையெங்கோமான்
நீயவவுணருக்கின்னஞ்சிலநாட்பின்பிறுதியின்றுதேவர்க்கெல்லா
மேயமணிக்கங்கணத்தைமீனுருவாய்ப்பிறந்துகடல்விரைவிற்றேடி
நீயுதவுகெனவவனுந்திருவுளத்தின்படிபுரிவனிமலவென்றான். (உ0)

என்றதிருமான்மொழியுமெம்பெருமான்றிருவாக்குமிமையோர்கேட்டுப்
பொன்றுவர்பின்றானவர்கள்பூசலுமெம்புலம்புதலும்போயிற்றின்றே
யென்றரனைத்திருமுன்னந்தொழுதுவிழுந்தெழுந்துநடமியற்றிப்பாடி
மன்றலம்பூமாரிசொரிந்தரகரசங்கரவெனுஞ்சொல்வாயரானார். (உக)

நாரணனக்காலத்தன்பணிவிடையென்றலைமீதுநாதவென்று
பூரணனைவிடைகொண்டுவானவரையஞ்சலெனப்புகன்றுபுல்லிப்
பேரணங்கைப்பிரியாதபெருமான்றென்கயிலையினைப்பிரிந்துதெய்வக்
காரிணங்கும்படிவமொழித்தொருமீனம்வடிவெடுத்துக்கடலுட்புக்கான் (உஉ)

வேறு.

புக்கமீனமக்கடலிடைச்செல்வதுபுவனத்
திக்குநான்கினுமூழிநாட்டிரைத்தபோராழி
மிக்கவூதண்டமீதப்பதேயொப்பலால்வேறு
தக்கதோரிணைபிறிதென்கொல்கூறுவன்றமியேன். (உ௩)

எனமீன்செலவிருஞ்செலவடங்கினசிலமீன்
போனசெல்கதித்திவலையிற்பொடிப்பனசிலமீன்
மானமொக்குளோடோடிவான்மறிவனசிலமீ
னானநீரெறிதிரையினுலழியுமீன்பலவால். (உ௪)

*பல்லிழந்தபரிதி—பூடா. இக்கவி எதிர்நிரனிறைப்பொருள்கோள்.

வாலுகக்கரைததும்பியேதிரைபுறம்வழிய
வோலமிட்டலேந்துந்துறைசிதறினவுததி
சாலுமத்திருமால்கடைமத்திடைத்தலைகாட்
பாலலைக்கடல்கலங்கியதென்னலாம்பகரின் (உ௫)

இன்னமீதென்றுதிரிதரமகரமீனினங்கள்
சின்னமாயினதிமிங்கிலஞ்சிதறினதிசைபோய்
முன்னையூழியிற்கடையுகத்தெம்பிரான்முனிய
வன்னநாளண்டம்பட்டதுபட்டதவ்வளக்கர். (உ௬)

அளவிறந்தநீர்த்திவலைகளெழுந்தெழுந்தகிலம்
வளருமூதண்டமனைத்தையுநனைத்தனவானோ
ருளமகிழ்ந்தனருய்ந்தனமென்றனருலகந்
தளருமோவிதனெனச்சலிப்புமாயினரால். (உ௭)

ஆயவப்புனலொழிவறச்சுழித்தலையெறிந்து
தூயவிண்ணளவும்பரந்தார்த்ததுதொல்லை
மாயன்றன்னிடைநடந்தனனென்பதோர்மகிழ்வா
லேயவக்கடல்கிடந்ததாங்கெழுந்ததேயெனலாம். (உ௮)

எழுந்தமீனதுமேலதோவதனுடனெழுந்த
செழுந்திரைத்திரள்மேலதோவெனத்திரிதரலா
லழுந்துமக்கடற்சிதறியநுரைவிரிந்தணுகக்
கொழுந்திசைப்பெருவரையெலாங்கயிலையாங்கூறின். (உ௯)

இனவளைச்சங்கம்பற்பலகோடிநொந்திரங்கிச்
சினைவயிற்றிடையுடைந்தறக்கதறியசெய்கை
யனையவக்கணன்றனதுசங்கிருப்பமீனுகிக்
கனைகடற்சங்கமுழுவதுமுதுதல்கடுக்கும். (௩௰)

கடுங்கதிக்கொடுவால்விசைத்தோட்லுங்கலங்கிக்
கெடுங்கடற்பதினாயிரயோசனைகிழியுந்
தொடங்குமத்தனிமீனதுகுதித்தலுந்துளும்பி
யடுங்கனற்சுடர்வடவையுமவிபடுமதனால். (௩௧)

நாலுதிக்கிலுமியக்கருநயந்தகின்னரரு
மேலுதிக்குமச்சோமசூரியரும்விண்ணுடுவுஞ்
சாலுமத்தனிமீன்விளையாடலுந்ததும்பி
யாலுமப்புனற்கஞ்சிப்போய்மேருமீதடைவார். (௩௨)

அடையவாரிதியளறுபட்டதுபகிரண்ட
முடையவப்பெருமுழக்கினால்வெடிபட்டதுலகத்
திடையுளோர்செவிசெவிடுபட்டதுதொழுதெவரும்
விடையுளானருட்கண்ணதோவிதுவெனவியந்தார். (௩௩)

தாரணித்தலைமகள்கலையாதலாற்சலதி
பேரணித்தன்காதலனாதலாற்பெருமீ
னோரணித்தவளுடைகுலைத்திடுவதேயென்னச்
சீர்ணித்தபேரலைகுலைபடப்புடைதிரியும். (௫௪)

திரியவாட்சுறவினம்பலசிதறினவொருபா
லரியகூருமம்பலதொலைந்தலமருமொருபாற்
பரியமால்வரைக்குழாங்கள்வேர்பறிந்திடுமொருபா
லிரியல்போய்க்கடன்முதலைகளெறிபடுமொருபால். (௫௫)

பாலலைப்பள்ளியானொருமீனெனப்பாய்ந்தாற்
சாலவக்கடல்படும்பதைப்பார்சொலத்தகையார்
வேலையிற்பண்டுவிழுங்கியகங்கணமீண்டக்
காலையிற்பலமீன்களுமுமிழ்ந்தனகடிதே. (௫௬)

கடிதுமாயவற்கடியுறைபோலவக்கடன்மீ
னெடிதுமிழ்ந்தவுநிலத்திடைகிடந்தவுநிலையா
மடுமிதந்தவுமணற்சுரிமறைந்தவுமாக
முடிவில்கங்கணம்யாவையுமெடுத்ததுமுகத்தால். (௫௭)

எடுத்தகங்கணநோக்கினரிமையவரெவரும்
பொடித்ததங்கவருரோமங்கள்புளகிதத்தங்கந்
துடித்ததோள்வலஞ்சொரிந்தனகைமலர்தொன்மீ
னடுத்துமீண்டதுகண்டதுதென்கயிலாயம். (௫௮)

ஆயதென்கயிலாயத்தின்றென்புறமணுகி
மாயமச்சமாமுடலையக்கடல்வழிவைத்துத்
தூயதன்னுருக்கொண்டரன்சந்நிதிதுன்னிச்
சேயகங்கணமுன்வைத்துவணங்கினன்றிருமால். (௫௯)

திருவருட்கணனோக்கிநீயிவ்வழிச்செனித்த
மருவுமீனுடலிம்மலைக்கேறவோர்மலையா
யருகுவேலையிற்கிடத்தலாற்புவிக்குநன்றளித்தாய்
பொருவிலாச்சுரருலகமுங்காத்தனைபுகழோய். (௬௦)

புகழுந்தேவர்தங்கங்கணங்கொடுத்திபோந்தென்னத்
திகழுமெம்பிரான்முகுந்தனையேவினன்றிரண்டு
நிகழும்வானவர்க்கீந்தனன்முறைமுறைநெஞ்ச
மகிழுந்தன்மையால்வாழ்த்தினர்சதுர்மறைவழாமல். (௬௧)

மல்குமச்சமாங்கேசவன்பெயரினைமலையும்
புல்கமச்சகேசுரமெனத்திருப்பெயர்புகன்று
நல்குந்தானவராண்மையிலினியுங்களாண்மை
பல்கும்போதிரென்றரன்சொலவிடைகொண்டுபணிந்தார். (௬௨)

பணிந்துகேசவற்புகழ்ந்தனர்பராசத்திவடிவாய்த்
தணிந்தவாழ்வின்றற்பவானியாய்மோகத்தாற்றணியா
தணிந்ததுர்க்கையாய்க்குரோதத்தாற்காளியாயட்லாற்
றுணிந்தவிண்டுவாய்நின்றநின்பெருமையார்துதிப்பார். (ருரு)

பாரும்வானமுங்காப்பதுன்பாரமாகையினும்
சேருமெம்மையுங்காத்தலுன்கடன்கொலாந்திறலோய்
வாரமெம்முழிவைத்தருளெனகனிவழுத்தி
வீரவாசவன்முதலினோர்விடைகொண்டுமீண்டார். (ருசு)

மீண்டகாலையிலவுணர்மேல்விண்ணவர்வெகுண்டார்
பூண்டபூசலுக்கவுணருமெதிர்ந்தனர்பொருதா
ரீண்டும்வானவர்துரந்தனர்தானவரிரிந்தார்
காண்டகுஞ்சுரர்தம்பதிபுகுந்தனர்களிப்பால். (ருஎ)

களித்தரம்பையர்திருநடம்புரிந்தனர்கடல்வாய்க்
குளித்தகங்கணமணிந்தனரவுணர்தங்குலத்தா
லொளித்தவின்பமும்வெளிப்படத்துன்பமுமொழிந்தா
ரளித்தகற்பகநிழலினுமமர்ந்தனரமரர். (ருஅ)

அமரரித்திறமிங்கினிதிருந்தனராங்கட்
குமரிபாகனைத்தொழுதுமுக்கோணமாமலையி
னிமிருமுத்தரகுகையினில்யோகத்தினின்றான்
றமரவாரிதிமீனெனத்திரிந்தவத்தலைவன். (ருகூ)

தலத்தினித்திறங்கிரேதமுந்தணந்ததுதிரேத
கலத்தின்மேவியதிங்கினியிராவணனடப்புஞ்
செலுத்தும்பூசலும்பூசையுந்தெரிசனு*முத்திப்
பலத்தினலவன்றாய்பெறுபதவியுமுரைப்பாம். (சுய)

மச்சாவதாரச்சருக்கம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூ௨க.

---

*முத்தி— பிறப்பு.

## ஆறாவது
# தெரிசனமுத்திச்சருக்கம்.

வேறு.

உரைத்ததிரேதவுகந்தனிலிந்திரன்முதலோரும்
வரைத்தலைவைகுமகத்தியனாதிவரத்தோருங்
கருத்தொடுவிஞ்சையர்கின்னரர்சித்தர்கணத்தோரு
மருவுதியினாகரொ*ரையிருகோடியமர்ந்தோரும். (௧)

ஒரும்வேதகுலத்தொடு°சுத்தோதனனோடுந்
தேரும்மந்தரனும்பெயர்மேவுதிறற்கோவுங்
கூரும்மையிருகோடியரக்கர்குலத்தோரு
மாருந்தென்கயிலைப்பெருமானையருச்சித்தார். (௨)

சித்தமகிழ்ந்தவருக்குவரங்கள்சிவன்நல்க
வித்தனையன்பரும்வந்தனையேசெயுமிக்காலங்
கைத்தகுணத்தொரரக்கனிராத்திரிகரனீன்றான்
மெய்த்தவமாமொருராத்திரிகரியெனுமின்னாளை. (௩)

மின்னோநுண்ணிடைபிடியோமென்னடைவிழியோவேல்
பொன்னோமேனிபொருப்போவனமுலைபுதுவான்மீன்
மன்னோவாண்முகமயிலோசாயலிம்மடமாதின்
முன்னோவலதிவள்பின்னோவழகெனமுன்னின்றாள். (௪)

முன்னாளமுதத்துததியுதித்தாள்முளரிப்பெண்
ணன்னாள்கன்னித்திருவுருவங்கண்டன்போடு
மின்னாளென்மகள்மணமகனெனவீன்றோனுந்
தொன்னாள்வடகயிலைத்தலையானைத்தொழுதிட்டான். (௫)

இட்டபணிப்பணியெட்டுமணிப்புயனென்சொல்வான்
மட்டவிள்கந்தமாதனமலைமேல்வாழ்கின்றான்
விட்டசினத்தொருமாமுனி†விச்சிரவாவென்பான்
கட்டழகுன்மகள்கணவனெனத்தனிகற்பித்தான். (௬)

கற்பொருவில்லியுரைக்கவரக்கன்களிகூர்ந்து
நற்பதுமத்தாடொழுதயல்சென்றானதன்று
னிற்பதொர்மாரனையம்முனிவன்பானியேகிப்
பொற்பமரந்தக்கன்னிகையோடுபுணர்த்தென்றான் (௭)

* ஆயிரகோடி என்பதூஉம்பாடம்.

° சுத்தோதனன்—கௌதமர்பிதா; மணிமேகலையிற்கூறியபடி இவனைச்சாக்கியசக்கிரவர்த்தியென்றுஞ்சொல்லுவர். "சித்தொடுதித்தோர்—தேருமமர்ந்தான்" என்பனபாடபேதங்கள். † இவர் புலத்தியர்மகன்.

என்றலுமாரணம்முனியக்கலெழுந்தெய்தான்
கன்றுமனத்தொடுவிரதியன்விரகக்கடல்புக்கா
னன்றவ்வரக்கனும்விச்சிரவாவாச்சிரமத்திற்
சென்றடிதொழுதான்முனிவரனுசிகஞ்சிலசெய்தான். (௮)

செய்தவனீயிங்கணுகியதிறமென்செப்பென்னக்
கைதவமாமென்புதல்வி§யிராத்திரிகரிதன்னை
மெய்துமுனக்கிவண்மனைவியெனத்தந்தென்கையாற்
பெய்யுதகந்தரவேண்டுமெனுள்ளப்பிடியென்றான். (௯)

ஆனாலெங்கள்பிரானருள்கற்பனையதனாலுந்
தேனார்வேள்கணையாலுமறுக்குந்திறனுண்டோ
மேனாளூழ்வினையென்பதெவர்க்கும்விலகாதால்
மானார்கண்ணிமணத்துக்கம்முனிமனமுற்றான். (௧௦)

வேறு.

உற்றமுனிநன்றெனவரக்கனெமதூர்போய்
நற்றிருமணம்புணரநல்குவரமென்றான்
மற்றதுசிறப்பதெனமாதவனுமுன்னித்
தெற்றெனவெழுந்தவனுடன்கடிதுசென்றான். (௧௧)

சென்றுசிலைவேள்பொருதசெய்கைவலிதென்கோ
குன்றவரிவில்லிபுரிகொள்கைவலிதென்கோ
வொன்றினுமுளஞ்செலவிடாதமுனியுள்ள
மன்றவணரக்கன்மகட்கன்புறுவதானான். (௧௨)

ஆனனமலர்க்கமலமன்பினிதரும்ப
ஞானமுனியைக்கொடுநிசாசரனடந்தான்
கானநதிமால்வரை*கடம்பலகடந்தான்
மானனையகண்ணியுறைமாநகர்புகுந்தான். (௧௩)

புகுந்தனன்மனைத்தலைபுதுத்தரளமாடத்
துகந்தமுனியைக்கொடுபசாரமொடிருத்தித்
திகந்தரமடங்கலுமணத்தினிமைசெப்ப
மிகுந்துரியசாரணரநேகரைவிடுத்தான். (௧௪)

தானவர்புகுந்தனரியக்கர்பலர்சார்ந்தார்
வானவர்குழீஇயினர்மகாமுனிவர்வந்தார்
கானமர்தருப்பைகொடு°காவணமியற்றி
யானதொருசாலைநலமாகவுமமைத்தார். (௧௫)

அமைத்ததொருகாவணமதற்கிடையொர்செம்பொன்
னிமைத்தமணிவேதிகையியற்றியதன்மீதே

§ இராத்திரிகரியென்பவளை — இராமாயணத்திலுங்கூர்மபுராணத்திலும் கைகசியென்றுகூறியிருத்தலறிக.

*கடம் — அரும்வழி. ° காவணம் — மணப்பந்தர்.

கமைத்தமண்மாமுனிவனைக்கடிதிருத்திச்
சமைத்தமறையோர்தழல்வளர்த்தனர்சடங்கால். (௧௬)

காலையதிலேநிருதனுங்களிசிறந்தென்
வாலைமயிலைக்கொணர்மின்மாதரெனவோத
வாலயமதிற்குறுகியத்தனருள்மின்னைக்
கோலமுதிர்சேடியர்கள்கூடியணிசெய்தார். (௧௭)

செய்யகலை*நீவிகொடுசெக்கரின்விளக்கந்
துய்யவெளிசூழ்ந்தெனமருங்கினிடைசூழ்ந்தார்
மையமருமேகமொடுவானுடுநிகர்ப்ப
மொய்யளகபங்கிமலர்மாலிகைமுடித்தார். (௧௮)

தாரணியொழுங்குகுவளைத்தலைதயங்கு
நேரெனவிழித்துணையில்மைவரிநிரைத்தார்
பேருருவிவெற்பிணையெனப்பெருமுலைக்க
ணாரவடமிட்டகிலுமாரமுமணிந்தார். (௧௯)

அணிக்கமலம்வாலவெயிலண்ணியதெனச்செம்
மணிக்கடகமங்கைதன்மலர்க்கையில்மடுத்தார்
பணிக்குழைசெவிக்குழையணிந்துபதமேற்கிண்
கிணிக்குரல்சிலம்பொடுசிலம்புகிளர்வித்தார். (௨௦)

கிளர்ந்தவழகுக்கழகுசெய்கிரியதென்ன
வளர்ந்தமுலைவல்லியையிவ்வாறழகுசெய்தா
ரிளந்தளிரடித்துணைசிவப்பவெழுகென்றார்
தளர்ந்தவிடையாள்சிறிதுமெல்லநடைதந்தாள். (௨௧)

தந்தைபெரிதன்புருகநின்றுசரண்மீதே
சிந்தையின்மகிழ்ந்தவள்பணிந்தருகுசென்று
ளந்தமுனிகண்டுவகையாழியின்விழுந்தான்
வந்தவர்முனிக்கவளைவாமமுறவைத்தார். (௨௨)

வைத்தபொழுதங்கையினிலைச்சுருள்மலர்ப்பந்
தித்தகையதேந்தியொருகாப்புமினிதிட்டுச்
சித்திரமணிக்கலையணிந்துசிலைவேளுங்
கொத்துமலர்தூவவொருகொம்பருகிருந்தாள். (௨௩)

இருத்தலுமுனக்கென்மகளின்பமனையாகக்
கருத்தொடுகொடுத்தனனெனிக்கடவுள்காண
நிருத்தனுமுரைத்தபடியென்றுநிருதன்கை
விரித்தவுதகம்பொழியவேதமுனிகொண்டான். (௨௪)

* நீவி — கொய்சகம்.

கொண்டலின்முழங்கினவலம்புரிகள்கொம்பின்
முண்டகமலர்க்கைவிரல்பற்றிமுனிசுற்றி
மண்டுமெனலக்கடவுடன்னைவலம்வந்தா
னண்டருமகத்திடர்புறத்துமகிழ்வானோர். (௨௫)

வேறு.

நாரியுமுனிவனும்நாரிமாருடன், சீரியமணவறைசென்றுபுக்கனர்
காரெனுமிராத்திரிகரன்பணித்தலா, லூரினைநோக்கினரும்பர்யாவரும். (௨௬)

வருமுனிமருவினால்மகாரைத்தந்திவ, டருகுவள்சுரர்க்கிடர்தருமுன்னோயிவர், பிரிவதுநன்றிருள்பெருக்குவோமென, விரிகதிரவன்குடவெற்பில்மேவினான். (௨௭)

மேவியவிச்சிரவாவும்வெய்யகட், காவியினிராத்திரிகரியுமன்பினாற்
பாவியமலரணைப்பள்ளியெய்தலு, மோவியமனையவளுறக்கமுந்தினாள். (௨௮)

முந்தவேயெய்கெனமொழிந்தவெம்பிரா, னந்தமாரணையினியகலென்றேவினான், சிந்தையில்விரகமாங்குறும்புதீர்ந்தற, நிந்தையில்முனிக்குமுன்னெறிபிறந்ததே. (௨௯)

தேமருவரையினிலரக்கன்சேர்ந்ததுங், காமருமணமொழிக்கடனுமக்கடன், றோமுறப்பலித்ததுந்துயின்றபேர்களா, வாமெனத்தோன்றியதவனுக்கன்றரோ. (௩௦)

அன்றவனிராத்திரிகரிதனங்கமு, மன்றலம்பசுந்தளிர்வடிவுநோக்கலும்
வென்றியினரக்கியர்மேனியாதலால், நன்றெனவிருந்ததுநவையுண்டாயதே.

ஆயவளுருவுகண்டன்புநீங்கினன், போயதுநோன்பெனப்புகைந்தெழுந்தனன்
றூயநான்மறைகளுஞ்சுடர்விளக்கிட, மேயினன்கந்தமாதனத்தின்மீதரோ. ()

மீயுயரருவிவீழ்வெற்பின்சென்னியிற், போயொருவடதருப்புறத்தின்புற்றய, லாயிடையோகமோடமர்ந்தன்னினித், தாயிடைப்பிறந்திடாத்தவஞ்செய்தன்மையான். (௩௩)

தன்பொருட்டிருள்செய்துமுனியைத்தையல்பாற், றுன்புறப்பிரித்தவள்துயிலுணர்த்தியே, மின்புலம்புந்திறம்பார்ப்பவெய்யவன், பொன்பிறழ்குணதிசைப்பொருப்பிற்றோன்றினான். (௩௪)

தோன்றலுந்திசைதிசைதோறுஞ்செங்கதிர், கான்றதுமுனிமனக்காமமாமிரு, ளான்றவன்றீவினையிரிந்தவாறென, வான்றமேதினியிருளனைத்தும்போயதே. (௩௫)

போயபினிராத்திரிகரிதன்பூவணைத், தூயகண்டுயிலதுதுஞ்சுக்கெழுவிழித்
தாயினைமுனிவனையருகிற்கண்டில, ளேயெனவழைத்தனளிரங்கியேங்கினாள்

நாண்மலர்ச்சுரிகுழல்சரியநல்வடி, வாண்மலர்க்கண்மழைவழிந்துகால் பொரத், தோண்மலர்த்தொடையலுந்தோடுஞ்சிந்திட, நீண்மலர்க்கையிணைநெரித்துவீழ்ந்தனள். (௩எ)

வேறு.

வீழ்ந்தபொழுதெழுமுன்னம்வெவ்வினையேன்பொல்லாக்கண்
சூழ்ந்ததுயிலெழுமுன்னேபிரிந்தெங்கேதுவள்கின்றாய்
தாழ்ந்தகுலத்தெம்மரபுன்றன்மரபுக்கொவ்வாதோ
வாழ்ந்தகுடிவாழ்க்கையுமிம்மணவறையும்போதுமோ. (௩அ)

போதொன்றுமணைமீதுன்புயந்தமியேன்புணர்ந்தறியேன்
யாதொன்றும்பலகாலும்பயிலாமுன்னிகழ்ந்தியோ
தாதொன்றுகுழலாரும்வேறுசிலர்தாமுளரோ
நீதொன்றுமில்லாதாற்கீதுமொருசெய்கையோ. (௩௯)

செய்யவிதழ்க்கந்திருவக்கன்னியரோதெய்வகுலத்
தையலரோ*வியக்கியரோவெவர்தாமோதமக்கன்பாய்
வெய்யதொருமாயத்தாலுனைக்கொடுபோய்விட்டனரோ
வையoனிராத்திரிகரனுக்கவரெல்லாமஞ்சாரோ. (௪0)

அஞ்செழுத்துந்திருநீறுமகனமார்பிற்புரிநூலுஞ்
செஞ்செவியுங்குண்டலமுஞ்சடைமுடியுந்திரடோளும்
விஞ்சுமணந்தனிலென்னைக்கடைக்கணித்தவிழிநோக்கும்
வஞ்சமறயான்காணவின்னமிங்ஙன்வாராயோ. (௪க)

வரும்போதப்போதென்னைமணம்புரிந்துகரம்பிடித்துத்
†தரும்போதுதொடைசூட்டித்தழற்கடவுள்வலஞ்சூழ்ந்து
பெரும்போதினமளிஅறைபுகுந்தளவிற்பிரிவோமென்
றிரும்போதமனத்தினைந்திருந்தனையோவறியேனே. (௪௨)

அறியேனைத்துயிலெழுப்பியறிவித்துவெறுத்தனையேற்
சிறியேனையிவணிறுத்திச்சென்றக்காற்றீங்குண்டோ
நெறியேபின்வாவெனினுநின்மொழியான்மறுப்பேனோ
மறியேந்துமெம்பெருமான்றிருவாக்கும்வழுவாமோ. (௪௩)

வழுவறவென்குலத்தாதையுனைக்குறிவணங்கிநா
ளழுகியநின்மகட்குமணமதுசெய்வான்வரந்தந்தே
னெழுகெனநீயுரைத்தபடியிப்படிவைத்தேகுதற்கோ
விழுமியமாதவர்க்கெல்லாம்பொய்சொலவும்விதியுண்டோ. (௪௪)

உண்டோவென்னுடன்முனிவுமுண்டாறுலுரையாயேல்
வண்டோடுங்குழற்சேடிமடவார்க்குமுரையாயோ

---

* அரக்கியர் என்பது உம்பாடம். o இராத்திரிகரன்-இவள்பிதா.
† தரும்போது—மெலித்தல்விகாரமெனினுமமையும்.

வெண்டோளாற்கருச்சனைசெய்தெந்தையெனைவரம்வாங்கிக்
கொண்டோகையாற்பயந்தான்மற்றிதற்கோகோமானே. (௪௫)

மானுரைப்புணராமற்றவம்புரியமதித்தனையே
லானுமலெனையுடன்கொண்டேகினையேலடியேனுங்
கானுருமலர்தந்தும்புனலளித்துங்*கந்தமுடன்
றேனுருங்கனியீந்தும்பிரியாமற்றிரியேனே. (௪௬)

நோற்கின்றதவங்களினுமறைமுதலானூனீங்கள்
பார்க்கின்றகல்வியினுங்கைப்பிடித்தபாவையரைச்
சேர்க்குன்றத்தனியேயவைத்தொருவழிபோய்ச்செய்தரும
மேற்கின்றதருமமென்பதுண்டோவந்தியம்பாயே. (௪௭)

பாயிருளொன்றொருபாவிவரப்பாவியேன்றுயின்றேன்
போயதொருநினைவெறுக்கக்காரணமென்புகழோனே
சேயிருவிண்ணவருலகோவயனுலகோசிவனுலகோ
நீயிருக்குமுலகேதுயானும்வரநிகழ்த்தாயே. (௪௮)

ஏனென்றாயில்லையினியிரங்கேலென்றாயுமில்லை
நானென்றாலுய்வதில்லைநன்முனிவர்குலக்கோவே
தேனென்றுமொழியார்யான்செய்குறையுண்டென்றோ
ஊனென்றுதனியேயிங்குயிர்போயுமிருக்குமோ. (௪௯)

இருக்கமுடியாதுதனியென்றழுதாள்கீழ்விழுந்தாள்
மருக்குழலார்பலருகேவந்தவளையெடுத்தேந்திச்
சுருக்களகமுஞ்சொருகிச்சொரிவிழிநீருந்துடைத்து
நெருக்குமிளமுலைநல்லாய்நீயிரங்கேலெனமொழிந்தார். (௫௦)

மொழிமறையுந்தவநெறியுமுழுதுணர்ந்தமுனிதானே
பழியிதுவென்றறியானேற்பாவமிதென்றெண்ணானேல்
விழியிணைநீர்ததும்பவுனைவிடுத்திருப்பதும்முறைமைக்
கிழிவெனவுமெண்ணானேலிவ்வுலகங்கொள்ளுமோ. (௫௧)

கொள்கையுமப்பெரியோர்தங்குறிப்பையும்யாமறிவோமோ
தெள்ளருவிப்பெருங்கிரிக்கேதவநெறிக்கேசென்றாரே
வெள்ளநதிப்புனிதநீர்க்கெய்தினரேமீண்டின்ன
முள்ளுருகிவராதொழியானீதுயரமொழியென்றார். (௫௨)

என்றலுமவ்வுரைகேட்டவிலங்கிழையுமகங்குழைந்து
சென்றகதிர்வரக்காணாத்தாமரைபோற்சீரழிந்து
துன்றுமழையிலாதிரங்குந்தோகையும்போலத்தோகை
சென்றமுனிபோனவழிநோக்கித்திகைத்திருந்தாள். (௫௩)

---

* கந்தம்—கிழங்கு.

வேறு.

இருந்துயர்க்கொடிங்கிவளிருந்தனள், விரிந்தகந்தமாதனமிசைக்கணே
பொருந்துமால்நிழற்புற்றுமூடுற, வருந்தவஞ்செய்தேயவனிருந்தனன். (௫௪)

இருநிலம்பெறும்பிரமனென்பவன், றருமகற்கொருதனயனனவ
னரியமெய்த்தவத்தலதுவேறுவே, றரிமையிற்கருத்தொன்றுமெண்ணிலன்.

இலகும்யோகமிவ்வகையிருந்துளி, யுலவுமால்மரத்தும்பர்கொம்பின்மேற்
குலவுந்தன்குலப்பேடுகூடவே, யலகுசொல்லுங்*கோரண்டம்வாழுமால். ()

ஆலமார்ந்தகோரண்டமற்றொர்நாட், சூலமார்ந்ததன்பேடைதுய்த்திடச்
சீலவுண்டிகொண்டின்றுசெல்வனென், றேலமென்பெடைவிடுத்தெழுந்ததே

தேடுகுன்றமூந்திசையும்வாவியுங், காடுமெங்கணுஞ்சிறகுகால்விரித்
தோடிநீடுதூரத்தொருண்டிகண், டாடிவாயெடுத்தகமகிழ்ந்ததே. (௫௮)

மகிழ்ந்துபுள்ளுமீள்வழிக்கொடேகலு, நிகழ்ந்தசெங்கதிர்க்கடவுட்†ணீள்பரி
யகழ்ந்தமேல்கடற்கரையடைந்தது, திகழ்ந்தவந்திவானிருள்சிறந்ததே. (௫௯)

தேடுமேயெனச்சினைவயிற்றுடன், வாடுமேவரும்வழியைநாடியென்
பேடுவீடுமேயென்றுபேதுறு, வோடியோடிமென்சிறகரோய்ந்ததே. (௬0)

ஒயுமோயுநின்றன்னுமுன்னுமெய், மாயுமாயுமவ்வழியிருட்டலாற்
போயுமீளும்வாய்புலரும்வெய்யவன், சாயுமோவெனக்கொடுமைசாற்றுமால்.

மாலிருட்கடல்வந்துமூடலு, மாலினுக்கினியரிதுபோவதென்
றோலமிட்டுநைந்துடலுடைந்துசெஞ், சேலடுத்ததோர்வாவிசென்றதே. (௬௨)

சென்றொராயிரஞ்செவ்விதட்புறந், துன்றுதாமரைத்துய்யநாண்மல
ரொன்றின்மீதிரண்டடியுமூன்றிநின், றன்றிராவெலாமவணிருந்ததே. (௬௩)

இருள்பரந்தகோரண்டனின்னமும், வருகிலானிதுமாயமோவெனுக்
கருவயிற்றொடுஞ்சிறகுகால்புடைத், துருகுபேடைநின்றுழலுமங்கரோ. (௬௪)

அங்குமிங்குநாளுகநீதனித், தெங்கணேகினையெவர்தடுத்தனர்
கங்குல்வாய்விழிகாணெணுதுபோய்த், தங்கினுய்கொலோதாமதஞ்செய்தாய்.

செய்யவாயிரைதேடிவந்தது, முய்யநான்மகிழ்ந்துண்டிருந்ததும்
வெய்யதோரிராவினைவிளைந்தது, மையகோவிதின்றழகதாயதே. (௬௬)

---

* கோரண்டம்—காக்கை. † நீள்பரி—சத்தாஸ்வம்.

ஆயபுள்ளெலாமடவியெங்கணும், போயும்வாயிரைபுசிப்பதில்லையோ
மேயநீயும்போய்மீள்வதில்லையோ, தீயதின்றையிற்செய்கையென்கொலோ.

என்னையும்மறந்தெங்ஙனேனுமோர், கன்னியம்பெடைகண்டுளாய்கொலோ
வுன்னையன்றியென்னுயிரிருக்குமோ, மன்னவென்றுதன்வாயரற்றுமால். ()

வேறு.

மாலுறுமிதையத்தோடுபேடுமிவ்வருத்தங்கூர
மேலுறுதுயர்க்கோண்டன்கமலத்துமேவுங்காலைப்
பாலுறுமதியைநீக்கிப்பனியிருளகற்றியொற்றைக்
காலுறுபரித்தேர்வீரன்குணதிசைக்கடலில்வந்தான். (சுக)

வந்ததுவெயிலின்சோதியெனவரிவண்டுபாடக்
கந்தமென்பொகுட்டுமூடுமிதழெனுங்கதவுநீங்கப்
புந்திமின்மகிழ்ந்தகஞ்சம்போலக்கோண்டனெஞ்சத்
தந்தியிற்புகுந்ததுன்பமடங்கலும்போயிற்றுங்கே. (எ0)

ஆங்கறிவுடையோர்தம்மோடறிவுளோர்கலந்தகாலைத்
தீங்குறிலிருபாலோருஞ்சேர்குவர்நலனுஞ்சீரு
மோங்குறிலிருபாலோருமொருவழிப்பெறுவரென்ப
தீங்குறுகமலமேவுங்கோண்டனிடங்கண்டேமால். (எக)

கண்டதுவெயிலின்சோதிகோண்டன்களிப்புவீங்கக்
கொண்டதொருண்டிநென்னற்கவ்வியகூர்வாயோடும்
புண்டரீகத்தினின்றுமெழுந்ததுபுடையின்வீசித்
தண்டலிற்சிறைச்சண்டமாருதந்தயங்கிற்றம்மா. (எஉ)

மாயிருஞாலமுண்டோன்மலர்ப்பதக்கலுழன்போலப்
போயதுவிசும்பினூடேவழியதுபுகுந்துபேடை
யேயெனவரற்றித்தேடிவயிறலைத்திரங்கிவீழ்ந்து
தீயவெந்துயரங்கூருங்காலையிற்சென்றதன்றே. (எஙு)

சென்றதன்சேவல்மேனிதாமரைச்செவ்விப்போதின்
மன்றலம்புதியசுண்ணமணப்பமுன்வரலும்பேடை
துன்றிருளுழந்தநோயுந்துயரமுமொழிந்துதன்க
ணின்றெறிபிறக்கநோக்கிநெடிதுயிர்த்திருந்ததோர்பால். (எச)

ஓர்புடையிருந்தபேடையூடலைக்கண்டுசேவல்
சோர்வொடுநென்னன்மாலைதுயருழந்திருந்ததின்று
பேர்வறத்தமியனிங்ஙன்வருதலும்பிரிந்தென்மீதி
லார்வம்விட்டிருந்ததென்கொலெனவெண்ணியணைத்ததன்றே. (எரு)

அணைத்தலும்*பணைத்துப்பேடைசிறகிடையடங்காதாகி
யிணைத்ததன்வாயிற்சேவலிரைதருவாயுந்தள்ளிப்
பணைத்தகான்மீதுகோத்தபடருகிற்காலுநீக்கித்
துணைத்தகண்சிவந்துகண்டஞ்சுரித்துமெய்விதறிற்றம்மா. (௭௬)

மாலையிற்கிடைத்தவுண்டிகொண்டிங்ஙன்வருமுன்வெய்யோன்
வேலையிற்படிந்தான்கஞ்சமீதொருபொய்கைவைகிக்
காலையிற்கடிதுவந்தேன்கலங்கியதுயரொண்ணுதென்
பாலயிர்த்திடுவதென்கொலென்றதுபரிந்துசேவல். (௭௭)

சேவலதுரைப்பப்பேடைநின்றிருமேனிசெவ்விப்
பூவலர்மணப்பவேறோர்பெடையொடும்புணர்ந்துவந்தாய்
மேவலநின்னையெண்ணுமென்னையோவெறுத்தியென்பா
லாவல்விட்டிருந்தாயன்றியிருட்குநீயஞ்சுவாயோ. (௭௮)

அஞ்சுவையுண்டியென்கொலருந்துணையென்கொலிந்தப்
பஞ்சரமென்கொலின்ப○பரிவென்கொல்பலவுமென்கொல்
வஞ்சகம்புரிந்தநின்கண்காணவேவலிதென்றாவி
துஞ்சுவதொன்றேநன்றென்றெழுந்ததுதுணிந்துபேடை. (௭௯)

பேடையைவிலக்கிச்சேவலுனையன்றிப்பிறவற்றோடுங்
கூடயானென்றுமில்லைக்கூடியதின்றுமில்லை
வாடுதலொழிதிதத்தம்மனைவியர்சலிப்பவேறு
நாடுவர்புறம்போயென்றுனரகமற்றதுபோலுண்டோ. (௮௰)

உண்டெனில்வஞ்சமென்பாலிங்கினிதுரைப்பன்கேண்மோ
வண்டருங்கிரியினிந்தவாலின்கீழ்ப்புற்றில்வைகு
முண்டகன்பேரனுமுனிபுகுநரகம்யானு
மண்டுறப்புகுவேனென்றுசேவல்வாய்மலர்ந்ததன்பால். (௮௧)

அன்புறுபெடையோடந்தச்சேவலன்றறைந்தவாய்மை
வன்புறுதவத்தில்நீங்குமுனிசெவிமடுத்தலோடுந்
துன்புறமனத்திலெண்ணித்தண்ணெனவெழுந்துநோக்கி
யென்பிறிதுரைத்தாயென்னைப்பறவைநீயியம்புகென்றான். (௮௨)

இயலறம்பொருளோடின்பம்வீடெனவிசைக்குந்தொன்னூற்
செயலுறுமின்பஞ்செய்துபின்பன்றேசேர்வர்வீடு

---

*பணைத்தல்—பிழையுடைத்தாதல். பதைத்துஎன்பதூஉம்பாடம்.
○பார்ப்பென்கொல்என்பதூஉம்பாடம்.

மயலொடுமனைவியங்ஙன்வருந்தவிங்கிருந்துநோன்பு
முயலிலென்முயன்றுயில்லையாகிலென்முனிவர்கோவே. (௮௩)

வேதநீயுணர்ந்தாயேனுமெய்த்தவஞ்செய்தாயேனு
மாதவள்மயங்கும்பாவம்வருமுனக்*கறுதியையா
வேதமிலென்பேடைக்குயாதொருபிழைசெய்தேனேற்
பாதகமெனக்குமுன்போலிவ்வழிப்லிக்கவென்றேன். (௮௪)

என்றுரைசெய்ததந்தக்கோரண்டனிருடிநன்று
நன்றிதுசாதமென்னவிதயத்துணுடிநாடி
நின்றுநின்றேங்கியேங்கிநெடிதுயிர்த்துயிர்த்துவிம்மித்
தன்றுணைவிழிநீர்மல்கத்தையலைநினைந்துநைந்தான் (௮௫)

தானவர்மல்குங்காலம்பிறப்பதோதளர்ந்துநொந்து
வானவரல்குங்காலம்வருவதோமதிக்கவொண்ணாக்
கானமரளகக்கோதையிராத்திரிகரிதன்காதல்
போனதுமுனிக்குமீண்டுபுகுந்ததுமனத்தினூடே. (௮௬)

ஊடுறுதுயராலன்றோறொருபதுவருட°மாயத்
தாடுறுவேற்கண்ணாளைப்பிரிந்தநாளளவென்றெண்ணி
வாடுறுமனத்தனாகிவரையினுமிழிந்துபோயக்
கோடுறுமுலையாள்வைகுங்கொடிநகர்கடிதுபுக்கான். (௮௭)

வேறு.

புக்கனன்முனியெனப்பலருமுன்புகலலுந்
தக்கராத்திரிகரிதரிவுறுப்பிரிவினால்
நெக்கிநெஞ்சுருகிவந்தெதிர்கொடேநியமனைக்
கைக்குவித்திருபதம்பரவினாள்கருணையால். (௮௮)

கருணையங்கொழுநனைக்கடிமனைக்கொடுபுகுந்
தருணபங்கயமுகத்தழகெழுந்தணிகலந்
தருணகொங்கையினணிந்தகின்மணந்தனையளைந்
திருணறுங்குழன்முடித்திருகண்மையெழுதினாள். (௮௯)

எழுதரும்வடிவினாளிவளுயிர்க்கணவனிப்
பொழுதுவந்தனனெனப்பொருவரும்பதியுளோர்
முழுதுமத்தாதையுமுகமலர்ந்தருகினார்
பழுதிலாவிருவருங்கலவியுட்பழகினார். (௯0)

நாரியும்முனிவனும்நாடொறுங்கூடுறச்
சேரும்விண்ணவர்செயுந்தீவினைத்திரளெலா

* அறுதி—நிச்சயம். ° ஆயத்தாடுறும்—பெண்கள்கூட்டத்தில்விளையாடும்.

மோருருக்கொண்டதேயொப்பவப்பேதைபாற்
சாருருக்கருவயிற்றுற்றதக்காலமே. (௯௧)

காலிளைத்திணைமுலைக்கண்கறுத்திதழ்வெளுத்
தாலிலைத்திருவயிற்றடிபுடைத்திடைதடித்
தோலையிற்குழைபொரும்விழிகுழிந்துடல்†பழுத்
தேல்○மடிச்சுவைபுளிப்பிவைசுவைத்தெய்தினாள். (௯௨)

எய்துமவ்வயவுநோயெவையும்வந்துறுதலும்
பெய்தகோல்வளையினாளொருமகப்பெற்றனள்
§கையிரண்டொருபதுங்கதிரெயிற்றதாமோ
ரையிரண்டானனந்தானுமுண்டாகியே. (௯௩)

ஆகமேபுயலுமாயசனியேசொல்லுமாய்
வேகமாயடுசுடற்குஞ்சியாய்விஞ்சுமா
நாகநீள்பெலமுழைச்செவியுமாய்நவையிலா
வாகனுமகனைமின்மடியில்வைத்துருகினாள். (௯௪)

நாளுமப்பருமுலைப்பெருகுபானல்கிமின்
னோளணைத்தாதனத்தொட்டிலிட்டசைதரத்
தாளினிற்றவழ்தலுந்தளருமென்னடையுமாய்
வாளெயிற்றிதழ்மழக்குமரனும்வளருநாள். (௯௫)

வளருமாமதலையைமாதவத்தாதையுங்
கிளருமார்புறவணைத்தருமறைக்கிரியையா
லளவுமென்சவுளமாதிருகைமுந்நூலுமங்
குளமகிழ்ந்துதவினானுவகையாலுருகுவான். (௯௬)

உருவமாமைந்தனுக்குமைதிருப்பாகனார்
தருவரம்வேண்டுமென்றெண்ணியத்தவமுனி
திருமகற்கொண்டுபோய்த்தெய்வவான்கயிலைபுக்
கருநெறித்தவநிலென்றவனைவைத்தேகினான். (௯௭)

ஏகலுந்தெசமுகன்றவ‡மெரிக்கிடைசெய
நாககங்கணனுமுன்வந்துவானாளவற்
காகமுக்கோடிதந்தகவிலங்கையுமளித்
தோகையால்ராவணப்பெயருமன்றுதவினான். (௯௮)

† பசுந்தோல்மடித்துவரென்பதூஉம்பாடம். ○ மடி—உணவு.
§ கைகளோரிருபதென்பதூஉம்பாடம். ‡ நதிக்கிடைசெயுளென்பதூஉம்பாடம்

வேறு.

உதவுஞ்சிவன்றன்வரம்பெற்றுள்ளவாட்கையரக்கன்
மதவெங்களிற்றினேறிவராலுமாயன்போந்து
முதுவிண்ணவர்க்கும்மூன்றுகோடிமுதல்வவுனக்கீ
ததிகமல்லமீண்டேயரைக்கோடிவாங்கென்றறைந்தான். (கசக)

அறைந்தான்மொழியின்படியேயரக்கன்கயிலைசென்று
சிறந்தாய்மூன்றுகோடியரைக்கோடியாக்கச்செய்தாற்
புறந்தானிடுவர்போர்க்குப்போந்ததேவரெவரு
நிறந்தாள்சடையவென்னத்தந்தேனென்றுநிமலன். (கஎ0)

மலராந்தடங்கட்டிருமால்வந்தமாயவியற்கை
யலராமனத்தனறியாதளியினேடுமகன்றான்
புலராமுகப்புன்முறுவல்புலவரெவரும்பூத்தார்
சலராசியைவெற்பதனுற்கடைந்தவள்ளறணந்தான். (கஎக)

தணந்தான்கைலைச்சைலம்தன்னைவாள்கொளரக்கன்
மணந்ததாயுந்தந்தைமரபிலுள்ளயாருங்
குணந்தான்கொடியனேனுங்குடிகளோடுஞ்சென்று
கணங்களாகிச்சூழக்கடற்கணிலங்கைகலந்தான். (கஎஉ)

கலனேடிலங்கும்புயத்தான்கடல்சூழிலங்கைமேவிப்
பொலனேடெறிக்குநகரம்புகுந்தேயாளுமெல்லை
நலனேடிவன்றுயுலக்கைநளினக்கையாற்பிடித்துத்
தலனேடுரனைவிட்டுக்குற்றக்கண்டுதளர்ந்தான். (கஎங)

வேறு.

தானேநெற்குற்றுழக்குந்துயரென்கொலுனக்கெனலுந்தாயுங்கேட்டு
மானேயுங்கரத்தானைமாப்பிடியின்வடிவமைத்துவணங்கவென்ன
யானேயித்தரையாளநெற்குற்றலியல்போவென்றிலிங்கம்வாங்க
வானேறுசிவபெருமான்வடகயிலைத்திருமலைபோயடைந்தானன்றேன். (கஎச)

அன்றேன்வந்திறைஞ்சவரனீபோந்தெதென்கொலெனவவனெனன்னை
நின்றுகம்பூசிக்கவோரிலிங்கந்தரவேண்டுநிமலவென்ன
மின்றூர்பொற்சடைமுடியோன்வழங்குதலுமவனேந்திமீளுங்காலை
§நன்றாரணன்கருதிமுனியாகத்தொடர்ந்துவழிநடுவேநின்றான். (கஎரு)

ஆனனம்பத்துடையவடலரக்கன்வரும்பொழுதவனுக்கலர்ந்துதெண்ணீர்ப்○
பானமதுசெய்வதற்கோர்தவனநெடுமால்கொடுப்பப்பதறிப்போந்து

§சிவராத்திரிபுராணம், கன்மாடபாதச்சருக்கம் ருக ம் செய்யுளும், பிரமோத்தரகாண்டம்சிவதானமகிமை சக-கூ0 ம் செய்யுளும் பார்க்கவபுராணமும், இராவணனுக்கெதிரேவந்தது விநாயகப்பெருமானென்றுகூறல்காண்க.

○ முந்தியசெய்யுளுக்குக்காட்டிய பிரமாணநூல்களிலே இராவணனுக்குச் சலமோசனகஷ்டம்நேர்ந்ததென்றும் இன்னுஞ்சிலவிகற்பங்களுங்கூறப்படல் காண்க.

மாநிருதனந்தமுனிவனைநோக்கிப்புனலருந்திவருமட்டுக்கு
நீநனினக்கையேந்தவேண்டுமிந்தவிலிங்கமெனநெடிதுசொற்றான் (௧0௬)

நெடியமுனிவனுநின்னைமூன்றுகுரற்கூவுவனன்னேரம்வாரா
விடிலமரரூர்க்கடைவனென்றிடலுமரக்கனுந்தன்*வேட்டையாற்றான்.
கடிதனுக்கொருமித்துச்சிவலிங்கமம்முனிதன்கைமேல்வைத்துக்
கொடிலர்ப்பூவாவியிற்போய்க்குறுகலுமுக்குரலுமுனிகூவாநின்றான். (௧0௭)

கூவுமொருமுக்குரற்கும்வந்திலனென்றந்தமுனிகுளிர்பொற்கையின்
மேவுமிலிங்கத்தையயன்மேவுமொருகோச்செவியின்விளங்கநாட்டி
யாவரசைத்தாலுமசையாதிவணேயிருக்கவெனவிறைஞ்சிப்போனான்
றேவரதைக்கோகர்ணமெனப்புகழ்ந்தார்தெசமுகனுந்திரும்பிப்போந்தான். ()

வேறு.

போந்தான்முனியைப்புடைகண்டிலமென்,றாய்ந்தான்சிவலிங்கமொராக்குழை
யின்,வாய்ந்தாலயமோடுவயங்குதல்கண்,டேய்ந்தாவிருகைகொடெடுத்தனனால்

ஆலம்பருகும்பொருளச்சுதனார், சீலம்புரிசொற்படிசேவடிவேர்
○தாலம்புகுலிங்கசயம்புவதாய்க், கோலம்பெயராதுகொழுந்தெழுமால். (௧௧0)

‡எழுந்தானிறையைத்தழுவிக்கொடெடா, விழுந்தானடிவேர்பறிமேருவென
வழுந்தாரமுடித்திரளத்தனையுஞ், செழுந்தாரகையிற்புடைசிந்தினவால். (௧௧௧)

சிந்தாகுலமுற்றசினக்கொடியோன், நொந்தான்மெய்யொடுங்கிநுடங்கின
னென், றைந்தாருவினுடவரார்த்துநகைத்,தெந்தாயெனவீசனையேத்தினரால்.

ஆலித்திடுமண்டரதிற்பினெதிர், கோலக்கிரிமந்தரமுங்குமுறக்
காலிட்டதன்வேர்பறியக்கடவா, மேலிட்டலைவேலையின்வீசினனால். (௧௧௩)

சின்னம்படவக்கிரியைச்சிதைவித், தின்னங்கயிலைத்தலையேகவேனாத்
தன்னந்தனிபோயினனத்தறுகண், மன்னன்வழிமேலொருமால்வருவான். ()

வான்மிக்கநரைத்திரைவண்ணவுடற்,கூன்மிக்கபுறம்பிடிகோலுடனான்
மேன்மிக்கதொர்வேதியனாகிநடந், தேன்மிக்கவுனக்கிவ்விளைப்பெனலும். ()

என்னன்னைதொழற்கொரிலிங்கமுமை, மன்னன்றரவாங்கினனோர்முனிகோ
ணன்னம்புகவைத்ததுகண்டமலன், முன்னம்புகவின்னமுயன்றனனால் (௧௧௬)

நால்வேதியதூரநடந்துடல, மேல்வேட்டையடைந்துமெலிந்ததென
நீல்வேட்டணியம்பலுநீண்மறையின், நூல்வேறுபடாதவனும்நாவல்வான் (௧௧௭)

*வேட்டை—நீர்வேட்கை. ○ தாலம்—பூமி.

‡எழுந்தான்றனியேதழுவிக்கொடெடா என்பதூஉம்பாடம்.

வானோர்பணியும்வடவெண்கயிலைத்,தேனோடுகுவட்டொருதென்குவடு
தானோதவிலங்கைதரித்தபடி, யேனோர்கிலையாதுமுணர்ந்தறிவாய். (௧௧௮)

ஆயும்பொழுதம்மலைதென்கயிலை, யேயுஞ்சிவலிங்கமுமிங்குளநீ
யோயுந்துயர்விட்டவனோடுகெனக், காயும்நிருதன்கைகுவித்தகல்வான் (௧௧௯)

அகலாழியிலங்கையதன்பதிபுக், கிகலாரிரதம்பிறிதேறியொரைம்
முகனார்திரிகோணமுதற்கிரியைப், புககாடிவலஞ்செய்துபோற்றினனால். ()

வேறு.

போற்றிநின்*றிரதமுத்தரதிசைப்புறம்விடுத்
தூற்றவெற்பினொருகீட்டிசையினேறியுரவோ
னாற்றலிற்கொடியகையிருபதுங்கொடணைசெய்
தேற்றமிக்கவனெடுப்பவிறையோனுமசையான். (௧௨௧)

அசைகிலன்சிறிதுமென்றகலவிட்டவனுமீண்
டிசையுமங்கைகளொரெட்டிறைவன்மேனியுறலாய்
மிசையின்மற்றவைபடப்படியின்மார்புவிரவத்
தசமுகன்றழுவிநம்பவெழுகென்றுதளர. (௧௨௨)

தளருமங்கைகளொரெட்டுறுதழும்புபெருமான்
வளருமங்கமொடழுந்தியும்வராதமர்தலான்
மிளிருமண்டமழியூழியினுமேனியழியா
தொளிருமெய்தனதுமெய்யெனவுணர்த்தினனரோ. (௧௨௩)

உணர்ந்தமாலயன்விழிக்கரியமெய்யுலையுமோ
வணிந்தவானுருவமானதுமகப்படுமதோ
பணிந்தபாதலமுறுத்துபதமும்பெயருமோ
தணிந்தஞானவொளியாயவொளியுந்தளருமோ. (௧௨௪)

மோசமுற்றநிருதன்முனிவுடன்கடிதெழுந்
தீசனுற்றவரையைச்சினமொடெற்றுவனெனா
வீசுதெற்கிலுறவெட்டவவன்வாள்வயிரமிற்
றூசறுத்தநிருதித்திசைவிழுந்ததுவே. (௧௨௫)

வேகவெங்கனல்விழிக்கடைபொறிச்சிதறநீண்
மாகவெண்பிறையெயிற்றகலவாய்புகையெழச்
சேகரங்களொருபத்துமசையத்திசைதொறும்
போகவெம்மைவிசிறப்புலவர்மேனிகுலைய. (௧௨௬)

* "தேரைநிறுத்திமலையெடுத்தான்" என்றார்மாணிக்கவாசகரும்.

குலையம்⁰மண்ணுலகமுங்குலவுபாதலமெனிந்
தலையவர்ன்முகடடங்கலுமதிர்ந்துழலநின்
றலையமேகபடலத்திடியொரேழ்கடல்களு
முலையவாயொருபதும்பெரிதுரப்பன்மலிய. (௧௨எ)

பல்§லையிற்றெருகெடித்தபகுவாய்தனைமடித்
தொல்லையிற்சினமெழுப்பியெரிரோமவழிபோய்ச்
செல்லவக்கடல்விடந்தனிதிரண்டவடிவீ
தல்லதொப்பிலையெனப்பலருமஞ்சியலற. (௧௨அ)

அலறியாதவனுமம்புலியுமஞ்சியயல்போய்
விலகநீள்பெரியதேர்ளவனறைந்தவிசையாற்
குலவுமேருவரைசாயமுதுகூற்றும்வெருவக்
கலகவூழியிதுகாலமெனநாகர்கதற. (௧௨௯)

கதமுதிர்ந்தமலர்தெண்கயிலையிற்?கடமினிந்
திதனையின்றடிபெயர்ப்பனெனவெய்திங்ருதன்
மதியமண்டலமடுத்த‡வரவுக்குவடிவாற்
புதியகுன்றடிபறித்திடு†புயற்குநிகர்வான். (௧௩0)

*வானடுத்தவரையைக்கரம்வளைந்துதழுவித்
தானெடுத்தலுநடுங்கினசகங்கள்முழுதுந்
தேனெடுத்ததிருவாயுமைதிகைத்துவெருவாக்
கானடுத்தசடையானயல்கலந்தனளரோ. (௧௩௧)

கலத்தலும்முமைதழீஇயகையுடன்கைதழுவி
நலத்திடப்புறமவட்கருளுநன்னகையுமாய்ப்
பொலத்தடக்கைகளொரெட்டுமொர்முகப்பொலிவுமாய்
வலத்திருப்புறமரக்கன்மிசைவைத்தசினமாய். (௧௩௨)

சினமழுத்துடிசெறிந்ததிரிசூலமபயம்
மனைவியைத்தழுவுகையின்மணிமால்வரைதொட
வனையநாகமதனங்குசமொடவ்வரதமு
மினையகைதொறுமமைத்தினிதுதெற்குமுகமாய். (௧௩௩)

மாயனுடரியதோரடிமடித்தொரடிகீழ்த்
தோய§வீரமுதிராசனமிருந்துதுணைவன்
சேயதோர்விரனுதிக்கொடுமுனிந்துசிறிதே
யாயராவணனையெற்றலுமவன்றவறினன். (௧௩௪)

⁰ஏழுலகம்என்பதூஉம்பாடம். §எயிறு—வக்கிரதந்தம்.
?கடம்—மலைப்பக்கம். ‡அரவு—ராகு. †புயல்—பெருங்காற்று.
*"உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து"என்றார் சம்பந்தஸ்வாமிகளும்
§வீராசனம்—வலத்தொடையிலிடப்புறங்கால்வைத்திருத்தல்.

நானிலங்களுமதிர்ந்துடனெங்கவலறிப்
பானுவின்சுடர்படுங்கடல்சிவந்தபடிபோல்
மேனியெங்கணும்விழுங்குருதிவெள்ளமொழுகத்
தானெருங்கியலையாழியிடைதாழ்ந்தனனரோ (௧௯௫)

தாழ்ந்தனன்கனலிதிக்கொருதனித்தெதசமுக
னாழ்ந்ததென்கடலினன்றொருமைநாகமபர்வால்
வீழ்ந்ததொன்றுவமையல்லதயல்வேறுமுளதோ
சூழ்ந்துவிண்ணிடையினின்றமரர்துள்ளல்புரிவார் (௧௯௬)

வேறு.

வாரிவிழுந்தவன்மீளவெழுந்திலன்வாரானென்
றாருமவன்பரிதேரொடுசிந்தியுடைந்தேகச்
சீரியவங்கைகொடெற்றியெறிந்தெழுந்தேதநின்
றாருமகிழ்ந்தினிதாடினர்பாடினரவ்வானோர். (௧௯௭)

வானவர்துள்ளுமகிழ்ச்சிகள்கோணமலைக்கேவாழ்
வானவர்கண்டுகளித்தனுமாலைமுகத்தோனும்
ஞானவிரிஞ்சனும்வந்துவலந்தொழுநல்வேலோன்
கானநறுந்துளவோனுடனின்றகசிந்தேத்த. (௧௯௮)

ஓதநெடுங்கடனஞ்சமுவந்தினிதுண்டோன்பா
லாதரவம்பிகையும்பயமாறினளன்பூரப்
போதமகிழ்ந்துபுகழ்ந்துவணங்கினர்பொன்னுடர்
வேதமுழங்கினகோணமலைத்தலைமீதன்றே. (௧௯௯)

அன்றுமைபங்கொருபாதிவிளங்கவரன்பாதி
நின்றுருவாயருவாகியகம்புறநீங்காதா
*யொன்றுமிரண்டுமிரண்டுடனொன்றுமுடன்°வேறாய்த்
துன்றுயிருக்குயிரானவர்தோன்றினர்தோன்றாதார். (க௲௦)

தாரணிநீர்கனல்கால்வெளியேமுதலாறனை
ரேர்ணியாதியநாதியதா†யொரெழுத்தானார்

* இதற்கு:— தானேயாய், அவையேயாய், அவைதானேயாய், தாதான்மியசத்திரூபமாகியுமென்பதொன்று; மந்திராத்துவா, பதாத்துவா, வன்னத்துவா, புவனத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா, மூர்த்தியாயென்பதொன்று; பிரணவத்தோடுகூடிய பஞ்சாக்கரமாயென்பதொன்று; சிவமாகியும், சிவஞ்சத்தியாகியும், அர்த்தநாரீசுரனாகியுமென்பதொன்றாகப் பலபொருள்கொள்ளப்படும்.

° வேறாய்—சொரூபசிவமாய், பேறாயென்பதூஉம்பாடம்.

† ஒருஎழுத்து: "ஓரெழுத்தாலேயுலகெங்குந்தானாய்" என்றதிருமூலர்வாக்கின்படி. ஏகாக்ஷரம்.

பேரணியண்டமகண்டமொடாணவிபெண்ணுஞர்
வேரணிதென்கயிலைத்தலையின்ஞெருமெய்யாஞர். (கசக)

வேறு.

ஆனவக்கடவுட்சோதியவிர்திருமேனிநோக்கி
வானவர்தடக்கைகூப்பிமாலயன்வருந்திக்காணு
ஞானமார்ஞ்சுடரேயெங்கணற்றவப்பயனேயின்ரே
ரீனனுமரக்கனுவீடேறினமியாமுமென்பார். (கசஉ)

பாரியமறையினுச்சிப்பரத்துறைபரத்தின்செவ்வி
கூரியவரக்கனுற்கண்டிருவிழிகுளிராநின்ருேம்
பூரியனேனுநல்லானிருதனைப்போலவுண்டோ
வாரியினஞ்சுண்டெங்களுயிர்தந்தாய்வாழியென்ருர். (கசஙு)

வாழியவுலகேமுழியாகளுமழியாவண்ண
மாழிநஞ்சுண்டநன்றியதனினுநன்றீதையா
பாழியம்பொருப்பின்கீழ்போய்நிருதன்பாதாளம்வீழ
வூழியின்முதல்வநீயின்றேருருக்கொண்டதென்பார். (கசச)

கொண்டலிற்கரியகூற்றையொருமறைக்குழவிக்காகப்
பண்டுதைத்தருளுமன்ருேர்பதங்கடவூரிற்கண்டோ
மண்டுமெம்பொருட்டாலிந்தவரக்கனைநெரிக்கும்பாதங்
கண்டனமின்றேதென்பாற்கயிலைமாமலையிலென்பார். (கசரு)

என்றவரிறைஞ்சப்பூசித்தெண்கனுன்முகுந்தனேத்தத்
துன்றுசெங்கதிருந்திங்கட்சோதியும்விளக்கமேந்த
வன்றிரைக்கடல்சூழ்ந்தாரப்பவருந்திரிகூடவெற்பிற்
றன்றுணைத்தேவியோடுந்தம்பிரானிருந்தகாலை. (கசசு)

காலமுமநேகஞ்செல்லநிருதனுங்கடலுணின்று
கோலவெங்கண்கடன்னிற்சிலகண்கள்குளிர்பூவென்னச்
சீலமோடிடந்துவெற்பின்றிருவடிக்கிட்டுஞான
மூலமேயயர்த்தேன்முழுப்பிழைபொறுத்தியென்ருன். (கசஎ)

என்ஞெருசிரத்தைவாங்கியெரிபுரைகுஞ்சிநீக்கிக்
குன்றவில்*குருகுதள்ளிக்குடுகொவீக்கிமுன்கை
நன்றெனவுளகுதாங்கிநரம்பினங்கம்பியாக்கி
வென்றிசேர்வீணையேந்திமிழற்றினன்கீதநாதம். (கசஅ)

நாதமங்கெழுந்தபோதுநளியுவர்க்கடற்குமுண்டோ
கோதிலாவமுதமென்னக்குளிரிசையுமையாள்கேட்டுப்
பாதமீதிறைஞ்சியீசற்குணர்த்தலும்பரமனம்மை
யாதரிப்பவனையீண்டேயழைத்திபோய்நந்தியென்ருன். (கசகூ)

---

*குருகு — மூளை. ० உளகு — வீணைத்தண்டு.

நந்தியும்விடைபெற்றேகினனீர்கடற்கீழ்போய்வீழ்ந்து
இந்தியசிந்தையானைச்சிவனழைத்தனனென்றோத
வந்தரமிசையின்மேகமதிர்ந்துபெய்வதுபோல்வேத
முந்துறுவாய்களார்ப்பமுகந்தொறுங்கண்ணீர்பெய்தான். (௧௫௦)

தானுளநீளமுப்பான்யோசனைதயங்கித்தோற்ற
மானமார்பகலநான்குயோசனைவடிவத்தோடும்
ஞானமார்நந்திசொன்னநன்மொழிசெவியுட்கொண்டே
நீணிறக்கடல்விட்டோங்கிநிருதனுநிமிர்தலுற்றான். (௧௫௧)

உற்றெறிகடற்கண்மேகமுதித்தெனவெழுந்துசெவ்வி
துற்றிடுமுகமொன்பானுந்தொட்டகட்குழியுங்கையாற்
பெற்றதோர்யாழுங்கொண்டுபெருந்தகைநந்திபின்போய்ப்
புற்றரவணிந்தகோனைப்புனிதன்முன்பணிந்துநின்றான். (௧௫௨)

நின்றபோதமலனந்நிருதனைநோக்கியன்பா
லன்றரிசிரமுந்தொட்டவருவிழிச்சுடருமொன்றுட்
குன்றிறுவாளுமீளக்கொடுத்துக்*கோடீசலிங்க
மொன்றுமங்களித்துச்செல்கென்றோதத்தாழ்ந்தொல்லைமீண்டான். ()

மீண்டவன்போகும்போதுவிடுசிகைத்தலையுநூலும்
பூண்டபூந்தழையுமேந்திப்பூசிக்கவருவான்போல
நீண்டமான்மறையோனாகிநிருதன்முன்வரலும்வெற்பைக்
கீண்டவனவனையிந்தக்கிரிவருநீயாரென்றான். (௧௫௪)

யாரெனவெடுத்துக்கேட்டராவணன்வதனநோக்கிப்
பாரெனும்பரப்பிற்றெய்வப்பதியெங்கும்பணிந்திப்போது
காரணவரக்கர்வாழ்க்கைக்கடலகவிலங்கைநின்று
மாரணமுதல்வற்போற்றியருச்சிப்பான்வந்தேனென்றான். (௧௫௫)

வந்தனனெனலுமங்கவ்வளம்பதியியல்பேதென்ன
வந்தவூரரக்கர்கோமானன்னையாமொருத்தியன்றாள்
சுந்தரப்புதல்வன்கோணமலையின்கீழ்த்தொலைந்தானென்று
நைந்துநொந்துயிரும்விட்டாளென்றனர்நாட்டினென்றான். (௧௫௬)

என்னுமம்மொழிநாராசமிருபதுசெவியும்பாயத்
தன்னுயிர்பதைத்துநெஞ்சந்தளர்ந்துவீழ்ந்தெழுந்துவாய்விட்
டன்னையோவன்னையோவிவ்விலிங்கம்யார்க்களிப்பனையோ
நின்னையுமிழந்தென்னாவிநிற்குமோநிலத்திலென்றான். (௧௫௭)

---

*இது: கோடி ஈசசாந்நித்தியலிங்கம்.

என்றவணிரங்குங்காலையிலிங்கநின்கரத்திலேந்தி
நின்றிரங்குவதொண்ணாதென்றிலிங்கந்தனெடுங்கையேற்று
மன்றலங்கயிலைவெற்பின்வாமபாணிருதிதிக்கின்
வென்றியஞ்சயம்புவாகவிரிகடல்வண்ணன்வைத்தான். (௧௫௮)

வைத்தநீர்க்குமிழிமாய்ந்தானீரதாமண்ணோடேமண்
ணொத்திடுமுடலுக்கென்கொலிரங்குவையோர்பால்வாடை
மெய்த்தளிர்ச்சருகுகூட்டவதனைவெஞ்சூறையோர்பாற்
றத்துறப்பிரிக்குமாவிசரிப்புமன்னதுவேயன்றோ. (௧௫௯)

ஒவெனவரற்றின்மாண்டார்க்குறுவதோருறுதியாமோ
தாவருமுதகப்பேறுந்தானமுங்கடனும்யாவுந்
தேவர்தந்தேவன்கோனைத்திருமலையிதனிற்செய்தால்
மேவுவனன்னையந்தவும்பர்தம்வீட்டினும்பர். (௧௬௦)

உம்பரிக்கயிலைதன்னிலொருபொழுதுமையாளீசன்
வம்பவிழ்சடையைக்கையால்வகிர்தலுங்கங்கையஞ்சிக்
கம்பிதங்கொளலுநம்பன்கண்டுகைநகத்தால்வாங்கிச்
சம்புவின்றீவின்றென்பாற்சாகரத்தெற்றிவைத்தான். (௧௬௧)

எற்றியபோதுகங்கையிலங்கையுத்தரபால்வேலை
சுற்றியதிவலைபோர்ப்பத்துலங்கலுமதற்குமேலாய்
முற்றிரிகூடநாட்டிமுழையதனுப்பண்செய்து
நற்றியபெருமான்றீர்த்தநடுவுறமுளைத்துநின்றான். (௧௬௨)

நின்றவிக்கடவுட்குன்றைநினைந்தொருவலஞ்செய்வார்பொற்
குன்றினுஞ்சென்றுநூறுகொடுமுடிசூழ்வதொக்கும்
பொன்றனிவடிவுகாணப்புறத்திடு*மச்சமென்ன
வன்றரன்கயிலைக்கொப்பவமைத்ததிக்கயிலைகண்டாய். (௧௬௩)

ஆய்ந்தசீரிடையாலோடியலங்குகாவிரியிநீரும்
பாய்ந்தபிங்கலையாலோடிப்பரந்தமாவலியினீருந்
தோய்ந்தபோராழியின்கட்சுழிமுனைவடிவாய்நேர்புக்
கேய்ந்தவான்கங்கைதன்னோடிசைந்ததிக்கயிலைகண்டாய். (௧௬௪)

கண்டவிக்கயிலைச்சாரல்கலந்தநாற்றிசைநாற்காத
மண்டளிற்செனித்தபேதமருவுபல்லுயிர்களெல்லாம்
விண்டனிக்கடவுளாமிவ்வெற்பினிற்கங்கைநீர்தோய்ந்
துண்டவர்சாரூபத்தினுதிப்பதுதிண்ணந்திண்ணம். (௧௬௫)

---

* மச்சம்—உரையாணி.

திண்ணலந்தெரிலையாதின் றுஞ்செப்புவனிருதகேண்மோ
வுண்ணலங்கூரப்பூசையுமாபதிக்கீவரேனுந்
தண்ணலங்கலுழுந்தெண்ணீர்தருகுவரேனுமன்று
ரண்ணலம்பெருமான்மெய்யோடடைவதற்கையமில்லை. (௧௬௬)

இல்லையென்றில்லந்தோறுமிரந்திடுபொருள்களேனு
நல்லவைமுக்கூறாக்கிநாதனுக்கொருகூறீவார்
தொல்லையில்வினையுந்தீர்ந்துசோதிபேருலகிற்சேர்வ
ரல்லதுமுத்தியென்னுமரியவீடடையமாட்டார். (௧௬௭)

மாட்சியங்கயிலையாமிம்மலைக்குநாற்றிசைநாற்காத
மாட்சியினிலைபூநன்காயருங்கனிகந்தமாதி
காட்சியினொன்றொன்றிக்கடவுளுக்களித்துண்ணுதார்
சேட்செறிகடற்கணுமையாயவர்செனித்துவீழ்வார். (௧௬௮)

வீழ்சடைக்கடவுட்கோணவெற்பினுச்சிட்டம்வீழ்த்தல்
வாழ்தனிமடவாரோடுவசித்தல்கம்பளத்தில்வைகல்
கீழ்விடுமலசலாதிகிரியினில்விடுத்தல்செய்வா
ரேழ்பெருநரகுக்கப்பாலிருணரகவுர்வீடென்றான். (௧௬௯)

ஆனவிக்கயிலைதன்னிலானபிடேகநேரம்
போனகமருந்துநேரம்பூசனைமுடித்தநேரந்
தேனவிழ்சடையான்முன்போய்த்தெரிசனையிடுமாகாக்
கானகநிலத்திலூன்றிக்கடுநடைவலமுமாகா. (௧௭௦)

காவணம்பொய்கைபைம்பூங்காவனமரற்குச்செய்வார்
கோவிலுமதிலுஞ்செம்பொற்கோபுரமுதலசெய்வார்
மேவுமெல்லாடைசந்தம்வெயின்மணிப்பூணுமீவார்
மூவுலகிறைஞ்சத்தேவர்முடியின்மேலடியும்வைப்பார். (௧௭௧)

வைக்குமிக்கயிலைதன்னில்மாதவம்புரிந்துநோற்றல்
மிக்குமந்திரங்களுன்னல்வீய்ந்தவருயிர்க்குப்பேறு
யுய்க்குநற்பலியுண்டாக்கலுறுபசிக்குணவுபெய்தல்
புக்கொருதானம்நல்கலதன்பலன்புகலொண்ணுதால். (௧௭௨)

ஆதலாலரன்முக்கோணமெளியதன்றரக்கர்கோவே
பூதலந்தன்னிலிந்தத்தானமேபோலவுண்டோ
காதலாலின்றுன்னைகதிபெறப்பலிகன்மாதி
தீதிலாதியற்றினிங்கோர்தீர்த்தமுண்டாக்குகென்றான். (௧௭௩)

என்னலும்வருணன்றிக்கிலிராவணன்கதைகொண்டெற்றக்
கன்னியம்புனிதக்கங்கையுதித்ததுகயிலைச்சார
லன்னதுநோக்கிமாலாமருமறையவனுமின்றன்
மன்னியவன்னைசெய்தமாதவமீதுகண்டாய். (கஎ௪)

ஆயிரம்வருடங்காசியரும்பெருங்கங்கைதோயுஞ்
சேயிரும்பலனுமிந்தத்தென்கயிலாயச்சாரல்
மேயவெண்ணிலவின்வெள்ளம்விரிந்தெனவிரிந்தகங்கை
நேயமோடினிதுதோயும்பலனுமோர்நிறைகண்டாயே. (கஎ௫)

வேறு.

கண்டநின்கதையினுலுதித்தகங்கையைத்
தண்டலில்லாதபாதாளகங்கையென்
றண்டரும்புகழுகவகிலம்வாழ்த்துக
மண்டுமிப்பொருட்டிலுன்னன்னைவாழ்கவே. (கஎ௬)

வேரியகங்கையின்கரையின்மீதுநீ
பாரியபலிகள்கன்மாதிபண்ணெனக்
கூரியகுசையவன்கைக்கொடுத்துமீண்
டாரியன்வாங்கிநின்றமைப்பதாயினன். (கஎ௭)

ஆயிடைப்பிண்டமொன்ருக்கிவெந்துயர்த்
தீயிடையிராவணன்செங்கையீந்துநின்
றூயடையக்கதிசானுவூன்றியே
வாயிடைத்துதித்திவண்வைத்தியாலென்றான். (கஎ௮)

ஆலமர்கடவுளைத்துதித்தரக்கன்மண்
மேலமர்படமுழந்தாள்விளங்கவைத்
தேலமர்கதிபுகவெனதுதாயெனப்
பாலமர்பிண்டமும்பரிந்துநாட்டினன். (கஎ௯)

நாட்டியபிண்டத்தைநாரணன்கர
நீட்டியகுசையினுனெகிழ்த்திரண்டுசெய்
தீட்டியவலதுபங்கிடதுபங்குறக்
கூட்டினன்சிவதுதிக்கொள்கைகொண்டரோ. (க௮௦)

கொண்டதுபிதிர்பலியினிமுக்கோணமீ
தண்டர்நாயகற்பணிந்தரக்கசேவடி
முண்டகந்தொழுதுநின்னன்னைமுத்தியே
கண்டிடவேண்டுவான்கடிதுவாவென்றான். (க௮க)

வாவெனநிருதனுமெழுந்துமாலுடன்
சேவினன்கயிலையிற்சென்றுமுன்பணிந்
தோவியநிகருமைபங்கவுன்பத
மேவவென்னன்னையும்வேண்டினேனென்றான். (க௮௨)

என்றலுஞ்சிவபதமின்றுனன்னேக்கு
நின்றிடக்கொடுத்தனநிருதசெல்கெனக்
குன்றவில்லுடையவன்*கூறவாங்கிமுன்
சென்றமாலுடனவன்சிகரிக்கீழ்வந்தான் (கஅங)

வந்தனமறைஞனுக்கியற்றிமற்றினிச்
சிந்தனையென்னெனத்தானஞ்செய்கெனச்
சுந்தரப்பொன்முகில்சொரிதல்போல்வரு
மந்தணரியாவர்க்குமளிக்கின்றனரோ. (கஅச)

ஆனவக்கயிலையிலானும்வேதனுஞ்
சேனையோடையிருகோடிதேவரு
ஞானமாமறையவராகிநண்ணினார்
தானமீந்திராவணன்றாழ்ந்துபோற்றினான். (கஅரு)

போற்றரன்பிஞகியாம்பொற்பிலிங்கமொன்
றேற்றநால்வேதன்பூதேசலிங்கமொன்
றாற்றமாங்கேசவனுருத்திரேசமாய்ச்
சாற்றுபேரிலிங்கமொன்றவன்கைதந்தனர். (கஅசு)

தந்தமூன்றிலிங்கமுந்தகுமுக்கோணமீ
தந்தமோடமைக்கினன்னனேமுத்தியா
மந்தரப்புயவெனமறைந்துபோயின
னெந்தமாயங்கொலென்றிறைஞ்சியேத்தினான். (கஅஎ)

எத்தியுமருமறைதேடற்கெய்திடாப்
பூத்திகழ்திருவடிபுலையனென்னையுங்
காத்திடநடந்ததுகடவுளேயென
வாய்த்திடும்பத்துவாய்தோறும்வாழ்த்தினான். (கஅஅ)

வாழ்தருமக்கினிவாயுவிந்திரன்
சூழ்தருதிசைதொறுங்கயிலைச்சுற்றினுந்
தாழ்சடைப்பிஞகிபூதேசன்றாரணி
யேழ்புகழுருத்திரலிலிங்கந்தாபித்தான். (கஅகூ)

வேறு.

தானிறைஞ்சியதன்மையான், ஞானசம்பனைநண்ணினான்
கானயாழ்கொடுகெல்வியா, லூனமில்லிசையோதினான். (ககூ0)

ஓதியோதியுணர்ந்துணர்ந், தாதிசோதியநாதியின்
றேதிலாவிடையெற்கெனு, வேதராவணன்மீண்டனன். (ககூக)

மீண்டரக்கர்தம்வேந்தன்மாப், பூண்டதேர்மிசைபுக்குநீள்
காண்டருங்கடமுங்கடந், தீண்டிலங்கையுளெய்தினான். (ககூஉ)

---

* கூறப்போற்றிமுன் என்பதூஉம்பாடம்.

எய்தரக்கர்களெதிர்புகுந், தையனுற்றனனெனக்
கைகுவித்திருகாறொழ, மெய்யுவப்புடன்மேவினான். (௧௯௩)

மேவுமிக்கதைமெய்நல, மாவதொக்கவறைந்தனந்
தேவனுற்றதிருப்பதிப், பாவகத்தியல்பன்னுவாம். (௧௯௪)

பன்னுமீசர்பதிக்கதை, மன்னுநூல்வழியேமனத்
துன்னுவார்சிவலோகமீ, தன்னவானவராகுவார். (௧௯௫)

தெரிசனமுத்திச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௱௯௫.

---

## ஏழாவது

# திருநகரச்சருக்கம்.

காருலவுமுகின்முலையுமுத்தரியமணிமார்புமலர்க்கணைக்குங்
காருலவுசுரிகுழலுமொருபாகந்திருமேனிகவின்றதோன்றச்
சீருலவுநதியரவுமதிமுடிமேலொருபாகஞ்சிறக்கத்தோற்று
நீருலவுகயிலைமலைப்பெருமானைமறவாதென்னினைவுநெஞ்சும். (௧)

நெஞ்சகத்தில்வஞ்சமிலாத்தசரதன்பாற்றிருமாயனெடுவெண்பௌவத்
தஞ்சனக்குன்றெனச்சிறந்துகோசலைதன்வயிற்றுதித்தங்கயோத்திநாட்டிற்
குஞ்சரத்தின்விளையாடிச்சானகியைமணம்புரிந்துகூனிசெய்த
வஞ்சகத்திற்கைகேசிமதிமுறையால்விதிமுறையேவனத்திலேகி. (௨)

கிள்ளையெனுமொழிவனிதைச்சானகியுமிலக்குவனுங்கிளர்பூஞ்செங்காற்
பிள்ளையெனுமிளங்களையிராமனுமாய்த்தனிவனத்தேபிறங்குநாளிற்
கள்ளவிழிச்சூர்ப்பநகையிலக்குமனைவலிதுறுமக்காமந்தன்னாற்
றுள்ளிவிழமூக்கரிந்தகாரணத்தைவேறொன்றாய்ச்சொல்லிநின்றாள். (௩)

நின்றடமெய்ப்புயத்தழகுக்கிணங்குமிருதனத்தொருத்திநிமிர்பூங்காவிற்
குன்றனையாருடன்புகுதுமவளையுனக்காமென்றகுறிப்பினாலே
கன்றியெற்குச்செய்தகுறையீதெனவேநின்றுரைத்தகடும்பொய்யாந்த
வென்றிதருமிராவணனைத்தின்றுமிழவொருகூற்றம்விடுத்துமீண்டாள். (௪)

மீளாதவிரகமதிபரவுதலாலிராவணனும்விரைவினேகி
மாளாதுபொய்மானின்வனத்திடையேமாதுலனைவரவிட்டந்த

காளாதிதனிற்சென்றுசீதைதனைக்கொணர்ந்துசிறைநண்ணவைத்த
தாளாண்மைதனிலிழந்தானிராகவன்கையம்பொன்றாற்றலைகள்பத்தும். (௫)

*பத்தனமுமெத்திசையுமிலங்கைநகராசனமும்பரிதிசூழ்ந்த
முத்தலமுமாசுரிமைவிபீஷணற்குமால்கொடுக்கமுறைமையாலிவ்
வித்தகனைமதியழிந்தராவணன்றன்பிரமகத்திமேவமாழ்கிச்
சுத்தமணித்தென்கயிலைப்பெருமானையிராமனுடன்றொழுதுகண்டான். (௬)

‡கண்டகையராவணனைமுன்விரலாற்பொருதாளுங்கருத்துமற்றப்
புண்டரிகமலர்த்தாளுமொருபாகமமர்ந்தாளும்புனிதத்தாளுந்
துண்டமதிதரித்தாளுங்கோடீரமிருந்தாளுந்துலங்கித்தோன்றக்
கொண்டல்விடுமதிபோலவுளமதியுந்தெளிந்துவிழிகுளிர்ந்துநின்றான். (௭)

நின்றுகரசரணங்கள்கம்பித்துமயிர்பொடித்துநினைவுண்டாகித்
துன்றுமதியொளிகண்ட○காந்தமெனவிழித்துணைநீர்துளிக்கநோக்கிச்
சென்றபகைநிருதன்பாற்கறுத்தமலர்ச்சீபாதஞ்சிறந்துதோன்ற
வின்றடியேன்பெற்றபயனிமையோரும்பெற்றனரோவென்றான்போற்றி. ()

போற்றிதிரிபுரதகன§கலாந்தகாமததகனபுனிதாபோற்றி
போற்றிகரகாபாலிதானவசங்காரஹரபுனிதாபோற்றி
போற்றியுரகாபரணவரியதளகயிலைமலைப்புனிதாபோற்றி
போற்றிசயசயபோற்றிதிரிசூலதரபோற்றிபோற்றியென்றான். (௯)

என்றென்றுதுதித்திறைஞ்சும்விபீஷணனவ்விராமனெனுமியற்பேருள்ள
குன்றொன்றுமலர்ந்தவிருகோகனகம்போற்றியிதழ்க்குமுதம்பேணி
நின்றின்றோராஜ்யமிங்கியற்றுதுநம்வினைதீர்த்தநிமலற்கைய
னென்றென்றுன்னருள்புரிந்தாலதுபோதுமெனவவனுநல்லதென்றான். (௧௦)

நல்லமதிவைகாசிநற்குருமான்றலைதிங்கணலத்தவோரை
சொல்லியமுற்பக்கமுறுபஞ்சமியினாட்கொண்டுதொகுத்துக்கோயில்
வல்லவசிட்டனைத்தொழுதுதெய்வநாயகன்றனதுவடிவந்தீட்டி
யல்லிமலர்த்தாள்போற்றவேண்டுமெனவவண்செய்வானன்புகொண்டான். ()

கொண்டலூறுமின்போலவிராவணன்றன்காட்சியினாற்குலவுமேனி
யண்டரெல்லாம்பட்டதெழுதுந்திருவுருவைவசிட்டமுனியழகுகூரத்
தண்டவளச்சித்திரவோ†டலம்புரியவிபீஷணனுந்தாழ்ந்துள்ளன்பாற்
கண்டருளிக்கோயிலின்கணமைவித்தான்ஞானவிழிகளுழுமார்பன். (௧௨)

---

* பத்தனம்—பட்டணம். ‡ கண்டகைய—குறுக்கல்விகாரம்.
○ காந்தம்—சந்திரகாந்தம். § கலாந்தகாவென்பது, ஓசைநோக்கிக்குறுகிற்று.
† அலம்புரிதல்—கவனித்துச்செய்தல்.

பன்னகத்திற்றிருமானின்றடிபோற்றுந்தென்கயிலைப்பரமனீசர்
சன்னிதிக்குட்டிருவுருவில்யோகினியைச்சூலினியைத்தாபித்தோங்கும்
பொன்னதிக்குன்றெனும்மச்சகேச்சுரத்தைவலம்வந்துபோற்றிசெய்து
பின்னகத்திலிராமனுடன்வீடணனும்விடைகொண்டான்பெற்றியுள்ளான். ()

உள்ளமுடன்விழிகுளிர்ந்தார்சந்திரசூரியர்முனிவருரகராஞேர்
தெள்ளுமலர்கொழித்திறைஞ்சிமண்ணுலகந்தனில்விண்ணோர்தெரிசித்தற்ற
கள்ளமுடன்கொலைகளவுகட்காமங்குருநிந்தைதைவிட்டேனோர் (ர்
வள்ளலையுமடிபோற்றித்தள்ளரியதுயர்மாற்றிவணங்கிவாழ்ந்தார். * (௧௪)

வாழ்வுதருதென்கயிலைப்பெருமான்பொற்றிருக்கோயின்மவுலிபேணி
யேழுமுகிலுங்கனகமழையுமலர்மழையுமெழுந்தியற்றிநிற்பப்
பாழிவரைமுழக்கொலியுமிமையவர்கள்பரவொலியும்பயின்றுவாழ்த்தச்
சூழுநதிதிரைக்கரத்தாற்செழுந்தரளம்பொழிந்தோலச்சுருதிசெய்த. (௧௫)

சுருதிசெயுமந்நாளிலொருநாளோராயிரம்பொற்சோதிமாறுக்
குருதிபொழிமாணிக்கக்கண்ணாடிகருமைஷயயுட்கொள்வபோலப்
பருதிகுடபாற்கடலுட்புகுந்துகுணபாலுதயம்பரித்தோற்றங்
கருதிலந்தமாணிக்கக்கண்ணாடிவிடுபட்டகாட்சிபோலும். (௧௬)

காட்சிதருந்திரேதவுகஞ்சென்றுதுவாபரயுகமுங்*கடந்தவன்றுட்
சேட்கடல்சூழ்புவியனைத்துந்தொழுங்கயிலைப்பெருமான்பொற்றிகள்பூங்கஞ்ச
தாட்கருதும்வானவர்கள்மானவர்போல்வந்திறைஞ்சித்தவஞ்செய்தேகு (த்
நாட்கருதும்வடமொழியின்புராணநடையிவ்வளவுநடத்தினேமால். (௧௭)

நடமருவுதிருப்பாதர்திருப்பாதவருட்கயிலைநாதர்தோற்றந்
தொடைமருவுமெய்ஞ்ஞான°சம்பந்தன்செந்தமிழாஞ்சுருதிதன்னி
லிடமருவுதில்லைச்சிற்றம்பலமேமுதலெடுத்தவெத்தானத்துங்
கடன்மருவுமமுதமெனக்காணலாமென்பதனுட்காண்மின்காண்மின். (௧௮)

காண்மின்கடென்கைலைப்பெருமான்றன்றிருமேனிகருதுமின்கள்
பேண்மின்கள்சந்நிதியிற்புகுமின்கடொழுமின்கள்பேசுமின்கள்
கேண்மின்கள்கைலாசபுராணமெனுஞ்சிவகதையைக்கிளைகளோடும்
வாண்மின்களுய்மின்க†ளஞ்செழுத்தைமறவாதுவாழ்த்துமின்கள். (௧௯)

களபமதக்கலுழிவரையுரிசெய்தருள்கைலாயர்கமலபாதம்
புளகமுறமனதினினைபவர்நயனவுதகதுளிபொழிவபோல

* கலந்தவென்பதூஉம்பாடம்.

° மெஞ்ஞானசுந்தரன்சொல் என்பதூஉம்பாடம்.

† அஞ்செழுத்து:—மூலபஞ்சாட்சரம், தூலபஞ்சாட்சரம், சூக்குமபஞ்சாட்சரம், மாயாக்கியபஞ்சாட்சரம், பிரசாதபஞ்சாட்சரம் என வெவ்வேறுள்ளன.

விளகுகடல்பரவுதிரைவிடுதிவலையெறி*வளியொடேறுசங்க
வளையுதவுதரளநிரைசிதறிநிறைதருவளமம்மலையினுள்ள. (௨௦)

உள்ளறிவுபொடிபடுத்துந்திரிகைவெனத்திரியுமதியுளத்திருேடும்
பள்ளமுறப்பாய்புனல்போற்சஞ்சிதத்தின்வழியொழுகும்படிவந்திட்டிக்
கள்ளவினைதீர்த்துமுத்திக்கதவெவர்க்குந்திறக்குந்தாள்கங்கைவேணிப்
பிள்ளைமதிமுடித்ததிருக்கைலையான்றாள்களெனப்பேசலாமே. (௨௧)

oமேதினியின்மச்சேந்தியத்துண்மாசூதமுனிவிதித்தவிந்த
வாதிபுராணக்கதையுமன்றியும்பின்னடந்தகதையனேகமுண்டா
னீதியினக்கதைகருதித்தென்கைலைத்திருப்பதியினிலைமையெல்லா
மோதுவனிச்செந்தமிழினூற்றொடையானடைமுறைசேருலகமீதே. (௨௨)

தேவரினம்பரவுசிவலிங்கமதுபூசிப்பத்தினமும்வெவ்வே
றுவலினூற்றுபித்தங்காசமனங்கொண்டபிறகமுதுசெய்வா
னுவலவம்பெருந்தீவிற்கங்கைநதிக்கரையிருந்துஞாலங்காக்குங்
காவலவன்பரிதிகுலத்தொருதலைவன்மனுநீதிகண்டசோழன். (௨௩)

சோணாடுமுதலியதென்மதுரைவடமதுரையெனச்சொல்லுநாட்டிற்
சாணும்பிறற்கமையாநிலமடந்தைதனைவரைந்ததகுதியாலு
மாணுருந்திறத்தாலுமபையனெனும்பெயராலுமையனென்றுங்
கோணாதகருணையினாலன்னையென்றும்பல்லுயிர்க்குங்கூறலாமே. (௨௪)

கூறுநவகண்டத்துச்சிவதானமனேகம்பொற்கோயிலாக்கிப்
பேறுதரமுடிதரித்தவராமதேவனெனும்பெரும்போர்வேந்தன்
மாறில்புராணங்கேட்குமொருநாளிற்புரோகிதன்மெய்வருத்தமாகி
வீறபையனவைக்குத்தான்வாராதுமகனைவரவிடுத்தான்மேலோன். (௨௫)

வேறு

†மேலமைத்தமச்சகேச்சுரக்கதையைமேலேட்டி
னூலமைத்தங்கடையாளநுவற்சிசெய்துபடியாமல்
ஞாலமுற்றுஞ்சிவதானக்கதைதாதைநவின்றதற்குட்
கோலமுற்றகுறையென்றுகுமானதுபடித்தானே. (௨௬)

படித்தபொழுதிருசெவியும்பாட்டுதவுஞ்சுதையமுதங்
குடிக்குமிருநாவாகிக்குடிகொண்டதெனக்கேட்டு
முடித்தலைநேர்கம்பித்துமுகமலர்ந்துமயிர்ப்புறங்கள்
பொடித்துளமுங்கனிந்துருகிப்புளகமெறிந்துரைசெய்வான். (௨௭)

* துளியொடேறுசங்கம் என்பதூஉம்பாடம்.

o மேதினியின்மச்சகேச்சுரமென்னச் சூதமுனிவிதந்தவிங்ஙன் என்பதூஉம்பாடம்.

† மேலமச்சேந்தியபுராணக்கதையென்பதூஉம்பாடம்.

செய்தவத்தின் வடகயிலை தன்னினுமித் தென்கயிலை
யையனுக்குப் பதியான வருங்கதையைச் சொல்லாமற்
பொய்தனைத்தான் பொருளாக்கும் புரோகிதன்பானீ மகவாய்க்
கைதவத்தாலிப்பிறப்பெறுங் கதிர்த்தாளம் போல்வாயே. (௨௮)

வாயிருந்த சதுமறையின் வழக்குதவு *சீவனியும்
பேயிருந்த காட்டிருந்தும் பெருந்துயரந் தீர்த்தருளும்
வேயிருந்த மணியரசர் விடுகிரண முடியிருக்கு
மாயிலவன் பானீயுமவதரித்தாயரனருளால். (௨௯)

அரவணிந்த தென்கயிலையமலேசன் கதைநீயுங்
கரவணிந்து மொழியாமற் கட்டுரை செய்யெமக்கென்றும்
பரவணியா யுயிர்க்குதவும் பண்டிதனீயென விளம்பித்
o திரவணமுமிட்டிருத்திச் செவி தாழ்த்தான் மனுவேந்தன். (௩௦)

வேந்தனுக்கு மனங்குளிர்ந்து வியப்புவர வேதியன்மச்
சேந்தியமாம் புராணகதை தேர்ந்துரைப்பத் திறலரசன்
காந்தமுங் கூருசியும் போற்கருத்துற்றானவன் செவிக்குட்
போந்தவமுதிதுவல்லாற் புறத்தமுதஞ் செல்லாதே. (௩௧)

ஆதவனைக் கண்டவிருளது போலவஞ்ஞானஞ்
சேதமுறு மனத்தரசன் றென்கயிலைப் பெருமான்மேற்
காதலினால் மந்திரியைக் கருத்துருகியழைத்தருளி
யேதமிலாத் திரிகோணமிறைஞ்சுதும் போயினிதென்றான். (௩௨)

என்றதிருமொழி கேட்ட மந்திரியுமிது மிகவு
நன்றெனலு மனுவேந்தனுடு மரசும்படையும்
துன்றுபுதல்வருக்களித்துத் தொகுதிபலவும்நிறுத்தி
யன்றுமரக்கலம் புகுவானலைகடனீர்க் கரைவந்தான். (௩௩)

வந்தரசன் மந்திரியை வருகெனலுமவனும்போ
யந்தவரன்றிரிகோணத்தாலயத்துக் கனேகசிலை
சுந்தரவாரிக் கரையிற்றொகுத்து மரக்கலத்தேற்றிச்
சிந்துவின்பால் விரைந்தேகச் செய்வாரை நிறுவித்தான். (௩௪)

நிறுத்துமமைச்சனுந்தானு நெடியமரக்கலத்தேறிப்
புறத்துமகத்துஞ் சேனைபரிசனங்கள் புடைசூழச்
செறித்தகரையும்மனமுந் ‡ திமிலிடைப் பூங்காவனத்துட்
குறித்தமலன் பதநோக்கிக் குவித்தகரத்துடனிருந்தான். (௩௫)

திருந்துவடகயிலையின் முன்சேடன் மணிப்படம்விரித்துப்
பொருந்தியபேராசையினும் பூண்டலைநீர்ப்புறம் வழியாய்

---

* சீவனி—சஞ்சீவி. o திரவணம்—திரவியம்.

‡ திமில்—மரக்கலம்-வேங்கைமரம்.

விரிந்தகதிர்த்தென்கயிலைமிசைநோக்கிவருவதென
வருந்*தருணப்பாய்விரித்தங்கலங்குகலம்பலவிடுத்தார். (௫௬)

0விடுத்தவறுபதமுடைத்தாய்மென்கமலமீதோடி
யெடுத்தவிசைக்காமரங்களிசைத்துப்பாய்தலைக்கொளலா
னெடுத்தமுடித்தென்கயிலைநிமலர்பதமலர்தேடித்
தொடுத்தெழுந்தவளியினம்போற்றொடருமரக்கலங்களெல்லாம். (௫௭)

கலனோடத்திரையோடுங்கடலோட்டங்கரைகண்டு
நிலனோடுந்திசையோடுநிலவெறிக்குங்குடைவேந்தன்
புலனோடுவிழிமலர்ந்து†பூதேசன்றென்கயிலைத்
தலனோடுமனந்தொடரத்தனதுகரங்கூப்பிநின்றான். (௫௮)

நின்றிருந்தகலம்விடுத்துநெடியகரைப்புறத்திறங்கிக்
குன்றிருந்தபுயம்புளகித்தெதிரிறைஞ்சிக்கூறுவா
னன்றிருந்தீர்வடகயிலைதென்கயிலையடியேன்மு
னின்றிருந்தீரென்னுளத்திலிருந்தவருநீர்தாமே. (௫௯)

நீர்தாங்குபகீரதியுநிலந்தாங்கு§விடதரமுங்
கூர்தாங்குமிளம்பிறையுங்குடிதாங்குமுடிதாங்கி
வார்தாங்குமுலைத்தரளவடந்தாங்குமுமையொருபாற்
சீர்தாங்குந்தென்கயிலைத்திருப்பதியென்றவப்பேறே. (௬0)

தவப்பேறுநன்பேறுந்தனப்பேறுமில்லாதே
னவப்பேறாய்த்திரியாமலறிந்துதொழப்பெறும்பேறே
சிவப்பேறுமிதழமுதச்சிறப்பேறுமொழிவனிதை
யுவப்பேறுந்திருமேனியுடன்பிரியாப்பெருமானே. (௬௧)

மானிருக்குமிடத்தோடும்வலத்தோடுங்கயிலையினீர்
கூனிருக்குமதிமுடித்துக்குடியிருப்பதறியாம
லூனிருக்கவுயிரிருக்கவுரையிருக்கநாவிருக்க
யானிருக்கவின்றளவுமேத்தாமலிருந்தேனே. (௬௨)

தேனேயுநின்மலர்த்தாடெரிசித்தேனெனதுவினை
தானேவிட்டன்றதெனத்தபதிமுகமதுநோக்கி
வானேயுந்திருமலைமேன்மணிக்கோயிலியற்றுகென்று
கானேயுந்தாதகித்தார்க்காவலவனருள்புரிந்தான். (௬௩)

புரித்தவழற்பொறிமேனிப்புண்டரிகம்பண்டுபிடித்
தரித்தவற்குத்திருக்கோயி?லுபானதி தூபியுட

* தருணம்—புதுமை. 0 இந்தக்கவி வண்டுக்குந்தோணிக்குஞ்சிலேடை.

† பூதேசன்—சிவபெருமான். § விடதரம்—பாம்பு. நிலந்தாங்கும் என்றஅ
டைமொழியாற் குண்டலிசத்தியென்க.

? உபானம்—கோபுரத்தின்கீழ்ச்சித்திரவரி.

னிருத்தியருட்கயிலேசற்கியற்பூசைபுரிவித்துத்
திருத்தியபிணுசமனஞ்செய்தமுதுசெய்திருந்தான். (௪௪)

செய்தவுத்திநெறிதருமச்சேர்ந்தியமாம்புராணமதைக்
கைதவத்தாற்கோயிலெங்குமெழுதியந்தக்கதைமிகுதி
மெய்தவத்தாற்பொற்றகட்டின்மேய்ந்தெழுதியாய்ந்தமையா
லையனுக்குப்பொற்கோயிலாகவுஞ்செய்தினிதிருந்தான். (௪௫)

இருந்தபுகழ்மநுவேந்தனினத்தோடமந்திரியோடும்
விரிந்தகடற்றரங்கமெறிவெற்பினடிக்கீழ்வந்து
தெரிந்ததொருகிணறுகண்டுசெம்பொனதற்கிடைகுவித்துப்
புரிந்தபெருங்காவல்செய்துபுனிதனுக்கிப்பொன்னென்றான். (௪௬)

என்றனையதிருமேனியிராமதேவனுமகிழ்ந்து
நின்றான்பால்விடைகொண்டுநெடியகடல்கடந்தேகக்
கன்றமைத்தகரத்திருமால்கமலனிமையோர்முனிவர்
குன்றமுற்றபெருமானைக்குரைகழற்காறொழுதனரே. (௪௭)

தொழுதுவரப்பரமன்னனிருட்கவசஞ்சூழ்ந்தெதிர்ந்த
பொழுதுகவசமுமகற்றிப்புகுதுமவனையுந்துரந்து
பழுதில்கலிமறுமன்னன்படியாளுந்திகிரியென
வெழுதரியபரிதிகிழக்கெழுந்ததெனவிருந்தனனே. (௪௮)

இருந்தவஞ்செய்மநுவேந்தனிரணியஞ்சேர்கிணற்றருகே
பொருந்தியதாதகியொன்றுபொலிந்ததவன்செய்தவத்தாற்
றிருந்தியபூதமுமதன்கீழ்ச்சிறந்ததந்தச்செம்பியர்கோ
னருந்தனையற்கரசளித்துப்பாகதிபோயுடைந்தனனே. (௪௯)

அடைந்தவர்நாளிலங்கைவலமாகவந்தவொருமறையோன்
கிடந்தசெம்பொற்கிணற்றருகேதுயிலுதலுங்கிளர்பூத
னடந்தவனையெழுப்பியுங்கணுவலந்தீவுக்கரசன்
கடந்துகடனீங்கிமுன்னிக்கயிலைமலைக்கெய்தினனல். (௫0)

எய்தியாற்காலயமுமியற்றியவற்கநேகம்பொன்
பெய்துகிணற்றிடைமூடிப்பெருங்காவலெனைநிறுத்தி
வையகத்திற்போந்துகலிவருதலின்முத்தியையடைந்தா
னையவவன்புதல்வனுக்கீதறைகவெனவறைந்ததுவே. (௫௧)

அதுமொழிதன்செவிப்படலுமருமறையோன்றனியெழுந்து
மூதுகடலுங்கடந்தமுடிமன்னன்றனிக்குமரன்
விதிமுறைசெய்குளக்கோட்டனுடன்மறையோன்விளம்பலவன்
பதியாசுதன்மகற்குப்பாலித்திப்பால்வந்தான். (௫௨)

வந்துகடல்கடந்துகரைமருங்கணுகித்தென்கயிலை
யிந்துமுடிப்பெருமானைச்சந்நிதிசென்றெதிர்தொழுது
புந்திநெகிழ்ந்துருகிமயிர்ப்புறம்பொடிப்பவிருவிழியுஞ்
சிந்துபுனல்பெரிதொழுகச்சிவாயநமவெனப்பணிந்தான். (௫௩)

தானேதன்றனக்கிணையாந்தனிமுதல்வியருகிருப்பத்
தேனேயுமலர்வனஞ்சூழ்தென்கயிலைமீதிருக்கு
மானேயுங்கரத்தவனைவல்வினையின்குறும்பறுப்ப
யானேயமுடனிறைஞ்சவெத்தவஞ்செய்தேனென்றான். (௫௪)

தேனிலவும்பொன்னிதழிச்செழுமலரும்பகீரதியுங்
கூனிலவுமுடித்தசடைக்கோணமலைப்பெருமானை
வானுலகுமண்ணுலகும்வந்துதொழத்திருப்பணிக
டானுலகிற்செயநினைந்துதமனியப்பொற்கிணறுற்றான். (௫௫)

உற்றவனைப்பெரும்பூதமெதிரிறைஞ்சியுனைப்பயந்த
கொற்றவன்றன்செப்பேடுங்குறியுமிதுவெனக்கொடுப்பத்
துற்றதனையெடுத்ததனுக்கிருமடங்குசுடர்விடும்பொன்
முற்றுதிருப்பணிக்களித்தான்றன்கரத்தால்முடிவேந்தன். (௫௬)

வேந்தனுமந்திரியும்போய்விமலர்திருப்பணிக்காக
வாய்ந்தமலைமுறித்தசிலைவரும்படிக்குவழிவேண்டிக்
காய்ந்தவரக்கன்றலைநாளுடைத்தவழிக்கடலடைத்துப்
போந்தபடிகட்டியதன்புறமேறித்தெரிசித்தான். (௫௭)

தெரிசித்துக்கலியுகநாட்சென்றமறைவானவரொன்
றொருசித்தப்பாசுபதமறையோரையுரவோனு
*மரிசித்தமுங்காணவருங்காரணாகமத்தின்
புரிசித்தம்பூண்டவரைப்பூசனைசெய்துய்மினென்றான். (௫௮)

என்றுமகாமண்டபமுமெழின்முதன்மைமண்டபமுங்
குன்றனையகோபுரமுங்கோயில்பலசாலைகளு
நன்றிபெறவமைத்தருளிநாயகிக்குப்பொற்கோயில்
வென்றிதரும்படிசமைக்கவேண்டுமெனவுரைசெய்தான். (௫௯)

உரைசெய்தபடிதவறாதுயர்ந்தமதிகுலத்தவர்பொன்
வரைசெய்ததெனக்கோயின்மண்டபஞ்சூழ்மதில்செய்தார்
oபிரைசெய்தவமுதமொழிப்பிடியன்னமென்னடையைத்
தரைசெய்தபுண்ணியம்போற்றாபித்தான்மநுவேந்தன். (௬௦)

தன்னுண்மைக்குவமையில்லாத்தனிவேந்தன்வடகயிலை
மின்னேனுங்குருவடெனத்தென்கயிலைக்கும்வேண்டுமெனப்

* பாசித்தானே வணங்கிப்பகர்கிரணாகமத்தின்வழி என்பதூஉம்பாடம்.
o பிரை—அரைப்பங்கு.

பொன்னாருஞ்சிகரமும்பொற்கோபுரமும்பொருத்தியதிற்
பன்னாகங்கவித்ததெனமவுலிகளும்பலசெய்தான். (௬௧)

செய்தபடிக்காயிரம்பொன்றென்கயிலைமீதிருக்கு
மையர்தமக்களித்தருளியலங்காரநிலங்கொண்டு
வையகமெண்ணெயில்சூழமணிக்கோயிலியற்றியதிற்
றுய்யதிருமாயனையுந்தாபித்தான்றொடைமார்பன். (௬௨)

தொடைபுனைவேதியர்முதலாந்தொல்லோர்க்குமெல்லோர்க்கும்
படியிலவினைப்பவந்தீர்க்கும்படிபாவநாசமென்னுந்
தடமதுகண்டதற்கருகேதனிமுதல்வனீராடு
மிடமருவுமண்டபமுமியற்றுவித்தான்செயதருமன். (௬௩)

தருமநெறிதவறாததனிவேந்தன்சிவபூசைக்
கருமநெறிபுரிவதற்குங்கலைமறையோர்தவமுனிவர்
வருபவர்வந்தாறுதற்குந்தனக்குமொருமாளிகையாய்ப்
பெருமதியந்தவழ்மாடகூடங்கள்பெரிதமைத்தான். (௬௪)

அமையாததரங்கமெறிந்தார்ப்பரிக்குங்குணகடலுஞ்
சமையாவக்குடகடலுஞ்சந்திப்பப்பந்தித்துச்
சிமையாதிமலைநிறுத்துஞ்செய்கையெனமதினிறுத்தி
யெமையாளுங்கயிலாயற்கெவ்வகையுஞ்செய்தமைத்தான். (௬௫)

அமையனையதிருத்தோளினணங்குபிடியன்னநடை
யுமையையுமைநாயகனையொளிபெறவேதொழுதேத்திச்
சமையமுதலாகியமெய்ச்சைவநெறிதழைத்தோங்கச்
சிமையமுடித்தென்கயிலைத்திருமலைக்கீழினிதிருந்தான். (௬௬)

இனிதிருக்குமன்னாளிலென்னாளுந்திருப்பணிகள்
நனிதிருத்தித்தென்கயிலைநன்னகருந்திருத்துவித்துக்
கனிதிருத்துமலர்க்காவுங்கடிதிருத்துமணிமறுகும்
பனிதிருத்தும்புனல்வாவிபஃறடமும்பயில்வித்தான். (௬௭)

வித்தகஞ்சேர்மலர்ச்சோலைமென்பீலிப்பசுங்கலப
மத்தர்திருக்கோபுரந்தன்னணித்தலையின்மணிச்சூடு
வைத்தகயிலையின்வாயில்வாய்புரிசைவயிறிரண்டு
பைத்தலையகடல்சிறகாய்ப்பயிலுமலைமயில்போலும். (௬௮)

மயிலினங்கணடமாடமதுகரங்கள்சுருதிசெய்யக்
குயிலினங்கள்குழலிசைப்பக்குளிர்கவரி*கமுகசைப்பப்
பயிலிதழிபொன்னளிக்கப்பசுஞ்சோலைதலைதுளக்கக்
கயிலைமலையிருந்தவளங்கவிதையுரைக்கடங்குமதோ. (௬௯)

---

* கரும்பசைப்பவென்பதூஉம்பாடம்.

உரைத்தவளக்கோடுலவவோதுகழுத்தாரமுற
நிரைத்துலவுகாலசைப்பநிறையேரிதனியுலவ
வரைக்கலைவெண்மதியுடையாரனுதினமுமிருப்பமறை
யிரைத்தபெருங்கோணகரிடமெனவுரைசெயலாம். (எ0)

உரைவிரிந்தமறையோர்களோமவனன்முன்னிருத்தி
நிரைவிரிந்தகனன்மீதுநிறைத்தபலவாகுதியால்
விரைவிரிந்தமலர்க்காவின்மீதெழுந்தபுகைப்படலங்
கரைவிரிந்தகடலருந்தக்கனம்விரிந்ததெனலாமே. (எக)

ஆமேயவிலைதேடியண்ணுந்துபலகூடிக்
காமேவுமலர்ப்புன்னைக்கடிநிழல்சேரன்னேரம்
பூமேவுமதிலொருவன்புனிதனுளனதனுலுங்
கோமேதகமாலுங்குருந்துமடவாருமொக்கும். (எஉ)

குடைத்தலையமலர்க்கோங்கின்குளிர்தாதையறுதாளா
லுடைத்தவளியினஞ்சோலையூடெழுந்துதிரிவதெல்லாங்
கடைத்தலையோர்தமைநீக்கிக்காவலர்*களலர்ந்தவர்பால்
விடுத்தபலதூதரெழும்விரைவெனவுமுரைசெயலாம். (எஙு)

செய்யவிதழ்ச்செங்குவளைச்சிறுதாளின்மீதுயர்ந்த
துய்யமலர்க்காயாவிற்சூழ்0தோன்றியலர்சொரிதேன்
பையரவிற்றுயின்மாயன்பங்கயச்செங்கரமதனு
னெய்பொழியுந்தழல்வேள்விநிகர்க்குமலர்க்காவினமே. (எச)

இனமினமுன்செலும்பறவையிருங்கனியில்விழுந்தாற்றத்
தனதனவென்றளிபாடத்தமரமறுத்தலைத்தபடி
கனகமுடிமநுவேந்தன்கடற்சேனைப்பலகுலமும்
வினவுமெதிர்மொழிபோலவிரவுமிளம்பூங்காவே. (எரு)

பூங்கதலிகரும்பினஞ்சூழ்பொன்மாடத்திலையவெயி
ருங்கியவன்சிறைகோதித்தலைமடங்கும்பெடையன்னம்
பாங்கிருந்தவெகினமணம்பாவித்ததென்றெண்ணி
மாங்கனியின்சாறெறிந்துமஞ்சள்விளையாடுமெந்தி. (எசு)

மந்திரிதன்முகங்கோடமலர்ந்தமுகவரசனிடைப்
புந்திமகிழ்கவிபாடிப்புகும்புலவரெனலாமால்
முந்துமலர்முகந்தோற்றுமுதுபலவிற்செல்லாது
கந்தமலர்முகங்காட்டுங்கமுகிலளிசெல்வனவே. (எஎ)

*கண்ணலர்ந்தவரென்பதூஉம்பாடம். 0தோன்றி—செங்காந்தள்.

வேந்தருங்காவலிடவேண்டேம்யாங்காமனென்றுந்
தேய்ந்தவிளம்பிறைமுடித்ததிருவடிக்காமலரென்றும்
வாய்ந்தகுயிற்சின்னமுந்தண்மலர்ப்படையும்வைத்தனுட்
போந்துபெருஞ்சோலையெங்கும்புரந்துமதன்காப்பிடுவன். (௭௮)

வேறு.

காப்பிட்டலர்வாயளியினங்கள்களிகொண்டசோகின்மலர்பாய
*மீப்பட்டழல்மேற்பாய்ந்ததெனவெடிக்கும்பலாவின்சுளைத்தேனும்
பூப்பிட்டொழுகும்பசுந்தேனும்பொழிந்துபதைக்கும்வானரங்கள்
கூப்பிட்டயலார்க்குரைப்பவர்போற்குயிலும்மயிலுங்குரல்காட்டும். (௭௯)

காட்டுங்கதலிக்கொழுங்கனியுங்கமுகின்கனியுமாங்கனியுங்
கோட்டுப்பலவின்சுளைக்கனியுங்கூடிக்கறியின்கொடிவீழ்ந்து
நாட்டுங்கரும்பின்பணையொடித்துநறுநீர்வாவிதொறுஞ்சிதறித்
தோட்டின்கமலமலர்ப்பொகுட்டுத்துயில்வண்டெழுப்புந்திருநாடு. (௮0)

நாடுங்குழக்கன்றினைநினைந்துநடந்துகுறுந்தாட்கருமேதி
யோடுங்கழியிற்சுரந்துமுலையொழுகும்பாலிற்புதுவெள்ளம்
மேடுங்குவளைக்குழியினமும்விரவிப்பாயக்கயல்குதிகொண்
டாடுமுயரங்கண்டுவெருண்டகலுமுகிலும்வானெல்லாம். (௮௧)

வானுமிளிருமுடுவினமும்மதியும்போலப்புதியதளிர்க்
கானுமலரும்பளிக்கறையுங்கலந்துவசந்தப்பசுந்தென்ற
றேனுந்தோடும்புளினமுறச்சிதறுஞ்செவ்வித்திரிகூடந்
தானுமருச்சித்தடியிறைஞ்சுந்தகைமைத்தென்னவிளங்கியதே. (௮௨)

விளங்குமிளங்காவனஞ்சூழ்ந்துவெயிலின்கிரணம்படாதபுவி
தளங்கும்படிவெண்ணிலவெறிக்குந்தனிவெண்குடையான்மனுவேந்தன்
களங்கமடியார்க்கிலையாக்குங்கயிலைப்பெருமானடிபணிந்தும்
வளங்கொளிலிங்கந்தானுமொன்றுவைத்துப்பணியுமன்னாளில். (௮௩)

அன்னாணன்னாளென்னாளுமாகப்புவனிவளஞ்சிறப்பப்
பொன்னாரிதழிக்கயிலாயர்பூசைக்குதவும்பொருட்டாக
வின்னாடனைத்தும்விளைவதற்குக்குளமொன்றியற்றியிருப்பமென
மன்னாவதுநன்றெனப்பலரும்வழுத்தமன்னன்கடிதெழுந்தான். (௮௪)

எழுந்தானதற்காமிடநோக்கியெறிநீர்நதிபோய்மலைதாக்குங்
கொழுந்தாமனேகங்காதவழிகோலிப்படிக்கற்களைதிருத்தி
விழுந்தாரையினீர்மதகினுக்குவிடுத்தல்பிடித்தலுறப்பியற்றிச்
செழுந்தாரையினீர்க்குளங்கயிலைச்சிவனுற்கெனக்கல்லெழுதிவைத்தான்

---

*மீப்பட்டன்னமேற்பாய்ந்துவெடிக்குமென்பதூஉம்பாடம்.

எழுதுமுழவைக்கொடிபடருமிமையம்பொதியமுவிட்ட
முழுதுந்தனதுகுடைநிழற்றுமுதல்வன்கயிலைப்பதிமீண்டு
பொழுதங்கவமேபோகாமற்புனிதன்கயிலைப்பெருமானைத்
தொழுதும்புகழ்ந்தும்புராணகதைசொற்றுங்கற்றுமினிதிருந்தான் (அசு)

வேறு.

திருந்துமவனிவ்வண்ணநெடுநாள்வாழ்ந்து ०திருப்புதல்வற்காசளித்துச் சிவன்பொற்பாதத், தருந்துணையேதுணையெனச்சென்றடைந்தபின்னரவன் மரபிலொருநிருபனறிவிலாமை, பொருந்தியனுராசபுரியென்னும்பேரூர்புகுந் துகயிலையைமறந்துபுவனியாண்டு, மருந்தனையசிவசமயந்தவறிப்புத்தமார்க்க மெனும்பெரும்பாவவழியிற்புக்கான். (அஎ)

கானிருந்ததாதகித்தார்கமழுமார்பன் *கயவாகுவென்னுமந்தக்கழற்கால்வே ந்தன், முனிருந்தநெறியடைவேயிலங்கையெங்குந்தனிக்குடைக்கீழ்ப்புரக்குமந் தத்தகைமைநோக்கி, ?வானிருந்துவருந்தவளவரசுதன்னைமணியிருந்தபொற் காத்தால்வாங்கிவைத்துத், தேனிருந்தசிறீசங்கபோதியென்னுந்திருநாமந்தரித் தரசுசெய்யுங்காலம். (அஅ)

காலனைமுன்னுதைத்தகறைக்கண்டர்கோயிற்கயிலைமலைக்கெதிர் ‡மலை யாக்கணையுண்டாக்கிச், சீலமிகும்புத்தரைச்சித்திரித்துவாணட் சிவனடியார்பூ வெடுத்துச்செல்லுங்காலைப், பாலருந்தாச்சீவகர்கள்பலருங்கூடிப்பறிப்பதனுற் §பாசுபதர்பலரும்போந்து, வேலைதனிலவரைவிழவிட்டாரந்தவெம்மொழியை வேந்தனுக்குவிளம்பினரே. (அகூ)

விளம்புமொழியினையுணர்ந்துவேந்தன்பொங்கி விழியிரண்டுங்கனல்பொ ழியவெகுண்டுவேணிக், களங்கமதிக்காபாலிகயிலையெங்கோன் †கணையாகவ குப்பனெனக்கருத்திலுன்னித், துளங்கலிலாச்சதுரங்கபடையினேடுந்தொட ர்தலுநங்கயிலைமலைச்சோதிநோக்கி, யுளங்கனிவில்லாவரசன்கண்ணிற்சோதி யொளியிருளத்திருவுளத்திலுன்னிநின்றன். (கூ०)

நின்றகலாக்கண்ணிருளநிருபநெஞ்சுநினைவுமறந்தவசமுறநேரங்கோணை க், குன்றிறைறயோனொருமறையோன்போன்முன்னெய்திக்கொடுத்திடவத்

---

० புதல்வன்—சிங்ககுமாரன்; இவன்முயிலங்கையையாண்டமனுநேயக யவாகுவின்சுவிகாரபுத்திரியான ஆடகசௌந்தரி.

*கயவாகு—சிலப்பதிகாரத்திற்கூறியவிலங்கைநாட்டரசன்.

? வானிருந்துவருந்தவளவரசு—இந்திரனலனுப்பியவெள்ளரசு. இதன் விரிவு திரிகோணசலபுராணம் கயவாகுப்படலம் ௯-ம் செய்யுளாலறியப்படும்.

‡மலையிற்கணமுண்டாக்கிஎன்பதூஉம்பாடம்.

§பாசுபதர்—அகப்புறச்சமயிகள்; சிவபெருமான்றிருநீறுஞ்சடைமுடியுந் தரித்தவராயருள்செய்வாரென்பதிவர்கொள்கை.

† கணை—விகாரை; புத்தாலயம்.

திருநீற்றைக்கோமான்வாங்கித், தன்றகையநெறிபோர்த்துசிவசிவாயசங்கரவெ
ன்றுரைத்துநுதறரித்தகாலே, யன்றருகுநின்றபுத்தர்பலருநாணித்தறிவழிய
வொருவிழிநன்ருயதம்மா. (௬௧)

அம்பரத்திற்கதிரவியுதிக்குங்காலேயலர்மதியமழுங்குதல்போலரியநாட
டஞ், செம்பதுமமுகத்தொன்றுவிளங்கவொன்றுசெறியிருளாய்நின்றதுசெ
ய்வீகமென்று,கும்பிடுதல்செய்தாஞர்திருவெண்ணீற்றைக்குழைத்திடுதல்செ
ய்தெவருங்கொண்மினென்ருன், பம்புபுனல்வளநாட்டிற்பாயமுன்ஞட்பார்த்
திபன்செய்குளநோக்கிப்பரவாநின்ருன். (௬௨)

நோக்கியதன்கண்டமைத்தகாரணத்தாஞவல்பெயருங்கண்டமையென்ற
தற்குநாட்டி,. யாக்கினனித்திருக்குளமுநகருநாடுமரஞர்க்குக்குளக்கோடன
வன்முன்செய்த, பாக்கியநன்றெனமன்னனுவந்தானந்தப்பாசுபதர்பவுத்தரை
க்கொல்பயத்தாலாவி, நீக்கியெழிற்றிரிகோணைப்பெருமான்மேனிநிருமலத்தி
ஞெருமைபெறீஇநெறியிற்சூழ்ந்தார். (௬௩)

சூழ்ந்திடுமெக்கயிலையிருபுறமும்வேலைசுழித்தெறிந்தவலைமலையிற்சுற்றுமு
ற்றும், வீழ்ந்தவர்தமுடலெடுத்துக்கடவுட்டீர்த்தம்விரவுதலுமன்னிலைமைவி
னவிவேந்த, ஞழ்ந்தபெருந்துயராகியுருகிமெய்சோர்ந்தரகரவென்றழுதரற்றி
யரவமோடித், தாழ்ந்தசடைமுடியிறைசந்நிதிபோய்வீழ்ந்தான்சங்கரன்மற்றொ
ருகண்ஞுந்தந்தானங்கண். (௬௪)

கண்ணிரண்டுமொருபரமஞானக்கண்ணுங் கயவாகுபெற்றுபயகர
ங்கள்கூப்பி, §யெண்ணிரண்டுகலைமேலு†மிரண்டாயொன்ருயிருந்தபராபரப்
பொருளையிறைஞ்சியேத்தி, யண்ணலருச்சனைக்கெவரென்றயருங்காலத்தலே
கடலைக்கடந்திருவரந்தணாளர், நண்ணினரென்றனரவரைக்கொணர்மினென்
ருஞதனருச்சனைக்கிவரேநல்லோரென்ருன். (௬௫)

என்றுமரனருச்சனைக்குமிக்கோர்நீரொன்றெறழிற்பதியின்முதன்மை*யி
ருவர்க்குமீந்து, வென்றிதருநமதுகுலக்குரவோராகிவிளங்குமெனக்குருவரி
சைமிகவுநல்கிக், கன்றுலவுவெருகனதிதருப்பையாறுகரம்பகநீர்க்கடலளவுங்க
ணித்தவெல்லை, துன்றுதிசைநான்குமரன்றனக்கேயென்னச்சொல்லியவன்
கல்லெழுதித்துலங்கவைத்தான். (௬௬)

வைத்தொருவர்புதைத்தநிதிமுழுதுங்கோணமலை யரற்கேயுரிமையிந்தவ
ளநாட்டுள்ள, கத்துகடல்வளமுமலைவளமுமற்றைக்கரைவளமுங்கழிவளங்கா

§எண்ணிரண்டுகலை—சோடசகலை; அவை:—மேதாகலை, அர்ச்சீசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, வியோமரூபினிகலை, அநந்தைகலை, அநாதைகலை, அநாசிருதைகலை, சமனுகலை, உன்மனுகலைஎன்பன.

† இரண்டு—சத்திசிவம். ஒன்று-சுத்தசிவம்.

* இருவர்பெயர்: வேதநாயகமுதன்மைக்குருக்கள், சைவநாயகமுதன்மைக்குருக்கள்.

ன்வளமுமெழில்லாம், பத்தினிமெட்டுங்கயிலைப்பாற்குமிக்கபங்கிரண்டுமுங்களுக்குப்பகுதியாமென், றெத்திசையும்புகழவநுராசவேந்தனெழுதியசெப்பேடவர்க்கீந்தின்பமாக. (௯௭)

ஆகமநூனெறிமுறையேயுதயமுச்சியத்தமயமாம்நிறையுமத்தயாம, மோகைவருநாற்குலமுமினிமைகூரவுவமையில்லாவரன்றனக்குமுவகைசேர, மாகவளப்புழைப்பணைக்கைமுக்கணல்வாய்மதகளிற்றைமுன்பூசைவழுத்தியந்த, நாகமதிநதிமுடித்தகயிலைநாதனையந்தசிவார்ச்சனைநியதிநடத்துவித்தான். (௯௮)

நடனவிதந்தருபாதநளினத்தாற்குநமனையுதைத்தெமையாளநயந்தநீலக், கொடியிடதுபுறமாகப்படருமேனிக்கோணமலைநாதருக்குங்கொண்டல்போலுங், கடகலுழிக்கரிமுகன்முன்போகக்காளக்கடலொலிப்பப் பங்குனியுத்திரநாட்கன்னி, மடமகளிர்கவரியிடமறையோர்வாழ்த்தவயங்குதிருநாளுலகம்வழங்கச்செய்தான். (௯௯)

செய்தோறுநிரம்புமுத்தம்○குரம்புதோறுந்திரண்டிருளைத்துரந்ததிரிகோணநாதர், பைதோறுமணிக்கிரணம்பரந்துபாயும்பாந்தள்முடித்திருமேனிப்படிவநோக்கி, மெய்தோறுங்கண்படைத்தார்போலநின்றுவிழிதோறும்புனறுளிப்பவிழுந்துபோற்றிக், கைதோறமேந்திமலரீசன்செம்பொற்கழறோறுஞ்சொரிந்துநின்றான்கருணைவேந்தன். (௧௦௦)

தன்னிகரில்லாததிருமலையினூடேதகையதொருபெருமுழக்கம்§தமரித்தோங்க, மன்னனிதுமுழக்கமென்கொலென்றுசைவமறைமுதன்மையிருவரையும்வதனநோக்க, வின்னதிருத்தென்கயிலைக்கீழேபெம்மானினியசிவகங்கைநதியிருப்பச்செய்தா, னன்னதியிற்றீர்த்தஞ்சேர்ந்தயன்மால்வானோரருமுனிவர்துதிப்பதென்றாரந்தணாளர். (௧௦௧)

அந்தமொழிகேட்டரசனருணகாலத்தலர்கமலமெனமுகமன்பொழுகநோக்கிச், சுந்தரமாமறைமுதல்வீரிங்கேகங்கைதோன்றியதொல்கதையெமக்குச்சொல்வீரென்னக், கந்தவடகயிலையிற்பண்டொருநாளம்மைகடவுளவிர்சடைகரத்தால்வகிரக்கங்கை, சிந்தைவெருவிடக்கடவுளிரங்கித்தன்கைச்சிறுநகத்தால்வாங்கியிங்கேதிகழவைத்தான். (௧௦௨)

வைத்தசிவகங்கை*யரன்பதமீதேந்துமலையருவிபரவியமாவலியுஞ்சூழ, முத்தமெறிகாவிரியின்முகமும்பாயமுதியகடனடுவினிதுமுழங்குகாலை, யுத்தரவான்கயிலைமுடியுடன்வந்தீசனுலவுமிதனிடைத்திருத்தாளூன்றிநின்றான், சுத்தமிதுகதைதென்பாற்கயிலையென்றே சொல்லுவரென்றார்சைவச்சுருதிவல்லோர். (௧௦௩)

---

○ குரம்பு-செய்கரை; வரம்பு.

§ தமரித்தல்-ஆர்த்தல்.

* அரன்பதமீதேந்துமலை-சிவனொளிபாதமலை. மாவலிகங்கையுற்பத்தியிம்மலையினென்பதை, திருக்கரசைபுராணங்கங்கைச்சருக்கம் ௩௯ ம்செய்யுளாலறிக.

சுருதிமநுநெறிதவருப்பரிதிவேந்தன்றொல்குலத்துமுழுமுதல்வீர்தொன்னுள்வந்த, திருநதியிற்புனல்முகந்துபெருமான்றிங்கட்சென்னியுறவபிடேகஞ்செய்வீரென்ன, வருமறையோர்திருமலையின்பிலத்துளேகியந்நதித்தீர்த்தமெடுத்தரன்பாலெய்தி, மருமுடியிலபிடேகஞ்செய்தார்கண்டமன்னவர்கோனுளமகிழ்ச்சிமதிக்கற்பாற்றே. (க0ச)

பாற்கடலுளிருந்ததிருமாலோவல்லன்பரிமளத்தேன்சொரிபதுமத்தயனேவல்ல, னுற்கவர்வெண்கோட்டயிராவதத்தோனல்லன்நராதிபனேவல்லனெனும்பெருமைநண்ணிக், காற்குலவுங்கமலந்தன்சென்னிக்கீசன்கவித்தமுடியெனப்பெரிதுங்கருதிப்போற்றி, மேற்பிறவிக்கொருமருந்தாய்ப்புனிதன்றீர்த்தமிகவேந்தியகத்துளரவிந்தஞ்சேர்த்தான். (க0ரு)

சேர்த்தநதித்துளிமுடிமேற்றெளித்துமீண்டுஞ்சிவனடியைவணங்கியுள்ளந்தியானித்தன்று, நீர்த்தமறுத்தெழுமுகிலுங்கனகம்பெய்யுநிலைமையெனத்தெசதானநிதமுஞ்செய்து, பார்த்ததிருவருட்பார்வையெம்பிரானைப்பணிந்துவிடைகொண்†டநுரைப்பதியிற்புக்கான், பூத்தரணிநிருபரெல்லாமதனைக்கேட்டுப்பூசனைவெவ்வேறுபயம்புரிந்துவாழ்ந்தார். (க0சு)

வேறு.

வாழ்ந்துநீடூழிகாலம்வருங்கயவாகுவென்பான்
சூழ்ந்தபேருலகங்காத்துப்பரகதிதொழுதுசேர்ந்தான்
றாழ்ந்தவார்சடையானீறுஞ்சமயவஞ்செழுத்துமெஞ்ச
வீழ்ந்தபல்சமயம்யாவும்பின்னரும்விரவிற்றம்மா. (க0எ)

அம்புயத்துதாத்தண்ணலமைத்தவாரியர்தங்கோமா
னும்பர்வந்திறைஞ்சுஞ்சேதுவுயர்கரைக்காவல்வேந்தன்
செம்பொன்மாமவுலிச்சென்னிச்செகராசசேகரேசன்
றம்பையஞ்சடையான்சைவந்தோன்றிடத்தோன்றினானல். (க0அ)

தோன்றியகாலைவேதந்தொனித்தனசிவனூற்சைவ
மான்றமர்வெண்ணீறள்ளியணிந்தனரலங்கல்வாகை
வான்றனிச்சிங்கைகாவன்மன்னனேர்சிங்கந்தோன்ற
வேன்றபல்சமயமெல்லாங்கரியெனவிரிந்துபோன. (க0கூ)

போனதுவணங்கார்செல்வம்புகுந்ததுபுகுந்தோர்க்கின்ப
மானதுசிவனூலோசையழிந்ததுபிறநூலந்த
மானதனடத்தும்பூசைவயங்குதென்கயிலைச்சென்னி
ஞானமாமூர்த்திகொள்ளச்சிறந்ததுநன்றேங்கும். (கக0)

† அநுரை-அநுராசபுரம்.

நாடுறுமிலங்கைநாடுநாற்றிசைநாடுமென்றெ
ளீடுறுகவிகைத்திங்கணிழலிடைப்படிந்ததெங்கும்
வாடுறுகலியுமில்லைமனத்துறுதுயருமில்லை
யாடுறுபதாகைச்சேவுமனுதினம்விளங்குமாதோ. (ககக)

வேறு.

விளக்கியகவிதையவ்வகையின்மேவிய, களக்கடவுடையவன்கயிலைமால்வரை, துளக்கிலாச்சதுர்மறைச்சுருதிவண்டென, வளக்கர்வெண்கமலமொன்றலர்ந்த தாகுமே. (ககஉ)

ஆக்கலாமழிக்கலாமகண்டம்யாவையுங், காக்கலாங்கடையுகங்கடந்துநிற்கலா மேக்குலாந்தென்கயிலாயமேவினன், பூக்குலாந்திருவடிபுகழ்வாத்தினல். ()

வரந்தருந்தென்கயிலாயமன்னிய, நிரந்தரன்ருளிணைநினைந்துவாழ்த்துவோர் புரந்தரனிமையவர்போற்றநீள்வினை, துரந்தரனவதுஞ்சொல்லவேண்டுமோ.

வேண்டியமுத்தியின்விருப்பமீக்கொள, வீண்டொருபுராணமதிசைத்தகாத லேன், காண்டகுபொருளிலாக்கவிகள்யாவுநம், மாண்டகைக்கன்பினலருத்தி யாயதே. (ககரு)

*தேவையின்மன்செகராசசேகரக், கோவையினுதித்தசீர்க்குமாரசூரிய னவியுமுடலுமொத்தளித்தகல்வியின், மேவியகாப்பியம்விமலற்காயதே. ()

தேனெனவமுதெனச்சிறக்குங்கல்விய, மானகாற்கவிதையுமற்றுமோங்குக ஞானமுஞ்சுருதியுநலனுநீதியுந், தானமுந்தருமமுந்தழைத்துண்டாகவே. ()

ஆகமநெறிகளுமந்தணாளரும், யோகமும்வளருகவுலகநீடுக மேகமுஞ்சைவமும்விளங்கியோங்குக, போகமுந்திருவுமண்பொலிந்துவாழ்க வே. (ககஅ)

வாழிதென்கயிலையம்பொருப்பும்வையமும், வாழிமெய்யன்பர்தங்கணமும்வ ண்மையும், வாழியஞ்செழுத்தினில்வளமுநீதியும், வாழிசீர்தொண்டர்சீர்வா ழிவாழியே. (ககக)

திருநகரச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் சுகரு.

# ஸ்ரீதக்ஷிணகைலாசபுராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

* தேவை-இராமநாதபுரம். ○ சீர்-காதம்.

## அ௦ * இவை இந்தச்சருக்கத்தின் கச ம்செய்யுளின் பின்சேர்த்திருந்தவை.

வானவர்கடொழுங்கோனையண்ணலையுந்தேவியையுமகிழ்ந்துமுன்னாட்
டேனையமொழிக்கங்குற்கரிபுதல்வனன்பினொடுசெய்யசாம
கானமதனாற்றுதிக்கும்படிகரத்திற்றரித்திடுமக்†கலத்தைக்கண்டே
யானசுசங்கீதனெனுங்கந்தருவனதைக்கவர்தற்காசையுற்றான். (கரு)

உற்றதொருசமயம்பார்த்துற்றிருந்தவனிராமனுயர்வெங்கோலா
லிற்றபோழ்தினிற்கவர்துமானுடவடிவாகியிணையில்0கீரிப்
பொற்றைபெய்திக்கங்காசங்கமப்புணரிநதியாடிப்பொருவிலாத
பற்றொடான்றனையேத்திவீணைகானந்தனைப்பண்ணினால். (கசு)

பண்ணுதலுஞ்சிவபிரான்மகிழ்ந்துவெளிப்பட்டுசசங்கீதனைப்பார்த்
தண்ணெகிழ்ந்துநீவீணைகானாய்நின்றிசைத்தமையாலோங்குமிங்ஙன்
மண்ணவர்கள்புகழ்வீணைபாணமெனும்பெயராகமற்றிப்பாங்க
ரெண்ணில்பலதலமுளவிக்காட்டைவெட்டிநகராக்கென்றியம்பிப்போனான்

போனவரன்மொழிப்படியச்சுசங்கீதன்காட்டைவெட்டிப்புரமதாக்கித்
தானறிந்தவாலயங்கடனையுமெழில்பெறப்புதுக்கிச்சனங்கடம்மை
யானகுடியாயிருத்திநகுலேசரடிபரவியருள்பெற்றேகி
மானிலமெலாம்புகழத்தனதுலகந்தனிலடைந்துவாழ்ந்தானன்றே. (கஅ)

---

† கலம்—யாழ்.

0 கீரிப்பொற்றை—கீரிமலை. இது யாழ்ப்பாணத்தின்வடபாலிலேயுள்ள ஓர் சிவஸ்தலம்.

என்று குறிப்பர்த்தம்வரைந்து நவீனராற்சேர்க்கப்பட்டிருந்தன.

“கவர்ந்து” என்றும் “மானுடமாம்வடிவாகி” என்றும்வரையமறந்தார்போலும்.

☞ இதற்கோர்திருட்டாந்தம்: ஆக்பர்பாதுஷா என்னுமரசன், ஆரியநாட்டை அரசுபுரிந்துவருங்காலத்தில் அவன் தாக்ஷிணியத்துக்குட்பட்ட ஆரியபண்டிதரொருவர் அரசன்கட்டளைப்படி “அல்லாவுபநிஷத்தைக்கற்பித்து வேதத்தில் நுழைத்தசங்கதி அநேகருக்குத்தெரிந்தவிஷயம். அதுபோல மேலேகாட்டியசெய்யுள்நான்கையும் புதிதாயியற்றி இப்புராணத்துட்சொருகினார் யாரோ அறியேம்; அற்றன்றி இந்தச்சருக்கத்து எழுசெய்யுள்களை இழுத்தெறிந்துவிட்டார்; ஐயகோ அவர்மதியிருந்தவாறென். “ஆசிரியர்கருத்தையறியாதொன்றைவிலக்கலும், நூதனமாகவொன்றைச் சேர்த்தலும், ஒன்றையொன்றாகமாற்றலும், அறிவுடையோர்க்கழகன்றென” வரைந்தவர்தந்தையே இங்ஙனஞ்செய்தார்போலும். திரிகோணமலையிலே நமதுபரிசோதனைக்ககப்பட்ட ஏடுகள்பலவற்றிலும் ஷை நான்குகவிகளுங்காணப்பட்டில. யாழ்ப்பாணத்தொருவர்பிரதியின்மாத்திரங்கண்டனம்.

# இந்நூல்கள் அச்சிடும்படி

# பிரேரித்தவர்கள்.

திரிகோணமலை

| | |
|---|---|
| பிரமஸ்ரீ. | கா. கு. சபாரத்தினக்குருக்கள் |
| ,, | வை. இராமலிங்கக்குருக்கள் |
| ,, | கு. கு. ஸ்வாமிநாதக்குருக்கள் |
| ,, | இ. கு. பூர்ணனந்தேஸ்வரக்குருக்கள் |
| ,, | சி. வ. பஞ்சாட்சரக்குருக்கள் |
| ,, | அ. கனகசபாபதிக்குருக்கள் |
| ஸ்ரீமத். | த. சரவணமுத்துக்குருக்கள் (வீரசைவம்) |
| ,, | அ. இராசகோன்பிள்ளை |
| ,, | சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் |
| ,, | சு. சின்னையாபிள்ளை. |

இந்நூல்களச்சிடப்

# பொருளுபகரித்த

கண்ணியமிகுத்த புண்ணியசீலரின்

## நாமாவலி.

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| மாரா ஸ்ரீ. | கா. வ. மார்க்கண்டு | யா- புளியங்தீவு | க0 | 00 |
| ,, | வை. முருகையா | யாழ்ப்பாணம் தம்பளை | க0 | 00 |
| ,, | ஏ. சிதம்பரப்பிள்ளை | கப்பலேசண்டு-யா | ௫ | 00 |
| ,, | கி. கதிரேசபிள்ளை | யாழ்ப்பாணம் | ௫ | 00 |
| ,, | ஆ. சுப்பிரமணியம் | யா-புளியங்தீவு | ௫ | 00 |
| ,, | இ. பொ. ஓவசியர் | பொத்துவில் | ௫ | 00 |
| ,, | வி. கு. கனகசபை | புளியங்தீவு | ௫ | 00 |
| ,, | க. பெ. செல்லையாபிள்ளை | புளியங்தீவுவைத்தியசாலை | ௩ | 00 |
| ,, | வை. சபாபதிக்குருக்கள் | மங்திகையம்மன்கோயிற்பூசகர் | உ | ௫0 |
| ,, | பொ. இரத்தினசபாபதிக்குருக்கள் | புலோலி | உ | 00 |
| ,, | சு. ம. இளையதம்பி | ஏருவூர் | உ | ௫0 |
| ,, | இ. கந்தப்பசிருப்பர் | வட்டுக்கோட்டை | உ | ௫0 |
| ,, | அ. சண்முகம் | புளியங்தீவு | உ | 00 |
| ,, | இ. கி. செல்லத்துரை | டக்றர் | உ | 00 |
| ,, | தி. தாமோதரம்பிள்ளை | திருக்கோயில் | உ | 00 |
| ,, | தா. இராமசாமி (சைவம்) | கட்டுவன் | உ | 00 |
| ,, | கா. அருணாசலம் மாஸ்றர் | புளியங்தீவு | க | ௫0 |
| ,, | சி. குமாரசாமி | கோட்டைமுனை | க | ௫0 |
| ,, | சி. சரவணமுத்து | றிஜிஸ்ருார் | க | ௫0 |
| ,, | சு. சிதம்பரப்பிள்ளை | கொஸ்தாப்பு ஏருவூர் | க | ௫0 |
| ,, | வ. குட்டித்தம்பி | புளியங்தீவு | க | ௫0 |
| ,, | ந. சபாபதிப்பிள்ளை | போஸ்மாஸ்ரர் | க | ௫0 |
| ,, | த. தோ. சின்னத்தம்பியார் | காரைதீவு | க | ௫0 |
| ,, | மு. வ. வி. பொன்னையா | காரைதீவு | க | ௫0 |
| ,, | கா. கு. சோமசுந்தரக்குருக்கள் | திருக்கோயிலர்ச்சகர் | க | ௫0 |
| ,, | ஆ. வயிரமுத்து கண்டாக்கர் | திருக்கோயில் | க | ௫0 |
| ,, | த. சதாசிவம் | சிங்களவாடி | க | 00 |
| ,, | மு. வ. அ. சாமி | சிங்களவாடிவைத்தியசாலை | க | ௫0 |
| ,, | பெ. வேலுப்பிள்ளை | கோட்டைமுனை | க | 00 |
| ,, | ஆ. பொ. த. கணபதிப்பிள்ளை | கோட்டைமுனை | க | 00 |
| ,, | ஆ. வை. சின்னையா வைத்தியம் | கோட்டைமுனை | க | 00 |
| ,, | க. இராமநாதபிள்ளை | புளியங்தீவு | க | 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| ம ா ா ஸ்ரீ. | மு. முத்துக்குமாரு | | க | 00 |
| ” | சி. கார்த்திகேசு | | க | 00 |
| ” | ஐ. பரமசாமிஐயர் | காரைதீவு | க | 00 |
| ” | பொ. க. மார்க்கண்டபிள்ளை | | க | 00 |
| ” | க. காசிப்பிள்ளை | காரைதீவு | க | 00 |
| ” | பொ. க. பொ. த. அப்பாசாமிப்பிள்ளை | காரைதீவு | க | 00 |
| ” | வீ. வைரமுத்துக்கிளாக்கர் | காரைதீவு | க | 00 |
| ” | பொ. க. செல்லத்துரை | காரைதீவு | க | 00 |
| ” | த. அ. கந்தையா | காரைதீவு | க | 00 |
| ” | வே. பொ. த. கதிர்காமத்தம்பி | | க | 00 |
| ” | மொ. கணபதிப்பிள்ளை | காரைதீவு | க | 00 |
| ” | கு. பொன்னம்பலபிள்ளை | | க | 00 |
| ” | வே. கந்தையா | காரைதீவு | க | 00 |
| ” | சி. சம்பு | காரைதீவு | க | 00 |
| ” | மு. தம்பையாபிள்ளை | ஓவசியர் | க | 00 |
| ” | மு. வைரமுத்து | காரைதீவு | க | 00 |
| ” | பெ. விசுவலிங்கம் கிளாக்கர் | காரைதீவு | க | 00 |
| ” | மு. சீனித்தம்பி | காரைதீவு | க | 00 |
| ” | க. ஆறுமுகம் | திருக்கோயில் | க | 00 |
| ” | அ. வைத்தியலிங்கம் ஓவசியர் | திருக்கோயில் | க | 00 |
| ” | வே. பொ. த. அருணசலபிள்ளை | திருக்கோயில் | க | 00 |
| ” | சு. கந்தையா | மாவிட்டபுரம் | க | 00 |
| ” | மா. வே. கந்தப்பெருமாள் | திருக்கோயில்வண்ணக்கர் | க | 00 |
| ” | தி. சங்கரப்பிள்ளை | தம்புலுவில் | க | 00 |
| ” | கா. காசிப்பிள்ளை | அக்கரைப்பற்று | க | 00 |
| ” | அ. அருளம்பலம் மாஸ்ரர் | அக்கரைப்பற்று | க | 00 |
| ” | மா. கதிரமலை | காரைதீவு | க | 00 |
| ” | மு. கறுவற்றம்பி | நிந்தவூர் | க | 00 |
| ” | பொ. த. த. கந்தையாபிள்ளை | நிந்தவூர் | க | 00 |
| ” | வி. கதிரேசபிள்ளை போஸ்மாஸ்ரர் | | க | 00 |
| ” | க. குமாரசாமி | புளியந்தீவு | க | 00 |
| ” | சி. பொ. த. சாமித்தம்பி | காரைதீவு | க | 00 |
| ” | மு. சுப்பையா | பொத்துவில் | க | 00 |
| ” | மு. விசுவநாதர் | திருக்கோயில் | க | 00 |
| ” | சா. வ. சிவகுரு | அட்டைப்பள்ளம் | க | 00 |
| ” | பொ. த. க. கயிலாயபிள்ளை | காரைதீவு | க | 00 |
| ” | வே. வ. சிற்றம்பலம் | காரைதீவு | க | 00 |
| ” | சு. சின்னையாபிள்ளை | திரிகோணமலை | க | 00 |

| | | | |
|---|---|---|---|
| | ப. மூ. கந்தன் சாய்ந்தமருது | க | 00 |
| M. r. r. Sre, | Vallipuram Overseer | 5 | 00 |
| ,, | P. K. Subramaniam Postmaster | 5 | 00 |
| ,, | Murugasw Irrigation superintehdant | 2 | 50 |
| ,, | M. Vannia Sinthaturai Vannia | 2 | 50 |
| ,, | V. V. Thambimuttu overseer | 2 | 00 |
| ,, | K. Vasandarasa Pillai | 2 | 00 |
| ,, | S. Ponniah Notary Public | 2 | 00 |
| ,, | A. S. Doctor Pottuvil | 2 | 00 |
| ,, | S. Kanapathe pillai | 1 | 50 |
| ,, | V. Pattakuddy Teacher | 1 | 00 |
| ,, | V. V. Nallaratnam Teacher | 1 | 00 |
| ,, | C. G. Dootor Puliamtivw | 1 | 00 |
| ,, | Sinniah advocate | 1 | 00 |
| ,, | K. Kasipathy Teacher | 1 | 00 |
| ,, | V. Selvadurai postmaster | 1 | 00 |
| ,, | C. H. Kasinather Contractor | 1 | 50 |
| ,, | A. Saravanamuttu | 1 | 00 |
| ,, | N. C. Saparatnasamy | 1 | 00 |
| ,, | E. Rasiah | 1 | 00 |



உ

சிவமயம்.

# கோணேசர்கல்வெட்டெனவழங்கும்
# கோணேசசாசனம்.

கவிராஜரருளிச்செய்தது.

**காப்பு.**

திருவளர்கோணையின்சீரையோதிட
வொருபொருளென்னவிவ்வுலகம்யாவையுந்
தருமரனருள்புரிசாமிமும்மதம்
வருகரிமுகனடிவழுத்தல்செய்குவாம்.

தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளுமாக்கியோன்பெயரும்.

சொல்லுற்றசீர்க்குளக்கோட்டுமன்சொற்படிசொல்லெனவே
கல்வெட்டுப்பாட்டெனப்பாடினனாதிக்கதைபொருளா
மல்லுற்றகண்டர்தம்பொற்பாதநெஞ்சிலழுத்தியிகல்
வெல்லுற்றசீர்க்கவிராசவரோதயவிற்பன்னனே.

**நூல்.**

திருமருவுமனுநீதிகண்டசோழன்செகமகிழவருராமதேவதே
வன், திருமருவுதிரிகயிலைப்பெருமைகேட்டுத்தானுமவன்வந்ததுவு

மவன்சேய்பின்பு, மருமருவுமாலயங்கோபுரங்களோடுமணிமதில்சூழ்மண்டபமுமலிதீராவி, கருமருவுமுகினீர்சேர் திருக்குளஞ்செய்கருமமுமோர்கல்வெட்டாக்களறுவாமே. (க)

சொல்லரிய திரிகயிலைப்பெருமையெல்லாந்தூய*புராணக்கதையிற்சொன்னதுண்டு, வல்லதொருவன்னிமையுந் தானத்தாரும்வரிப்பத்துமாமிவர்கள்வந்தவாறும், நல்லதொருபூசைவிதிநடக்குமாறும்நடந்ததன்மேலினிநடக்குநடத்தையாவுஞ், சொல்லெனவேசோதிடத்தினிலேயேகண்டகவிராசன்வருகாலஞ்சொல்லுஞ்சீரே. (உ)

சீரிலங்குசோழவளநாடுதன்னிலொருநாளைக்கிரண்டவணச்செம்பூச்சம்பா, ஏரிலங்குமரிசிவரவதற்குத்தக்ககறியமுதுபலசெலவுமீந்தீசற்குப், பாரிலிந்தப்பூசைதனைநடத்துமெம்போற்பணியினொடுமினிதாகப்பகிர்வாராரென்,றேரிலங்குகுளக்கோடனெனுமிராசனாற்கால்மண்டபத்திருந்தேயெண்ணினனால். (ங)

வேறு.

திருந்துதிரிகயிலைவெற்பிற்சிவாலயமுங்கோபுரமுஞ்சிறக்கநாட்டிப், பரிந்துலகோர்பவமறுக்கும்பாவநாசகச்சுனையும்பரிவாய்ச்செய்து, தெரிந்தபுகழ்த்திருக்குளமும்வயல்வெளியுந்திருத்தியரற்கென்னவீந்து, பரிந்தவரன்றொழும்புசெயவாள்வேண்டுமெனநடந்தான்பரிதிவேந்தன். (ச)

வேறு.

பரிதிகுலத்துதித்தகுளக்கோட்டிராமன்பங்குனியுத்திரம்பதினைந்தேதிதன்னில், வரிசையுடன்சென்றுமருங்கூரிலேகிவளவரினல்லோரைமரக்கலத்தினேற்றி, அரியதிரிகோணமலைநாதர்க்கென்றேயன்னகரிலையாறுகுடியுமேற்றி, உரிமையிதுவுங்கள்பரவணியாமென்றேயுரைசெய்தான்சதுர்வேதஞானமூர்த்தி. (ரு)

இத்தலத்திலரன்கயிலையாலயத்திலியன்றவறைதனின்முதலினிருப்புநாட்டி, நித்தம்வரும்வரவாகும்பொருள்களோடுநிதம்பூசைச்செலவெழுதநியமஞ்செய்து, அத்தர்முன்னராலாத்திநடனமிடல்பன்றிருற்றலதிகப்பட்டாசற்கீதல், இத்தனையும்தானத்தார்செய்வீரென்னவெழுகுடிக்குமிராயபட்டமீந்தான்வேந்தன். (சு)

வேறு.

வேந்தனினுமரன்றொழும்புக்காட்போதாதெனநினைந்துமீண்டேகாரை, வாய்ந்தவளநாடுசென்றுவரிப்பிடித்தான்மூவேழுகுடிவா

*புராணம்-மச்சேந்தியம்.

ழ்வோரைச், சேர்ந்திடபமாதமதிலீரைந்தாந்தேதிதிங்கள்சிறந்த சோதி, ஏய்ந்தகன்னிமுகூர்த்தமதிலான்றொழும்புசெய விடுத்தானி ராசராசன். (எ)

சன்னிதியினீவிர்செய்யுந்தொழும்புமக்கு நாமுரைக்கத்தானீர் கேளும், நன்னயம்சேர்பட்டாடைகொய்தல்கட்டல்நல்லபுஷ்பபத்தி ரங்களெடுத்தல்தூர்த்தல், முன்னநிறைவிளக்கேற்றறளிசைதட்டுமு ட்டிவைகள்விளக்கல்கொடிகுடைகணித்தம், முன்னதமாயெடுத்தல் நெல்லுக்குற்றல்சாணியொழுக்குதல்மற்றரிகரும்புமுகந்தேயீதல். ()

செய்யநடனஸ்திரிக்குமுட்டுவகை கொட்டலொடுசிறக்கப்பாட ல், ஐய்யமறநற்பலிக்குப்பாவாடையிடுவதுவுமதுவேயன்றித், துய் யசுண்ணங்கொடியேற்றலிறக்கலொடுசுமத்தலுஞ் சாந்தரைத்தேயீ தல், மெய்யெனவேயாலயத்துட்பணிகளைத்துப்புரவாகவிளங்கச்செ ய்வீர். (கூ)

நீர்பாயும்பள்ளவெளிநெல்விளையுந்தறையவர்க்குநிசமாயீய்ந்து
பார்சேருமைங்குடிக்கும்பண்டாரத்தாரெனவேபவுஷுமீய்ந்து
வார்சேருங்களபமுலைப்பிடிநடையைக்கோணமலைவாதன்றனை
யோராருங்குளக்கோடன்வழிபட்டேதன்மனதிலிதனையோர்ந்தான்.

தானம்வரிப்பத்தென்னுமரன்றொழும்பர்க்குள்ளிகலார்தர்க்கம்வந்தா
மானபங்கமடையாமனடுத்தீர்ப்பதாரெனவேமதுரையூர்போய்த் [ல்
தானமதிக்குலராமன்றனியுண்ணாப்பூபாலன்றனைக்கொணர்ந்து
தேனமர்பூந்தொடைமார்பன்றிருக்கோணநகரரசுசெய்யவைத்தான்

வேறு.

வைத்தபுகழ்வன்னிமையேநீதிசொல்வேன் மகத்தானபாசுபத மறையோர்தங்கள், சித்தமதுநேராகநீதிசொல்வாய்சிவபூசைமுத லொழுக்கந்தவறினாலுங்,†குற்றமென்றேயெண்ணிமிகக்கோபங்கொ ண்டாற்கோணமலைநாதரிடஞ்சொல்வார்சொன்னாற்,‡சுற்றுமேவங்கி ஷத்தைப்பிரமகத்திதொகையாக மற்றவர்க்குச்சொல்வேன்குற்றம்.

சுத்தமிகுவன்னிமையேகுற்றஞ்செய்தாற்றுலங்குவிலங்கடியுயி ருக்குயிரேவாங்கு, நிர்த்தமிடுமடவியர்கள்குற்றஞ்செய்தானிறைபு னலினிறுத்திவைத்துத்தேங்காய்வாங்கு, *மற்றைமதிநுதன்மடவா ர்குற்றஞ்செய்தான்மண்கடகமேற்றியடிவழக்குநோக்கி, இத்தகைய விராசாங்கஞ்செய்நீயென்றே இரத்னமணியாசனத்திலிருத்திவைத் தான். (கரு)

† குத்தம், ‡சுத்தும், *மத்தை, இவை, பண்டையார்வழக்கு.

வையமகிழ்வன்னிமையேயினுங்கேளுமனுநீதிதவறாதேகோ
ப்பாவம், ஐயமறவுன்றாரந்தாரமாகுமயலவர்கடாரமெலாந்தாயாரா
கும், மெய்யையெடுபொய்யைவிடுவன்மம்வேண்டாம்வெறுமையுள்
ளோர்க்குதவிசெய்வாயிகல்பண்ணாதே, மையனையகண்டர்திருக்
கோணநாதர்மஹாபூசைதிருப்பணியும்வழங்கச்செய்யே. (௫௪)

வேறு.

வித்தகக்கட்டுக்குளத்தாரரன்றொழும்புசெய்க*விந்துவெளியூர்
மேலோர், அத்தர்முன்னர்க்காப்பணிதன்முன்னீடுவிழாநடத்தலவ
ணமாறு, சுத்தநெல்லாங்கொப்புவித்தலடையாயந்தீர்வைகடற்சோ
த்துங்கோணே, அத்தனுக்கித்தனையுமெனவருள்புரிந்தானரசர்முடி
பழுந்துதாளான். (௧௫)

தானதிகதிருமலைக்குநாற்காதவழிதிருத்தித்தானுங்கோணே [தல்
மானபரற்கெனவளித்தேன்கொட்டியாபுரப்பதியோர்மகிழ்ந்தேசெய்
ஆனதுவர்க்காயினுடன்வெள்ளிலையுமருங்கதலிக்கனியுஞ்சாந்தும்
ஊனமறுபாறயிர்நெய்யரிசியொருநூறவணமுகந்தேயீதல். (௧௬)

ஈதலுடனேரண்டமிருப்பைபுன்னைப்பருப்பிவைகளிறையாத்தீவிற்
சேதமறவொப்புவிக்கச்செக்காட்டியெண்ணெயுறத்திருந்தவாட்டி
யோதரியகெவுளிமுனைமீகாமனிடத்தில்வரவுவந்தேகோணே
நீதமுறுகருகுலநற்கணக்கிலுள்ளபடிகிணற்றினிறைவாயூற்றல். (௧௭)

வாசலுக்குத்தென்கிழக்கேயெண்ணெய்நெய்க்குக்கிணறேழுவ
ரைந்துகட்டி,மாசகலத்துலாப்போட்டுவாளியிட்டுமதில்கட்டிக்கதவு
மிட்டு, ஏசகலவெண்ணெயதிகாரமெனநிலைமையும்வைத்திதயங்கூர
ந்து,ஓசைதிகழெண்ணெய்நெய்க ளொருபோதுங்குறையாதவூற்றுங்
கண்டான். (௧௮)

ஊற்றிருந்துதாதுகுக்குந்தாதகித்தாரணிமார்பனுகந்தகோணே,
நாற்றிசைக்குந்திட்டமிட்டுநவரத்னமணியணையினன்பாய்வந்து, வீ
ற்றிருந்துபாசுபதர்வருகயாந்திருக்குளமும்விளங்கச்செய்ய, நீவே
ற்றுமைக்குங்கோணமலையிறையிடம்போய் விடைவாங்கிச்சொல்லு
மென்றான். (௧௯)

சொல்லவந்துபாசுபதர்திரிகயிலைப்பரமனடிதொழுதெங்கோமான்
நல்லதிருக்குளமியற்றவிடைவாங்கிவாருமென்றார்நாதனென்ன
வெல்லையிலாநீர்தாங்கிநீடூழிநெல்விளையுமென்னச்சொல்ல [ன்.
மல்லணையுந்திரடோளான்குளக்கோடற்குரைக்க மணமகிழ்வுபூத்தா

*இந்துவெளி, நிலாவெளி.

வேறு.

தானதிககணபதியேகோணமலைச்சங்கரசண்முகனேமாலை, நானுமக்குத் திருக்குளமொன்றியற்றுகின்றேனுங்களருணடக்கச்செய்வீர், வானவரேயெனவணங்கிவிடைபெற்றாத்தினமண்டபத்தினின்று, தேன்மருவுந்தொடைமார்பன்றிருக்குளத்தின்றிசைநோக்கித்திருந்தச்சென்றான். (௨௧)

* திருந்துகலிபிறந்தைஞ்ஞூற்றொருபதுடனிரண்டாண்டுசென்றபின்னர், புரிந்திடபமாதமதிலீரைந்தாந்தேதிதிங்கள்புணர்ந்தநாளிற், றெரிந்தபுகழாலயமாஞ்சினகரமுங்கோபுரமுந்தேருர்வீதி, பரிந்துரத்னமணிமதிலும்பாவநாசகச்சுனையும்பகுத்தான்மேலோன். ()

மேலானதிருக்குளமுமிதற்கடுத்தநாலாண்டில்விளங்கச்செய்து
சேல்பாயுமாவலிநீர்வரவழைத்துத்திசைபரவுஞ்சிறப்புங்கண்டு
மாலானநீர்மிகுதிவரவெருவிமதகுதிறப்பதுயாரென்றே
பாலாழிதனிற்றுயிலும்பச்சைமுகிறனைநினைந்தான்பரிதிவேந்தன். ()

வேந்தனுளந்தனினினைக்கப்பாந்தளிடைத்துயின்மாயன் விழித்துப்பார்த்தே, ஏந்திலங்காபுரிநகரிற்றிருக்குளத்துக் கெமைநினைந்தானிறைவனென்று, காந்தண்மலர்ப்பதஞ்சிவப்பக்கடுகெனவங்கிரிவரலுங்காலில்வீழ்ந்து, பூந்திருசேர்மணிமார்பமதகினடைதிறப்பதுநின்புகழ்ச்சியென்றான். (௨௪)

என்றருளமாலவனுமிறையவனையஞ்சலென்றேயிலங்கைத்தீவில், மன்றல்கமழ்செஞ்சடையான்கோணலிங்கர்திருக்குளநீவருந்திச்செய்தாய்,நன்றுகமலத்தயனுதியவமரரடையாதநன்மைபெற்றாய், வன்றிறல்சேரரசேயென்0றரியுருவமுடன்மதகுதிறந்தான்மாலே. ()

மாலோன்மாமதகினடைதிறப்பவைந்துகரத்தோனேவலமாய்நித்தம், பால்போலத்திரைகொழித்துப்பழனமெங்கும்பரவிநிற்கும்பான்மைகண்டு, ஆலாலமுண்டவர்க்குமம்பிகைக்குமாமெனவேயகம்பூரித்துச், சேல்பாயுந்திருக்குளத்தின்கிருபையினாற்றினநடக்குஞ்செய்கைகண்டேன். (௨௫)

---

*இது இற்றைக்குச்சுமார் சநி சகாப்தங்களுக்குமுன். இந்தச்சகாப்தம் வைத்தபாடல் எல்லாரும்படித்தறியவேண்டியதல்ல.. இது அரசனுரை.

0 அரி- தவளை.

கண்டருளுமாலவனே திருக்குளநின்காவலெனக்கரியோன் சொல்வான், எண்டலங்கள்புகழ்ந்தருளுமிபமுகனு மெழின்முனியு மிறையுமேழு,மண்டு திறன் மங்கலரும்புத்தியரும்வதனரொடுவீரனை யன், அண்டர்புகழ்வயிரவருமிலங்கைசந்திகாவலனுமண்ணமாரும்.

எட்டிசைமண்வெட்டிக்கொண்டேழரைச்சுற்றுமரத்தையினி தாவெட்டித், தட்டியொருகாலாலேஎற்றியதுவீழமுன்னந்தரணிமீ தில், ஒட்டியொருகுளஞ்சமைத்தாங்குறுநீருங்கொண்டருளேயுற்ற வீரன், அட்டதிக்கும்புகழ்ந்தருளுநீலாசோதையன்படையுமரசர் மாரும். (உஅ)

மாருதிநேர்முன்னோடிமாபூதர்பப்பாருமற்றுளோரும், நீர்தா ங்குந்திருக்குளத்துக்கட்டுவழிநில்லுமெனநிறுத்திவைத்துப், பார் தாங்குபத்தினியைக்கன்னியரைக்காளிதன்னைப்பரிவினோடு, கார்தா ங்குதிருக்குளக்கட்டினையகலாதிருத்திரென்றான்கமலக்கண்ணன். ()

நன்னயஞ்சேர்பாகிலேயும்பாலடிசிறிருவிளக்குநல்லதூபஞ், சொன்னபடியேதருவார்குறைந்தாலுந் திருவுளத்திற்சோர்வுவேண் டாம், மன்னுபச்சைப்பட்டுவயன்மழையுதவுஞ்சிவப்புமஹாவெயி லேகாட்டு, மின்னலின்றியிருமிருபத்தெண்ணூழிசென்றபின்யாம் வருவோமிங்ஙன். (௩0)

என்றவருக்கரியுரைப்பவிறையவனங்கரியடியையிறைஞ்சியேத்த மன்றன்மலர்முகமலர்ந்துமுகமனுமங்கிறைக்கருளிமாலுமேக அன்றிறையுமங்கலர்க்குநூற்றுடனே*யறுபதுமாமேதிகட்டித் தூன்றுதிருப்பாலடிசிறிருவிளக்குப்பாகிலேயுந்துலங்கச்செய்தான். ()

செய்கணிதம்விளைவதற்குத்திருக்குளத்தினீர்தாங்கிசிறக்கக்கட்டி யையமறக்காவனிற்குமனைவருக்குமனமகிழவன்பாயென்றுந் துய்யவொருவருஷமடையொருவருஷம்பாலடிசிறுலங்கச்செய்தே வையகமதுள்ளளவுங்கோணலிங்கர்கிருபையினல்வழங்கச்செய்தான்

தானிரண்டாயிரத்§தெழுநூறவணவிதைப்புத்தரையைத்தா ன்செய்வித்துத், தேனிருக்குமலர்க்காடுவெகுவாகத்திருத்துமென த்திட்டம்பண்ணிக், கூனிருக்குமதிநுதலாள்பிடிநடையம்பிகைசர

---

* இருபது என்பதூஉம்பாடம்.

§ எண்ணூறென்றும்பாடம்.

ணங்குறித்துள்வைத்து, மானிருக்குங்கரத்தானைவலமாய்வந்தடிப
ணிந்தான்மன்னர்மன்னன். (௩௩)

மன்னவனுமனைவரையும்வருகவெனநாற்கான்மண்டபத்திற்கூ
ட்டி, நன்னயஞ்சேரவரெவர்க்குநன்முகமனெடுத்துரைத்துநாதன்
கோணை, மன்னவன்றனருளாலேதிருக்குளமும்வயல்வெளிசெய்த
துவுஞ்சொல்ல, இன்னலின்றிஅரகரசங்கரசிவவென்றிறையடியையி
றைஞ்சினரால். (௩௪)

இறஞ்சுகின்றவனைவரையுமிருகையாலுூத்தழுவியெங்கோ
ன்சொல்லும், மறஞ்சிறிதுஞ்செய்யாமலறம்பெரிதுபுரிவதற்குமனத்
தினைக்குங், கறங்குதிரைக்கடல்புடைசூழுலகமெலாந்தனிபுரந்
துங்காண்பதென்னே, திறங்கொளுஞ்சீர்க்கோணலிங்கர்திருப்பணி
யும்பூசைகளுஞ்செய்யவேண்டும். (௩௫)

செய்யதிருவாலயத்திற்பதினோராயிரம்விளக்குச்சிறக்கவையு
ம், மையனையகண்டர்திருவுட்பணிக்காநெய்விளக்காயிரங்கள்வையு
ஞ், செய்யசந்தம்புனுகுபன்னீர்தனிற்கரைத்துத்தெளித்தெங்குஞ்சி
றப்புச்செய்யுந், துய்யகந்தப்புகைக்குடங்களிடையிடைவாசனைகம
ழத்துலங்கவையும். (௩௬)

ஐங்கரற்குவெள்ளியினுலறுதளிசையறுமுகவற்கிரட்டிபொன்
னூற், றங்கமதாலரற்கறுபதுடனுறுதளிசைமற்சைச்சார்தேவர்க்கு
த், தங்கமிகுமைம்பொன்னுனூற்றிருபத்தெண்டளிசைசொன்னே
மின்னு, மிங்கதிகபிடியமுதுக்கிசைந்தகிண்ண*மூந்நூறுமியற்றி
வையும். (௩௭)

மையனையகண்டருக்குத்துய்யசம்பாவரிசிவகைவகுத்தெடுத்தே
யையமறவமுதுசெய்தேயலங்காரத்தளிசைமிசையழகாய்வைத்துத்
துய்யதிருக்கறியமுதுசுரபியின்பாற்குழம்பினொடுதுகடீர்தூய
வெய்யதிருப்பணிகாரம்பலபலவாசனைகமழவிளங்கவையும். (௩௮)

வேறு.

வையமகிழ்கற்கண்டுசீனிவெல்லம்வடிவாஞ்சர்க்கரைகிழங்குவ
தைத்தேனெல்லித், துய்யகனிவர்க்கமெலாமங்கண்வைத்துச்சுத்த
முள்ளபுத்துருக்குநெய்யுமூற்றி, ஐயமறமுன்வைத்தேயிளநீர்வைத்

* முன்னூற்றறுபதென்றும்பாடம்.

தாங்கழகானபத்திரமுந்தூபம்வைத்து, மெய்யதிருப்பூசையுமக்கா
குமென்றுவிளங்குமஹாமண்டபத்தின்மீண்டுசெய்யும். (௩௯)

செய்யமஹாமண்டபத்திணுப்பணங்கள்சிறந்தமொருமுழவகல
நீளமாகத், துய்யசம்பாவடிசிலதுசொரிந்துதட்டித்துகளிலொன்பா
ன்மூன்றுபிடிசுற்றில்வைத்து, வெய்யதிருக்கறியமுதுபணிகாரம்பா
ல்வேண்டியசர்க்கரைகனிதேன்வெகுவாய்நெய்யும், பெய்துவந்துதி
ரிநிறுத்திமகிழ்வாய்நீரும்பெட்டுடன்பாகிலைதூபம்பெருகச்செய்யும்.

வேறு.

எப்போதுமுப்போதுமிப்படித்தென்கோணமலையிறைவன்பூ
சை, தப்பாமனீவிர்செய்கதந்திரமந்திரங்கிரியைதாஞசார, மிப்ப
டியேசெய்திடுகவிதுதவறினெழியவரையிறஞ்சச்செய்யும், மெய்ப்பு
டனிவ்வெல்லையுள்ளோர்செய்தொழும்புதவறினிடர்மேவிவீழ்வார்.

வேறு.

வாரிவளஞ்சூழிலங்கைவேந்தாருமஹாகோணைநாதருக்குவ
ளவர்வேந்தன், பாரிலங்குபூசைவிதிக்கீந்தசொர்னம்பலவரவுமெடு
த்தழிவுபண்ணு*வாரேல், கூரியதோர்குட்டமுதல்வியாதிக்காளாங்
கூட்டுபெருநாட்டவர்களீட்டுசெம்பொன், நேரிலிகழ்கொள்ளைகொ
ண்டுசூறையாடிநீசருமிப்பதியாழ்வர்நியமந்தானே. (௪௨)

தானதிகவமைச்சருடனரசர்தாமுந்தக்கபிரதானியொடுதரும
ஞ்செய்வோர், ஆனநெறிமுறைதவறுமறையோர்தாமுமகலாதகற்பு
டையவரிவைமாறும், ஈனரொடுமூடர்மொழிதன்னைக்கேட்டேயிவர்
கள்புரிநெறிமுறையையிகழுமந்நாள், மானபரனாலயத்துப்பூசை
தானுமகிழ்ச்சிமங்கவிகழ்ச்சியுமங்கெழும்புந்தானே. (௪௩)

எழுகிரணத்திரிகயிலைப்பெருமான்பூசையிப்படியேமுறைதவ
றிநடக்குங்காலைப், பழுதுதிகழ்கயவாகுவருவனந்நாட்பாசுபதரி
றப்பர்பழமறையோர்சேர்வர், பொழுதுகுலக்கயவாகுராசராசன்பூ
சைவிதிக்கேகனகநாடுமீந்து,தொழுதுநின்றேயாலயத்திற்றெழும்பு
திட்டஞ்சொல்லியவனுராசபுரியிற்சேர்வான். (௪௪)

சேர்ந்தபின்னர்மறையோர்கள்கோணைநாதர்திருப்பூசைவெகு
காலஞ்செய்யுமந்நாள், மாந்தளிர்போன்மேனியுடைப்பறங்கிவந்து

* பண்ணும்பேர்களென்பதூஉம்பாடம்.

மஹாகோணேப்பதியழிக்கவருமந்நாளி, லேய்ந்தசென்பாற்கழனிம லேயென்றொன் றுண்டாங்கீசனுக்குமாலயமங்கியற்றப்பின்னர், கோ ந்தறைசேரொல்லாந்தர்பிடிக்குமந்நாட்குலவுசிங்கவிரவிகுலங்குறைந் துபோமே. (௪௫)

போனபின்னரிலங்கைமுற்றும்வடுகாள்வார்புகழிலங்கைதனி புரக்குமுலாந்தாமன்னன், தானிலங்குமாசினுக்குத்தடையென்றெ ண்ணித்தரியலனேக்கடலிடையேதள்ளிவிட்டுத், தேனமருமலங்கல் புனேவடுகன்றனுஞ்செப்பியமாற்றரசுமகிழ்கொண்டகோணே, மா னபரனகமகிழ்பொற்கோயிலுக்குள்மாதனத்துமீதுவைத்துவணங்கு வாரால். (௪௬)

வணங்குமரன்பூசைமுன்போல்நடக்குங்காலம்
மஹாவிலங்கைப்பதியாளவருமாஞ்*சிங்க
மிணங்குமணிரத்தினத்தாற்பொன்னுன்முத்தா
லீசனுக்குமாலயமங்கியற்றுங்காலஞ்
சுணங்கவில்லேமானிடர்க்குத்துக்கமில்லேச்
சோம்பவில்லேநிதம்போகசுகமேவாழ்வார்
மணங்கமழுந்திரிகைலேப்பெருமான்பாத
மனத்திருத்தியருத்தியொடும்வாழுமாக்கள். (௪௭)

மாதமதின்மும்மாரிபெய்யச் செந்நெல்வளரவெழிற்சைவநெ றிமனுநூலோங்க, வோதரியமுற்கதையுஞ்சொன்னேம்பின்னருற் றுவருங்கதையனேத்துமுரைவழாம, லாதரவாயறுபத்துநாலாமாண் டிலடைவுடையசோதிடர்களெழுதிவைத்த, நீதிமொழிப்படிசொல் வோங்கோணேநாதர்நித்தியமாமருள்சுருங்குநியமம்போமே. (௪௮)

போனபின்னரிங்கிலிசரிலங்கையாழ்வார்புகழாருங்கோணவ ரைநாதர்பூசை,மானதமாம்விதிமுறையேநடக்கும்பின்னுள்மணங்கு

* கி. மு. 544 ல் இலங்கைக்குவந்த விஜயராசன்வம்சத்திலுள்ள, உக்கி ரசிங்கராசனுக்கும், திசையுக்கிரசிங்கசோழன்புத்திரி மாருதப்புரவீகவல்லிக்கு ம் புத்திரனுன "வாலசிங்கன்" இவன் முடிசூடியபின் செயதுங்கவாராசசிங்க னெனப்பட்டப்பெயர்பெற்றான். என்னே? "மிக்கசீரிலங்கைநாட்டின்விரிகதி ர்ப்பரிதியோச்சி, யுக்கிரசேனசிங்கனுதவியசிறுவனென்னு, மைக்கடுங்களிற் றுத்தானேவராசசிங்கமன்னன், புக்குமாற்றலர்கள்போற்றப்பொருவிலாவர சுசெய்தான்' என்று திரிகோணசைலபுராணங்கூறுமாற்றாலுமெண்க. இந்த அ ரசனே தம்பலகாமக்கோயிற்றிருப்பணிசெய்வித்தவன். இவன்காலம் 9 ம் நூ ற்றாண்டுபோலும்.

லவும்மழைபொழியும்வரிசையுண்டாந், தானமதினல்விளைவுமிகவுண்டாகுஞ்சனங்களுக்குத்துன்பமில்லையின்பமாகும், மானமுடன்பின்னிகழ்ச்சியாவும்கற்றோர்மதித்தபடியுரைத்திட்டேனியமந்தானே.

தானதிகவாரியப்பொற்கரையிற்கல்லாற்சதுரம்வெட்டிக்கோயில்கட்டிக்குளமுங்கட்டி, மானபரனுலயத்துச்சோலைதோப்புமண்டபகோவிமணிமதிலுங்கட்டி, ஆனதிருப்பணியாறுபத்துநாலாமாலயமுஞ்சுற்றிமிகவழகாக்கட்டித், தானதிகவானருளாற்பூசையாதிதவறுமனடத்திமிக்கதரணிமீதே. (ருo)

மீதெழுந்துநாற்றிசையுமதிலுங்கட்டிவெளிக்கதவுரண்டுமிட்டுப்பூட்டும்போட்டாங், காதிபரனுலயம்பொன்னுலேவேய்ந்தாங்கவிர்கிரணத்தேர்மூன்றுமழகாச்செய்தே, பாதிமதிதரித்தபரனருளினுலேபங்குனியுத்திரத்திருநாட்பவிஷேங்கண்டோம், நீதியுடனிப்படிநீர்தவறில்லாமனிச்சயமாநடத்துமென்றுனிருபர்கோமான். (ருக)

வேறு.

மாறுதபுனல்பாயுந்திருக்குளமும்வயல்வெளியும்வருந்திச்செய்தே
வீறுகவென்மரபோர்க்கியாமற்கோணமலைவிமலர்க்கீந்தேன்
பேறுனபெரியோரேயிதற்கழிவுநினைந்தவர்கள்பெட்புநீங்கி
நீறுகப்போவரிதுநிச்சயநிச்சயங்கோணைநிமலராணை. (ருஉ.)

ஆணையிதுதொழும்புசெய்வோரவரவருக்கமைத்தபணியவரெஞ்ஞான்றுங், கோணமலைநாதர்பணிசெய்வாரேற்குறையகன்றுகுணமாய்வாழ்வார், நாணமுற்றுச்சொர்ன்னமெத்திக்கூலியமையேவியதைநடத்துவாரேல், ஆணையினுலாக்கமுஞ்சந்ததியுமற்றுங்கல்லனுற்றேயலைவரன்றே. (ருங)

அன்னவரன்பூசைவிதியபிஷேகம்விழாமுதலவழகாச்செய்தால், மின்னுநிறைவிளக்கேற்றிக்கிராமதேவதைபூசைவிளங்கச்செய்தால், இன்னலின்றிமாக்களெல்லாமிருநிதிசந்ததிகளுடனினிதுவாழ்வார், சொன்னவிந்தமுறைதவறில்விளைவழிந்துதுன்பமுற்றுச்சோருமாக்கள். (ருச)

மாதயவாம்வன்னிமையேதானம்வரிப்பத்தவரேமற்றுளோரே
ஆதாவாயாலயமுமணிமதிலுங்கோபுரமுமழகுவாய்ந்த
சேதமிலாப்பூங்காவுந்தினநடத்திக்கொள்ளுமெனத்திட்டஞ்செய்து
காதலுடன்றிரிகயிலைப்பெருமைதனைக்கண்டிதயங்கருணைபூத்தான்.

வேறு.

தானதிகபவநாசந்தன்னின்மூழ்கிச்சரீரசுத்திபண்ணித்தர்ப்பணமுஞ்செய்தே, யானதிருமணிநீறுதரித்துக்கொண்டேயதிகபட்டாடையையுடுத்தாங்கலர்பூவேந்தி, மானபரனாலயத்தைவலமாய்வந்துவருபாதங்கழுவியுட்போய்வணங்கக்கண்டார், போனவாசன்றிரும்பிவாராத்தன்மைபோய்ப்பாரும்பர்சுபதர்புகுந்தேயென்றார். ()

என்றுசொலப்பாசுபதரெங்கும்பார்த்தாங்கிரத்னமணிவாயிலினின்றெட்டிப்பார்த்தார், பொன்றயங்குபதத்தருகோர்சிவக்கொழுந்துபுஷ்பித்தேயலர்ந்துநிற்கும்புதுமைகண்டு, மன்றல்மலரோன்முதலாமமரர்க்கெட்டாவன்பதவிகிடைத்ததுவோவரசர்கோவே, யென்றவர்கள்வெளியில்வந்தேயெவர்க்குங்கூற விருகண்ணீர் மழைபொழிந்தாரிருந்தோரெல்லாம். (ருஎ)

வேறு.

எல்லார்க்கும்பெரியவனேயெளியார்க்குமெளியவனேயெங்கள்கோவே, மல்லாருந்திண்புயனேதிருக்கயிலைத்தொழும்புசெய்துமவனத்தோடே, யல்லாருங்கண்டர்பதமடைந்தனையோவெனவாழ்த்தியன்பினோடு, மெல்லாருமரன்றொழும்புநடத்திமிகவகமகிழ்வுற்றிருந்தாரன்றே. (ருஅ)

## ஆசிரியப்பா.

காலமதறிந்துசோதிடருரைக்கக்
காலமேகயவாகிராசனும்வரவக்
காலமதனிற்பாசுபதரிறக்கக்
காலையிற்பூசைகலக்கமதாக
மன்னவனன்னவன்னிமைதனையுந்
தன்மமுடையதானம்வரிப்பத்தையும்
நன்றமைவுடையந்நாட்டவர்யாரையும்
மின்றான்பூசையியற்றுததென்னெனத்
தேசுபூத்திலங்குந்திருமுடியரசே
பாசுபதர்கள்பரிவுற்றிறந்தார்
மாசிலாக்கோணமலைப்பரன்பூசை
ஆசிலாதின்றேயாகுமிந்நேரங்
கடிகையேழாகியுங்கடல்புடைசூழ்ந்த
படிமிசையில்லைப்பார்த்திபாவென்ன
நெடிதுயிர்த்தயர்ந்துநிமலகோவென்று
படிமிசைச்சாய்ந்தான்பார்த்திபன்சாயமுன்

கடன்மிசைமறையோர்கமண்டலம்புத்தகந்
திடமொடுகொண்டிவண்சேர்கின்றனரென
வடலுடையரசனுமகமிகமகிழ்ந்து
திடமுடனரன்றிருச்சேவடிவணங்கி
மன்னனுமந்தமலைக்கீழிறங்கி
முன்வந்தவற்குமுதன்மைகொடுத்துப்
பின்வந்தவற்குப்பின்மைகொடுத்து
அன்னரிருவரையுமுன்னேவிட்டு
அரசனும்பிறகேயன்பொடுவந்து
உரகவாபரணனொளிதிகழ்பூசை
திரமொடுசெய்கெனச்சீருடனுரைக்கக்
கருகுலக்கணக்கனுங்கனசெலவுண்டே
இன்றேழ்கடிகைமட்டெம்பிரான்பூசை
நின்றேபோனதானிருபமேற்செலவிதென்
றொன்றேயாயிரத்தொருநூறுபொன்கொடுத்
தன்றேபூசனையாற்றவிடுத்தான்
றேனமர்தொடையான்றிருமிகுவன்னிமை
தானம்வரிப்பத்துத்தானென்பவரையும்
ஆனதோர்தன்னுட்டனுகியபேரையும்
மானமாரரசன்வருகெனவழைத்துப்
படவரவசைக்கும்பரமர்கோணேசர்க்
கடன்மிகுபூசைக்காடகம்போதா
தாமுறுநாடுந்தான்போதாதெனத்
திடமொடுகொடுக்கச்சிந்தையுணினைந்து
வரவுறுவடக்குவருகரம்பகமாந்
திரமுறுமேற்குச்சிறந்தமுனீச்சுரந்
தரைபுகழ்தெற்குச்சங்கமக்கண்டி
உரமிகுகிழக்குஉகந்தவங்காளம்
ஏற்றுகைக்கோணையிறைவனுக்காமென
நாற்றிசைச்சூலமுநாலுகணுட்டிக்
கூற்றினையுதைத்தகோமான்பூசனைக்
கேற்றிடுவீரென்றியார்க்குமுரைத்து
இலைகாய்கனிபூவிரணியம்நெல்முதல்
விலைபெறுசரக்கின்மிகுத்தவாதாயம்
பலபொருளதுவும்பத்திலுக்கொன்று
நிலைபெறக்கோணைநிமலற்களிப்பீர்
வாய்மையாயிப்படிவழங்குவீராகிற்
றீமைவாராதுதிருநிதிசேரும்
தாமேயிதற்குத்தவறிளைப்பவர்கள்
ஆமையாய்ப்பிறந்தேயலைகுவார்தாமே

பத்துப்பங்காக்கிப்பாங்குடனெட்டும்
அத்தரறைமுதலாகியவிருப்பாம்
மற்றிருபங்கும்மறையோர்க்காகுஞ்
சத்தவாரிதிசூழ்தம்பைமாநகரில்
அற்புதமுடனேமுப்பது அவணம்
நெற்பயிர்விளையும்நிலமுமளித்து
அற்புதமாகவரன்றிருப்பூசை
பொற்புறவென்றும்புரிகுவீரென்றான்
நாட்டியகைலைநற்றொழும்பினுக்கு
மூட்டியதலைமைமுப்பத்திருவர்க்
கீட்டியநிலம்புலம்யாவுமளித்து
வாட்டமில்லாமல்மகிழ்ந்திருந்தமே
என்றவர்க்குரைத்தேயெழிற்கயவாகு
மன்றல்சேர்தாதகிமாலைமார்பினனுங்
கொன்றையஞ்சடைமுடிக்குரிசிலைவணங்கி
அன்றவர்க்கருள்செய்தரசனுமகிழ்ந்து
ஆடகம்தனைற்கேடகஞ்சமைத்துத்
தேடரும்பங்குனித்திருநாட்கண்டு
தோடலர்மார்பன்றொகுதிநிறுத்தி
நாடதற்கேகநயந்தெழுந்தனனே
இன்புறுமிருசீர்ப்பாகையின்முதன்மை
முன்புநின்றெமதுமொழியதுகேளும்
நன்மைதீமைநமக்குவந்தக்கால்
அன்புடன்செய்வதாரெனக்கேட்டார்
சற்புத்திரனேதனியுண்ணுப்பொருளே
அற்புதமாகவவர்க்குரையென்ன
நட்புடனெழும்பிநரபதிதனது
பொற்பதமதனைப்போற்றிநின்றுரைப்பான்
எங்கணாயகமேயெழிறிகளரசே
தங்கக்கட்டியேதாமொருவசனந்
துங்கமாயெமக்குச்சொல்வதுண்டானால்
மங்காதம்மொழிமறாதுநடப்போம்
என்றபொழுதிலிராயர்பண்டாரமே
அன்றவர்கேள்விக்ககமகிழ்ந்துரைப்பீர்
என்னமற்றவருமிறையவன்றனது
பன்னரும்பதுமபாதம்பணிந்து
அரசர்க்கரசேயகமிகமகிழ்ந்து
திரமுறவோர்மொழிசெப்புவீராகில்
சிரமிசைக்கொண்டுசீருடன்யாங்கள்
விரகுடன்செய்வோமெனவிளம்பினரே

இன்பமோடரசேழிராயரைப்பார்த்து
உன்னுன்குடிகட்கொருமகவழையெ்ன
அன்புடனவரவரகமகிழ்மகவைப்
பொன்பணியதனுற்புகழவலங்கரித்
தட்டதிக்கும்புகழரசன்முன்விடவே
மட்டவிழ்பூங்குழன்மாணிக்கமெழுவர்
இட்டரத்தினமணியிலங்குமாலாத்தி
கட்டழகாமிவர்க்காமெனவிடுத்தான்.

---

## மாணிக்கங்கள்வரவு.

### கதைவரலாறு

தானத்தார்பகுதி மாணிக்கங்கள்திருநாமம், அநுராசபுரியிற் கயவாகுமஹாராசா கோணேசர் கோயிலுக்கும் (தன் நாலெல்லையாலயங்கட்கும்) இருபாகைமுதன்மைக்கும், எந்தெந்தக்காலமும் அவரவர்செய்தொழும்பு, திட்டம்பண்ணியவகை.

இது அரசனுரையறியவும்.

---

**இராயர்பெயரும் மாணிக்கங்கள்பெயரும்.**

1-வது புவிபுகழ்பொன்னவராயன்கொடுத்தது நாகரத்தினமாணிக்கம்—தம்பிரானேற்றுக்கொண்டது.

2-வது செகமதுபுகழுஞ்சிதம்பரராயன்கொடுத்தது நவரத்தினமாணிக்கம்—இராசரேற்றுக்கொண்டது.

3-வது கருணையங்கடலாங்காலிங்கராயன்கொடுத்தது கனகரத்தினமாணிக்கம்—வன்னிமையேற்றுக்கொண்டது.

4-வது குறும்பரையடக்குங்கொம்பராயன்கொடுத்தது முத்துரத்தினமாணிக்கம்—வணிகரேற்றுக்கொண்டது.

5-வது மதப்புலியென்னும்மகாகொங்கராயன்கொடுத்தது—மரகதரத்தினமாணிக்கம்—காராளரேற்றுக்கொண்டது.

6-வது சித்தசனிகர்க்குந்தென்னவராயன்கொடுத்தது வயிரரத்தினமாணிக்கம்—மீகாமனேற்றுக்கொண்டது.

7-வது திருவுறைமார்பன் செம்பகராயன்கொடுத்தது பளிங்குரத்தினமாணிக்கம்—கம்மாளரேற்றுக்கொண்டது.

இந்தமாணிக்கங்களையேற்றுக்கொண்டபேர்கள் தங்கள்தங்கள் மாணிக்கங்களுக்கு, ஆடையாபரணமுடைக்கிசைந்தபட்டுவகை, குடிநிலம் விளைநிலம் மாடுகன்று, ஆளடிமை, கொடுத்து அரண்செய்தொழும்புசெய்யவிடுவது.

எந்தெந்தக்காலத்தும் அந்தந்தவம்சத்துமனிதர் இப்படிச் செலவுகொடுத்துநடத்தவேண்டியது, இப்படிச் செலவுகொடுத்துநடத்தாதவர்கள் வறுமையினாலும்நோயினாலும் இராசநெருக்கத்தினாலும் திரவியமழிந்து வம்சமற்றுநரகத்துக்குமேதுவாவார்களென்று அரசனாற்கூறப்பட்டது.

## வரிப்பத்தார்,

### வரிப்பத்தாரில் ஐந்துபண்டாரத்தார்திருநாமம்.

க-வது கதிர்மணிமார்பன் கனகசபைப்பண்டாரம்
உ-வது கல்வரைப்புயனுங்கயிலாயபண்டாரம்
ங-வது அன்னசத்திரனும் அம்புயாபதிப்பண்டாரம்
ச-வது சித்திரமொழியான் திருவடிப்பண்டாரம்
ரு-வது பெருநிதிக்குவையான் பெரியபிள்ளைப்பண்டாரம்

## கலியாணத்துக்குச் செய்தொழும்பு.

### முதன்மைமாருட்கலியாணம்வந்தால், தானம்வரிப்பத்தார் செய்தொழும்பு.

வரிப்பத்தாரில் ரு-வது பெரியபிள்ளைப்பண்டாரத்தார்கிளையில் மனிதர்கள்செய் தொழும்புகளாவன:— வளவுவேலிகட்டல், வீடுவேய்தல், தெருச்சுற்றுச்செதுக்கல், தூர்த்தல், பந்தல்விதானஞ்செய்தல், அடுப்புவெட்டல் சந்தனமிடல் ஆகியஇவைகளேயாம்.

ச-வது திருவடிப்பண்டாரத்தார் கிளையில்மனிதர்கள்செய் தொழும்புகளாவன:— நெற்குத்தல், சாடி கிடாரம்முதலிய சர்வபாத்திரங்களும் விளக்கல், உதகமெடுத்தல்,மெழுகல், தீற்றல், கல்லைக்கிலையிடுதல் இவைகளேயாம்.

ங-வது அம்புயாபதிப்பண்டாரத்தார்கிளையில்மனிதர்கள்செய் தொழும்புகளாவன:— விளக்கேற்றல், அரசாணியலங்கரித்தல், பூரணகும்பம்நிறுத்தல், நெற்குவித்தல், பலகைபோடல், பாய்விரித்தல், பூமாலைதொடுத்தல் பஞ்சணைவிதானம்பண்ணல் இவைகளேயாம்.

மேலேசொல்லப்பட்ட மூன்றுகிளையில்மனிதருங்கூடிச்செய்யுந்தொழும்புகளாவன:—அமுதுகறிசமைத்தல், மீட்டல், ஆற்றல், பகிர்தல் இவையாகும்.

வரிப்பத்தாரிற் பெரியபிள்ளைப்பண்டாரத்தார்கிளையில்மனிதர் தட்டும் வெற்றிலைபாக்குமெடுத்துவர, தானத்தாரிற் செம்பகராயன்கிளையில்மனி

தர் நாட்டவர்களுக்கு வளமைப்பாடாக வெற்றிலைபாக்குவைத்துக் கலியாண மின்னநாளிலின்னநேரமென்றுதிட்டஞ்சொல்லிவருகிறது.

க-வது கனகசபைப்பண்டாரத்தின்கிளையில்மனிதர் முதன்மைக்குச் சொன்னவிதிதவறாமல் நீராட்டி மணக்கோலமாயலங்காரஞ்செய்வது.

பொன்னவராயன்கிளையில்மனிதர் தம்பிரான்மாணிக்கம்முதன்மைநாயகிக்குவிதிமுறைதவறாமல் மஞ்சணீராட்டியலங்காரஞ்செய்வது.

வரிப்பத்தாரிற் பெரியபிள்ளைப்பண்டாரம் திருவடிப்பண்டாரம் அம்புயாபதிப்பண்டாரம் இவர்களின்கிளையில்மனிதர் கோணேசர்கோயிலில் தங்கக்குடைகளும் பொன்னின்குடைகளும் முத்துக்குடைகளும் உருத்திராட்சக்குடைகளும் தங்கப்பூமேற்கட்டியும் இரத்தினப்பிடிச்சாமரையும் தங்கத்திலிரத்தினம்பதித்த ஆலவட்டத்தாளும் மற்றும் கோணேசருக்கு வளமையாகச்செய்யப்படும் சேவனைபாவனைகளுமாகிய இவற்றுடனே நாயகியையும் முதன்மைநாயகனையும் கூட்டிவரத் தன்வரிசையலங்கிருதத்தினுடனே தம்பிரான்மாணிக்கம் முதன்மைநாயகிக்குப்பக்கமாய்வருவது வந்து மணப்பந்தரின்வாயிலிலேநிற்கக் கனகசபைப்பண்டாரத்தார்கிளையில்மனிதரிலொருவர் முன்னேவர முதன்மை, பன்னிரண்டுமுழப்பட்டுக்கொடுக்க மொட்டாக்கிட்டுக் காலுக்குநீர்வார்க்கிறது. பாதம்விளக்கமுதன்மைநாயகி கற்கட்டுக்கணையாளிகொடுப்பது. மணப்பந்தரின்கீழே நாயகனும்நாயகியும் பலகையின்மீதேறிநிற்கத் தம்பிரான்மாணிக்கம்முன்னேவரப் பதினாறுமுழப்பட்டு முதன்மைகொடுக்க மொட்டாக்கிடுவது.

இராசமாணிக்கத்துக்கு முதன்மைநாயகி பதினாறுமுழ வெள்ளைப்பட்டுக்கொடுக்க வாங்கிமொட்டாக்கிடுவது. முற்பாகைக்குத் தம்பிரான்மாணிக்கம் முன்னேநிற்பது. இராசமாணிக்கம் பின்னேநிற்கிறது. பிற்பாகைக்கு இராசமாணிக்கம் முன்னேநிற்கிறது தம்பிரான்மாணிக்கம் பின்னேநிற்கிறது. இப்படிநிற்கக் கனகசபைப்பண்டாரத்தார்கிளையில்மனிதர் கண்ணூறாலாத்திதிட்டம்பண்ணிக்கொடுக்க இரண்டுமாணிக்கமும் ஆலாத்தியெடுத்துக் கண்ணூறுகழிக்கக் கனகசபைப்பண்டாரத்தார்கிளையில்மனிதர் ஆலாத்தித்தட்டு வாங்குவது. அக்கினிசாட்சியாகத் திருமங்கலியந்தரித்து, அரசாணிவலமாக வந்து, அம்மிமிதித்து, அருந்ததிகாண்பித்து, மணவறைக்கட்டிலிலே நாயகனும்நாயகியுமிருக்கத் தம்பிரான்மாணிக்கமுங் கனகசபைப்பண்டாரத்தார் கிளையிலொருபெண்பிள்ளையுமாகிய இருவரும் கீழே தங்கள் வரிசைப்பிரதாபமுடனேயிருக்கவேண்டியது. அதுநிற்க. பட்டணங்கரிற்பிரதானிமாரும் நாட்டுச்சனங்களும் அக்கலியாணச்சபைக்குவருதலைக்கண்டு தானம்வரிப்பத்தாரெதிர்கொண்டுபோய் நன்முகமன்வார்த்தைசொல்லிக் கூட்டிவந்து பந்தரின்கீழேநிற்க வரிப்பத்தார்பாயெடுத்துக்கொடுக்கத் தானத்தார்வாங்கி அவரவர்நெறிமுறைமைதவறாமல் அந்தந்தத் தொகுதியாயிருத்தவேண்டியது. வரிப்பத்

தாரிலையெடுத்துக்கொடுக்கத் தானத்தாரந்தவரன்முறையாகக் கல்லைக்கிலை கொடுக்கவேண்டியது. வரிப்பத்தார் தண்ணீர்ச்செம்பெடுத்துக்கொடுக்கத் தானத்தார் கல்லைக்குத்தண்ணீர்தெளித்துவருகிறது. வரிப்பத்தார் அமுதுகறியெடுத்துக்கொடுக்கத் தானத்தார் அந்தந்தப்பகுதியறிந்து பகிரவேண்டியது சகலரும் அறுசுவையோடசனம்பண்ணியபின் வரிப்பத்தாரில் முன்னிலை கொடுத்த குடியில்மனிதர் கல்லையெடுத்துப்போடவேண்டியது. வரிப்பத்தார் குடங்களிலே தண்ணீர்கொண்டுவந்துவைக்கத் தானத்தார் செம்புகளிலே வார்த்துக்கொடுக்கச் சகலரும் கைவாய்பூசிப் பெருங்கூட்டமாயிருக்க, வரிப்பத்தார் தட்டங்களிலே பாக்குவெற்றிலைகொண்டுவரத் தானத்தார்வாங்கி, அவரவர்பகுதியறிந்து வரன்முறையாகவெற்றிலைபாக்குப்பகிரவேண்டியது. வரிப்பத்தார் பலபலவாசனைகமழக் கிண்ணங்களிலே சந்தனங்கொண்டுவந்து கொடுக்கத் தானத்தார்வாங்கி உத்தளவலங்கிருதமாகப் பூசவேண்டியது. அதன்பின்பு அவரவர் மிகுந்தஉவகையுடனே எழும்பத் தானம்வரிப்பத்தார் அவர்களை முன்னேவிட்டுக்கூட்டிப்போய் வாயிலின்புறத்தேநின்று இருகடலொருகடலானாற்போல இருதிறத்தாரும் நன்முகமனுனவலங்கிருத வசனங்களும்பேசி ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு மிகுந்தஉவகையுடனே அவர்கள் தத்தமிடங்களுக்குச்சென்றபின்னர் தானம்வரிப்பத்தார்சகலரும் இருபந்தியாகவிருந்து போசனமருந்திப்புளகத்துடனே தந்தங்கல்லையைத் தாமேயெடுத்தெறிந்து கைவாய்நீர்கொண்டுபூசிப்பாக்கிலையருந்திப் பன்னீர் சந்தனம் வாசனைகமழ மகிழ்வுடன்பூசி இன்பஞ்செருக்கி யாவருமிருக்கிறவேளையில் முதன்மையெழும்பிவரவேண்டியது. வருவதுகண்டு அனைவோருமெழும்பிப் பாதத்தில்நமஸ்காரம்பண்ணவேண்டியது. அப்போது முதன்மையிருகையேந்தி இருகண்முகிழ்த்து உங்கள்நமஸ்காரம் கோணநாயகருக்குப் பொறுதியென்றுசொல்லவேண்டியது. அப்போது தங்கப்பிரகாசமான சிங்காரமேடையில் முதன்மையையிருக்கப்பண்ணி நீங்களெல்லீரும் நிற்குந்தருணத்தில் தராதலம்புகழுந் தனியுண்ணூட்பூபாலவன்னிபந் தனது வரிசைப்பிரதாப அலங்கிருதத்துடனே வரவேண்டியது. வருகிறவேளை நீங்களனைவருமெதிர்கொண்டிறைஞ்சிமணப்பந்தரின்கீழே மணித்தவிசிலிருத்தவேண்டியது. அந்தவேளையில் வன்னிபமும் இருபாகைமுதன்மையும் அகமகிழ்ந்து அவரவர்குடிக்கிசைந்த தலைமையும்வரிசையுமானிபமுங்கொடுத்து அவ்வவர் பூணத்தக்க ஆடையாபரணமுங்கொடுத்துப் பொன்னவராயன்குடிக்குக்கருகுலக்கணக்குங் காலிங்கராயன்குடிக்கு நெல்லுப்பண்டகசாலைநிலைமையுங்கொடுத்து கொங்கராயன்குடிக்கு எண்ணெய்க்கிணற்றுக்கதிகாரமுங்கொடுத்துக்கொம்பராயன்குடிக்கு அரிசிப்பண்டகசாலைநிலைமையுங்கொடுத்து சிதம்பரராயன் தென்னவராயன், செண்பகராயன், கனகசபைப்பண்டாரம், கயிலாயபண்டாரம் இவர்களைந்துபேருக்கும் பெரியபண்டகசாலையில் ஆபரணாதி நவமணிக்குவைகளிருக்கும்பொக்கிஷவீட்டுப்பெரியநிலைமையுங்கற்பித்து, இவையெல்லாங்கருகுலக்கணக்கிலும் பதித்து அன்றுந்தானம்பண்ணி அன்றுகிடைத்

தபடியே எந்தக்காலத்துக்கும் அவரவர்குடிக்கு நடக்கவேண்டியது; இது நிச்சயமென்றரசனுரைநிறுத்தியது.

இப்படிச்செய்தொழும்பிலேதும் மாறுட்டமிருக்குமானுற் கனகசுந்தரப்பெருமாளிடத்தில் மஹாபெரியவளமைப்பத்ததியிற் கேட்டறிந்துகொள்ளவேண்டியது.

## தீமைக்குச்செய்தொழும்புமுறை.

முதன்மைமாருக்குள் தீமைவந்தாற் செய்தொழும்புகளாவன:—

வரிப்பத்தார் நாலுகாலிலேபந்தரிடுவது. இரண்டுதவிலும் இரண்டுதம்பட்டமும் ஒற்றைக்குழலும் பறையர்சேவிப்பது, அவரவர்செய்தொழும்பு முன்செய்ததுபோலப்பார்த்துச்செய்யவேண்டியது. முதன்மை ஆறுமுழப் பட்டுக்கொடுக்க வரிப்பத்தார்வாங்கி மொட்டாக்கிட்டுப் பந்தரின்கீழிருந்து நெல்லுப்பொரிப்பது. தானத்தார் நெற்பொரிசீலையிலேவாங்கிப் பந்தங்கட்டுகிறது கட்டிலலங்கரிக்கிறது, பாவாடைகட்டுகிறது, வரிப்பத்தார் தேர்கட்டுகிறது, தானத்தார் பிரேதம்வெளியிற்றூக்கிவருகிறது, உதகமெடுக்கிறது, வரிப்பத்தார் நீராட்டுகிறது, இருதிறத்தாருங் கட்டிலிற்பிரேதமேற்றுகிறது வாசனைபூசுகிறது, தானத்தார் முற்பந்திமாரடிப்பது, வரிப்பத்தார்பிற்பந்திமாரடிப்பது பிரேதந்தூக்குவது, காராளர் தேரெடுக்கிறது, தானத்தார் பாடையெடுக்கிறது. வரிப்பத்தார் கட்டையடுக்குகிறது கட்டையிலேபிரேதந்திட்டம்பண்ணுகிறது, காராளரும் இருதிறத்தாருங்கூடி உதகமெடுத்துவருகிறது; வரிப்பத்தார் கொள்ளிவைத்துக்குடமுடைக்கிறது, தானத்தார் மூன்றுநாட்காடாற்றத்தண்ணீரள்ளியூற்றுகிறது, மேடைபோடுகிறது. வரிப்பத்தார் பந்தல்போடுகிறது இளநீர்வைக்கிறது நவதானியந்தெளிக்கிறது அணிகலனைத்துந் தானத்தாருக்குரியது, வஸ்திரமனைத்தும்வரிப்பத்தாருக்குரியது, இத்தொழும்புகள் எந்தக்காலமும் நடந்துவரும்படி அரசன்கட்டளையிட்டது. யாராவதிந்தக்கட்டளைக்கு மாறுபட்டால் தொண்ணூற்றுறுமயிற்பீலி சேர்த்தகட்டால் 3 அடியுமடித்து 3 திருநீற்றுப்பழமுங்குற்றம்வாங்குகிறதென்று கயவாகுமஹாராசன்சொல்லச் சருவமானபேருஞ் சரீரம்நடுங்கி அஞ்சி அடங்கிநின்று தேவரீர் அடியேங்களுக்கு இப்படிக்கொத்த அதிககட்டளைபண்ணினல் அடியேங்கள்தாங்கமாட்டோம், எங்களுக்கிப்படி அதிகஆக்கினைகள்பண்ணவேண்டியதில்லை; தேவரீரென்னகட்டளைசொன்னுலும் அந்தப்படிநடப்போமென்றும் எந்தக்காலத்தும் அரசனுரைதவருேமென்றும் அரசன்முன் விசுவாசஞ்சொன்னுர்கள் என்றவாறு.

இந்தத்தொழும்பு முதன்மைமாருக்கு வம்மிசமிருந்திருக்குதென்று எல்லாருக்குஞ்செய்யவேண்டியதில்லை; கோயில்முதன்மைப் பட்டத்துக்குவருகிறவருக்கும் முதன்மைநாயகிக்குஞ்செய்யவேண்டியதென்று அரசனுரைநிறுத்தியது. இன்னுமரசன்சொன்னகட்டளை:— எந்தக்காலத்தும் இருபாகை முதன்மைமனுஷர்கள் ஒருபாகைக்கொருபாகை கொள்வனகொடுப்பனபண்ணி இருபாகையுமொன்ருய்நடக்கப்படாது.

தானம்வரிப்பத்தாருமப்படியே யொருவர்க்கொருவர் கொண்டுகொடுத்து ஒருவம்சமாகப்படாது. எந்தக்காலமும் முதன்மைக்குமுதன்மை எதிரிக்குடியாகவும், தானம்வரிப்பத்தும் அப்படியே எதிரிக்குடியாகவுமிருக்கவேண்டியது. இந்தத்தேவ்வாக்குத்தவறி ஒன்றுபட்டுநடப்பவர்கள் இராசநிபந்தனையாலும் நோயாலும், வறுமையாலும் வருந்திச் சந்ததியற்று நரகத்துக்குமேதுவாவார்கள். மேற்சொன்னகட்டளைக்குமாறுய்நடப்பதையறிந்தும் திருத்தம்பண்ணுதராசாக்களும் இதுகாரியமிராசாக்களறியவுரையாத காரியகாரர்களும்மேலேசொல்லியபடி நரகத்துக்கேதுவாவார்கள்.

# சூகரவேட்டை.

## திருச்சூகரவேட்டையாடும்படி அரசனிட்டகட்டளை.

தம்பிரான்மாணிக்கம் தன்னுடையவரிசைப்பிரதாபமுடன் வந்து அலங்கிர்தப் பூம்பந்தரின் கீழே நின்று பீதாம்பரப்பட்டுமுடுத்து, முத்துக்குச்சுத்தலைப்பாவுங்கட்டி, தங்கவீட்டியும் பட்டாடைசுற்றித் தன்றோளிலே வைத்துக்கொண்டு, ஆதியாகிய கோணநாயகரையுமெழுந்தருளப்பண்ணி முன்னேபோக பின்னேநடந்து திருச்சூகரநிற்குமிடத்துக்குப் போய் அவ்விடத்திலே கோணநாயகர் அனேக திருவிளையாடல்கள்செய்தருளியபின்னர்த் திருச்சூகரவேட்டையாடுகிறதற்குத் தம்பிரான்மாணிக்கஞ் சூகரத்துக்கெதிரேவர, இருபாகைமுதன்மையுமீட்டியெடுத்துக்கொடுக்க, கனகசபைப் பண்டாரத்தார் ஈட்டிதொட்டுக்கொடுக்க, தம்பிரான்மாணிக்கம் பன்றிகுற்றுகிறது, அதன்பின்பு இராசமாணிக்கம் தனது அலங்கிருதவாட்சியத்தோடே கொண்டுபோய் விழாமண்டபத்தில் ஒப்புவிக்கிறது, வணிகரையடிக்கிறது வன்னியமாணிக்கமும் செட்டிகள்மாணிக்கமும், வரிப்பத்தாரில் பெரியபிள்ளைப்பண்டாரத்தார்கிளையில்மனுஷரும் மஞ்சளரைத்துக்கரைத்துக் கிடாரங்களில்வைக்க காராளர்மாணிக்கம்அள்ளிவன்னிபத்துக்கும், இருபாகைமுதன்மைக்கும் இராயருக்கும் பண்டாரத்தாருக்கும், மற்றும் போதிமையானமனுஷருக்கும் உள்மண்டபத்தினின்று மஞ்சனீரூற்றிவிடுவது. மீகாமன்மாணிக்கமுங் கம்மாளர்மாணிக்கமுஞ் சகலருக்கும் மஞ்சனீரூற்றிவருவது, இது தேவியுடைய கட்டளைப்படிக்கு வெள்ளியங்கயிலாயத்தில் தேவஸ்திரீகள் மஞ்சள்நீரும் வாசனையுமள்ளியெறிந்து விளையாடினமுறைமை. இந்தமஞ்சனீரில் ஒருதிவலையாகுதல் சரீரத்திற்படாதபேருக்குத் திருவுலாச்சேவித்தபலனும் தீர்த்தமாடினபலனுங் கிடையாதென்று ஆதியாகிய பரமேஸ்வரிதிருவாய்மலர்ந்தருளியவாறு இந்தவசனங்கள் கருகுலக்கணக்கன் பத்ததியிலும், புலவன்பத்ததியிலும், கனகசுந்தரப்பெருமாள் பெரியவளமைப்பத்ததியிலுமுண்டு.

# குடிமைவரவு.

இரவிகுலமதனில்வருகயவாகுமஹாராசன்சோழவளநாட்டாலழைப்பித்தது கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன், இவர்களிலைந்துகுடி. இவர்களுக்குக் குடிநிலம், விளைபுலம், முதலான சர்வகாரியங்களுங்கொடுத்துக் கோணேசர்கோயிற்குடிமையென்றுதிட்டம்பண்ணி அவரவர்க்கடுத்த வஸ்திரபூஷணங்களுங்கொடுத்து அரசனுரைத்தகட்டளை:— வன்னிபம், இருபாகைமுதன்மை தானம் வரிப்பத்து இவர்கள் இவர்கள்சொன்ன கட்டளைப்படி நீங்கள் நடக்கவேண்டியது. இந்தக்குடிமைகள் சோழநாட்டிற் காராளர்குடிமையானதினால் நீங்கள்சகலரும் மானமாய்வைத்து நடத்தவேண்டியது. இது கனகசுந்தரப்பெருமாள்பத்ததியிற் பதிப்பித்தமுறைமையாக நடக்கவேண்டியது.

# கயவாகுராசனுபயம்.

திருமருவு கயவாகுமகாராசனும், தனதுபடைமனுஷரும், மாவலிகங்கையருகாக வெகுவிசாலமானவெளியுந்திருத்தி, அதற்கடுத்த அணைகளுங்கட்டுவித்து, அதன்மேல்பால் வெகுகுளங்களுங்கட்டுவித்து க௫0, அவணைநெல்விதைப்புத்தறையுந்திட்டம்பண்ணிப் பத்துக்கொன்று அடையுமெடுப்பித்து, அதற்கருகாக தென்னை க௨000, புன்னை க௨000, இருப்பை க௨000, கமுகு க௨000, ஏரண்டம் க௨000, பசுவினம் க௨000, மேதியினம் க௨000, மும் பலவிதமான புஷ்பச்சோலைகளும் செய்வித்து, ஆதியாகிய கோணநாயரே! இகபரமிரண்டுமறியாமல் நரசென்மமாகப்பிறந்தஅடியேன் எனது சிற்றறிவினால் தேவரீருடைய தபனியவாலயத்தைஅழித்து வேரங்கட்டுவேனென்றுசொன்னபிழையைப்பொறுத்துக்கொள்ளவேணுமென்று விழுந்துநமஸ்காரம்பண்ணி இதுவெல்லாங்கோணேசருக்கென்று தாரைவார்த்துக்கொடுத்துக் குளக்கோட்டுமகாராசா ஒருநாளைக்கு இரண்டவணை அரிசி திட்டம்பண்ணினது. இப்போ அதிகமாக நாளொன்றுக்கு ஓரவண அரிசியும், அதற்கடுத்த செலவுங்கட்டளைபண்ணி, நாளொன்றுக்கு மூன்றவணஅரிசிநைவேத்தியம்வைத்துப் பூசைநடக்கும்படி திட்டம்பண்ணி, கனகசுந்தரப்பெருமாள்கணக்கிலும் பதிப்பித்துச் செப்பேடுவரைந்துகொடுத்து, வன்னிபம், இருபாகைமுதன்மை முதலாகச்சகலரையுமழைப்பித்து, தான்கட்டுவித்த வச்சிரமணிமண்டபத்தினின்று சகலருக்குஞ்சொல்லும்வசனம்:—

ஆதியாகிய கோணநாயகருடையகிருபை அரியயன்முதலானவெவருக்கும் அளவிடற்கரிதாயிருக்கும் மூர்த்தியைத் தரிசனைபண்ணிக்கிருபைபெறத்தக்க இராசாக்கள் மிகுதியுண்டு. அவருள் சிலராசாக்கள்கதைசொல்லுகிறேன் கேட்பீர்களாக.

## புவனேககயவாகு.

எங்கள்குலத்துக்கயவாகுமகாராசாவென்பவர் முனீச்சுரப்பதியில் ஆலயமுந்திட்டம்பண்ணித் திருக்காளேசர் சிவாலயமுமுண்டுபண்ணி, அநவரதகாலமும் பூசைநடப்பித்து வருகிறநாளையில், திரிகைலைநாதர்பெருமைகேட்டுவந்து, பாவநாசசுனையிற்றீர்த்தமும்படிந்து சிவாலயத்தைப்பிரதக்ஷிணம்பண்ணிக் கோணநாயகர்திருப்பாததரிசனமுங்கண்டு, தங்கக்கட்டியாற்றுலாவாரமுமேற்றி, மாணிக்கம்பதித்தபூரணசந்திரப்பதக்கமுஞ்சாத்துவித்து கஅ00 பொன்கொடுத்து அபிஷேகமும்பண்ணுவித்து சிறிதுதிரவியமும் அறைமுதலிலிருப்பாகவைத்து இருபாகைமுதன்மைக்குங் கோயிற்றெழும்புசெய்பவர்களுக்கும் மனம்பூரணமாக வெகுநகைகளுங்கொடுத்துக் கருகுலக்கணக்கிலும்பதிப்பித்து, தென்னை புன்னை மா இருப்பை பூகம் ஆயிரமாயிரம்நிரைத்த பூங்காவனங்களுமுண்டுபண்ணிக் கோணநாயகருக்குத்திட்டம்பண்ணிக் கொடுத்துப் போட்டுத் தன்நகரத்துக்குப்போய் நெடுநாளிராச்சியம்பண்ணியிருக்கிறநாளையில் ஆதியாகிய கோணநாயகரருளினால் மனுநேயகயவாகென்றொருபுத்திரன் பிறப்பான். அந்தப்பிள்ளையிருக்கப் புவனேககயவாகு சிவபதஞ்சேர்வான்.

## பரராசசேகரன் செகராசசேகரன்வரவு.

பரராசசேகரன் செகராசசேகரனென்றிருவர் திரிகைலைக்கு வடமேல்பாலில் இராச்சியம்பண்ணியிருப்பார்கள். அவர்கள் திரிகோணமலைப்பெருமைகேட்டுவந்து பாவநாசதீர்த்தத்திலும்படிந்து இரவிகுலதிலகராகிய தேவராசகுளக்கோட்டுமகாராசனுக்கு இத்தனைஐசுவரியங்களைக்கொடுத்துத் தடுத்தடிமைக்கொண்ட கோணநாயகரேயென்று விழுந்தழுது நமஸ்காரமும்பண்ணி அறுபத்துநாலுசிவாலயமுந்தரிசனைபண்ணி, எழுபட்டுமுத்துமாலையும் வயிரத்தினம்பதித்ததங்கப்பதக்கமுஞ் சாத்துவித்து முத்துக்குடை பவளக்குடை கொடுத்து வெகுதிரவியமும் அறைமுதலிலிருப்பாகவைத்து கருகுலக்கணக்கிலும்பதிப்பித்து நாட்டில் நூல்வாங்கிக்கோயிலுக்கொப்புவிக்கிறதற்கு ஒரு இறைகடமையில்லாத திரியாயூரும், அதற்கு எழுகுளமும் எழுவெளியுங்கொடுத்து என்றென்தக்காலத்துக்குந் திரிக்குநூல்வாங்கிக்கொடுக்கச்சொல்லித் திட்டமும்பண்ணி ஆதியாகிய கோணநாயகர்பாதாரவிந்தந்துதிசெய்து விடையும் பெற்றுத் தங்கள்நகரஞ்சென்று வெகுநாளிராச்சியபரிபாலனம்பண்ணிச் சிவபதஞ்சேர்வார்கள்.

## ஆரியச்சக்கிரவர்த்திவரவு.

ஆரியகுலராசன், பரராசசேகரன், செகராசசேகரனுண்டநாட்டை இராச்சியம்பண்ணிவருகிறநாளையிலே திரிகைலைநாதர்பெருமை கேட்டுவந்து, பாவநாசச்சுனையிற் றீர்த்தமும்படிந்து ஆலயமடங்கலும் பிரதக்ஷணஞ்செய்து திருமுன்னேவந்து அலரிகுலதிலகராகிய குளக்கோட்டுமஹாராசனைத்தடுத்தடிமைக்கொண்ட ஸ்ரீகமலபாதமிதுவோவென்றுவிழுந்து நமஸ்காரம்பண்ணி, எழுந்து கனகவாபரணமும், நவரத்னமாலையுஞ்சாத்தித் தங்கக்குடை பொன்

குடையுங்கொடுத்து, வெகுதிரவியமுமறைமுதலிலிருப்பாகவைத்துக் கருகுலக்கணக்கிலும்பதிப்பித்து, கோணநாயகரிடம்விடையும்பெற்றுத் தன்நகரத்துக்குப்போவான்.

அந்நாளில் இந்தவிடத்தில் பறங்கிக்கலாபம்வரும் அறிந்து முன்சொன்னபடி நடத்திக்கொள்க.

கயவாகுராசன் ஆதியாகிய பரமேஸ்வரனுடையதிருமேனியிற்றொட்டுப்பூசைபண்ணும் இருபாகைமுதன்மையை, கனகமாமணித்தவிசின்மீதிருத்தித் தான் பணியநின்றுசொல்லும் வசனம். இரவிகுலமதனில்வரும் அரசருக்கென்றும் இராசகுருராசனெனவுமருளி, முன்வந்தமுதன்மைக்கு, திரிகயிலைவருகனகருராஜசைவநாயகமுதன்மையென்றும், பின்வந்தமுதன்மைக்கு, விரிகிரணத்திரிகயிலைவருகனகருராஜவேதநாயகமுதன்மையென்றும், இருவருக்கும்பட்டங்கட்டிச் சகலமானபேருக்குங் கயவாகுமகாராசாசொல்லும்வசனம்:—

தேவராசராகிய திருக்குளக்கோட்டுமநுவேந்தர் இந்தத்திரிகோணசலத்தின்மீதே கோணநாயகருக்கு அதிகமானசிவாலயங்களும், எந்நாளும் மாறுமடைபாயுந்திருக்குளமும், வயல்வெளியும், திரவியக்குகைகளுந்திட்டம்பண்ணி, உங்கள்பரவணியென்று அந்தந்தக்காலத்தந்தந்தப்படி எந்தக்காலமும், இந்தத்திருப்பணி, திருக்குளம், செந்நெல்விளைவயல், பூங்காவனம், மாடகூடம், மண்டபம், படிகள், திரவியக்குகைகள்சிதைவுபடாமல் பராமரித்துக் கோணநாயகருக்குத் திருப்பூசை அபிஷேகம், கிராமதேவதைபூசை சிவாலயவலங்காரம், திருக்குளத்திற்பூசைவிதி, இவைமுதலாகச் சிவாலயத்துட்பணிவிடை, அவரவர்செய்தொழும்பு இன்றுசெய்ததுபோல அநவரதகாலமுஞ்செய்யவேண்டியது.

அவரவர்களுக்கு அரசனன்றுகட்டளைபண்ணியபடி புரோசனமெடுத்துக்கொள்ளவேண்டியது.

சிவத்திரவியத்திலேதாவது கவர்ந்தெடுப்பவர்கள், நோயினாலும் வறுமையினாலும்வாடிச் சந்ததியற்று நரகத்துக்குமேதுவாவார்கள். இதையறிந்து சகலமானபேரும் நடக்கவேண்டியதென்றுசொல்லி எல்லாருக்குமமுதமானவார்த்தையுஞ்சொல்லி வெகுதிரவியங்களுமறைமுதலிலொப்பித்துக் கருகுலக்கணக்கிலும் பதிப்பித்து, திருக்குளமுஞ்சிவாலயமும் உங்களுக்குப்பாரமென்று யாவர்க்கும் முகமனருளி, இருபாகைமுதன்மையிருபதம்வணங்கி, இறைபதமுள்ளத்துள்வைத்து, எழில்குலவுமநுராசபுரிநகரடைந்தனன் இரவிகுலகயவாகுவே. கயவாகுராசாவுந்தனதுநகரஞ்சென்று கோணநாயகர்பொற்பாதமிருதயகமலத்துள்வைத்து அநவரதகாலமுஞ்சிவபூசைசெய்து, வெகுகாலமிராச்சியபரிபாலனம்பண்ணித் தேவவநுகூலபோகபோக்கியங்களுங்கிடைத்துச்சிவபதஞ்சேர்ந்தான் என்றவாறு.

அரசர்கள்யாவருங்கொடுத்ததிரவியங் கருகுலக்கணக்கிலெழுதியது. ஆகவிட்டபெருங்கணக்கு, கனகசுந்தரப்பெருமாள் மஹாபெருங்கணக்கிலுண்டு; இது நிசமறியவும்.

# திரவிய இருப்பு.

ஒருகாலத்தில் சோழவளநாடன் தனியுண்ணுப்பூபாலவன்னிபமும், இருபாகைமுதன்மையும், இராயரெழுவரும், ஐந்துபண்டாரத்தாரும், முப்பத்திரண்டுதலைமைக்காரரும் மற்றுமுள்ளயாவரும், மரகதப்பலகைபரவிய வசந்தமண்டபத்திற்கூடியிருந்து, ஏகாக்கிரசித்தமுடையவராய்க் கருகுலக்கணக்கனைப்பார்த்து வன்னிபஞ்சொல்லுவார்:— காற்றையுங் கடலையுங்கனலையும் முகிலையுங் கூற்றையுங் கொடுமிருகசாதிகளையுங் கோதையர்மனதையும், அளவிட்டாலும் உன்னுடையஇருதயத்தை அளவிடுதலருமையென்று இனியவார்த்தைபேசிப் புன்முறுவல்கொள்ள, கருகுலக்கணக்கனும் எழுந்து நமஸ்காரம்பண்ணித் தேவரீர் அடியேன்பேரில் எத்தனையபிமானம்வைப்பீர்களோ? அத்தனைபுத்தியும் விசாரமுமுண்டென்று சொல்லவே வன்னிபமுஞ்சந்தோஷமுற்று, கருகுலக்கணக்கனைக்கேட்ட வசனம்.

வராமதேவர்முதலான எட்டுராசாக்களும், அறைமுதலில்வைத்தபொன் எம்மாத்திரமென்று கணக்கிட்டுத திட்டஞ்சொல்லுதியென்னக் கருகுலக்கணக்கன் சொன்னவசனம்.

ஆதியாகிய கோணநாயகர் அறைமுதலிற் பெரியகணக்கும், வளமைப்பத்ததியும், ஆதியானகல்வெட்டும், அந்தக்காலத்திலே குளக்கோட்டுமஹாராசா த்திட்டம்பண்ணிவைத்தகணக்கும், வடதிசையதனில் சோழவளநாடன் திருநெல்வேலிக்கதிபதியான, கனகசுந்தரப்பெருமாளிடத்திலுண்டு. எங்கள்கையிற்கணக்கு வரவுஞ்செலவும் இவற்றின்கணக்குக்கண்டு வருஷமொருக்கால் சகலருமிருந்து கணக்குப்பார்த்துக் கனகசுந்தரப்பெருமாள் பெரியகணக்கிற்பதித்துவருவது. இப்படியானபெருங்கணக்கு அவரிடத்திலேயன்றி எங்களிடத்திலில்லையென்று அக்கருகுலக்கணக்கன்சொல்ல அப்பொழுது வன்னிபமும் மற்றுமுள்ளயாவரும் பேசிக்கொண்டு இத்திருமலையிற் பெருமைப்பாடும், இதனிலுள்ள புதுமைகளும், எங்கோமானாகிய குளக்கோட்டுமஹாராஜாநிறுத்தியதிட்டங்களுங் கேட்டறியவேண்டுமென்று செண்பகராயரையும், பெரியபிள்ளைப்பண்டாரத்தையும், ஐந்துகுடிமையையும், கூட்டிவிட்டு நீங்கள் நிலாவெளியென்னுமூருக்குப்போய்க் கனகசுந்தரப்பெருமாளுக்குச்சொல்லும்வசனம்.

தம்மிடத்திலே மகாபெரும்புதினமானசிலபெருமைகள் கேட்கவேண்டுமென்று பெரியகணக்கும், வளமைப்பத்ததியும், கல்வெட்டுப்பத்ததியுமெடுப்பித்துக்கொண்டு நாங்கள்வரச்சொன்னோமென்று கூட்டிக்கொண்டுவாருங்கள் என்றுசொல்ல அவர்கள் சென்றுகூட்டிவர வன்னிபமும் இருபாகைமுதன்மையுந்தவிர மற்றுமுள்ளயாவரும் எதிர்கொண்டிறைஞ்சி, வன்னிபத்துக்குச்சரியான வரிசையுடனே இருத்தி ஆதியாகிய கோணநாயகர்கிருபையையும், குளக்கோட்டுராசாவுடைய பெருமையையும் பேசிக்கொண்டிருக்கும்போது

தனியுண்ணுப்பூபாலவன்னியமும், இருபாகைமுதன்மையுங் கனகசுந்தரப்பெருமாளைக்கேட்டவசனம்.

வ்ரராமதேவர்முதலிய எட்டுராசாக்கள், அறைமுதலில்வைத்தஇருப்பு எம்மாத்திரமென்றும், நகைகள் எம்மாத்திரமென்றும் ஒருதிட்டம்பார்க்கவேண்டுமென்றுகேட்ப; கனகசுந்தரப்பெருமாள் சந்தோஷமுற்றுப் பெரியபத்ததிபார்த்துச்சொல்லியது.

வரராமதேவரறைமுதலில்வைத்தபொன் ௬௮௯ களஞ்சு. பொன்னகை ௬௲௬, களஞ்சு. குளக்கோட்டுமஹாராசா அறைமுதலில்வைத்தபொன் ௮௦௪௮௧ களஞ்சு. பொன்னகை ௯௫௧௨ களஞ்சு. கயவாகுமகாராசா அறைமுதலில்வைத்தபொன் ௧௫௦௨௨ களஞ்சு. பொன்னகை ௨௪௯ களஞ்சு. புவனேககயவாகு அறைமுதலில்வைத்தபொன் ௱௯௨௮௪ களஞ்சு. பொன்னகை ௲௯௨௦௬ களஞ்சு. நளச்சக்கிரவர்த்தி அறைமுதலில்வைத்தபொன் ௮௦௯௨௧௧ களஞ்சு. பொன்னகை ௨௯௪௮ களஞ்சு. பாராசசேகரன் செகராசசேகரன் அறைமுதலில்வைத்தபொன் ௭௨௯ களஞ்சு. பொன்னகை ௭௮௧ களஞ்சு. ஆரியராசன் அறைமுதலில்வைத்தபொன் ௨௧௯ களஞ்சு. பொன்னகை ௧௨௦௬ களஞ்சு. நாட்டவர்கள் கோயிற்படியில்வைத்துக்கும்பிட்டபொன் ௨௧௯ களஞ்சு. இம்மாத்திரமும் குகைக்குள்ளே பண்டகசாலையிற் பெரியஅறைமுதலிலிருப்பு இதற்குவகை பிறகணக்கிலுண்டு.

நித்தியபூசைச்செலவிற்குக்கொடுக்கும்படி வெளியிலே பெரியஅறையிலேயிருக்கிறபொன் ௪௮௯ களஞ்சு. இதுவன்றிக் கனவகுப்புத்திரவியம் வேறேயுண்டு. கோயிற்றிரவியம் திருமலையுச்சியினின்றுபார்க்க நாலுபுறத்திலுந்தெரியும். அந்தத்திரவியம் இருக்குமிடம் மத்தளம் நாகம் வெண்கல் வள்ளக்கல் மலைகளிலுண்டு. வள்ளமலைக்குச் சொர்னபைரவர்முதலான எட்டிலக்கம்வைரவரும், உதிரமாகாளியுங்காவல். வெள்ளைக்கல்மலைக்கு ஆபதோத்தாரணபைரவர்முதலான இரண்டிலக்ஷம்வைரவர்களும், இரத்தசாமுண்டியுங்காவல். நாகமலைக்கு அகோரபைரவர்முதலான மூன்றிலக்கம்வைரவர்களும், துர்க்காதேவியும் வக்கமாதேவியுங்காவல். மத்தளமலைக்குச் சொர்னகணபதியும், ஆகிபத்திரகாளியும், ஏகாந்தகன்னியரும், ஒருகோடிசத்திகளும், கடலரசநாயகியும், கடலரசனும், ஒன்பதுலக்ஷபைரவருங்காவல். வள்ளமலையில் ஐம்பதிலக்கங்களஞ்சு பொன்திரவியமுண்டு. வெண்கல்லில் ௭௪. இலக்ஷங்களஞ்சு பொன்திரவியமுண்டு. நாகத்தில் ௮௮ இலக்கங்களஞ்சுபொன்திரவியமுண்டு. மத்தளத்தில் ஒருலக்கத்தைம்பதினாயிரம்களஞ்சுபொன்திரவியமுண்டு. இவையெல்லாம் மதுரைக்களஞ்சுக்கணக்காகவிருக்கும். வள்ளமலையிற்றேவதையனைத்தும் பத்திரகாளியில்அடக்கம். வெள்ளைக்கல்மலையிற்றேவதையனைத்தும் ஆபதோத்தாரணபைரவரிலடக்கம். நாகமலையிற்றேவதையனைத்தும் சொர்னகணபதியிலடக்கம். மத்தளமலையிற்றேவதையனைத்தும் இடபதேவரிலடக்கம். காவற்றேவதைகளதிகமாயிருப்பினும் ஒருபூசையிலடங்கும்.

திருக்குளத்துக்கட்டுவழியே எழிடத்தில் திரவியமுண்டு; அவை ஒன்றரைலக்ஷங்களஞ்சுபொன்திரவியமுண்டு, இவைமஹாகாளபைரவரிலடக்கம்.

# சிந்தூரவிருப்பு.

பாவநாசகச்சுனைக்கு வடபாலாக ஒருதாங்கியுண்டு; அதிலே ஆறுகோணமான கல்லுநாட்டியிருக்கின்றது; அதிலே தேவநாகரத்தாலெழுதியிருக்கும். அதன்கீழேயொருசிந்தூரக்கிடாரம்புதைக்கப்பட்டுள்ளது. கஉ களஞ்சு இரும்பு ஒருகுகையிலிட்டுஉருக்கியதிலே ஒருபணவிடைசிந்தூரம்விட எழுமாற்றுப் பசும்பொன்னும். இதன் கணக்கையுமறிந்துகொள்ளவேண்டியது.

# எட்டுராசாக்கள்திரவியஇருப்பு.

முன்சொன்ன. அ- அரசர்களுங்கொடுத்ததிரவியமும், நகையுமிருக்குமிடம்; ஆலயத்தின் கிழக்குவாயிலில் எழுகற்படிக்குக்கீழே தெற்குப்புறமாக ஒருமுக்கோணக்கல்லுச்சாத்திக் கட்டப்பட்டுள்ளது. அதன்கீழே ஒருமுக்கோணக்கற்கதவுண்டு அதனைத் திறந்து உள்ளேபோக முப்பத்தாறுமுழத்தாழ்வுக்கப்பால் ஒருபண்டகசாலையுண்டு, அதற்குள் எட்டுராசாக்களுங்கொடுத்ததிரவியம் இருப்பாகவைக்கப்பட்டுள்ளது. அதற்குக்காவல் ரணவீரபத்திரனும், ஐந்தலைநாகமும், திரவியக்குகைக்குக்கிட்ட வைரவர்காவல். இதுமூத்தநாயனாரிலடக்கம்.

வடக்குவாயிலிலே ஒன்பதுகற்படிக்குக் கீழே நாற்சதுரக்கதவுண்டு. அதனைத்திறந்துள்ளேபோக மேற்குப்புறமாக அறுகோணக் கல்லுக்கட்டப்பட்டுள்ளது. அதன்கீழ் முப்பத்தாறுமுழத்தாழ்வுக்கப்பால் ஒருபண்டகசாலையுண்டு. அதனுள் எட்டுராசாக்களுங்கொடுத்த நகைகளுண்டு, அதற்கு நாலுமுகப்பத்திரகாளியும்ஐயனுங்காவல்,நகைக்குகைக்குநாலுபுறத்தும் நாலுவைரவர்காவல், கனகக்குகைக்குநாலுபுறத்தும் நாலுவைரவர்காவல் இவரெல்லாம்ஆபதோத்தாரணவைரவரிலடக்கம்.

# சிங்காசனத்துக்கருகானதிரவியம்.

கெர்ப்பக்கிரகச்சிங்காசனத்துக்குவடபாலாக முக்கோணமானகல்லொன்று பாவுகல்லோடேபாவியிருக்கும். அந்தக்கல்லையுயர்த்திப்போட அதிலொரு வாசலுண்டு, அதற்குள்ளே பந்தமுங்கொண்டுபோக, அறுபத்துநான்குமுழநீளத்துக்கு மிகுந்தநெருக்கமானஒருதெருவிருக்கும், அதற்கப்பாலே மிகுந்தவிசாலமான ஒருமண்டபம் உளது. அதனுட் சாத்துப்படிக்கான நவரத்தினங்கள்பதித்த திருவாபரணங்களும், தங்கக்குடை, பொன்குடை, முத்துக்குடை, பவளக்குடை, வெள்ளிக்குடை, தங்கஆலவட்டம், பொன்னாலவட்டம், வெள்ளியாலவட்டம் இவைமுதலானபலதிரவியமுண்டு. பொற்சரிகைப்பீதா

ம்பரங்களும் பட்டாடைகளுமுண்டு. இவை திருவிழாக்காலத்திலெடுக்கவே ண்டியது. எடுக்கும்போது விக்கினேசுரபூசைபண்ணியெடுப்பது.

இதுவன்றிச் சிங்காசனத்துக்குந்தெற்குப்புறமாக அறுகோணக்கல்லு ப்பாவுகல்லோடேபாவியிருக்கும். அதையுயர்த்திவைத்துவிட்டுப்பார்க்க ஒரு வாயில்தோன்றும் அந்தவழியே பந்தமுங்கொண்டுபோக நாற்பதுமுழத்துக்க ப்பால் ஆறுமுழஅகலத்திற் பாதாளமூடுருவஒருகிணறுண்டு. அதற்குப்பலகை போட்டு அப்பாற்செல்ல நூற்றிருபது முழத்துக்கப்பால் ஒருவிசாலமான தபனியமண்டபமுண்டு. அதில் நூறிலக்கங்களஞ்சுபொன்திரவியமுண்டு அது நான்குபிரிவாகவிருக்கும் முதற்பிரிவில் இருபத்தைந்திலக்கங்களஞ்சு ண்டு. இந்தப்பொன் ஒருகாலம் பூசைக்குத்திரவியங்குறைந்தால் விக்கினேசு ரனுக்கும் சொர்நவைரவனுக்கும் பூசைபண்ணி மன்றாட்டஞ்செய்து கிருபை பெற்றுஎடுக்கவேண்டியது.

அவையன்றிக் குளக்கோட்டுமகாராசாப் பதினாறு சிறங்கைகொண்ட நாழியாலே ஒருநாளைக்குஇரண்டவணஅரிசி பூசைக்குத் திட்டம்பண்ணினது. அதன்பின்னர் கயவாகுமகாராசன் ஓரவணஅரிசி தானுந்திட்டம்பண்ணினது ஆக ஒருநாளைக்குமூன்றவணஅரிசியும் மூன்றுகாலப்பூசைக்கு இருகாலப்பூ சை பணிகாரநைவேத்தியம் இப்படி ஐந்துகாலப்பூசைக்கு வரவுஞ்செலவுங் க ண்டுகழித்து, நாளொன்றுக்குப் பதினாறரைப்பொன் மிச்சங்கண்டு செலவு கொடுக்கும் பொக்கிஷவீட்டில் இருப்பாகவிருந்துவருவதென்று கருகுலக்க ணக்கிலுமிருக்கின்றது. இவைமுதலானகோயிற்காரியங்களுள்ள பத்ததிக்கண க்கும் குளக்கோட்டுமகாராசாவளமைப்பத்ததியும் பெரியகணக்கும் கல்வெட் டுங் கோயிற்றிருப்புக்கதைவரலாறும் கோயிலுக்குமுன்னீடுங் கட்டுக்குளப் பற்றும் நிலாவெளிநிந்தவூருமாக அந்தக்காலம் அடியேன்குடியிலுள்ளவர்க ளுக்குக்கிடைத்திருந்தபடியால் இந்தத் திருமலையினிடமாகச் சிவாலயமுண் டுபண்ணியதும் மகாபெருந்திரவியஇருப்பும் தானம்வரிப்பத்தார் வன்னிபம் இருபாகைமுதன்மை இவர்கள்வந்தவரலாறும் அவரவர்களுக்குநடக்கும் வரி சைமானிபங்களும் அவரவர் புரோசனங்களுஞ் செய்தொழும்புகளும் அரசர் பிரான்கட்டளைப்படி அந்தக்காலம் முன்னோர்களெழுதிவைத்த பத்ததிப்படிச் குச்சொன்னதென்று கனகசுந்தரப்பெருமாள்சொன்னவசனம்.

அப்போது சகலரும் சந்தோஷப்பட்டு அதிகமுகமனனவார்த்தைகள் சொன்னார்கள். தருமநெறிதவறாத தனியுண்ணாப்பூபாலவன்னிபமும் இருபா கைமுதன்மையும் கனகசுந்தரப்பெருமாளைப்பார்த்துத் தெட்சண திரிகயிலாய சிவாலயத்தினிற் குளக்கோட்டுமகாராசா ஆதியாகிய மகாலிங்க தாபனம்பண் ணியிருக்கிறது எவ்விடமாகவிருக்குமென்னக் கனகசுந்தரப்பெருமாள் பெரி யபத்ததியின்படிக்குப் பார்த்துச்சொன்னவசனம்.

## மகாலிங்க இருப்பு.

சதுரமானமுழங்கொண்டகோலால் நாற்பத்தெட்டுக்கோல் தாழவெட்ட, அங்கு மூன்றுகங்கையும்வந்துசந்தித்தசுழிமுனைஉண்டு. அவ்விடமாகஆதியிற்பார்நிறுத்தியபான்மையதுபோல எட்டுமலையும் எட்டுமாநாகமும் எட்டுமாதகரியும் எட்டுச்சத்தியுஞ் சூழவாநாட்டி நடுவே மகாமேருவுக்குச்சரியான சிங்காசனஞ்செய்து அந்தஆசனத்தைச்சுற்றிவர அட்டபாலகரைத் தாபனம்பண்ணி வாயிலுக்குத் துவாரபாலகரைநிறுத்தி மற்றும் மூன்றுவாயிலுக்கும் பத்திரகாளி வீரபத்திரன் வயிரவன் இவர்களைநிறுத்தித் திரிகோணலிங்கரையும் வாமபாகமாகத்தேவியையும் ஆசனத்திருத்தி எந்தக்காலத்துக்குங் கண்டப்பிரமாணமட்டிற்சலம் ஏறாமலுங்குறையாமலுந் திட்டம்பண்ணித் தங்கத்தாலே திரிகோணமாமதிலுங்கட்டித், தங்கத்திரிகோணக்கதவும்போட்டு, அதற்குள்ளே கண்ணாடி தங்கஆலவட்டம் விசிறி குடை இவைமுதலான சோடசவுபசாரமெல்லாந்திட்டம்பண்ணிவைத்து, கோடிகோடி ஊழிகாலம்வந்தாலும் அழியாத மாணிக்கத்தூண்டாமணிவிளக்கும் இருபக்கமும்நிறுத்தி, அதற்குமேல் முன்கூறியகோலால் எட்டுக்கோல் உயரத்தில் பொன்னினாலேசிகரஞ்செய்து சிகரத்துச்சியிலே ஒரு பூகம்பழமளவிற் றுவாரம்விட்டு அதற்குப்பதினொருகோலுக்குமேலே செப்புப்பலகைபாவி அதிலே நாப்பணை ஒருபூகம்பழமளவிற்றுவாரம்விட்டு அதற்கு ஆறுகோலுக்குமேலே சாதிக்கருங்கல்லுப்பலகைபாவி அதிலே நாப்பணை அப்படித்துவாரம்விட்டு அதற்கு ஆறுகோலுக்குமேலே அழகினாலே மலையுச்சிபுறத்திட்டம்பண்ணி அதிலே கனகரத்தினசிங்காசனந்திட்டம்பண்ணி, அந்தச்சிங்காசனத்திலும் நாப்பணை அப்படித்துவாரம்விட்டு அதற்குமேலே பரமேசுரனும் பரமேசுவரியும் இருக்கும் தங்கப்பீடிகையில் நாப்பணை அப்படித்துவாரம்விட்டுத் திரிகோணநாதருக்கு எங்கோமான் குளக்கோட்டுமகாராசாச் சிவாலயமுண்டுபண்ணுவித்ததும் மூலவிக்கிரகம் இருக்குந்தன்மையும் இப்படியென்று பத்திப்படிசொன்னேன் என்றுசொல்ல யாவரும் அதிகசந்தோஷப்பட்டுக் குளக்கோட்டுமகாராசனை நரசன்மமென்றுசொன்னாலுந்தோஷம்வரும் அன்றியும் அவர்செய்ததருமத்தை அழிக்கநினைத்தாலும் அழித்தாலும் அவர்களும் அவர்வம்சத்தாரும் அனேககோடிகாலம் நரகத்திற்கிடந்துவருந்துவார்களென்று சொன்னது மெய்வசனமென்றுகூறிக் கனகசுந்தரப்பெருமாளுக்கு அனேக முகமன்சொல்லிப் பின்னர் இந்தத்திரிகயிலாயசிலம்பினுட் புதினமானவைகளைத் தம்மிடத்திற் கேட்கவேண்டுமென்று தம்மைஅழைப்பித்ததென்றுஞ் சொல்லி இருந்தார்களென்றவாறு.

## திருமலையின்கீழ்ப்புதினம்.

செகமதுமகிழமனுநீதிநடத்துந்தனியுண்ணாப்பூபாலவன்னியமும் இருபாகைமுதன்மையும் மற்றுமுள்ளயாவரும் ஒருநாட்பளிங்குமண்டபத்திருந்து

கருணைவாரிதியாங் கனகசுந்தரப்பெருமாளைப்பார்த்து வன்னியங்கேட்ட வசனமாவது: இந்தத்திருமலையின்கீழே சிவாலயமுஞ் சிவகங்கையும் உளவென்றும் இன்னுமதிகமான புதுமைகளுளவென்றுஞ்சொல்லுகிறார்கள் நீர்கேள்விப்பட்டவற்றைச்சொல்லுமென்றுகேட்கக் கனகசுந்தரப்பெருமாள்சொன்ன வசனம்.

நீங்கள் கேட்டபுதுமைகள் நான்கண்ணாலேகண்டதல்ல கயவாகுமகாராசாவுக்குச் சைவநாயகக்குருக்கள் இத்திருமலையின்கீழேயுள்ள புதினங்கள் சிலவற்றைச்சொன்னார் அவைமிகுந்தவிசேஷமாதலால் எமது முன்னோர்கள் பெரியவளமைப் பத்ததியிலெழுதிவைத்ததுண்டு அதனைச் சொல்லுகிறேனென்றுசொல்லும்வசனம்.

திரிகோணவரையில் எண்பத்துநான்குசதுரத்தானமுண்டு. அத்தானங்களில் இருடிகளிருந்து அநவரதகாலமுஞ்சிவபூசைசெய்வார்கள். இவையன்றி எழுகுகைகளுமுண்டு அவற்றிற் சத்தரிஷிகள்பூசைபண்ணுவார்கள். இன்னும் அறுபத்துநான்குகுகையுண்டு அவற்றிற்றேவர்கள்பூசைபண்ணுவார்கள். திருமலையின்கீழேமிகவிசாலமானவெளியும் பொன்மயமான பூமியுமுண்டு அவ்வெளியினடுவே ஒரு நாற்கான்மண்டபமுண்டு. அந்நாலுகாலிலும் நாலுகதவும் நாலுவழியுமுண்டு அவை அயோத்தியாபுரி பிரமபதம் நாகலோகம் தேவபதம் இவற்றிற்குச் செல்லத்தக்கவழிகளாயிருக்கும். அப்பொன்மயமான நிலத்திலே சந்தனம் குங்குமம் அகில் தேவதாரு மந்தாரம் பாரிசாதம் சல்லியகரணி சந்தானகரணி மிருதசஞ்சீவி இப்படியான மேலானமரங்களுண்டு. அவற்றினடுவே ஆகாசகங்கையிருக்கும். அதற்குமேல்பால் இரத்தினமணியாலயமும் நவரத்தினசிங்காசனமுமுண்டு அதிலே ஆதியாகிய பரமசிவனும் பரமேசுவரியும் வாசமாயிருப்பார்கள். அதற்குமேல்பால் தங்கக்காசுக்குவியலொருபக்கம் துங்கஅரிசிக்குவியலொருபக்கம் நாகரத்தினக்குவியலொருபக்கம் நவரத்தினக்குவியலொருபக்கம் பொற்பாளக்குவியலொருபக்கம் இப்படியிருக்கும். அதிலே தேவர்களும் இருஷிகளும் தும்புருநாரதரும் கின்னரர் கிம்புருடர் கந்தருவர்களும் சந்திரசூரியரும் இந்திரன்முதலான அட்டபாலகர்களும் இந்திராணிமுதலான தேவஸ்திரிகளுந் திருப்பாற்கடல் முதலான சத்தவாரிதிகளும் மகாமேருமுதலாகியகிரிகளும் கற்பகதருமுதலிய தருக்களும் விஷ்ணுமுதலாகிய தெய்வங்களும்சூழ ஆகாசநதிவரும் காசியிற்றீர்த்தமும் காவேரிநீரும் அதிகமான பாவத்தையழிக்கின்ற மாவலிகங்கைநீரும் அனுதினமும் அாணிருபதம்விளக்கி ஆற்றிற்பாயும். அதுவன்றி முன்சொன்ன தேவாதிகளனைவரும் அவ்விடம்விட்டுப் புறத்துமிருப்பார்களென்று குருக்கள்சொல்லி செந்தாமரைப்பூ வெண்டாமரைப்பூ விபூதி சந்தனம் தீர்த்தம் அடைகாய் இவையெல்லாங்கொண்டுவந்து கயவாகுமகாராசனுக்குக்கொடுக்க அவ்வரசன் மிகுந்தசந்தோஷமுற்று நாம் அந்தத்தரிசனைகாணப்போகக்கூடாதோவென்றுகேட்கக் குருக்கள்சொன்னவசனம்.

இப்பொழுது அவ்விடத்திற் பங்குனிஉத்தரத்திருநாள் நடக்கின்றது. அன்றியும்அரனருளில்லாமற்போதல்கூடாது எனென்றால் முதலாம்வாயிலில் ஓரிலக்கம்வைரவர்காவல் இரண்டாம்வாயிலிலே பத்திரகாளியுங் கன்னிமாரும் ஐயனருங்காவல் மூன்றாம் வாயிலிலே துர்க்கையுஞ்சாமுண்டியுங் காவல். நான்காம்வாயிலிலே எட்டிலட்சம் நாகராசர்கள் காவல் ஐந்தாம்வாயிலில் ஆபதோத்தாரணவைரவரும் ஆதிவீரபத்திரருங்காவல் ஆறாம்வாயிலிலே அகோரவைரவர் முதலான ஆறிலக்கம்வைரவர்கள்காவல். ஏழாம்வாயிலிலே நாலுமுகப்பத்திரகாளியும் ஒன்பதிலக்கங்கன்னிமாருங் கங்காளவைரவருங்காவல். எட்டாம்வாயிலிலே விட்டுணுவும் அனேகதேவத்தலைவர்களுங் காவல். ஒன்பதாம்வாயிலிலே அனேகபூதத்தலைவர்கள் காவல் பத்தாம்வாயிலில் சுப்பிரமணியரும் நவவீரருங்காவல். ஆலயத்தினெட்டுத்திக்கிலும் திக்குப்பாலர்களும் அட்டசத்திகளுங்காவல். ஆனபடியாலவ்விடஞ்செல்லுதல் அரிதாயிருக்குமென்று சொல்ல அரியணையிலிருக்குமரசனும் இப்புதுமைகளெல்லாங் கேட்டுச் சரீரம்வெயர்த்துப் புளகங்கொண்டு கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பஞ்சொரிய அயர்ந்துயோகநித்திரையாயினன். அப்பொழுது அவன் முன்கேட்டவைகள்யாவற்றையுங்கண்டு சிவதரிசனமுஞ்செய்து ஆனந்தங்கொண்டிருக்கிறவேளையிற் கிழக்குவாயிலிலே மிருந்தஆரம்பங்கேட்டது. அது எதென்றுபார்க்க அதிலே ஒரு தங்கஉப்பரிகையின்கீழுள்ள தமனியப்பூம்பந்தரின்கீழே நவரத்தினசிங்காசனத்திலே இரத்தினமுடிதரித்த ஒருகோடிதேவராசர்கள் பணிசெய்யத் தேவஸ்திரிகள் திருநடனஞ்செய்ய இருபுறமும்வெண்சாமரம்வீச தங்கக்குடை பொன்குடை பொற்கொடி பொன்னாலவட்டம் இவைநிழற்ற இந்திரன்முதலிய தேவத்தலைவர்கள் பணிந்து பணிகேட்கத் தேவர்கள்பூமழைபொழியக் குளக்கோட்டுமகாராசன் சிங்காரக்கொலுவிருத்தலையுந்தரிசித்தபின்னர் யோகத்துயில்நீங்கிக் கண்விழித்துக் குருக்கள்சொன்னபுதுமைகளிலும் பதின்மடங்குபுதுமைகண்டேனென்று இருதயமகிழ்ந்து குருக்களையும் நமஸ்காரம்பண்ணி முகமன்கூறி அனுப்பினன் அக்கயவாகு மகாராசன் என்றுநமதுமுன்னோர்கள் அக்காலத்தெழுதிவைத்த பெரியவளமைப்பத்ததியிலுள்ளபடியே அடியேனுஞ்சொன்னேனென்று கனகசுந்தரப்பெருமாள்சொல்ல யாவருங்கேட்டுமனமகிழ்ந்து முறைப்படியேகோயிற்றொழும்புகள் செய்து நல்லபவிஷம்பாக்கியமும்பெற்றிருந்தார்கள்.

## திருநாள்.

திருமருவுதெட்சணதிரிகயிலாயகோணைநாயகருக்குப் பங்குனியுத்தரத்திருநாள் பத்ததியாகச் சொல்லியிருக்க ஆனியுத்தரத்திருநாள்நடக்குந்தன்மையாதென்று வன்னிபமும்இருபாகைமுதன்மையும் மற்றுமுள்ளயாவருங் கனகசுந்தரப்பெருமாளைக்கேட்கப் பத்ததிப்படி அவர்சொன்னவசனம்.

ஒருகாலத்தில் வன்னிபமும் இருபாகைமுதன்மையும் கொம்புச்சந்திமண்டபத்தில்வந்திருக்கும்போது வன்னிபத்துக்கும் இருபாகைமுதன்மைக்கு

ஞ் சற்றுமனவிரோர்தமுண்டாகிப் பங்குனியுத்தரத்திருநாள் நடத்திக்கொள்ள முடியாமல் விட்டுவிட்டார்கள். பின்னர் வைகாசிமாதம் பின்பதினைந்தில் யாவருங் கிழக்குவாயிலிற் றபனியமண்டபத்தில்வந்து வன்னிபத்தையும் இருபாகைமுதன்மையையும் அழைப்பித்து அவரவராசனத்திருக்கச்செய்து யாவரும் நமஸ்காரம்பண்ணிச் சித்திரவித்தாரகவிப்புலவனும் கனகசுந்தரப்பெருமாளுஞ்சொன்னவசனம்: தேரீர்களுடையதிருமுகம்பார்த்து அடியேங்கள் ஒரு விண்ணப்பஞ்சொல்லுகிறதற்கு மிகுந்தபயமாயிருக்குதென்று நமஸ்காரம்பண்ண அப்பொழுது வன்னிபம்அவர்கள்முகத்தைப்பார்த்துச்சிறிது புன்முறுவல்செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள்சொன்னவசனம்: விசாலம்பொருந்திய கடல் கலங்குவதுண்டானால் அந்தக்கடல் தானேதெளிவதன்றி உலகத்தாராற்றெளிவிக்கமுடியாது அதுபோலத் தேவரீர்களும் சிந்தையுட்டெளியுமென்றுசொல்ல வன்னிபமும் இருபாகைமுதன்மையும் ஒருவரையொருவர்கட்டித்தழுவிக்கொண்டு சந்தோஷமானபின்பு இருபாகைமுதன்மையைப்பார்த்து விதிமுறையாகச்சொன்ன பங்குனியுத்தரத்திற்குக் கொடியையேற்றிக்கொள்ள முடியாமற்போய்விட்டது இனிமேல் எந்தமாதம் நல்லதென்றுகேட்கச் சோதிடவிதானநிலையறியும் அதிகசித்திரவித்தாரப்புலவன்சொன்னவசனம்: பங்குனி உத்தமம். ஆனி மத்திமம். ஆடி அதமம். ஆவணி அதமத்திலதமம் மற்றும் மாதங்கள் நினைக்கவும்படாது. இனி ஆனியுத்தரங்கொள்ளலாம். அதுதப்பில் அந்தவருஷம்விழாநடத்தாமல்விட்டு மற்றவருஷம்பங்குனியிலும் ஆனியிலும் இரண்டுமுறைவிழாநடத்தவேண்டும். இந்தஇரண்டுமாதமுமல்லாமல் மறுமாதங்களிற் கொடியேற்றித்திருவிழாநடத்தினால் இராசாக்களுக்கும் ஊராட்சிக்காரர்களுக்கும் குருக்கள்மாருக்கும் சனங்களுக்குமாகாது. திருவகலும் விளைவுகுன்றும் மழைவளஞ்சிறக்கும் நீசசோரர்பயமுண்டு. ஆதலால் ஆனியுத்தரத்திற் கன்னிமுகூர்த்தமாகக்கொடியேற்ற நல்லது குற்றமில்லையென்றுபுலவன்சொல்லக் கனகசுந்தரப்பெருமாள் சொன்னவசனம். குறித்த பங்குனிமாதவிழாத் தப்பிப்போனபடியாற் கோயிற்பிராயச்சித்தம்பண்ணிக் கொடியேற்றவேண்டுமென்ன வன்னிபமதற்குச்செலவென்னவேண்டுமென்றுகேட்கச் செலவுகணக்குக்கருகுலக்கணக்கிலுண்டென்ன. அப்பொழுது கருகுலக்கணக்கன்சொன்னது ஆயிரத்தெழுநூறுபொன் மேற்செலவுக்குவேண்டுமென்ன, அந்தப்படி வன்னிபம் செலவுகொடுத்துப் பிராயச்சித்தம்பண்ணிக் கொடியேற்றி விழாநடத்தினது. ஆதித்தன் அஸ்தமனமானபின் முற்சாமம் பூசையலங்காரம் ஆடல்பாடல்செய்யவேண்டியது. நடுக்கூறிரண்டுசாமமும் வீதியிலே விழாநடத்தவேண்டியது. நாலாஞ்சாமந்திருச்சயனம். அவ்வேளையில் ஆடல்பாடல்களிற்சிறிதுமாகாது. அப்படி நடத்தினால் ஊருக்குங்குருக்கள்மாருக்குமாகாது. அதுவன்றிக் காலவிழாவும் ஆதபனைக்கண்டு இரண்டரைநாழிகைக்குள் விழாநடத்தி அலங்காரநைவேத்தியம் முடிக்கவேண்டியது.

ஆதியாகியகோணைநாயகரைக் காலவிழாவுக்குஎழுந்தருளப்பண்ணச் சமயம் இல்லாதிருந்தால் அத்திரதேவரையெழுந்தருளப்பண்ணி அலங்காரநை

வேத்தியஞ் செய்யலாமென்று அந்நாளிற் குருக்கள்மாருந் தெய்வப்புலவனும் விதிமுறையைச்சொன்னபடியால் எமதுமுன்னோர்கள் வளமைப்பத்ததியில் எழுதிவைத்தார்களென்றுவன்னிபம்முதலிய யாவருக்குங் கனகசுந்தரப்பெருமாள் வளமைப்பத்ததியின்படிசொன்னவசனம்.

## கழனிமலை.

மருமருவு குவளையணிதருநிகர்கரத்தினன் தனியுண்ணாப் பூபாலவன்னிபமும் இருபாகை[illegible]தன்மையும் மற்றும் சகலமானபேரும் வச்சிரமணிபாவும் மகாமண்டபத்தில்வந்திருந்து கருணைவாரிதியாங்கனகசுந்தரப்பெருமாளைப்பார்த்து வன்னிபஞ்சொன்னவசனம்: இந்த இலங்காபுரியிற்பெரிதாகிய பலபருவதங்களுங் கற்குகைகளும் விசாலமானநிலவறைகளும் இப்படிக்கொத்த அரணாகியவிடங்களிருக்க ஒருகாலம் கலாபம்வருமென்றும் அந்தவேளை கழனிமலைக்குத் திரிகயிலாயநாதரை எழுந்தருளப்பண்ணி அவ்விடத்திற் சிவாலயமுண்டுபோயிருங்களென்றுஞ்சொன்னதென்ன விகாரமென்றுதெரியவில்லை அதனைஎங்களுக்குச்சொல்லவேண்டுமென்றுகேட்கக் கனகசுந்தரப்பெருமாள் சொன்னவசனம்.

வெள்ளியங்கயிலாயத்தில் ஆதியாகிய பரமேசுவரனுக்கும் பரமேசுபரிக்கும் திருக்கலியாணமென்று உலகமும் அதில்வாழுஞ் சகலசீவராசிகளும் போனதருணத்தில் அகத்தியஇருஷியும் வெள்ளியங்கயிலைக்கு முக்காதவழிக்குக்கழனிமாமலையென்றொருமலை உண்டு. அதிலே முனிவரும்வர தேவர்கூட்டமும் விட்டுணுமுதலியோருங்கயிலையில்நிற்க வடபால்தாழ்ந்து தென்பாலுயர சகலரும் நடுக்கமுற்றுச்சிவசிவவென்றார்கள். அப்பொழுது பரமசிவம் விட்டுணுவைப்பார்த்து யாதுபுதினமென்ன, சுவாமி தென்பாலிருக்குங் குறுமுனி இவ்விடம்வருவதற்குக் கழனிமலையில்வந்தார் ஆனபடியால் வடபால்தாழ்ந்து தென்பாலுயர்ந்ததென்றுசொல்ல சகலரையும் அவ்விடம்நிற்கப்பண்ணித் தாம் அகத்தியரிடத்துவந்து நாமிந்தமணக்கோலத்தோடுவந்து உமக்குத் தரிசனந்தருவோம் நீ இலங்காபுரியிற் சமனையங்கிரியால்வரும் மாவலிகங்கையிற் கரசையங்கரையினருகாய்எம்மைநினைத்துத் தியானித்திருக்கவேண்டியதென்று திருவாய்மலர்ந்தருளிப் பரமசிவமுங்கயிலையங்கிரிக்கெழுந்தருள அகத்தியரும்மகாகிலேசமுற்றுத் திரும்பிவரும்வழியில் வெகுவெகுபுதினமும்நடப்பித்து இலங்காபுரியில் திரிகயிலாயமாகியகோணமலைக்குமுக்காதவழியிலிருக்கும் கழனிமலையில்வந்திருந்து சிவபூசைபண்ணித் திரிகோணமலையையுந் தரிசனம்பண்ணிப் போகவேண்டுமென்றுநினைத்து வடகயிலையென்றுந் தென்கயிலையென்றும் வேறில்லாமற்சமனாயிருக்கும். ஆதலாலவ்விடத்திலும் இப்பொழுது திருக்கலியாணமிருக்கும். நாம் போகலாகாதென்றுநினைத்துக் கரசையம்பதியிற்போய்ச் சிவலிங்கதாபனஞ்செய்து பூசைபண்ணிக்கொண்டிருக்கிறவேளையில் ஆதியாகியபரமசிவம்ரிஷபாரூடராய்த்தேவி

யோ் மெங்கூடமணக்கோலத்தோடுபிரத்தியக்ஷமாய்க்காட்சிகொடுத்தார். அகத்திய ருங்கண்டுதரிசித்து மிகுந்தவாழ்வைப்பெற்ருர். இப்படிஅகத்தியர்வந்து சிவபூசைபண்ணினபடியால் இந்தக் கழனிமலைக்குத் திரிகோணகண்டவரையெனறு திருநாமமானது. அதற்குமேல்பால் கற்கிரியென்ருெரு மலையுண்டு. அதிற்கல்லுமாளிகையும் சுற்றுமதிலும் அதற்கருகாக வெகுமலைச்சாரல்களுங் கூட்டங்கூட்டமாயுண்டு. மலையருவி மாருமல் மடைகொண்டு பாய்ந்துநிற்கும். வடகயிலைக்குமுக்காதமாய் அங்கேயொருகழனிமலையிருப்பதினுலும் இங்கும் அகத்தியமாமுனி பூசைபண்ணினதாலும் இந்தத் திரிகயிலைக்குமுக்காதமிருப்பதினுலும் இந்தக்கழனிமலையும் அதிகமாகியதலமென்று திருவுளம்பற்றினதென்றும் பத்தியின்படி கனகசுந்தரப்பெருமாள்சொல்லச் சகலருங்கேட்டு அகமிகமகிழ்ந்து அரன்தொழும்புசெய்திருந்தார்கள்.

# திருக்குளங்கட்டினது.

திருமருவுதிரிகயிலைமாநகரில் மனுநீதிநடத்திவருந் தனியுண்ணுப் பூபாலவன்னிபமும் இருபாகைமுதன்மையும் மற்றுஞ்சகலரும் மரகதப்பலகைபாவும் வசந்தமண்டபத்திற்கூடியிருந்து கனகசுந்தரப்பெருமாளைப்பார்த்து வன்னிபங்கேட்டவசனம். எங்கோமானுகிய குளக்கோட்டுமகாராசாச் சோழநாட்டால்வருகையிற் பூதப்படைகொண்டுவரவுமில்லை. பூதங்களாற் றிருக்குளங்கட்டினதென்றும் இலங்காபுரியில் மும்மலைத் தாடகை ராச்சியம்பண்ணியிருந்ததென்றும் சொல்லுகிருர்கள். அதனை எங்களுக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்னச் சந்தோஷப்பட்டுக் கனகசுந்தரப்பெருமாள் சொன்னவசனம். வடகரையிற் கலிங்கமாநகரென்ருெருநாடு அதற்குஇருபத்தொருகாதவழிக்கப்பால் வடபாலாக அசோககிரியென்ருெருபட்டணம் அந்தப் பட்டணத்தை இராச்சியஞ்செய்வது அசோகசுந்தரனென்னுமிராசா அவன்தேவி மனோன்மணிசுந்தரி. இந்தராசாவுக்குமனோன்மணிசுந்தரிபெற்றபிள்ளை வாரந்துகட்டினசிகையும் எயிறுகுறையாத லெட்சணமும் அழகுசவுந்தரியமான தனபாரமும் அலங்கிருதமானவசனமுமாகப் பிறந்தபிள்ளையைக் கண்டு இராசாவுக்குச்சொல்ல அரசனும் விசாரப்பட்டுச் சோதிடரைக்கேட்க அவர்கள் இந்தப்பிள்ளை பட்டணத்திலேயிருந்தால் பட்டணத்துக்காகாது மறுராச்சியத்துக்குரியபிள்ளையென்று சொன்னுர்கள். அப்பொழுது அரசனும் அந்தப்பிள்ளையைப்பேழையிலடைத்துப் பெருஞ் சமுத்திரத்தில்விட்டான். அந்தப்பேழை இலங்காபுரியிற் கடற்கரையில் அடைந்தது. அதைக்கண்டவர்கள் இலங்காபுரியை அரசாட்சிபண்ணும் மனுநேயகயவாகுராசனுக்குச் சொன்னுர்கள். அப்பொழுது ராசனும் பிரதானிமாரும்வந்து பேழையையெடுத்துத் திறந்துபார்க்கச் செந்தாமரைப்பூவிலிருக்கும் திருமகளென்ன அழகுசவுந்தரியத்துடனிருக்கும் பெண்பிள்ளையைக்கண்டு என்பிள்ளையென்று அரசனெடுக்கிப் பிள்ளையைமுத்தமிட அப்பொழுது பிள்ளைசிரித்தது

சிரித்தவிடத்துக்குப் பாலநகையூரென்றுபோயிற்று. பின் அந்தப்பிள்ளையைப்பல்லக்கில்வைத்துக்கொண்டு உண்ணாசகிரியென்னுமரண்மனையிலிருந்து இராச்சியம்பண்ணி வருகிறநாளையில் மனுநேயகயவாகுராசனுந்தேகவியோகமானார். அதன்பின்னர் அந்தப்பெண் இலங்கைப்பட்டணத்தை ராச்சியம்பண்ணி வருகிறநாளையில் குளக்கோட்டுமகாராசா திரிகயிலாயச்சிலம்பில் சிவாலயங்கட்டுகிற செய்திகேட்டுத்தனது அறுபத்துநாலு மந்திரிகளை அழைத்து முதல்மந்திரிக்கு ராசகுமாரத்திசொன்னவசனம்.

வடகரையிலிருந்தொரு சைவன் ஓடத்திலேறிவந்து கிழக்குக்கரையிலொரு மலையின்மேலே ஆலயங்கட்டுகிறானென்ற செய்திகேட்டேன் நீபோல் அந்த ஆலயத்தையுமிடித்துக்கடலிலே தள்ளிவிட்டு அவர்களையுமோடத்திலேற்றி அனுப்பிப்போட்டு வாவென்றுசொல்ல மந்திரியும் அரசர்கட் கரசியே, அந்தப்படியே செய்துவருகிறேனென்று நமஸ்காரம்பண்ணி விடையும் பெற்றுக்கொண்டு பதினாயிரம்பேர்சூழ்ந்துவர மதகரியின்மேற்கொண்டு மந்திரிவருகையில் திரிகயிலைக்கு நாற்காதவழியென்னத் திரிகயிலைச்சிலம்பின்மீது ஆலயங்களிலுங் கோபுரங்களிலும் மாடகூடமண்டபங்களிலுமுள்ள தங்கரத்நமுடிகளின் பளபளப்பும் பிரகாசகாந்தியும் ஆகாசமளாவிப்பலவிதமான சுடர்விட்டெறித்தலைக்கண்டு இந்தச் சொர்நமயமான ஆலயஞ்செய்விக்கிறது தேவலோகத்தரசர்களோ நாகலோகத்தரசர்களோ பூலோகத்தரசர்களோ கண்டு கேட்டறியவேண்டுமென்று மதகரியை விட்டிறங்கிவருகையிலே வாயில்காப்பவர்கள் மந்திரிவருகிறஉதாரத்தையும் படையலங்காரத்தையுங்கண்டு அரசனுக்குரைசெய்ய அவன் அவர்களை யழையுமென்னக் காவலாளர்வழிவிட மந்திரியும்வந்து இரத்தினசிங்காசனத்திலிருக்குந்தெய்வீகமான குளக்கோட்டுமகாராசனை வணங்கி எழும்பிநிற்க அரசனுந்தன்னுடைய மந்திரியைப்பார்த்து மந்திரீயென்னதம்பிரானே முடிந்திருக்குதென்றான். வந்தமந்திரியும் இது யாதோவென்று அச்சமுற்றான். அப்பொழுது மந்திரியும் வந்தமந்திரியையும் அவனுடன்கூடவந்த யாவரையுமழைத்துக்கொண்டுபோய்ப் பளிங்குமண்டபத்திருத்தி அறுசுவையுடன் போசனம்பண்ணுவித்து சந்தோஷமாயரசன்முன் கொண்டுவந்துவிட்டான். அதன்பின் அரசர்பிரானாகிய குளக்கோட்டுராசனும் அம்மந்திரியைப்பார்த்து முகமன்பேசி வந்தகாரியமென்னவென்றுகேட்க அவன் அரசனைநமஸ்காரம்பண்ணிச்சொல்லும் வசனம். இந்த இலங்காபுரியை ஆண்டிருந்த புவனேயகயவாகுசுதரான மனுநேயகயவாகுவின் மகள் ஆடகசவுந்தரி இப்போது அரசுசெய்கிறது. அவ்வரசி தேவரீர் திரிகயிலாயமலையிற் சிவாலயமுண்டுபண்ணுகிற செய்திகேட்டு அடியேனையழைத்துச்சொன்னவசனம். தேவரீருடைய சிறீகமலபாததரிசனை கண்டு இவ்விடத்து ஏதொருகாரியமுட்டாயின் எங்களாலியன்றகாரியத்திற்குக் கேட்டுவரச்சொல்லி அடியேனுக்குக்கட்டளையிட்டபடியாலிவ்விடம்வந்தேனென்றுசொல்ல அரசனும் அகமகிழ்ந்து உங்கள் இராசாத்தி உனக்குச்சொன்னவசனம் நான் சொல்லக்கேள் வடகரையிலிருந்து ஒருசைவன் வந்து மலையின்மேலாலயங்கட்டுகின்றான் அதையிடித்துக்

கடலிற்றள்ளி யவர்களையும் ஓடத்திலேற்றியனுப்பிவிட்டு உன்னைவரச்சொன்னதல்லவாவென்றரசனுரைக்க மந்திரியும் நடுங்கி மெய்வசனமென்றுசொல்லிநிற்க அரசனும் மந்திரியையஞ்சலென்றுசொல்லி அதிவிசித்திரமதியூகமந்திரிநீயென்று சந்தோஷப்பட்டுச்சொன்னவசனம். இந்த இலங்காபுரியையாளுங்குமாரத்தி எமதுவம்சத்தாள் எம்மையறியாமற்சொன்னதற்காகநீயச்சப்படவேண்டாமென்று பின்னர் அம்மந்திரியை யரசன்கேட்டவசனம். இச்சிவாலயபூசை விதிமுறையாகநடக்கவேண்டுமென்று வெகுகுளங்கள்கட்டுவித்தேன். ஒன்றும் எனக்குத்திருப்தியாயிருக்கவில்லை. வருஷம் பன்னிரண்டுமாதமும் மாறாமடைபாய ஒருகுளங்கட்டுதற்கு எவ்விடம் நல்லதென்று கேட்க அம்மந்திரிசொல்லுவான். அறுபத்துநாலு குளமும் வயலும் இரண்டுமலைக்குமேல்பாலாயுண்டு அந்த இருமலையையும்பொருத்திக்கட்ட ஒரு பெருங்குளமாம். அதற்கு வயல்வெளி சமுத்திரக்கரையளவுந்திருத்த வெகு விசாலமுள்ள இடமென்று மந்திரிசொல்ல அப்படிப்பாரமானகட்டுக்கட்டிப் பொறுப்பிக்கலாமோவென்ன மந்திரிசொல்லுவான் அடியேனினைத்தபடி தேவரீர் முடிப்பீராகில் ஒன்பதுநாளைக்குள் இந்த மகாபெருங்குளமுங்கட்டுவித்து வயல்வெளியுந்திருத்தி முடிக்கலாமென்ன அரசர்பிரானும் மிகுந்த சந்தோஷப்பட்டு மந்திரியே நீமனத்தில்நினைத்தபடி முடிப்பேன் குளங்கட்டுவிப்பாயென்ன மந்திரியும் விடைபெற்றுச்செல்லும்வேளையில் அரசனுந் தானணிந்தவிலைமதிப்பில்லாதமாணிக்கமாலையையுங்கணையாழியையுங் கொடுத்து மணவார்த்தைப்பாடுஞ்சொல்லியனுப்ப மந்திரியும்போய் இராசகுமாரத்தியைக்கண்டு வணங்கி மாலையையுங் கணையாழியையுங்கொடுத்துக்குளக்கோட்டுராசனுடைய பெருமையையும் பராக்கிரமத்தையுஞ்சொல்லிக் குளங்கட்டுகிற செய்தியையுஞ்சொல்லக் குமாரத்திசொன்னவசனம். பூதப்படையைக் கொண்டுபோய்ச்சீக்கரங்கடலும்மலையும்போலக் குளங்கட்டிமுடித்து வயல்வெளியுந்திருத்தி இரவிகுலதிலகரான இராசாவையுங்கூட்டிக்கொண்டு வருவாய் என்ன மந்திரிசொல்லுவான் பெரும்பூதங்களைக் கூட்டிக்கொண்டுபோய்ச்செய்விக்கவேலைபோதாது. குறட்பூதமாறையும் ஒரு பூதராசாவையுங் கூட்டிப்போகிறேனென்றுசொல்லி நாளொன்றுக்கு இருபத்தோரவண அரிசியும் வேண்டிய மற்றுஞ்செலவு முதயகாலத்தில்வந்து சேரும்படி திட்டம்பண்ணிப்பூதங்களுடன் மந்திரிசென்று அரசனைவணங்க அவ்வரசனும் அம்மந்திரியும் வந்துநின்று அனேகங்காதவழிகோலிக்கற்கரைதிருத்தித்தன்னூற்றுக்காணப் பெரியமண்டபப்படியுங்கட்டுவித்து அம்மண்டபப்படியில்நின்று மதகுக்குச்செப்புப்பீலியும் வைத்து இடைபிங்கலை சுழிமுனை நின்றுலாவுங்கபாலசூத்திரமாகமதகும் அதற்குமையக்கிணறும் உடல்குளமும் சிரசுமையக்கிணறும் மையக்கிணற்றில் பிடித்தலும் நாசிவிடுத்தலுமாய் மையக்கிணற்றில் நாப்பண் ஓங்காரச்சுழி ஒருபோதும் மாறாதமதகும் திட்டமிட்டு மதகு தெரியாமற் சிகரகுப்பாயம் போட்டு மதகுபார்த்துவர ஞானசூத்திர வாயிலும்விட்டுப் பூட்டுந்திறப்புந்திட்டம் பண்ணிமுடித்து இருமலையையும்பொருத்தி மகாபெரும்பருவதம்போலக்கட்டுங்கட்டி அநவரதகாலமும் அலைதாக்

கி நிற்க மகாபெருங்கல்லுகளும்பாவி ஐந்துநாளையில் திருக்குளத்துப்பணி முடித்து ஆறும் ஏழாம் நாளில் திருக்குளக்கட்டினடிவாரத்தினின்று மலை திடர் மரம்வெட்டிச் சமுத்திரக்கரையளவும் மகாபெரும் வயல்வெளியுந் திருத்தி மாறுமடைபாயு மதகில் நீர்பாய ஆறும்வெட்டிமுடித்து எட்டாநாள் திருக்குளத்தினின்று இருபத்தெட்டுக் காதவழிக்கு மலை திடர் மரம் வெட்டி மாபெருங்கங்கைபோலாறும்வெட்டிக் கொண்டுபோய்ச் சமனவரை யருவிவருமாவலிகங்கைக்குக்குறுக்கே மறித்துக்கட்டித் திருக்குளத்துக்குக் கங்கைநீர்கொண்டுவந்தபொழுது விடிந்து இருபத்துநாலுநாழிகையானது. பொழுது அத்தமயனமாகும் ஆறுநாழிகைக்குள்ளே மதகுநீர் கொட்டியாபுரக்கரைக்கும்பாய ஆறும்வெட்டிமுடித்து ஒன்பதாநாள் பதினைந்துநாழிகைக்குள்ளாக அஞ்சு ஆறுதலாகியவான்களும் வெட்டித்திட்டம்பண்ணிக்கொண்டு பூதங்களையும் அவைகளிருக்குமிடத்திற்கனுப்பிவிட்டார்.

அதன்பின்னர் இராசராசனை குளக்கோட்டுராசனும் தனது சதுரங்கசேனையும் மந்திரியுமாக உண்ணைசகிரியென்னும் பட்டணத்துக்குவந்து ஆடகசவுந்தரியென்னும் இராசகுமாரியை விவாகம்முடித்துக்கொண்டு சிலநாளங்கிருந்து இராசாத்தியுடன் திருக்குளம்பார்க்கவந்து பார்த்தபொழுது வடபுறத்தில் ஒருபணிவிருக்கக்கண்டு அவ்வரசி தன்னோடுவந்த ஸ்திரி சனங்களைப்பார்த்து இந்தப்பணிவைக்கட்டுங்களென்ன அச்சொல்முடியமுன் ஆளுக்கொருகல்லாய்வைத்துக் கட்டிமுடித்தார்கள். அவ்விடத்திற்குப்பெண்டுகள்கட்டு என்று பெயரானது. அதன்பின் அரசனும் அரசியும் வந்து திரிகோணைநாயகரையுந்தரிசனைசெய்து சொக்கட்டான்மாதிரியான ரத்னமணிமண்டபமும் பளிங்கினாலொற்றைக்கால்மண்டபமும் சமைப்பித்துத் தரிசனைசெய்துவருகிறநாளில் கோணைநாயகர்கிருபையால் குமாரத்திவயிற்றிற் சிங்ககுமாரனென்னுமொருபிள்ளைபிறந்தது. அந்தப்பிள்ளையுடன் இராசாவும் குமாரத்தியும் உண்ணைசகிரிபட்டணம்போய்ச் சிலநாளிருந்து இராசகுமாரத்தி தேகவியோகமானபின்பு குமாரனை அந்தப்பட்டணத்தை அரசாளவைத்து மந்திரிக்கும் முகமனானவார்த்தைசொல்லிச் சிங்ககுமாரனுக்கு மந்திரியாகத் திட்டம்பண்ணிவைத்து பின் எங்கோமானாகிய அரசனும் தனதுபடையலங்காரத்தோடு திரிகயிலைக்கு வந்து தரிசனைசெய்துகொண்டிருந்தார். முன்முலைத்தாடகையென்றுசொல்வதுபிசகு பிறக்கமுன் தனபாரமிருந்ததினால் முன்முலையாடகசவுந்தரியென்றுபெயராயிற்று. இதுவரலாறுகள் வளமைப்பத்ததியின்படி கனகசுந்தரப்பெருமாள்சொல்ல வன்னிபமும் முதன்மையும் மற்றுஞ்சகலருங்கேட்டுச் சந்தோஷப்பட்டுப் பெருமாளுக்கு அபையகோன்முதலியாரென்றுபட்டமுங்கட்டி வன்னிபந்தங்கத்தால் மூன்றுபட்டுமாலையொன்று கழுத்திற்போட்டுக் கற்கட்டு முன்கைவளையும்போட்டுப்பொன்னரைஞாணுங் கொடுத்துப் பொன்னெழுத்தாணிகூரியுங் கொடுத்துப் பத்ததிக்குப்பொன்னின்கம்பையும்போட்டு மகிழச்செய்தார்.

அதன்பின் முதன்மையும் அவருக்குப் பொற்சரிகைமுத்துக்குச்சுத்தலைப்பாகையும் பொன்னெழுத்துப்பட்டாடைவகையும் தங்கக்குவளை கட்டி

ன உருத்திராக்கமாலையுங்கொடுத்தார். ஏழுராயர்களும் ஏழுவயல்கொடுத்தார்கள். அஞ்சுபண்டாரத்தாரும் அஞ்சுவயல்கொடுத்தார்கள்.

இப்படியேகொடுத்தபின் அபையகோன்முதலியாரை அனைவரும்பார்த்து எங்கோமானாகிய ராசாவின் கட்டளைப்படி அந்தக்காலம்முதலிதுவரைக்கும் உங்கள்குடிக்குளிந்தப்பத்தியுங்கல்வெட்டும் இருந்து வருகிறபடியினால் இந்தச்சிவாலயத்துக்கும் இருபாகைமுதன்மையவர்களுக்கும் செய்தொழும்புகளொருகாலந்தடுமாறவந்தால் எக்காலத்துக்கும் உமதுவம்சத்தார் ஒழுங்குபண்ணவேண்டியதென்றுசொல்லி அனைவருஞ்சந்தோஷப்பட்டு அரன்தொழும்புசெய்துமகிழ்ந்திருந்தார்கள். திருக்குளத்தின்மதகின்திறப்பு எயினர்குலத்துள்ள வனவீரசூரிய உடையார்கையிலிருக்கவேண்டியது.

# ஆசாரிமார்வரவு.

சோழவளநாட்டில் மாந்தையம்பதியார் அக்கசாலைத்தலைவர்மார் இவர்களைக் குளக்கோட்டுமகாராசா அழைப்பித்துத் திரிகயிலாயச்சிலம்பிலிந்த ஆலயங்களும் மதில்களும் பாவநாசச்சுனையும் படிக்கட்டும் மற்றுஞ்சகலதிருப்பணியும் திருக்குளத்துமதகும் விதிமுறையாகச்செய்த ஆசாரிமார் திருநாமம். உலககுருவாசாரி சித்திரகுருவாசாரி வேதகுருவாசாரி அட்சணகுருவாசாரி வாமதேவகுருவாசாரி இவர்களைந்துபேரும் மனதில்நினைத்தபடிகையினாற்செய்யப்பட்ட விசித்திரகுருவாசாரிமார். இவர்களுக்கு அஞ்சவணை வீரைப்புத்தறையுங்கொடுத்துக் கோயிற்றிருப்பணிக்கு முன்னீடுங்கொடுத்து அரசன்சொன்னவசனம். எக்காலமுங்கோயிற்றொழும்புகள் நீங்கள் செய்யவேண்டியபடி செய்திருக்கவேண்டுமென்று கோயிலுக்குள் இவர்களுக்கு ஒருதலைமையுங் கற்பித்தபடியறிக.

# காராளர்வரவு.

வடக்குநாடன் திருநெல்வேலிக்கதிபதி செங்குவளைத்தாரான் செந்நென்முடியினன் அரசரோடெதிர்த்து வாதுவென்றவன் எருடன்மேழியிலங்கும்பதாகையன் அன்னக்கொடையும் ஆவின்பெருக்கமும் செந்நெற்குவியலுந்திரவியக்குப்பையும் நவமணிக்குவையும் நாடொறுமிருக்க மூவருக்களியான் மூவரைக்காப்பவன் அன்னவன்மேன்மையளவிடற்கரிதாம். மனுநீதிதவறுதகுளக்கோடன் திருநெல்வேலிச்சிவாலயத்து நிற்குந்தருணத்திற்சீராளனைகாராளப்பெருமான் திருவானெறியாலயத்தில் அரன்திருமுன்னே காப்புத்தரித்துக் கடவுளின்வாமத்திற் பயபத்தியாகப் பரிவுடன்வருகிற அலங்காரங்கண்டு அதிகசந்தோஷமுற்றுச் சீராளனென்னச்சிவபதந்துதிக்குங் காராளனென்னுங்கருணையங்கடலே உம்மை நானொருவசனங் கேட்கவென்று நினைத்திருக்கிறேனென்னக் காராளனு மரசனைவணங்கி யடியேனைப்போலனேககோடி சனங்களை இரட்சிக்குந்தம்பிரானே அடியேனைக்கேட்கவேண்டுமென்றவசனமேதோவென்ன அரசனுந்திரிகயிலைநாதர்பெருமைப்பா

டுகனைச்சொல்லி உம்முடையகுடியிலொருமகவை எமக்கு அன்பாக அகமகிழ்ந்து தரவேண்டும் அந்தச்சிவாலயத்துக்குத் திருக்காப்புத்தரிக்கவுந் திரவியப்பத்ததிவைத்திருக்கவும், அந்தச்சிவாலயத்துக்கு முன்னீட்டுக்காகவும் அப்பிள்ளைவேண்டியதென்று சொல்லக் காராளனுமகமகிழ்ந்து தன்வம்சத்தில் ஒருகுடியானமனுஷரைக்கொடுக்கக்கூட்டிவந்துஇலங்காபுரியிற் கட்டுக்குளப்பற்றடங்கலு மூராட்சியுங்கொடுத்து நிலாவெளி நிந்தவூராகக் கொடுத்து வளமையாகிய பெரியபத்ததி கல்வெட்டுக்கணக்கு இவையெல்லாங் கொடுத்து வன்னிபத்துக்குச்சரியான வரிசைமானிபமுங்கொடுத்து இனி எந்தக்காலமும் இச்சிவாலயத்தில் நடக்கப்பட்டகாரியங்கள் உன்வம்சததவர்களெழுதிவரவேண்டியது. இந்தப்பத்ததியுமுங்கள்வசமிருப்பதுஒருவர்வசமுங்கொடுக்கப்படாது. சற்புத்திரனுகிப் பொறுதிவிசாரமுள்ள மருமக்களிட மிருந்துவரவேண்டியதென்று திட்டம்பண்ணி எக்காலமுங் கோயிற்றொழும்பு செய்ய அரசன் திட்டம்பண்ணினது. அரசன்கூட்டிவந்த காராளர்திருநாமம் சுவர்ணவுதாரபிள்ளை அறிக.

## புலவன் வரவு.

செகராசரடிபரவு திருக்குளக்கோட்டுமகாராசன் காஞ்சீபுரசிவாலயத்திற்குச்சென்று சிவதரிசனைசெய்து துதிசெய்துநிற்குந்தருணத்தில் தெய்வப்புலவன் சுவாமிதிருமுன்னிலையினின்று சிவதோத்திரங்களோதுகின்ற இராகப்பண்ணையும் ஆசாரவலங்காரத்தையுங்கண்டு தெய்வப்புலவனைப் பார்த்து உன்வங்கிஷத்தில் ஒருபிள்ளை தரவேண்டுமென்றுகேட்கத் தெய்வப்புலவனும் அரசனுடையபாதத்தில்விழுந்து நமஸ்காரம்பண்ணித் தேவரீர் அடியேனை ஒருபிள்ளை தரச்சொல்லிக்கேட்டது என்னகாரியத்திற்கென்ன இலங்காபுரியிலே திரிகயிலைநாதர்திருவாலயத்திற்றிருமுன்னின்று நாதகீதத்துடன் சிவதோத்திரமோதுதற்காகவென்றுஅரசன்சொல்ல மிகவுஞ் சந்தோஷப்பட்டுத்தன்குடியில் ஒருகுடித்தனமழைத்துக்கொடுக்க அவர்களுடன் அரசன் திரிகயிலைக்குவந்து நித்தியமுஞ்சிவாலயத்திற்றிருமுன்னே நாதகீதம்பாடத்திட்டம்பண்ணிப் பள்ளவெளியில் இரண்டவணவிதைப்புத் தரையுங்கொடுத்துக் கொட்டியாபுரத்திற் சமுத்திரக்கரையருகாக ஒருகிராமத்தை நல்லதோஎன்றுகேட்கப் புலவனும்பார்த்து நல்லவூர் அடியேனுக்குச் சம்பூரணமென்ன அரசனும்மகிழ்ந்து அந்தவூருக்குச்சம்பூரென்றுபேரிட்டு எந்தக்காலத்துக்கும் உன்குடியில் மனுஷருக்குப் பரவணியாகத்தந்தோமென்று செப்புக்கம்பை போட்ட பத்ததியுங்கொடுத்துக் கோயிற்றிருவாசகப்புலவனென்று அரசனுரைநிறுத்தியது. அரசன்கூட்டிவந்த தெய்வப்புலவன்றிருநாமம் சிவசித்திரப்பெருமாள்புலவன்.

## வன்னிபம்வரவு.

செங்கமலமலர்மாதுதங்குபுய செயராசசேகரர்களடிபரவுகோன் தினகரன்குலமதனில் வருகுளக்கோட்டுமன் சென்றுமாமதுரையணுகித் திகழ்ம

திக்குலராம தனியுண்ணாப் பூபாலவன்னிபம் முதலாக எத்தனைவன்னிபம் இத்தலத்துக்கு அரசுரிமைபண்ணினதென்று கனகசுந்தரப்பெருமாளைக்கேட்க அவர்சொன்னவசனம். ஆதியாக முன்மதுரைமாநகரால்வந்த வன்னிபம் திருமலைநாடன் தனியுண்ணாப்பூபாலன் சுந்தரநாததனியுண்ணாப்பூபாலன் அரசுநிலைதவறாத தனியுண்ணாப்பூபாலன் தன்தாரதார பிறர்தாரபுத்திர தனியுண்ணாப்பூபாலன், மனுநீதிதவறாததனியுண்ணாப்பூபாலன், மண்டலநாயகதனியுண்ணாப்பூபாலன், பசுபதிதனியுண்ணாப்பூபாலன், இலங்கைகாவலதனியுண்ணாப்பூபாலன், குணதுங்கராமதனியுண்ணாப்பூபாலன், அமராபதிதனியுண்ணாப்பூபாலன், சந்திரநேசதனியுண்ணாப்பூபாலன், புவனேயகாவல தனியுண்ணாப்பூபாலன், குறும்பர்கள்கோன்தனியுண்ணாப்பூபாலன், மாற்றலர்பெருமான்தனியுண்ணாப்பூபாலன், செகதுங்கபோசதனியுண்ணாப்பூபாலன், கயிலாயநேசதனியுண்ணாப்பூபாலன், வெற்றிநாயகதனியுண்ணாப்பூபாலன், தன்னுண்மைகுன்றாத்தனியுண்ணாப்பூபாலன். பொன்னவராயதனியுண்ணாப்பூபாலன், உத்தமமொழியான்தனியுண்ணாப்பூபாலன், செல்வநாயகதனியுண்ணாப்பூபாலன் வெற்றிநாயகதனியுண்ணாப்பூபாலன், மருதநாயகதனியுண்ணாப்பூபாலன், முருகநாயக தனியுண்ணாப்பூபாலன், சுப்பிரகாயதனியுண்ணாப்பூபாலன், நல்லநாயகதனியுண்ணாப்பூபாலன், வல்லிகாவலதனியுண்ணாப்பூபாலன், பிள்ளைநாயகதனியுண்ணாப்பூபாலன், பெரியகாவலதனியுண்ணாப்பூபாலன், சிதம்பரநாயகதனியுண்ணாப்பூபாலன், பரமநாயகதனியுண்ணாப்பூபாலன், கதிரைநாயகதனியுண்ணாப்பூபாலன், சேதுகாவலதனியுண்ணாப்பூபாலன் இவ்வன்னிபத்தின்நாளையிலே சந்திரகுலத்துவன்னிபம் காலற்றுப்போனது. இரண்டிராயரும் இரண்டுபெண்டாரத்தாரும் காரைமாநகரத்துக்குப்போய் மேலானவம்சப்பிரதாபமுள்ள கங்காகுலாதிபரில் ஒரு ஆண்பிள்ளையும் மதுரைநகரில் முன்வன்னிபக்குடியில் ஒரு பெண்ணுங்கூட்டிவந்து நல்லதினத்தில் விவாகமுடித்துத் திரிகயிலைமாநகரில் முன்வன்னிபமிருந்த பூபாலகட்டாரண்மனையிற்றபனியவாதனத்திருத்தி முதன்மைதவிர மற்றையாவரும் நமஸ்காரம்பண்ணி எங்களுக்கு அரசுரிமைபண்ணுவீரென்றுசொல்லி அரன்றொழும்புசெய்திருந்தார்கள்.

## காரைநகரால்வந்த வன்னிபம்.

காரைநகரால்வந்த வன்னிபத்தின் திருநாமம் செகராசநாத வன்னிபம் குருநாதராமவன்னிபம் உலகாண்டவன்னிபம் கயிலாயவன்னிபம் கனகராசவன்னிபம் படைகாத்தவன்னிபம் எதிரிகளேறுவன்னிபம் கணபதிராசவன்னிபம் நயந்தருராமவன்னிபம் தருமநெறியான்வன்னிபம் படைவீரங்கண்டவன்னிபம் மதுரவாசகவன்னிபம் தியாகராசவன்னிபம் கரசைகாவலவன்னிபம் அன்னசத்திரவன்னிபம் வரையாதளிக்கும்வன்னிபம் கதிரைமாமலைவன்னிபம் ஏகாந்தவன்னிபம் ஏரம்பவன்னிபம் நல்லையினுவன்னிபம் சொக்கநாயகவன்னிபம் சுந்தரநாதவன்னிபம் பாற்கரர்வன்னிபம் வீரராமவன்னிபம் குணதுங்கராமவன்னிபம் நாகமாமணிவன்னிபம் கயிலாயநாயகவன்

ணிபம் புவிராமவன்னிபம் சோமநாயகவன்னிபம் உலகநாயகவன்னிபம் சூரியநாயகவன்னிபம் நந்திநாயகவன்னிபம் இலட்சுமிநாயகவன்னிபம் சந்திரதேவவன்னிபம் பெற்றிநாயகவன்னிபம் உலகநாயகவன்னிபம்வயிரவநாயகவன்னிபம் அரசுகாவலவன்னிபம் திருமலைப்பெருமாள்வன்னிபம் சிதம்பரநாதவன்னிபம் புட்பநாயகவன்னிபம் இவர்நாளையிற்காலற்றுப்போயிற்று.

இதற்குப்பின் முன்சொன்னராயரும் பண்டாரமும் சோழநாட்டுக்குப்போய்க் காராளரிலொரு ஆண்பிள்ளைகொண்டுவந்துமுன்பரவணியானபெண்ணுக்கு விவாகம்முடித்துப்பூபாலகட்டிலிருத்திச் சகலருஞ்சொற்கேட்டு அரன்தொழும்புசெய்துவந்தார்கள்.

# சோழநாட்டுவன்னிபம்.

சோழநாட்டால் முன்வந்த வன்னிபம் காராளசிங்கவன்னிபம் நந்தியசிங்கவன்னிபம் மதராசசிங்கவன்னிபம் திருமலைராயசிங்கவன்னிபம் இராமசிங்கவன்னிபம் இலட்சுமணசிங்கவன்னிபம் சந்திரசிங்கவன்னிபம் அடைக்கலங்காத்தசிங்கவன்னிபம் கங்கைகாவலசிங்கவன்னிபம் மருதநாயக சிங்கவன்னிபம் கனகநாயகசிங்கவன்னிபம் இலங்கைகாவலசிங்கவன்னிபம் கயிலாயசிங்கவன்னிபம் குமாரவேல்சிங்கவன்னிபம் திருவம்பலசிங்கவன்னிபம் பரமானந்தசிங்கவன்னிபம் அம்புயபதிசிங்கவன்னிபம் சிவஞானமுத்துச்சிங்கவன்னிபம் சித்தநாயகசிங்கவன்னிபம் நாகமாமணிச்சிங்கவன்னிபம் சிதம்பரநாயக சிங்கவன்னிபம் நல்லநாயகசிங்கவன்னிபம் அருணநாயக சிங்கவன்னிபம் வீரசுந்தரசிங்கவன்னிபம் சொக்கநாயகசிங்கவன்னிபம் தருமநாயகசிங்கவன்னிபம் அத்திநாயகசிங்கவன்னிபம் மூத்தநாயகசிங்கவன்னிபம் பசுபதிநாயகசிங்கவன்னிபம் இராசரத்தினசிங்கவன்னிபம் எதிர்வீரசிங்கவன்னிபம் இவரோடுகாலற்றுப்போனபடியால் முன்போல இருகுடியில்மனுஷரும் மருங்கூரிற்சென்று காராளவம்சத்தில் ஒரு ஆண்பிள்ளைகொண்டுவந்துஇவ்விடமிருந்த வன்னிபப்பெண்ணுக்கு விவாகஞ்செய்துவைத்து வளமைபோலஅரன்றொழும்புசெய்திருந்தார்கள்.

# மருங்கூர்வன்னிபம்.

மருங்கூரால்முன்வந்தது நடராசகுமாரசிங்கவன்னிபம் வெற்றிக் குமாரசிங்கவன்னிபம் இராமநாதக்குமாரசிங்கவன்னிபம் இலட்சுமணநாதக்குமாரசிங்கவன்னிபம் நல்லநாயககுமாரசிங்கவன்னிபம் சிங்கவன்னிபம் தில்லைநாதக்குமாரசிங்கவன்னிபம் எல்லைகாவலகுமாரசிங்கவன்னிபம் சாரங்கநாயககுமாரசிங்கவன்னிபம் கங்கைகாவலகுமாரசிங்கவன்னிபம் இலங்கைகாவலகுமாரசிங்கவன்னிபம் தனிமைநாயககுமாரசிங்கவன்னிபம் சந்திரராயகுமாரசிங்கவன்னிபம் கயிலாயகுமாரசிங்கவன்னிபம் இரகுநாதகுமாரசிங்கவன்னிபம் சுப்பி

ரகாசகுமாரசிங்கவன்னிபம் தன்மநாயககுமாரசிங்கவன்னிபம் வேதநாயககுமாரசிங்கவன்னிபம் கொற்றவராசகுமாரசிங்கவன்னிபம் தண்டுவார்மிண்டகுமாரசிங்கவன்னிபம் எதிரிநாயககுமாரசிங்கவன்னிபம் கோமளராமகுமாரசிங்கவன்னிபம் திருமலைராயகுமாரசிங்கவன்னிபம் அடைக்கலங்காத்தகுமாரசிங்கவன்னிபம் படைவீரகண்டகுமாரசிங்கவன்னிபம் அம்புயாபதிக்குமாரசிங்கவன்னிபம் சரவணகுமாரசிங்கவன்னிபம் சேதுநாதகுமாரசிங்கவன்னிபம் சித்திரமொழிக்குமாரசிங்கவன்னிபம் மனுநேயநாயககுமாரசிங்கவன்னிபம் ஆரியநேயகுமாரசிங்கவன்னிபம்சித்திரமொழிக்குமாரசிங்கவன்னிபம் சுந்தரநாயககுமாரசிங்கவன்னிபம் திருவுறைநாடன்குமாரசிங்கவன்னிபம் குணரத்தினக்குமாரசிங்கவன்னிபம் இவர்நாளையிற் காலற்றுப்போனது. அதன்பின் பரவணியான வன்னிபப்பெண் இருபத்துநாலுவருஷம் வன்னிபம்நடப்பித்துவந்தது. அந்நாளில் ஆரியராசாத் திரிகயிலைக்குவந்து தெரிசனஞ்செய்து தன்னூருக்குப்போனவர். அதற்கு எழுபத்தைந்துவருஷத்துக்குப்பின் பறங்கிக்கலாபம்வந்தது. அப்போது இந்தவன்னிபப்பெண்ணின்மடியுங் காலற்றுப்போனது. அதன்பின்வரும் வன்னிபத்தின்வரலாறு கனகசுந்தரப்பெருமாள்கிளையோர்பத்ததியிலும் கருகுலக்கணக்கிலும் புலவன்பத்ததியிலும் எழுதிவரவேண்டியது.

## கருகுலக்கணக்கு.

இரவிகுலக்குளக்கோட்டுராசன் மருங்கூரற்கொண்டுவந்த தானத்தாரில் மேலானகுடியில்மனிதருக்குக் கருகுலக்கணக்குப்பரவணியாகக் கொடுத்தது. அந்தக்கணக்கப்பிள்ளைகளின் திருநாமம் ராமகிருட்டிணக்கருகுலக்கணக்கன் முத்துக்கிருட்டிணன் முத்துலிங்கன் வாலகிட்டிணன் தாமோதரன இராகப்பராயன் விளைதீர்த்தான் சிவனார்முத்து கனகவேலாயுதன் கோதண்டராமன் வைத்தியநாதன் வடமலைநாதன் வைத்தியநாதன் கயிலாயநாதன் கனகசுந்தரன் கோணமலை சிதம்பரமூர்த்தி ஆரியன் விசுவநாதன் அருணசலன் வெற்றிவேலாயுதன் திருவம்பலம் ஆடியபாதன் விநாயகமூர்த்தி கதிரைமலை சிவஞானமூர்த்தி இக்கருகுலக்கணக்கன்நாளையில்வன்னிபமும்இருபாகைமுதன்மையும் மற்றுஞ்சகலருமாகக் கருகுலக்கணக்கனுக்கு முதலிப்பட்டங்கட்டினார்கள். அதன்பின்னிருந்தகணக்கர்களின் திருநாமம் கயிலாயநாயகமுதலி கனகநாயகமுதலி குமாரவேல்முதலி கதிரைமலைமுதலி அம்பிகைபாகமுதலி சுந்தரநாதமுதலி இராமநாதமுதலி வீரபத்திரமுதலி தெய்வநாயகமுதலி சுந்தரநாதமுதலி திருவுடைமுதலி கோணமாமலைமுதலி அரியபிறவிக் கயிலாயமுதலி சோமலிங்கக்கயிலாயமுதலி சுப்பிரமணியக்கயிலாயமுதலி தாமோதரக்கயிலாயமுதலி அரியபுத்திரக்கயிலாயமுதலி அமராவதிக்கயிலாயமுதலி சிற்றம்பலக்கயிலாயமுதலி நாகமணிக்கயிலாயமுதலி மாணிக்கக்கயிலாயமுதலி விசுவநாதக்கயிலாயமுதலி சிவந்தநாதக்கயிலாயமுதலி ஞானமுத்துக் கயிலாயமுதலி இலட்சுமணக்கயிலாயமுதலி உமைநாயகக்கயிலாயமுதலி பங்கயபாதக் கயிலாயமுதலி பரமானந்தக்கயிலாயமுதலி ஆடியபாதக்கயிலாயமுதலி நாகம

மணிக்கயிலாயமுதலி நல்லதம்பிக்கயிலாயமுதலி பொன்னம்பலக்கயிலாயமுத
லி வயித்தியநாதக்கயிலாயமுதலி சிவஞானமூர்த்திக்கயிலாயமுதலி. சிவப்பிர
காசக்கயிலாயமுதலி வசந்தராசக்கயிலாயமுதலி. வேலாயுதக்கயிலாயமுதலி ப
ரசுராமக்கயிலாயமுதலி பாவநாசக்கயிலாயமுதலி சதாசிவப்பெருமாள்கயிலா
யமுதலி ஆபதோத்தாரண்கயிலாயமுதலி இரகுநாதக்கயிலாயமுதலி குருநாத
க்கயிலாயமுதலி பரசுராமக்கயிலாயமுதலி மணிசேகரக்கயிலாயமுதலி வயிர
வநாதக்கயிலாயமுதலி குமாரசுவாமிக்கயிலாயமுதலி பரசுராமக்கயிலாயமுத
லி வயிரவநாதக்கயிலரயமுதலி அறுமாமுகக்கயிலாயமுதலி கனகராயக்கயிலா
யமுதலி உலகநாதக்கயிலாயமுதலி வெற்றிநாயகக்கயிலாயமுதலி செல்லநா
யகக்கயிலாயமுதலி நல்லபெருமாள்கயிலாயமுதலி திருக்கோணமலைக்கயிலா
யமுதலி ஆண்டியப்பக்கயிலாயமுதலி தாண்டவமூர்த்திக்கயிலாயமுதலி குண
துங்கராமக்கயிலாயமுதலி நந்திநாதக்கயிலாயமுதலி இருளப்பக்கயிலாயமுத
லி இமையவல்லிக்கயிலாயமுதலி நாகசுந்தரக்கயிலாயமுதலி அடைக்கலங்கா
த்தகயிலாயமுதலி வெற்றிக்குமாரக்கயிலாயமுதலி சேதுகாவலக்கயிலாயமுத
லி கங்கைகாவலக்கயிலாயமுதலி திருவம்பலக்கயிலாயமுதலி திருவடிகாத்த
கயிலாயமுதலி திருமலைநாயகக்கயிலாயமுதலி பரசுராமக்கயிலாயமுதலி கந்த
ப்பக்கயிலாயமுதலி கதிரைவேற்கயிலாயமுதலி செண்பகநாதக்கயிலாயமுதலி
பாலகப்பெருமாள்கயிலாயமுதலி மாணிக்கப்பெருமாள்கயிலாயமுதலி பிள்ளை
நாயகக்கயிலாயமுதலி சித்தநாதக்கயிலாயமுதலி சிங்கநாதக்கயிலாயமுதலி மூ
த்தபிள்ளைகயிலாயமுதலி அமுதநாயகக்கயிலாயமுதலி பிறைசூடிக்கயிலாயமு
தலி வினைதீர்த்தகயிலாயமுதலி மயிலேறிமுதலிமாசிலாமணிக்கயிலாயமுதலி
இவர்நாளிற் பறங்கிக்கலாபம்வந்து தாமரைக்கட்டில் மூன்றுவருஷம்பூசைநட
ந்தது. அதன்பின் அக்கலாபமிருந்தபடியால் முன்சொன்னவிடங்களிலே
தட்டுமுட்டுக்களையொடுங்கவைத்துவிட்டுக் கழனிமலைச்சாரலுக்கு உடையவ
ரையுமெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனது. அதன்பின் கருகுலக்கணக்
கு எழுதினவர்களுடையநாமம் பொற்கொன்றைக்கருகுலக்கணக்கன் திருமு
டிக்கணக்கன் திருமலைக்கணக்கன் செகநாதக்கணக்கன் சிவஞானக்கணக்கன் நீ
லிக்கணக்கன் இனிவருங்கணக்கர்மாரை எழுதிவரவேண்டியது. வரிப்பத்தா
ர்பகுதி தானத்தாரெழுதவேண்டியதல்ல. எதிர்க்குடியானபடியாற் புலவன்ப
த்ததியிலெழுதும்படி அரசன்கற்பித்தவசனம்.

## ஆலாத்திப்பெண்கள்.

திரிகயிலைநாயகரை திருக்குளக்கட்டில் மூன்றுவருஷம்பூசைசெய்த
நாளில் இரண்டாலாத்திப்பெண்கள் இல்லாதுபோனபடியால் வன்னிபமும்
இருபாகைமுதன்மையும் கனகசுந்தரப்பெருமாளைப்பார்த்து இச்சிவாலயத்து
க்கு எத்தனைபேர் ஆலாத்திப்பெண்களென்றுகேட்க ஏழுபேரென்றுசொன்
னார். அவ்வார்த்தையை வன்னிபங்கேட்டுக் கருகுலக்கணக்கனைப்பார்த்து ஏ
ழு ஆலாத்தியுந்திட்டம்பண்ணென்றுசொல்ல அப்படித்திட்டம்பண்ணினது.

அப்பொழுதிருந்தசிவனுர் கருகுலக்கணக்கன்முன்பாக ஏழு ஆலாத்திப்பெண்களையுங்குடிபிரித்தது. செம்பித்துரைமகள் அன்னம்மை அவள்மகள் மருதாத்தை சிதம்பரத்துரைமகள் கோணாத்தை அவள்மகள் கயிலம்மை பாலுகத்துரைமகள் கதிராசி அவள்மகள் செம்பாத்தை தீர்த்தன்மகள் புவனபிள்ளை அவள்மகள் உமையாத்தை சிவனுர்கணக்கன்மகள் பாலாத்தை அவள்மகள் கோணாத்தை காக்கைத்துரைமகள் வேதம்மை அவள்மகள் வள்ளியம்மை கருக்குநாயகம்பிள்ளைமகள் திருவுடையாள் அவள்மகள் சுந்தரியார் இப்படி ஏழு ஆலாத்திப்பெண்களையும் திட்டம்பண்ணிக் கருகுலக்கணக்கன்கூற வன்னிபமுதலிய சகலரும்பார்த்து எப்பொழுதும் இப்படிநடக்கவேண்டுமென்றும் இனிமேலும்வருங் கணக்கர்மாரும் இவர்கள்குடியிற் காலற்றுப்போனுல் அவரவர்கள்தேடிய காணி உடமை யாவுங்கொடுத்து அந்தவங்கிஷத்திற்றிட்டம்பண்ணி ஆலாத்திநடப்பிக்கவேண்டியது. இப்படி நடப்பியாதிருந்தால் அரசருக்கும் சிவாலயத்தை நடப்பிப்பவருக்கும் ஊருக்குமாகாது. தானம்வரிப்பத்து எிரிக்குடியாயிருந்து அரன்றெழும்புசெய்யவேண்டியது. முதன்மைமாரும்படியேநடக்கவேண்டியது. இப்படியே வன்னிபமுதலியயாவருந் திட்டம்பண்ணி தத்தமக்குரிய அரன்றெழும்புகள்செய்திருந்தார்கள் என்றவாறு.

# திருச்சூகரவேட்டைத்தாது.

திரிகயிலாயபருவதநேசரும் முப்புரமெரியெழவிழித்தவுதாரணரும் ஆயிரகோடி அண்டங்களிலுள்ள ஆன்மவர்க்கமனைத்தினுக்கும் உயிருக்குயிராயிருக்கும் பராபரனும் செகம்புகழ்குளக்கோட்டுமகாராசனடிபரவுமாதியானவரும் ஆகிய கோணைநாயகர் திருச்சூகரவேட்டைத் திருவிளையாடல்முடிந்துவந்து இந்திராசனுடைய இரத்தினமணிமண்டபத்தில் மந்திரத்தவிசினிடைவந்துநின்று மாளிகைக்கு எழுந்தருளுதற்குப் பிடியன்னமென்னடையாகிய தேவியைக்கேட்டுவரச்சொல்லி உத்தரவானது. எரிமணிகுலவும் இமையோற்பருவதக்கனகமாமணிப்பந்தரினின்று திருமணஞ்செய்து வாமபாகம் மகிழ்ந்தெனக்கருளிய மெய்ஞ்ஞானநாயகனுகிய பராபரன் திருச்சூகரத்திருவேட்டைக்கெழுந்தருளினுல் திருச்சூகரத்திருவிளையாடலொழிந்து வரும்போது மாளிகைக்குவரவேண்டியது. அதுவல்லாமல் இந்திராசன் மந்திரசிங்காசனத்திருந்து என்னிடந் தேவதூதனுப்பினபடியால் ஏதோ ஒருகளவுநடந்திருக்கின்றது. அதைத்திரவிசாரித்தல்லாமல் மாளிகைக்குவரவேண்டியதில்லையென்று இமாசலபுத்திரியாகிய பரமேசுவரியால் உத்தரவானது. ஆயிரகோடியண்டங்களிலுள்ள ஆன்மவர்க்கமனைத்திலுக்கும் படிஅளக்கும் உலகநாயகியாகியபார்ப்பதி திருமண்டபத்திற்சயனம்பண்ணும்வேளையில் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரமிருஷிகளும் அட்டவசுக்களும் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர்களும் சுந்தரமூர்த்தியுமாகவந்துநிற்கத் திருச்சூகரவேட்டைக்கெழுந்தருளவேணுமென்று அரிபிரமாதிமுதலான யாவரும் மன்றாட்டம்பண்ணிநின்றபடியால் அவ்விடம்போய்த் திருச்சூகரத்திரு

விளையாடல்பண்ணிவந்ததேயல்லாமல் அவ்விடத்தில் யாதொரு ஆடல்பாடலதிவிதலீலாவினோதங்களான காரியங்களொன்றும் நடப்பிக்கவில்லையென்று இமாசலபுத்திரியாகிய பார்பதிக்கு விண்ணப்பஞ்சொல்லும்படி காளகண்டதாரியாகிய பரமேசுவரனால் உத்தரவானது.

அ மி ர் த சீ த ள ச ந் தி ர சே க ர அதல விதல நிதல சுதல ரசாதல மகாதல பாதாளமாகிய சத்தபாதலமூடுருவப்பிளந்த அரியும்பிரமனுந்தேடியுங்காணுதற்கரிய பரமேசுவரன் மோகவிகாரங்கொண்டு ஒரு காலத்தில் குருகுலசம்பந்தபரதவர்கோமான்யதியரசன்திருமகளாகிய திரைசேர்மடந்தையை விவாகம்பண்ணநினைந்து மகாபெருமையாக மாரூட்டமானவார்த்தைகளைப்பேசி கபிலாயயதியரசனென்று திருநாமமுஞ்சொல்லி வேதவலையினால் மகரமும்பிடித்துக் கரையேற்றித் திரைசேர்மடந்தையைத் திருமணம்புணர்ந்த தெட்சணதிரிகயிலாய பருவதவாசநேசராகிய கோணைநாயகர் மறுவசனம் என்னிடம்பேசவேண்டியதில்லையென்று இமாசலபுத்திரியான பரமேசுபரியால் உத்தரவானது. வெண்கிரண சுந்தரசந்திரோதயவதனவிங்கிர்த உலோகநாயகியென்று பெருமைப்பாடாயிருக்கின்றது. தங்கள்தமையனார் தேவகிவயிற்றிற்பிறந்து இடையசேரியில் நந்தகோபாலனிடம்வளர்ந்து வெண்ணைதிருடியும் உரலோடேகட்டுப்பட்டுந் தாம்புக்கயிற்றாலே அடிபட்டுந் தன்மனைவியிருக்கப் பதினாறாயிரங்கோபிகாத்திரிகளுடன் அனேகலீலாவினோதங்களைப் புரிந்தும் இழுக்கடையவில்லையோ தேவி ஒருகாலத்தில் தன்பிதாவாகிய தக்கனுடைய வேள்விக்குப்போகவேண்டுமென்றுகேட்கக் கேட்டைநட்சத்திரமுஞ்சனிக்கிழமையுங் கிழக்கேசூலமும் போகலாதென்னக் கேளாமற்போய்த் தன்சரீரமுமிழந்து இமயோற்பருவதத்தில் மலையரசனுக்குப் பிள்ளையாகப் பிறந்துவளர்ந்து தவம்பண்ணினபின்னர் யான்போய்த் திருக்கல்யாணஞ்செய்து வாமபாகங்கொடுத்தருளியதை மறந்தாள்போலிருக்கின்றது. என்று காளகண்டதாரியான பரமசிவனாலே உத்தரவானது. பகர்கிரணமணிச்சுடிகையூரவுடன் அவிர்கதிர்ப்பொற்கொன்றைக்காடலர்ந்த திருச்செஞ்சடையுடைய எமதுநாயகராகிய பரமசிவனை நாமின்றைக்கு மற்றொன்றுநினைத்து விருதாவானது சுவாமியிற்பிழையில்லை சுவாமிக்கு உண்டில்லாதவைகளைச்சொல்லிச் சுந்தரமூர்த்தியும் வேறுசிலரும்வந்து ஆபரணாதிகளையும் கொடிகுடை சாமரமுதலானவைகளையுங்கொண்டு கோயில்விசாரணைப் பிரதானிமார்களையும் ஆலாத்திப்பெண்களையுங் கூட்டிக்கொண்டுபோய்விட்டார்கள். அந்த ஆலாத்திப்பெண்களை இவ்விடத்தனுப்பினால் நாம் அவர்களைச் சிலசெய்திகள்கேட்டுக்கொண்டு சுவாமியைச்சிறிதுந் தடைதாமதமில்லாமல் விழாமண்டபத்துக்கு அழைத்துக்கொள்வோம் என்று இமாசலபுத்திரியாகிய பரமேசுவரியாலுத்தரவானது. அப்படியே ஆலாத்திப்பெண்களை அனுப்பி ஊடறீர்த்து விழாமண்டபத்திற் பரமேசுவரன் பரமேசுவரியைக் கூடியருளினார் என்றவாறு.

முற்றிற்று.

# கோணேசர்கல்வெட்டுப்

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | சேர்த்தல். | தள்ளல். |
|---|---|---|---|---|---|
| ௩ | ௧௧ | ஐய்ய | ஐய | | |
| ,, | ௧௫ | யீய்ந்து | யீந்து | | |
| ,, | ௧௬ | மீய்ந்து | மீந்து | | |
| ௪ | ௧௩ | மகிழ்தே | மகிழ்ந்தே | | |
| ௫ | ௨௯ | சரு, சுராப்தம் | சரு, சதாப்தம் | அ | ச்சகா |
| ௭ | ௨0 | மற்சை | மற்றை | | |
| ௧௭ | ௨௯ | தவிலிருத்த | தவிசிலிருத்த | | |
| ௨௧ | ௨ | புவனேக | புவனேய | | |
| ,, | ௩ | குலத்துக் | குலத்துப் | புவனேய | |
| ௨௨ | ௩ | விடையம் | விடையும் | | |
| ,, | ௩௩ | குலவுபநு | குலவுமநு | | |
| ௨௩ | ௧௫ | கிட்டுத | கிட்டுத் | | |
| ௨௪ | ௧௪ | பொன் கை | பொன்னகை | | |
| ,, | ௩௬ | பைரவ்ரி | பைரவரி | | |
| ௩௩ | ௧௧ | நீபோல் | நீபோய் | | |
| ,, | ௨௩ | மந்திரியம் | மந்திரியும் | | |
| ,, | ௩௩ | சதரான | சுதரான | | |
| ௩௪ | ௩௨ | மந்திநி | மந்திரி | | |
| ௩௪ | ௩௨ | கற்கரை | கடற்கரை | | |
| ௩௫ | ௩0 | முன்முலை | மும்முலை | | |
| ௩௯ | ௨௨ | | | | ன் |
| ,, | ௩0 | இலட்டு | இலட்சு | | |
| ,, | ௯௪ | சிவ்க | சிங்க | | |
| ௪0 | ௨௩ | தாமோதரன | தாமோதரன் | | |
| ,, | ௨௮ | ஞானமுர்த்தி | ஞானமூர்த்தி | | |
| ,, | ௩௯ | | | | ம |

இதிலே இன்றியமையாதவை திருத்தப்பட்டன.